# இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகள்

எம்.கே.நதீகா தமயந்தி

ஆர்.எம்.எம்.எச்.கே.ரம்பொடகெதர



017.3

HARTI

2015/11

# இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் குறைந்த பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகள்

**(Factors Affecting Less Youth Participation in Smallholder Agriculture in Sri Lanka)**

எம்.கே.நதீகா தமயந்தி
ஆர்.எம்.எம்.எச்.கே.ரம்பொடகெதர

மொழிபெயர்ப்பு இல. 3 ஜூலை 2013

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்**
**114, விஜேராம மாவத்தை**
**கொழும்பு 07**
**இலங்கை**

24244

**2 4 2 4 4**

පුස්තකාලය
LIBRARY
හෙ.කො.ගො.ප.පු ආ
HARTI

முதலில் வெளியிடப்பட்டது: ஜூலை 2013

© 2013, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

ISBN: 978-955-612-153-7

முன்பக்க வடிவமைப்பு: உதேனி கருணாரத்ன

# முன்னுரை

நாட்டின் பெறுமதிமிக்க வளங்களிலொன்று இளைஞர் என்பதுடன், இவர்கள் மொத்த சனத்தொகையில் அண்ணளவாக 1/3ஆக விளங்குகின்றனர் எனினும், அதிக பெரும்பான்மையைக் கொண்ட மொத்த தொழிலற்ற நபர்கள் இளைஞர் வகுதியிலேயே உள்ளனர். மறுபுறத்தில், பொது கருத்தாடல்களின் பிரகாரம், கமத்தொழில் துறைக்கு 33 சதவீதத்தைக் கொண்ட சரீரஉழைப்புப் படை பங்களிக்கின்ற போதிலும், கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பு குறைவானதாகும்.

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் குறைந்த பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிவதை இவ்வாய்வு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சிறுஉடமையாளர் கமத்தொழிலில் முழுநேர, பகுதிநேர அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக அண்ணளவாக 70 சதவீதத்தைக் கொண்ட இளைஞர் ஈடுபட்டுள்ளனர். மேலும், சந்தைப்படுத்தல் பிரச்சனைகள், அவர்களது சரீரஉழைப்புக்கு குறைந்த இலாபம், தொழிலொன்றாக வேளாண்மைக்கு சமூக அங்கீகாரத்தின் பற்றாக்குறை மற்றும் உறுதியற்றதன்மை, அடிப்படை வளங்களுக்கும் பயிற்சிகளுக்கும், தகவலுக்கும், விஸ்தரிப்புச் சேவைகளுக்கும் கிட்டுந்தன்மையினதும், அடையும்தன்மையினதும் தொடர்பில் பிரச்சனைகள் மற்றும் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்கெடுப்பில் ஆதிக்கம் செலுத்தும் சமூக பாதுகாப்பு முறைமை போன்ற ஒரு தொகையிலான காரணிகளை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஆய்வின் இறுதியில் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்புக்கு பெறுமதிமிக்க ஒரு தொகையிலான மூலோபாயங்களை ஆராய்ச்சிக் குழாம் விதந்துரைக்கின்றது.

இந்த ஆராய்ச்சியை வெற்றிகரமாகப் பொறுப்பேற்றமைக்காக ஆராய்ச்சிக் குழாமை நான் பாராட்டுவதுடன், இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை மேம்படுத்துவதற்கு கொள்கைவகுப்போருக்கு முடிவுகளும், பரிந்துரைப்புக்களும் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென நம்பிக்கை கொள்கின்றேன்.

**இ.எம்.அபயரத்ன**
**பணிப்பாளர்**

# நன்றி நவிலல்

இவ்வாய்வுக்கு பெறுமதிமிக்க தகவலை வழங்கியமைக்காக இளைஞர்களுக்கும், கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியினை வெளிப்படுத்த நாம் விரும்புகின்றோம். அத்துடன் அவர்களது ஆதரவுக்காக ஆய்வு அமைவிடங்களில் உள்ள கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள், கமத்தொழில் போதனாசிரியர்கள் மற்றும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எமது அன்பார்ந்த நன்றிகளைச் செலுத்துகின்றோம்.

ஆய்வை முடிப்பதற்கும், அறிக்கையை வெளியிடுவதற்கும் அவர்கள் வழங்கிய நிருவாகரீதியிலான ஆதரவுக்கு ஹெ.க.ஆ.ப.நி.இன் முன்னாள் பணிப்பாளர் திரு.லலித் காந்த ஜயசேகரவுக்கும், ஹெ.க.ஆ.ப.நி.இன் பணிப்பாளர் திரு.இ.எம்.அபயரத்னவுக்கும் எமது நன்றியைச் செலுத்துகின்றோம். பூர்வாங்க வரைவு மீது அவர்களது தொடர்ச்சியான ஆதரவுக்கும் மற்றும் கருத்துக்களுக்கும் ஹெ.க.ஆ.ப.நி.இன் மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி எல்.பி.ரூபசேனவுக்கும், ஹெ.க.ஆ.ப.நி.இன் APPE பிரிவின் தலைவர் திரு.ஜே.கே.எம்.டி.சந்திரசிறிக்கும் தமது அன்பார்ந்த நன்றிகளை வெளிப்படுத்த ஆராய்ச்சிக் குழாம் விரும்புகின்றது. வரைவு அறிக்கை மீது அவர்களது பெறுமதிமிக்க கருத்துக்களுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வண.கலாநிதி டபிள்யு.விமலரத்னவுக்கும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.ரி.ஜி.பீரிஸுக்கும் எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

வெளிக்கள தரவுச் சேகரிப்பில் ஹெ.க.ஆ.ப.நி.இன் முன்னாள் புள்ளிவிபர உதவியாளர் செல்வி ஆர்.பி.சேனாதீர, வெளிக்கள அளவீட்டின் கணக்கெடுப்பாளர்கள் திரு.பி.எ.சி.விஜேதம்ம மற்றும் திரு.ஆர்.எம்.பி.சி.சில்வா மற்றும் தரவுப் பகுப்பாய்வில் ஹெ.க.ஆ.ப.நி.இன் சிரேஷ்ட பகுப்பாய்வு திட்டமிடலாளர் திரு.எம்.எல்.டி.சேனாரத் ஆகியோரின் பங்களிப்புக்கு நாம் நன்றிகூற விரும்புகின்றோம்.

இறுதிப் பதிப்பித்தலுக்காக பேராசிரியர் டபிள்யு.ஐ.சிறிவீரவுக்கும், அறிக்கையை வெளியிடுவதற்கு ஒழுங்குகளைச் செய்தமைக்காக வெளியீட்டு மற்றும் அச்சிடல் அலகின் சகல பணியாளருக்கும் நாம் நன்றிசெலுத்துகின்றோம்.

**எம்.கே.நதீகா தமயந்தி**
**ஆர்.எம்.எம்.எச்.கே.ரம்பொடகெதர**

# நிறைவேற்று சாராம்சம்

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழில் துறையில் இளைஞரின் குறைந்த பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகளைப் பரீட்சிப்பதே ஆய்வின் முழுமையான நோக்கமாகும். தொழிலொன்றாக வேளாண்மை மீதான இளைஞர் மனவுணர்வினைப் பரிசீலித்தல், கமத்தொழிலில் இளைஞர் பங்களிப்பினை இழுத்தெடுக்கின்ற காரணிகளையும் அழுத்துகின்ற காரணிகளையும் அடையாளம் காணுதல் மற்றும் பகுப்பாய்தல் அத்துடன் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு இளைஞரினதும், வேறு பங்காளர்களினதும் கருத்துக்களைக் கலந்துரையாடுதல் ஆகியனவே குறிப்பான நோக்கங்களாகும். கேள்விக்கொத்து அளவீடு, முக்கிய தகவலளிப்பவர் கலந்துரையாடல்கள் மற்றும் நோக்குக் குழு கலந்துரையாடல்கள் ஆகியன ஊடாக ஆரம்பநிலையிலான தரவுகள் சேகரிக்கப்பட்டன. நுவரெலியா, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வெளிக்கள அளவீடு மேற்கொள்ளப்பட்டது. 33 கமத்தொழில் பட்டதாரிகளையும், பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டதாரி மாணவர்களையும் உள்ளடக்கி 533 பேரை மொத்த மாதிரி கொண்டிருந்தது.

வேளாண்மை முறையினால் அல்லது செய்கைபண்ணப்பட்ட பயிரினால் இளைஞர் பங்கெடுப்பின் வகையும், மட்டமும் வேறுபட்டிருந்தன. மொத்த மாதிரியில் முழுநேர, பகுதிநேர அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக கமத்தொழில் தொடர்பிலான பலதரப்பட்ட செயற்பாடுகளில் 70 சதவீதத்தினர் ஈடுபட்டிருந்த அதேவேளை, கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் 7.3 சதவீதத்தினர் ஈடுபட்டிருந்தனர். மொத்த மாதிரியில் முழுநேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக 58.2 சதவீதத்தினர் தெரிவித்த அதேவேளை, 39.6 சதவீதத்தையும், 2.3 சதவீதத்தையும் கொண்ட பதிலிறுப்பாளர்கள் முறையே முழுநேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லை அத்துடன் தெளிவான கருத்தொன்றைக் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

முழுநேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு இணக்கமாயிருந்த பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் கமத்தொழில் தொடர்பிலான நீண்ட கால அனுபவத்தையும், காணியையும் மற்றும் சரீரஉழைப்பினையும் கொண்டிருந்தனர். மறுபுறத்தில், ‘சிறந்த தொழில்’ ஒன்றுக்கான போதியளவு திறன்களையும், பயிற்சியையும் மற்றும் கல்வியையும் அவர்களில் பெரும்பாலானோர் கொண்டிருக்கவில்லை.

வயது, திருமணநிலை, மேட்டு நிலங்களினதும், நெல் காணிகளினதும் விஸ்தரிப்புச் சேவைகளினதும், சந்தை வசதிகளினதும் மற்றும் உயர் கல்வியினதும் கிட்டுந்தன்மையுடனும், அடையும்தன்மையுடனும் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பு குறிப்பிடத்தக்க விதத்தில் இணைந்திருந்தன. மேலும், பால்நிலை, நெற்காணியின் அளவு, குடும்ப வருமானம், சமூக பாதுகாப்புத் திட்டம் அல்லது ஓய்வூதிய முறைமை ஆகியவற்றின் கிட்டாமை, வேளாண்மைக்கு அங்கீகாரத்தின் பற்றாக்குறை அல்லது அங்கீகாரமின்மை போன்ற காரணிகளும் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினைப் பாதித்தன.

வேளாண்மைக்கு இளைஞரைக் கவர்வதற்காக, நடைமுறையிலான இளம் கமக்காரர் தாபனங்களைப் பலப்படுத்துதல், அவசியமான உதவிகளை வழங்குதல், இளைஞர்களுக்கு கூட்டாண்மை கைத்தொழில்களையும், வியாபாரங்களையும் தாபித்தல் போன்ற பயனுறுதிவாய்ந்த வழியொன்றில் புதிய இளம் கமக்காரர் தாபனங்களைத் தாபித்தல், கமத்தொழில் போதனாசிரியர் சேவையின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் தரத்தை உயர்த்துதல், உயர் தொழில்நுட்பக் கமத்தொழிலை அறிமுகப்படுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இளைஞர்களுக்கு உதவியளித்தல், கமக்காரர் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு கமத்தொழில் தொடர்பிலான அரசாங்கத் தொழில்களுக்கு (விசேடமாக துணை-அரசாங்க உறுப்புக்களுக்கும், விஸ்தரிப்பு சேவைக்கும்) ‘கோட்டா’ முறைமையை நிச்சயப்படுத்தல், பயிற்சி மற்றும் குறைந்த வட்டி வீதங்களுடன் கடன்கள் போன்றவாறு இளம் கமக்காரர்களுக்கு விசேட வசதிகளை வழங்குதல் போன்ற பெருமளவு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

# உள்ளடக்கங்களின் அட்டவணை


| | | |
|---|---|---|
| முன்னுரை | | i |
| நன்றி நவிலல் | | ii |
| நிறைவேற்று சாராம்சம் | | iii |
| உள்ளடக்கங்களின் அட்டவணை | | iv |
| அட்டவணைகளின் பட்டியல் | | vii |
| உருபுகளின் பட்டியல் | | ix |
| சுருக்கக்குறியீடு | | x |
| **அத்தியாயம் ஒன்று** | | |
| **அறிமுகம்** | | 01 |
| 1.1 | பின்னணி | 01 |
| 1.2 | பிரச்சனைக் கூற்று | 02 |
| 1.3 | நோக்கங்கள் | 02 |
| 1.4 | கருதுகோள் | 03 |
| 1.5 | ஆராய்ச்சி முறை | 03 |
| 1.5.1 | தரவின் மூலங்களும், சேகரிப்பும் | 03 |
| 1.5.2 | ஆய்வுப் பகுதியும், மாதிரி அளவும் | 04 |
| 1.5.2.1 | ஆய்வுப் பகுதி | 04 |
| 1.5.2.2 | மாதிரி அளவு | 04 |
| 1.6 | தரவுப் பகுப்பாய்வு | 06 |
| 1.7 | அறிக்கையின் கட்டமைப்பு | 06 |
| **அத்தியாயம் இரண்டு** | | |
| **இலக்கிய மதிப்பாய்வு** | | 07 |
| 2.1 | அறிமுகம் | 07 |
| 2.2 | சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறை | 07 |
| 2.3 | இலங்கையில் சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறை | 08 |
| 2.4 | இளைஞர் | 11 |
| 2.5 | "பொருளாதாரரீதியில் தீவிரமான", "தொழில்", மற்றும் "தொழில்நிலை" ஆகியவற்றின் வரைவிலக்கணங்கள் | 11 |
| 2.6 | இலங்கையில் இளைஞரின் தொழிலின்மை | 12 |
| 2.7 | முன்னைய ஆய்வுகள் | 14 |
| **அத்தியாயம் மூன்று** | | |
| **பதிலிறுப்பாளர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணி** | | 18 |
| 3.1 | அறிமுகம் | 18 |
| 3.2 | பதிலிறுப்பாளர்களின் குடித்தொகையியல் பின்னணி | 18 |
| 3.3 | கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் இளைஞர்களின் சம்பந்தம் | 25 |
| 3.4 | பதிலிறுப்பாளர்களின் காணி உபயோகப் பாங்கு | 28 |
| 3.5 | தொழில்முன்னிலைப் பயிற்சிகளின் நிலை | 30 |
| 3.6 | முடிவுரை | 34 |



පුස්තකාලය
LIBRARY
හෙ.ලො.ගො.ප.පු.ආ
HARTI

**அத்தியாயம் நான்கு**
**சிறுஉடைமைக் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பு** 35
4.1 அறிமுகம் 35
4.2 வேளாண்மையில் இளைஞரின் பங்கெடுப்பு 35
4.3 கம அடிப்படையிலான கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் இளைஞரின் பங்கெடுப்பு 39
4.4 முடிவுரை 41

**அத்தியாயம் ஐந்து**
**கமத்தொழிலில் இளைஞரின் மனவுணர்வுகள்** 42
5.1 அறிமுகம் 42
5.2 முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கம் 42
5.3 கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் மீது இளைஞரின் மனவுணர்வுகள் 54
5.4: மிகவும் விருப்புக்குரிய தொழில்களும், தொழிலைத் தெரிவுசெய்வதற்கான காரணங்களும் 56
5.5 முடிவுரை 62

**அத்தியாயம் ஆறு**
**வேளாண்மையில் இளைஞரினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள்** 63
6.1 அறிமுகம் 63
6.2 வேளாண்மையில் இளைஞரினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள் 63
6.2.1 சந்தை வசதிகள் 63
6.2.2 விஸ்தரிப்புச் சேவைகள் 66
6.2.3 கமத்தொழில் பயிற்சி 67
6.2.4 காணி 68
6.2.5 கமத்தொழில் இயந்திராதிகள் 72
6.2.6 பயிர்க் காப்புறுதி 75
6.2.7 கமத்தொழில் உள்ளீடுகள் 75
6.2.7.1 உரம் 75
6.2.7.2 விதைகள்/நாற்றுக்கள் 77
6.2.7.3 பூச்சிநாசினிகள்/களைநாசினிகள் 77
6.2.8 கமத்தொழில் தகவல் 78
6.2.9 நீர்ப்பாசன வசதிகள் 79
6.2.10 சமூகப் பெறுமதிகள் 80
6.3 வேறு நிறுவனரீதியிலான பொறிமுறைகள் 81
6.4 முடிவுரை 83

**அத்தியாயம் ஏழு**
**கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்** 84
7.1 அறிமுகம் 84
7.2 பயிர்ச் செய்கையில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் 84
7.3 கமத்தொழில் கைத்தொழில்களில்/வியாபாரங்களில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் 89
7.4 முடிவுரை 91

**அத்தியாயம் எட்டு**


**சாராம்சம் மற்றும் பரிந்துரைகள்** 92

8.1 சாராம்சம் 92

8.2 கொள்கைப் பரிந்துரைப்புகள் 95

8.2.1 தொழிலொன்றாக வேளாண்மைக்கு சமூக மற்றும் நிறுவனரீதியிலான அங்கீகாரத்தின் பற்றாக்குறை 95

8.2.2 விஸ்தரிப்பு சேவைகள் தொடர்பிலான பிரச்சனைகள் 96

8.2.3 இளம் கமக்காரர் சங்கங்க்ளுக்கு தொடர்பிலான பிரச்சனைகள் 98

8.2.4 கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் வியாபார முயற்சிகள் தொடர்பான பிரச்சனைகள் 99

8.2.5 சந்தை வசதிகள் தொடர்பிலான பிரச்சனைகள் 100

8.2.6 அடிப்படை வசதிகள் தொடர்பிலான பிரச்சனைகள் 101

8.2.7 சமூக பாதுகாப்பு முறைமைக்கும், பயிர் காப்புறுதித் திட்டத்துக்கும் தொடர்பான பிரச்சனைகள் 103

8.2.8 இளைஞருக்கு வயதெல்லை 103

8.2.9 சமூக ஒப்புரவு, நல்லாட்சி மற்றும் சமத்துவம் 103

8.3 மேலும் ஆராய்ச்சி துறைகள் 105

உசாத்துணைகளின் பட்டியல் 106

# அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | வெளிக்கள அமைவிடங்களும், சம்பந்தப்பட்ட பகுதிகளில் செய்கைபண்ணப்படும் பாரிய பயிர்களும் | 05 |
| அட்டவணை 2.1 | பிரதான பொருளாதாரச் செயற்பாட்டினால் தொழிலாற்றுகின்றவர்கள் ('000) | 09 |
| அட்டவணை 2.2 | சிறுஉடைமைகளின் எண்ணிக்கையும், காணி விஸ்தீரணமும் - 2002 | 10 |
| அட்டவணை 2.2 | இளைஞர் தொழிலின்மை (15-29 வயதுக் குழு) | 13 |
| அட்டவணை 3.1 | வயதினாலும், பால்நிலையினாலும் மாதிரி | 18 |
| அட்டவணை 3.2 | வயதுக் குழுவினாலும், திருமணநிலையினாலும் மாதிரி | 19 |
| அட்டவணை 3.3 | இனத்துவத்தினால் மாதிரி | 19 |
| அட்டவணை 3.4 | ஆரம்பநிலைத் தொழிலினாலும், வயதினாலும் மாதிரி | 22 |
| அட்டவணை 3.5 | பால்நிலையினால் கல்வியின் மட்டம் | 24 |
| அட்டவணை 3.6 | கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் சம்பந்தம் | 25 |
| அட்டவணை 3.7 | பால்நிலையினால் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் சம்பந்தத்தின் வகை | 25 |
| அட்டவணை 3.8 | செய்கைபண்ணப்பட்ட பயிர்/செயற்பாடு | 26 |
| அட்டவணை 3.9 | வேளாண்மையில் சம்பந்தத்தின் வகை | 27 |
| அட்டவணை 3.10 | காணித் துண்டுகளின் உரித்துரிமை | 28 |
| அட்டவணை 3.11 | சராசரி காணி விஸ்தீரணம் | 29 |
| அட்டவணை 3.12 | தொழில்முன்னிலைப் பயிற்சியின் வகையும், பால்நிலையும் | 32 |
| அட்டவணை 3.13 | தொழில்முன்னிலைப் பயிற்சியினால் மாதிரியும், பயன்தன்மையும் | 33 |
| அட்டவணை 4.1 | அனுபவத்தின் ஆண்டுகளின் எண்ணிகையினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் பங்கீடு | 37 |
| அட்டவணை 4.2 | கல்வியின் மட்டத்தினால் கமத்தொழிலில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களும், ஈடுபாட்டின் வகையும் | 39 |
| அட்டவணை 4.3 | கைத்தொழிலின்/வியாபாரத்தின் வகையினால் கமத்தொழில் கைத்தொழில்களில்/வியர்பாரங்களில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்கள் | 41 |
| அட்டவணை 5.1 | முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான வயதும் இணக்கமும் | 44 |
| அட்டவணை 5.2 | வேளாண்மைச் செயற்பாடும், முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும் | 45 |
| அட்டவணை 5.3 | திருமண நிலையும், முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும் | 47 |
| அட்டவணை 5.4 | முழு நேரத் தொழிலாக கமத்தொழிலைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள் | 50 |
| அட்டவணை 5.5 | முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பாததற்கான காரணங்கள் | 52 |
| அட்டவணை 5.6 | கமத்தொழில் அடிப்படையிலான கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு இணக்கமின்மைக்கான காரணங்கள் | 54 |
| அட்டவணை 5.7 | கம அடிப்படையிலான கைத்தொழில்களில்/வியாபாரத்தில் ஈடுபடாததற்கான காரணங்கள் | 56 |
| அட்டவணை 5.8 | பால்நிலையிலான முழு நேரத் தொழிலில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில | 57 |
| அட்டவணை 5.9 | வயதினால் முழுநேர தொழிலில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில | 58 |
| அட்டவணை 5.10 | மிகவும் விருப்புக்குரிய தொழிலுக்கான காரணங்கள் | 59 |
| அட்டவணை 6.1 | வேளாண்மைச் செயற்பாடுகளினால் சந்தை வசதிகளின் நிறைவின் மட்டம் | 64 |

அட்டவணை 6.2 வேளாண்மைச் செயற்பாட்டினால் விஸ்தரிப்பு வசதிகளின் நிறைவின் மட்டம் 67
அட்டவணை 6.3 வேளாண்மைச் செயற்பாடுகளினால் பயிற்சி வசதிகளின் நிறைவின் மட்டம் 68
அட்டவணை 6.4 வேளாண்மைச் செயற்பாட்டினால் நெற் காணிகளின் கிட்டுந்தன்மையின் மட்டம் 71
அட்டவணை 6.5 வேளாண்மைச் செயற்பாட்டினால் சேனைக் காணிகளின் கிட்டுந்தன்மையின் மட்டம் 72
அட்டவணை 6.6 கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள் 72
அட்டவணை 6.7 கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் முழு நேரக் கமக்காரர்கள் 73
அட்டவணை 6.8 கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் பகுதி நேரக் கமக்காரர்கள் 74
அட்டவணை 6.9 கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் குடும்ப சரீரஉழைப்பாளர்கள் 74
அட்டவணை 6.10 வேளாண்மைச் செயற்பாட்டினால் பயிர்க் காப்புறுதியின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் 75
அட்டவணை 6.11 வேளாண்மையின் வகையினால் விதைகளின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் 77
அட்டவணை 6.12 வேளாண்மையின் வகையினால் பூச்சிநாசினியின்/களைநாசினியின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் 78
அட்டவணை 6.13 வேளாண்மையின் செயற்பாடுகளினால் தகவல் வசதிகளின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் 79
அட்டவணை 6.14 நீர்ப்பாசன வசதிகளின் நிறைவின் மட்டம் 80
அட்டவணை 7.1 சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு பதிலிறுப்பாளர்களின் ஆலோசனைகள் 87
அட்டவணை 7.2 சிறுஉடமையாளர் கமத்தொழில் துறையில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு கமத்தொழில் பட்டதாரிகளினாலும், பட்டதாரி மாணவர்களினாலும் செய்யப்பட்ட ஆலோசனைகள் 88
அட்டவணை 7.3 கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் 90
அட்டவணை 7.4 கமத்தொழில் கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு கமத்தொழில் பட்டதாரிகளினால் /பட்டதாரி மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் 91

# உருபுகளின் பட்டியல்


| | | பக்க இல. |
|---|---|---|
| உருபு 2.1 | இலங்கையில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் துறைசார் அடக்கம் (1980-2010) | 09 |
| உருபு 3.1 | வயதினாலும், தொழிற்பாட்டினாலும் மாதிரி | 20 |
| உருபு 3.2 | தொழிற்பாட்டினாலும், பால்நிலையினாலும் மாதிரி | 21 |
| உருபு 3.3 | குடித்தனங்களில் தங்கியிருப்போரின் எண்ணிக்கையினால் மாதிரி | 23 |
| உருபு 3.4 | கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஆண்டுக்கணக்கான அனுபவம் | 27 |
| உருபு 3.5 | சகல வகையான காணியின் சராசரி மொத்த விஸ்தீரணமும், சராசரி செய்கையிலான விஸ்தீரணமும் | 30 |
| உருபு 3.6 | தொழில் முன்னிலைப் பயிற்சிகளில் பங்கெடுப்பு | 31 |
| உருபு 4.1 | கமத்தொழிலில் சம்பந்தத்தின் வகையினால் பதிலிறுப்பாளர்கள் | 35 |
| உருபு 4.2 | பால்நிலையினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் பங்கீடு | 36 |
| உருபு 4.3 | வயதுக் குழுக்களினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் பங்கீடு | 38 |
| உருபு 4.4 | கல்வியின் மட்டத்தினால் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில்/வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்கள் | 40 |
| உருபு 5.1 | முழுநேரக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கம் | 42 |
| உருபு 5.2 | பால்நிலையும், முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும் | 46 |
| உருபு 5.3 | குடும்பத்தின் மாதாந்த வருமானத்தின் மட்டமும், முழுநேரத் தொழிலாகக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும் | 48 |
| உருபு 5.4 | கல்வியின் மட்டமும், முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும் | 49 |
| உருபு 5.5 | கமத்தொழில் தொடர்பான தொழில்களைக் கொண்டிருப்பதற்கான விருப்புரிமைக்கான காரணங்கள் | 61 |
| உருபு 6.1 | சந்தை வசதிகளின் நிறைவின் மட்டம் | 64 |
| உருபு 6.2 | விஸ்தரிப்புச் சேவையின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள் | 66 |
| உருபு 6.3 | மேட்டுநிலத்தின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள் | 69 |
| உருபு 6.4 | வேளாண்மைச் செயற்பாடுகளினால் மேட்டுநிலத்தின் கிட்டுந்தன்மையின் மட்டம் | 70 |
| உருபு 6.5 | மொத்த மாதிரிக்கு உரத்தின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் | 76 |
| உருபு 6.6 | வேளாண்மையின் வகையினால் உரத்தின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம் | 76 |


**விடய ஆய்வு**


| | | |
|---|---|---|
| 6.1 | திரு.சுஜீவ, ரண்முதுவெவ, சூரியவெவ | 65 |
| 6.2 | ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனம் | 81 |
| 6.3 | மொனராகல மாவட்டத்தில் கெமுனு இளம் கமக்காரர் தாபனம் | 82 |

## சுருக்கக்குறியீடு

| | |
|---|---|
| க.அ.நி. | கமநல அபிவிருத்தி நிலையம் |
| க.உ.ஆ.உ. | கமத்தொழில் உற்பத்தி, ஆராய்ச்சி உதவியாளர் |
| க.போ. | கமத்தொழில் போதனாசிரியர் |
| இ.ம.வ. | இலங்கை மத்திய வங்கி |
| பொ.தீ.ச. | பொருளாதாரரீதியில் தீவிரமான சனத்தொகை |
| உ.வி.தா. | உணவு, விவசாய தாபனம் |
| க.பொ.த. உ./த. | கல்வி பொது தராதரம் - உயர் தரம் |
| க.பொ.த. சா./த. | கல்வி பொது தராதரம் - சாதாரண தரம் |
| மொ.உ.உ. | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| ஹெ.க.ஆ.ப.நி. | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் |
| அ.பி.தொ.நி. | அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் |
| கு.வி.சே | குருஷிகர்ம வியாப்த சேவக (கிராம மட்ட விஸ்தரிப்பு ஊழியர்) |
| இ.ரூ. | இலங்கை ரூபா |
| ஒ.து.வி.மு.தே.ஆ. | ஒழுங்குபடுத்தப்படாத துறையில் வியாபார முயற்சிகளுக்கான தேசிய ஆணைக்குழு |
| தே.இ.அ. | தேசிய இளைஞர் அளவீடு |
| தே.இ.சே.ம. | தேசிய இளைஞர் சேவை மன்றம் |
| வே.க.ப. | வேறு களப் பயிர் |
| ஆ.ப.ஐ.நா.பொ.ச.ஆ. | ஆசியாவுக்கும் பசுபிக்குக்குமான ஐக்கிய நாடுகள் பொருளாதார, சமூக ஆணைக்குழு |

# அத்தியாயம் ஒன்று

## அறிமுகம்

### 1.1 பின்னணி

இலங்கையில் மொத்த சனத்தொகையில் அண்ணளவாக 28 சதவீதமானது 15-29 வயது குழுக்களைச் சார்ந்ததாகும். மேலும், 75 சதவீதத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் 1960-2000 காலத்தின் போது கிராமியத் துறையில் வாழ்ந்தனர். அட்டவணை 2.4இல் காட்டப்பட்டுள்ளவாறு, 1990-2011 காலத்தின் போது நாட்டின் இளைஞர் தொழிலின்மை மொத்தத் தொழிலின்மையின் 72.7 சதவீதத்திலிருந்து 84..4 சதவீதம் வரை பொறுப்புக்காட்டியது (Ibargüen, 2004). அதிகளவு பெரும்பான்மையைக் கொண்ட இளைஞர்கள் கிராமியப் பகுதிகளில் வாழ்ந்ததனால், இலங்கையில் இளைஞர்களின் தொழிலின்மையானது ஒரு கிராமியப் பிரச்சனையாகும். கல்வி மற்றும் திறன்களின் பொருத்தமின்மை, அரசாங்கத் துறையில் "சிறந்த தொழில்" ஒன்றைக் கண்டறிவதற்கு வாய்ப்பொன்றுக்காக வரிசையில் நிற்றல் போன்ற இலங்கையில் இளைஞர்களின் தொழிலின்மையின் உயர்வான வீதத்துடன் ஒரு தொகையிலான காரணிகள் இணைந்துள்ளன (Ibargüen, 2004 இலங்கை மத்திய வங்கி மற்றும் குடிசன, புள்ளிவிபரத் திணைக்களம், 2009, தொழில் உறவுகள் வெளிநாட்டு தொழில் அமைச்சு, 2006, சீயர்ஸ், 1971, ராமா, 2003, ஹெல்ற் போர்க் மற்றும் வடோபீவெக், 2008). எனினும், இலங்கையில் பெரும்பான்மையான தொழிலின்மை தன்னிச்சையிலானதாக தொடர்ந்துமே இருப்பதுடன், தொழில் வாய்ப்புக்கள் இன்மையின் காரணமாக அல்ல என சில ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்கின்றனர் (சீயர்ஸ், 1971, ராமா, 2003). இலங்கையில் தன்னிச்சையிலான தொழிலின்மை மீது கல்வியின் மட்டம் பலமான ஆதிக்கமொன்றைக் கொண்டுள்ளதாக கருணாகொட (2004) சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் 1977இல் 52 சதவீதமாக இருந்த கமத்தொழில் சரீரஉழைப்புப் படை 2010இல் 32.7 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ள அதேவேளை, மூப்படையும் சனத்தொகை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் நெற் கமக்காரர்களில் 50.4 சதவீதத்தினர் 50+ வயது குழுக்களைச்[1] சார்ந்தவர்களாக இருந்த அதேவேளை, 5.1 சதவீதத்தினர் மட்டுமே 20-30 வயது குழுவினைச் சார்ந்திருந்தனர் என பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தலின் ஆய்வுக் கண்டுபிடிப்புக்கள் வெளிப்படுத்தின (தமயந்தி மற்றும் புலாங்குளம, 2006). நெற் கமக்காரர்களின் சராசரி வயது 52ஆக இருந்த அதேவேளை நெற் கமக்காரர்களின் 16 சதவீதத்தினர் 64 வயதுக்கு மேற்பட்டவர்களாவர் என 2007இல் ஹெ.க.ஆ.ப.நி.இனால் நடத்தப்பட்ட இன்னோர் ஆய்வு வெளிப்படுத்தியது (கமகே மற்றும் தமயந்தி, 2012)[2].

கமத்தொழில் துறை தொடர்பாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைகின்ற உலகம் உட்பட பெருமளவு நாடுகள் இலங்கையைப் போன்ற அதே சூழ்நிலையை அனுபவித்துள்ளன. கல்வியின் மட்டம், பண்ணையின் அளவு (காணிப் பகுதியையும் மற்றும் கால்நடை அலகுகளையும் பொறுத்தளவில்) மற்றும் கமப் பண்ணை வருமானத்தின் நடைமுறையிலான மட்டங்கள் ஆகியன அயர்லாந்தில் நியமிக்கப்பட்ட பண்ணை வாரிசுகள் மத்தியில் தொழில்நிலையிலான தெரிவுகளுடன் குறிப்பிடத்தக்களவில் இணைந்திருந்தன (ஹென்னசி மற்றும் ரெஹ்மான்). கிராமிய சீனாவில், கல்வி மற்றும் திறன்கள் உட்பட பால்நிலை மற்றும் திருமண அந்தஸ்து போன்ற சமூகக் காரணிகளும், குடித்தனத்தின் ஊழியரொருவருக்கான காணியின் கிட்டுந்தன்மையும், குடும்ப அளவும், குடும்பத்தில் தங்கியிருக்கும் விகிதமும், குடித்தன வருமானமும், சந்தைக் காரணிகளும் பண்ணை மற்றும் பண்ணை சாரா

---

[1] கமக்காரர் அளவீட்டின் மாதிரி அளவு 500 ஆகும்

[2] பொலன்னறுவை, மாத்தளை, அனுராதபுரம், அம்பாறை, காலி,மாத்தறை, புத்தளம், ஹம்பாந்தோட்டை, மொனராகலை, மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களின் உள்ள 914 குடித்தனங்களை அளவீடு உள்ளடக்கியிருந்தது.



පුස්තකාලය
LIBRARY
හෙ.කො.ගො.ප.පු.ආ
HARTI

தொழில்நிலையின் தெரிவில் குறிப்பிடத்தக்களவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும், கட்சி உறுப்பினரொருவராக இருத்தல் அல்லது உள்ளூராட்சி அலுவலர் ஒருவராக இருத்தல் போன்ற அரசியல் காரணிகளும், மிகக் கிட்டிய நகரத்துக்கான தூரம் போன்ற புவியியல்சார்ந்த காரணிகளும் மற்றும் ஏற்றியிறக்கல் வசதிகளின் கிட்டுந்தன்மையும் கிராமிய சீன மக்கள் மத்தியில் பண்ணை அல்லது பண்ணை-சாரா தொழிலின் தெரிவுக்கு மிக அதிகளவில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாகும் (ஸியா, திகதியில்லை). வேளாண்மைக்கு அதிகளவு சரீரஉழைப்பு அவுஸ்திரேலியாவுக்கு அவசியம் என்ற போதிலும், துறைக்கு இளைஞர்களை அவர்களினால் கவர முடியாதிருக்கின்றது. வேளாண்மையின் வாழ்க்கைத்தொழில்தன்மையின்மை, வேறுபட்ட இளைஞர் விருப்பார்வங்கள் மற்றும் வெள்ளைச் சட்டை தொழில்களை நோக்கிய மனவுணர்வு ஆகியனவே காரணங்களாகும் (லிவிங்ஸ்ரோன், 2011). சர்மா (2007) விளக்கியுள்ளவாறு, இந்தியாவிலுள்ள சுமார் 34 சதவீதத்தைக் கொண்ட இளைஞர்கள் தமது தந்தைக்கு அல்லது சிறிய தந்தைக்கு உதவியளிப்பதற்காக பகுதிநேரச் செயற்பாடொன்றாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள அதேவேளை, இது நகரத்திற்கு கிட்டிய கிராமங்களில் 46 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. காணி உடைமைகளின் அளவு, ஆளொருவருக்கான கமத்தொழில் உற்பத்தியின் பெறுமதி, கல்வியின் மட்டம், திறன்கள் மற்றும் சாதி முறைமை (முழுநேர கமத்தொழிலில் கீழ்மட்ட சாதியையும், மற்றும் பின்தங்கிய சாதிகளையும் சேர்ந்தவர்களின் சம்பந்தம் சுமார் 60 சதவீதமாகும்) போன்றன இந்தியாவில் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்புக்கு ஆதிக்கம் செலுத்திய ஒரு தொகைக் காரணிகளாகும்.

இலங்கையில் காணியற்றதன்மை, நிருவாக மற்றும் தொழில்நுட்ப திறன்களின்மை, வேளாண்மையை நோக்கிய மறுதலையான மனவுணர்வு (ஜயதிஸ்ஸ, செனிவிரத்ன மற்றும் சங்கர், 2005) மற்றும் வெள்ளைச் சட்டைத் தொழில்களை நோக்கிய மனவுணர்வுகள் (ஹெட்டிகே மற்றும் மேயர், 2002) ஆகியன வேளாண்மைத் துறையில் இளைஞர்களின் குறைந்த பங்களிப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றன என சிலர் விவாதிக்கின்றனர். வயது, கமத்தொழிலில் அனுபவம், முறைமையான கமத்தொழில் கல்வி, தொழில்முன்னிலைப் பயிற்சி, நெற் காணியின் உயர்வான விஸ்தீரணம் மற்றும் கால்நடையின் கிட்டுந்தன்மை போன்ற ஒரு தொகையிலான காரணிகள் தொழிலொன்றாக வேளாண்மையின் தெரிவில் ஆதிக்கம் செலுத்துகின்றன என 2011இல் பொலன்னறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்ட அளவீடொன்று (சந்திரசிறி, சி. மற்றும் கருணாகொட, கே., 2011) வெளிப்படுத்துகின்றது.

## 1.2 பிரச்சனைக் கூற்று

கடந்த தசாப்தத்தின் போது, இலங்கையில் தொழிலின்மை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், இலங்கையில் இளைஞர் தொழிலின்மையில் உயர்வான வீதம் உள்ளதாக நடைமுறையிலான தரவு காட்டுகின்றது. பின்னணிப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளவாறு 2011இன் 1990 - 1ஆவது காலாண்டு காலத்தின் போது தொழிலற்றவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் 15-29 வயதைச் சேர்ந்தவர்களாவர். மறுதலையாக, கமத்தொழில் துறையில் இளைஞரின் பங்களிப்பு குறைவானதாகும். இலங்கையில் சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறையில் குறைந்த இளைஞர் பங்களிப்பினைப் பாதிக்கும் காரணிகள் எவை?

## 1.3 நோக்கங்கள்

இலங்கையில் சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்புக்கான (விசேடமாக தொழிலொன்றாக வேளாண்மையில்) காரணிகளை பரீட்சிப்பதே ஆய்வின் முழுமையான நோக்கமாகும்.

குறிப்பான நோக்கங்கள்

1. தொழிலொன்றாக வேளாண்மை மீது இளைஞரின் மனவுணர்வினைப் பரீட்சித்தல்
2. இலங்கையில் சிறுஉடைமையாளர் வேளாண்மைத் துறையில் இளைஞர் பங்கெடுப்புக்கான காரணிகளை அடையாளம் காணுதலும், பகுப்பாய்தலும்
3. சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறையில் இளைஞர் பங்கெடுப்பு மீது வேறு பங்காளர்களின் கருத்துக்களைப் பரீட்சித்தல்
4. கொள்கை வகுப்போர்களுக்கும், திட்டமிடலாளர்களுக்கும் அறிவிப்பதும், அறிவூட்டுவதும்

## 1.4 கருதுகோள்

1. கல்வியின் உயர் மட்டமானது சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றது.
2. குடும்ப வருமானத்தின் உயர் மட்டம் சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றது.
3. காணிகளை அடைவதற்கான குறைந்த வாய்ப்பு, காணிகளின் கிட்டாத்தன்மை மற்றும் காணித்துண்டுகளின் சிறிய அளவு ஆகியன சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றன.
4. வேளாண்மைத் துறைக்கான சமூக அங்கீகாரம் இன்மையானது சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றன.
5. குறைந்த இலாபத்தன்மை/குறைந்த வருமானம் அல்லது நஷ்டங்கள் ஆகியன குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றன.
6. கடுமையான வேலையும் மற்றும் வேளாண்மைத் துறையின் உறுதியற்றதன்மையும் சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்களிப்பினை விளைவிக்கின்றன.

## 1.5 ஆராய்ச்சி முறை

### 1.5.1 தரவின் மூலங்களும், சேகரிப்பும்

இவ்வாய்வின் மாதிரித் தெரிவுக்காக பல்-கட்ட அடுக்கிலான எழுந்தமான மாதிரிப்படுத்தல் முறை பயன்படுத்தப்பட்டது. முதலாவது கட்டத்தில், கமத்தொழில் உற்பத்தியினதும் மற்றும் பயிர்ச்செய்கையினதும் பங்களிப்பு மீதான அடிப்படையில் ஒன்பது மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இரண்டாவதாக, பயிர்ச்செய்கையின் அடிப்படையுடன் கமநல அபிவிருத்தி நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டன. மூன்றாவது கட்டத்தில், பயிர்ச்செய்கையையும் மற்றும் கமத்தொழிலில் இளைஞரின் சம்பந்தத்தையும் கரிசனைக்கெடுத்து, இரு கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டன. அடுத்து மாதிரிக்கு ஆண்களும், பெண்களும் அத்துடன் தொழில்புரிகின்றவர்களும், தொழில்புரியாதவர்களும் உட்பட இளைஞர்கள் (15-29 வயது) தெரிவுசெய்யப்பட்டனர்.

முக்கிய தகவலளிப்பவர் கலந்துரையாடல் நோக்குக் குழு நேர்முகங்காணல், கேள்விக்கொத்து அளவீடு மற்றும் விடய ஆய்வுகள் ஆகிய முறைகளைப் பயன்படுத்தி, ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளை ஆய்வு தொழிற்படுத்தியது. கமத்தொழில் பகுதிகளிலுள்ள இளைஞர்கள் (15-29 வயதுக்கிடைப்பட்டவர்கள்) கமக்காரர் தாபனங்களின் அலுவலர்கள், கமத்தொழில் உற்பத்தி, ஆராய்ச்சி உதவியாளர்கள், கமத்தொழில் போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி அலுவலர்கள் போன்ற முக்கிய தகவலளிப்பவர்கள் மற்றும் இளைஞர் கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து ஆரம்பநிலையிலான தரவு சேகரிக்கப்பட்டது. வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலுள்ள கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து இரண்டாம்நிலைத் தரவு சேகரிக்கப்பட்டது. 2012 ஏப்ரலிலிருந்து மே வரை வெளிக்கள அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

நோக்கங்கள் தொடர்பிலான தரவையும், தகவலையும் திரட்டுவதற்காக பின்வரும் காட்டிகள் பயன்படுத்தப்பட்டன.

நோக்கம் 1: தொழிலொன்றாக வேளாண்மையிலும் மற்றும் கமத்தொழில் தொடர்பான கைத்தொழில்களிலும் இளைஞரின் புலனறிவினைப் பரீட்சித்தல்

i. தொழிலொன்றாக முழுநேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கான இணக்கம்

ii. கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழிலில்/வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான இணக்கம்

நோக்கம் 2: இலங்கையில் சிறுஉடைமையாளர் வேளாண்மைத் துறையில் குறைந்த இளைஞர் பங்கெடுப்புக்கு பங்களிக்கின்ற காரணிகளை அடையாளம் காணுதல்

i. இளைஞர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணி (கல்வியின் மட்டம், தொழில்முன்னிலைப் பயிற்சியின் வகை, வயது, பால்நிலை, திருமண நிலை, பெற்றோரின் தொழில்கள், குடும்ப வருமானம், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் குடும்பத்தில் தங்கியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை).

ii. கமத்தொழில் வளங்களினதும் மற்றும் வசதிகளினதும் கிட்டுந்தன்மையும், அடையுந்தன்மையும் (காணியின் கிட்டுந்தன்மை, காணியின் அளவு, கமத்தொழில் இயந்திராதிகள் - இரு சக்கர, நாலு சக்கர டிரக்டர்கள், அறுவடை இயந்திரம், சரீரஉழைப்பின் கிட்டுந்தன்மை, பண்ணைச் சக்தி, கடன், விதை மற்றும் வேறு உள்ளீடுகள், சந்தைப்படுத்தல் மற்றும் விஸ்தரிப்புச் சேவைகள்).

iii. தொழிலொன்றாக வேளாண்மைக்கான சமூக அங்கீகாரம்

### 1.5.2 ஆய்வுப் பகுதியும், மாதிரி அளவும்

#### 1.5.2.1 ஆய்வுப் பகுதி

2012 ஏப்ரலிலிருந்து மே வரை ஒன்பது மாவட்டங்களில் வெளிக்கள அளவீடு நடத்தப்பட்டது. பயிர்ச்செய்கையின் வகையைக் கரிசனைக்கெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரு கமநல சேவை நிலையங்களும், அவற்றில் இரு கிராம அலுவலர் பிரிவுகளும் தெரிவுசெய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட கமத்தொழில் உற்பத்தி, ஆராய்ச்சி உதவியாளர்களிடமிருந்து இளைஞர்களின் (15-29 வயது) பட்டியல்களைச் சேகரித்த பின்னர் ஆண்களையும், பெண்களையும் உள்ளடக்குகின்ற அளவீட்டுக்கான இளைஞர்கள் எழுந்தமானரீதியில் தெரிவுசெய்யப்பட்டார்கள். தொழிலற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலைச் சரிபார்ப்பதற்காக தொழிலாற்றிய இளைஞர்களிடமிருந்து தரவு சேகரிக்கப்பட்டது. மேலதிகமாக, கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களிடமிருந்தும், நோக்குக் குழு கலந்துரையாடல்களின் ஊடாக இளைஞர் கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களிடமிருந்தும் மற்றும் அலுவலர்களிடமிருந்தும் தகவல் திரட்டப்பட்டது. வெளிக்கள அமைவிடங்களை அட்டவணை 1.1 முன்வைக்கின்றது.

#### 1.5.2.2 மாதிரி அளவு

கேள்விக்கொத்து அளவீட்டுக்காக பயிர் மற்றும் கால்நடை வேளாண்மை ஆகியன மீதான அடிப்படையில் ஒவ்வொரு கமநல அபிவிருத்தி நிலையத்திலிருந்தும் 25 இளம் பதிலிறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மேலதிகமாக, வேறுபட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 33 கமத்தொழில் பட்டதாரிகளும் மற்றும் பட்டதாரி மாணவர்களும் நேர்முகங்காணப்பட்டனர். எனவே, மொத்த மாதிரி 533 ஆகும்.

**அட்டவணை 1.1: வெளிக்கள அமைவிடங்களும், சம்பந்தப்பட்ட பகுதிகளில் செய்கைபண்ணப்படும் பாரிய பயிர்களும்**

| மாவட்டம் | கமநல அபிவிருத்தி நிலையம் | கிராம அலுவலர் பிரிவு | பகுதியில் குறித்துரைக்கப்பட்ட பயிர்களின் செய்கை |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | சாந்திபுர மற்றும் பட்டிப்பொல | மலையக மரக்கறி |
| நுவரெலியா | கந்தப்பொல | ஜயலங்கா மற்றும் கந்தபொல | மலையக மரக்கறி மற்றும் பூங்கனியியல் |
| மாத்தளை | தம்புள்ளை | கிரலஸ்ஸ மற்றும் பொல்லத்தவ | பெரிய வெங்காயம் |
| மாத்தளை | கிம்பிஸ்ஸ | கிரலகொல்ல மற்றும் பலுதவ | பெரிய வெங்காயம் |
| மாத்தளை | யட்டவத்த | வல்பொல மற்றும் இடம்கம | போஞ்சி மற்றும் தக்காளி |
| பொலன்னறுவை | செவகம | செவகம மற்றும் மெனிக்வில | நெல் - பாரிய நீர்ப்பாசனம் மற்றும் பப்பாசி |
| பொலன்னறுவை | வெலிக்கந்த | விஜயபாகுபுர மற்றும் சிங்கபுர | நெல் - பாரிய |
| குருநாகல் | நிக்கவெரட்டிய | திவுல்லேவ மற்றும் கெபெல்லிவ | சேனைப்பயிர்கள், நெல் - மானாவரி |
| குருநாகல் | மாவத்தகம | வடியகொட மற்றும் ஆகேட் | நெல் சிறு மற்றும் வெற்றிலை, தாழ் நில மரக்கறிகள் |
| அம்பாறை | தெஹியத்த கண்டிய | பிரிஸ்சொரோவ மற்றும் பக்மீதெனிய | நெல் பாரிய |
| அம்பாறை | உகன | ஹிமிதுரவ மற்றும் குமாரிகம | நெல் - பாரிய, தாழ் நில மரக்கறிகள் |
| ஹம்பாந்தோட்டை | திஸ்ஸமஹராம | விஜிதபுர மற்றும் சந்துன்கம | கால்நடை வளர்ப்பு |
| ஹம்பாந்தோட்டை | மீகஹயதுர | ருன்முதுவேவ மற்றும் நம்படகஸ்வேவ | வாழை, பப்பாசி மற்றும் தாழ்நில மரக்கறிகள் |
| ஹம்பாந்தோட்டை | அங்குணகொல பெலஸ்ஸ | மீரிகத்வல மற்றும் ஹெலிகடே | வாழை, மரக்கறி மற்றும் நெல் - பாரிய |
| மொனராகலை | தெலுள்ள | எதிலிவேவ மற்றும் புபுதுவேவகம | சின்னவெங்காயம் மற்றும் மரக்கறி |
| மொனராகலை | எதிமலை | சிறிபுர மற்றும் வத்தேகம | சேனைப்பயிர்கள் |
| அனுராதபுரம் | நொச்சியாகம | திம்பிரிவேவ மற்றும் கட்டுபெத்தவ | நெல் - சிறு மற்றும் பாரிய, வேறு களப்பயிர்கள் |
| அனுராதபுரம் | தந்திரிமலை | நெலுன்வில் மற்றும் ஓயாமடுவ | நெல் - சிறு, வேறு களப்பயிர்கள் |
| மட்டக்களப்பு | கரடியனாறு | மாரப்பலம மற்றும் மாவல்லையாறு | நெல் - மானாவரி, சேனைப்பயிர்கள் |
| மட்டக்களப்பு | வாழைச்சேனை | சித்தாண்டி மற்றும் ஓட்டமாவடி | நெல் - பாரிய, சேனைப்பயிர்கள் |

## 1.6 தரவுப் பகுப்பாய்வு

அடிப்படைரீதியில், எளிய புள்ளிவிபரமுறைகளைப் பயன்படுத்தி அளவுசார்ந்த தரவுகள் பகுப்பாயப்பட்டன. பண்புசார்ந்த தரவுகளின் பகுப்பாய்வுக்கு தகவல் விவரணத்திலான முறைகள் தொழிற்படுத்தப்பட்டன.

## 1.7 அறிக்கையின் கட்டமைப்பு

அறிக்கை எட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஆய்வின் பின்னணி, நோக்கங்கள், பிரச்சனைக் கூற்று கருதுகோள் மற்றும் ஆய்வின் முறைகள் ஆகியன உட்பட அறிமுகத்தை முதலாவது அத்தியாயம் முன்வைக்கின்றது. இளைஞர் தொடர்பான இலக்கிய மதிப்பாய்வையும் மற்றும் சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்களிப்பினையும் இரண்டாவது அத்தியாயம் முன்வைக்கின்றது. மாதிரியின் சம்பந்தப்பட்ட சமூக-பொருளாதாரப் பின்னணியை மூன்றாவது அத்தியாயம் சித்தரிக்கின்றது. சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பு மீதான தரவை அத்தியாயம் நான்கு முன்வைக்கின்றது. கமத்தொழில் தொடர்பிலான இளைஞரின் புலனறிவை விசேடமாக முழுநேர பயிர்ச்செய்கை, கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் தொழில் விருப்புக்கள் ஆகியன மீது நோக்கினைக் கொண்டு அத்தியாயம் ஐந்து கலந்துரையாடுகின்றது. கமத்தொழிலில் இளைஞர்கள் சம்பந்தப்படுவதில் முயற்சிக்கின்ற போது அவர்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகளை அத்தியாயம் ஆறு பகுப்பாய்கின்றது. இளைஞர்களினாலும் மற்றும் கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளினாலும் செய்யப்பட்ட ஆலோசனைகள் அத்தியாயம் ஏழில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளுடன் அத்தியாயம் எட்டு முடிவடைவதுடன், கொள்கை தாக்கங்களையும் மற்றும் ஆய்வினுள் அடையாளம் காணப்பட்ட மேலதிக ஆராய்ச்சித் துறைகளையும் அது முன்வைக்கின்றது.

# அத்தியாயம் இரண்டு

## இலக்கிய மதிப்பாய்வு

### 2.1 அறிமுகம்

நடைமுறையிலான இலக்கியத்தை மதிப்பாய்வதன் மூலம் ஆய்வின் கருத்துருக்களின் மேலோட்டமொன்றை இந்த அத்தியாயம் வழங்குகின்றது. இளைஞர்கள், இளைஞர் தொழிலின்மை மற்றும் சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறை ஆகியன தொடர்பிலான கருத்துருக்களை இது சுருக்கமாகப் பரீட்சிக்கின்றது. ஆய்வுப் பகுதி தொடர்பில் சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட செயலறிவுசார்ந்த ஆய்வுகள் மீதும் அத்தியாயம் நோக்கினைக் கொண்டுள்ளது.

### 2.2 சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறை

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மிகவும் பொதுவாகவுள்ள சிறிய அளவிலான பண்ணைகள் மீதான அடிப்படையை சிறுஉடைமையாளர் கமத்தொழில் கொண்டுள்ளது. சிறிய பண்ணைகள் குடும்பப் பண்ணைகளாக அறியப்படுவதுடன், இது பலதரப்பட்ட வழிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும், மிகவும் பொதுவான அளவீடாக விளங்குவது பண்ணையின் அளவாகும். இரண்டு ஹெக்டார்களுக்கு குறைந்த பயிர் நிலத்தைக் கொண்டவற்றையே சிறிய பண்ணைகளாக பெருமளவு மூலங்கள் வரையறுக்கின்றன (கணேஷ் மற்றும் ராகவ், 2011). பெருமளவு சரீரஉழைப்புக்கு குடித்தன உறுப்பினர்கள் மீது தங்கியுள்ளவையாக அல்லது உறுதியான உணவுகளின் குடித்தனத்தின் பாவனையின் மொத்தத்தை உற்பத்தி செய்வதே பண்ணையின் ஆரம்பநிலையிலான குறிக்கோளாகவுள்ள மானியத்திலான முனைப்புடன் உள்ளவற்றை சிறிய பண்ணைகளாக சிலர் விபரிக்கின்றனர் (ஹசெல், போல்ரன், விக்கின்ஸ் மற்றும் டோர்வார்ட், 2007). குறைந்த சொத்து தளமொன்றையும், இரண்டு ஹெக்டாருக்கு குறைந்தளவை தொழிற்படுத்துவதையும் கொண்டுள்ளவையாக உலக வங்கியின் கிராமிய அபிவிருத்தி மூலோபாயம் (2003) வரையறுக்கின்றது. துறையில் ஏனைய கமக்காரர்கள் தொடர்பில், மட்டுப்படுத்தப்பட்ட மூலவள அறக்கொடைகளுடனான கமக்காரர்களாக சிறுஉடைமையாளர்களை விவசாய, உணவுத் தாபனம் அடையாளம் கண்டுள்ளது (டிக்சன், தனிகுச்சி மற்றும் வாட்டன்பாச், 2003).

சிறிய துண்டு காணியைச் செய்கைபண்ணும் சிறுஉடைமையாளர்களினால் ஆசியாவில் கமத்தொழில் சித்தரிக்கப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் சிறுஉடைமையாளர் பண்ணைகளினால் தொழிற்படுத்தப்படும் பகுதி தற்போது குறைவடைவதை விட அதிகரிப்பதாகவே தோன்றுகின்றது (ஷாகுல், 2010). கடந்த தசாப்தங்களின் போது, பெருமளவு ஆசிய நாடுகளில் சராசரிப் பண்ணை அளவு குறைவடைந்து வருகின்றது. பங்களாதேஷில் தொழிற்படுகின்ற உடைமைகளின் சராசரி அளவு 0.5 ஹெக்டார்கள் மட்டுமேயாகும். இது நேபாளத்தில் 0.8 ஹெக்டார்கள், இந்தியாவில் 1.4 ஹெக்டார்கள் மற்றும் பாகிஸ்தானில் 3.0 ஹெக்டார்கள் என உள்ளது. இந்தியாவில் சுமார் 81 சதவீதத்தைக் கொண்ட பண்ணைகள் இரண்டு ஹெக்டார்களை விட குறைந்த காணி உடைமைகளைக் கொண்டுள்ள அதேவேளை, மொத்த செய்கைபண்ணப்பட்ட பகுதியில் அவற்றின் பங்கு சுமார் 44 சதவீதமாகும் (ஒழுங்குபடுத்தப்படாத துறையில் வியாபார முயற்சிகளுக்கான தேசிய ஆணைக்குழு, 2008). எனவே, எதிர்காலத்தில் குறைந்தபட்சம் பெருமளவு தசாப்தங்களுக்கு கமத்தொழில் காணியின் பாதுகாவலர்களாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சிறுஉடைமைக் கமக்காரர்கள் தொடர்ந்தும் இருப்பார்கள்.

பலதரப்பட்ட பயிர் சந்திகளை சிறுஉடைமைப் பண்ணைகள் வளர்ப்பதற்கு முனைவதுடன், இவற்றில் பெரும்பாலானவை லான்ட்ரேசஸ் ஆகும். 2008இல் ஒழுங்குபடுத்தப்படாத துறையில் வியாபார முயற்சிகளுக்கான தேசிய ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளவாறு (குளோசன், 1985) நவீன இனங்களுடன் ஒப்பிடும் போது பெருமளவு இப் பயிர்கள் மரபணுரீதியில் அதிகளவு பல்வகைப்பட்டன என்பதுடன்,


ஊறுபடுந்தன்மைக்கு எதிராக அதிகளவு மீளுந்தன்மையையும் வழங்குகின்றன. இதனிடையே நோய்கள், பூச்சிகள் மற்றும் வரட்சி போன்ற அழுத்தத்தின் மத்தியில் அறுவடைப் பாதுகாப்பினை லான்ட்ரேசஸ் மேம்படுத்துகின்றன. எனினும், சிறுஉடைமைத் துறையினால் விசேடமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உணவு உற்பத்திக்கான கணிசமானளவு பகுதி வழங்கப்படுகின்றது. இந் நாடுகளில் பெரும்பான்மையான கிராமிய மக்களின் முக்கியமான பொருளாதார அலகுகளாக சிறிய பண்ணைகள் விளங்குகின்றன.

கமத்தொழில் விளைவின் மொத்த பெறுமதிக்கான சிறுஉடைமையாளர்களின் பங்களிப்பு ஆசியாவில் பெருமளவு நாடுகளில் குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக, இந்தியாவில் 44 சதவீதத்தைக் கொண்ட காணியை அவர்கள் செய்கை பண்ணுகின்ற போதிலும், மொத்தப் பண்ணை விளைவுக்கான அவர்களது பங்களிப்பு 50 சதவீதத்தை மீறுகின்றது. ஹெக்டார் ஒன்றுக்கான பண்ணை அளவுக்கும், உற்பத்தித்திறனுக்கும் இடையிலான எதிரிடையான உறவினை பெருமளவு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. சிறிய மூலதனத்தின் பிரயோகங்கள் ஆனால் உயர்ந்த உபயோகத்திலான சரீரஉழைப்பு மற்றும் வேறு குடும்பத்துக்கு சொந்தமான உள்ளீடுகள் ஆகியவற்றினாலும் பொதுவாக உயர்ந்தளவிலான பயிர்ச்செய்கை தீவிரத்தன்மையினதும், பன்னிலையாக்கத்தினதும் காட்டியொன்றினாலும் சிறுஉடைமைக் கமக்காரர்கள் சித்தரிக்கப்படுகின்றனர். பண்ணை அளவுக்கும், உற்பத்தித்திறனுக்கும் இடையிலான எதிரிடையான உறவானது செயற்றிறனுக்கும் மற்றும் ஒப்புரவு ஆதாயங்களுக்குமான காணி மீள்-பங்கீடு உட்பட காணி சீர்திருத்தக் கொள்கைகளுக்கு சக்திமிக்க அடிப்படையொன்றாக விளங்குகின்றது (குளோசன், 1985).

## 2.3 இலங்கையில் சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறை

இலங்கையின் சமூகம் கமத்தொழிலினால் பாரம்பரியரீதியில் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. இன்னுமே சனத்தொகையின் பெருவோட்டம் கிராமியப் பகுதிகளில் வாழ்வதுடன், அவர்களில் பெரும்பான்மையானோர் கமத்தொழிலில் தங்கியிருக்கின்றனர். பொதுவாக பயிர்கள், கால்நடை, வனவியல் மற்றும் மீன்பிடித்தல் ஆகியனவற்றைக் கமத்தொழில் துறை கொண்டுள்ளது. சரீரஉழைப்புப் படை பங்கெடுப்பு தொடர்ந்துமே உயர்வான மட்டத்தில் உள்ள அதேவேளை, மொத்த உள்ளூர் உற்பத்திக்கான துறைசார் பங்கீட்டின் வீழ்ச்சியடையும் போக்கினால் இலங்கையில் கமத்தொழில் துறையின் மிகவும் குறிப்பிடத்தக்க குணவியல்புகளில் ஒன்று விளங்குகின்றது. உதாரணமாக, 1950இல் கமத்தொழில் துறையின் பங்களிப்பு 46.3 சதவீதமாக இருந்த (தமயந்தி மற்றும் கமகே, 2011) அதேவேளை, 2011இல் இது 11.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கையில் மொத்த உள்ளூர் உற்பத்தியினதும், சரீரஉழைப்புப் படையின் பங்கெடுப்பினதும் துறைசார் அடக்கத்தினை முறையே உருபு 2.1 மற்றும் அட்டவணை 2.1 ஆகியன சித்தரிக்கின்றன.

**உருபு 2.1: இலங்கையில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் துறைசார் அடக்கம் (1980-2010)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள், 1985-2011 இலங்கையில் பொருளாதார, சமூக புள்ளிவிபரவியல், 2011, இலங்கை மத்திய வங்கி,

2011இல் மொத்த சரீரஉழைப்புப் படையின் 32.9 சதவீதம் என கமத்தொழில் சரீரஉழைப்புப் படை அறிக்கையிடப்பட்டது. மொத்த உள்ளூர் உற்பத்தியில் கமத்தொழில் துறையின் பங்கு வீழ்ச்சியடைந்த போதிலும், 2011இல் கமத்தொழில் சரீரஉழைப்புப் படை சிறிதளவு அதிகரித்துள்ளது (அட்டவணை 2.1). தமது வாழ்வாதாரத்திற்காக கமத்தொழில் செயற்பாடுகளில் பெரும்பான்மையான கிராமிய சரீரஉழைப்புப் படை ஈடுபட்டுள்ள போதிலும், அவர்களது உற்பத்தித்திறன் கேள்விக்குரியதாகும்.

**அட்டவணை 2.1: பிரதான பொருளாதாரச் செயற்பாட்டினால் தொழிலாற்றுகின்றவர்கள் ('000)**

| ஆண்டு | தொழிலாற்றுபவர்களின் மொத்த எண்ணிக்கை | கமத்தொழில் துறையில் சரீரஉழைப்புப் படை | மொத்தத்தின் சதவீதம் (%) | கைத்தொழில் துறையில் சரீரஉழைப்புப் படை | மொத்தத்தின் சதவீதம் (%) | சேவைகள் துறையில் சரீரஉழைப்புப் படை | மொத்தத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 2003 | 6,609,466 | 2,223,691 | 33.6 | 1,539,035 | 23.3 | 2,846,760 | 43.1 |
| 2004 | 6,704,006 | 2,215,282 | 33.0 | 1,663,383 | 24.8 | 2,825,341 | 42.1 |
| 2005 | 6,788,119 | 2,059,293 | 30.3 | 1,787,274 | 26.3 | 2,941,552 | 43.3 |
| 2006 | 7,105,322 | 2,287,268 | 32.2 | 1,889,953 | 26.6 | 2,928,101 | 42.1 |
| 2007 | 7,041,874 | 2,202,098 | 31.3 | 1,873,857 | 26.6 | 2,965,919 | 42.1 |
| 2008 | 7,174,706 | 2,344,414 | 32.7 | 1,888,003 | 26.3 | 2,942,288 | 41.0 |
| 2009 | 7,139,536 | 2,318,620 | 32.5 | 1,822,684 | 25.5 | 2,998,231 | 42.0 |
| 2010 | 7,235,641 | 2,353,598 | 32.5 | 1,777,129 | 24.6 | 3,104,913 | 42.9 |
| 2011 | 7,894,000 | 2,602,000 | 32.9 | 1,915,000 | 24.3 | 3,380,000 | 42.8 |

மூலம்: இலங்கை சரீரஉழைப்பு படை அளவீடு, குடிசனத்தொகை, புள்ளிவிபரத் திணைக்களம், 2011 1ஆவது காலாண்டு அறிக்கை, ஆண்டறிக்கை, இலங்கை மத்திய வங்கி, 2011

துறைசார் பன்மைத்தன்மையே இலங்கையின் கமத்தொழிலின் பாரிய சிறப்பியல்புகளாகும். இதில் பாரிய ஏற்றுமதிப் பயிர்களை (தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு) பெருந்தோட்டத் துறை உற்பத்தி செய்கின்ற அதேவேளை, பிரதானமாக உள்ளூர் சந்தைக்கு அரிசி மற்றும் வேறு பயிர்களை பெருந்தோட்டம்-சாராத துறை அல்லது சிறுஉடைமையாளர் வேளாண்மைத் துறை உற்பத்தி செய்கின்றது (தமயந்தி மற்றும் கமகே, 2011). கிராமிய இலங்கையில் பிரதான பொருளாதாரச் செயற்பாடாகவே கமத்தொழில் இன்னும் விளங்குகின்றது என சிலர் கருதுகின்றனர். விசேடமாக, கிராமியப் பொருளாதாரத்துடன் சிறுஉடைமையாளர் வேளாண்மை நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளது.[3]

பிரிட்டிஷ் காலனித்துவ நிருவாகத்தின் முன்னர் கமக்காரக் குடியானவன் கமத்தொழிலினால் இலங்கையில் கமத்தொழில் துறை ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டக் கமத்தொழிலின் விஸ்தரிப்புடன் அது மாற்றமடைந்துள்ளது. எனவே, இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அரிசி, தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகிய நான்கு பிரதான பயிர்களினால் நாட்டிலுள்ள கமத்தொழில் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ளது. சுதந்திரத்திலிருந்து வறுமையைத் தணிப்பதையும் மற்றும் கமத்தொழிலை மேம்படுத்துவதையும் நோக்கி ஒரு தொகையிலான அரசாங்கக் கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அமுல்படுத்தியும் உள்ளது. இவ்வாறாக 1960இன் நடுப்பகுதிக்குள் சிறுஉடைமையாளர் கமத்தொழில் துறையில் கமத்தொழிலின் உருமாற்றத்தை நோக்கிய போக்கொன்றை இது காட்டுகின்றது. நீர்ப்பாசனத்திலான நெல் வேளாண்மையின் கீழுள்ள பகுதி விஸ்தரித்ததினாலும், உயர் விளைச்சலிலான வகைகள் மற்றும் அசேதன உரங்கள் போன்ற உற்பத்தித்திறனை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களின் உபயோகம் பரவுவதை ஆரம்பித்ததினாலும் நெற் துறை ஒரு தீவிரமான மாற்றத்தையடைந்தது. எனினும், தற்போது உள்ளூர் பாவனைக்கென்றில்லாமல் விற்பனைக்காகவே பயிர்களை சிறுஉடைமைக் கமக்காரர்களில் பெரும்பான்மையோர் உற்பத்தி செய்கின்றனர் (தமயந்தி மற்றும் கமகே, 2011).

2002இல் இலங்கைக் கமத்தொழில் கணக்கெடுப்பின் பிரகாரம், நாட்டின் சிறுஉடைமைகளின் மொத்த எண்ணிக்கை 3,264,678 என்பதுடன், அவற்றின் மொத்தக் காணி விஸ்தீரணம் 1,531,461 ஹெக்டார்கள் ஆகும் (அட்டவணை 2.2). அவற்றில் 1,477,308 மற்றும் 1,787,370 சிறுஉடைமைகள் பிரதானமாக முறையே வீட்டுப்பாவனைக்கும் மற்றும் விற்பனைக்கும் உற்பத்தி செய்கின்றன. மேலதிகமாக, 2002இல் சிறுஉடைமையின் சராசரிப் பண்ணை விஸ்தீரணம் 0.47 ஹெக்டார்கள் ஆகும்.

**அட்டவணை 2.2: சிறுஉடைமைகளின் எண்ணிக்கையும், காணி விஸ்தீரணமும் - 2002**

| | **உடைமைகளின் எண்ணிக்கை** | **விஸ்தீரணம் (ஹெக்.)** |
|---|---|---|
| மொத்த சிறுஉடைமைகள் | 3,264,678 | 1,531,461 |
| சிறுஉடைமைகளின் உற்பத்தி | | |
| பிரதானமாக வீட்டுப் பாவனைக்கு | 1,477,308 | 82,119 |
| பிரதானமாக விற்பனைக்கு | 1,787,370 | 1,449,342 |

மூலம்: இலங்கைக் கமத்தொழில் கணக்கெடுப்பு - 2002

3 கிராமிய பொருளாதாரத்தை வரையறுப்பதற்கு சனத்தொகை அடர்த்தியையே பெருமளவு கல்விமான்கள் பிரதானமாக கருதுகின்றனர். குடிசன கணக்கெடுப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் கூற்றின் பிரகாரம், இலங்கையில் கிராமியப் பகுதிகள் எஞ்சிய வகுதியாக வரையறுக்கப்படுவதுடன், பகுதிகள் (மாநகர மற்றும் நகர சபைகளினால் ஆட்சிப்படுத்தப்படுகின்ற பகுதிகளாக வரையறுக்கப்பட்ட) மற்றும் 20 ஏக்கர்களுக்கு மேற்பட்டதும், தனித்த நிருவாக உறுப்புடன் 10 வதிவிட சரீரஉழைப்பாளர்களுடனான பெருந்தோட்டங்களை வரையறுக்கப்பட்ட தோட்டத்துறையும் புறநீங்கலாக சகல பகுதிகளையும் உள்ளடக்குகின்றது.

2002இல் கமத்தொழில் கணக்கெடுப்பினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, 162,904 காணி உடைமைகள் இருந்ததுடன், இவற்றின் காணி விஸ்தீரணம் ¼ ஏக்கருக்கு குறைவானது அல்லது சமமானது என்பதுடன், இக் காணிகளின் மொத்த விஸ்தீரணம் 81,822 ஆகும். இவ் வகுதியில் உடைமைகளின் மொத்த எண்ணிக்கையானது செய்கை பண்ணக்கூடிய காணியின் குறைப்பு, மட்டுப்படுத்தப்பட்ட காணியின் உயர்வான கிராக்கி மற்றும் காணி கூறுபடுதல் ஆகியவற்றின் காரணமாக அதிகரிப்பதற்கு முனைகின்றது.

## 2.4 இளைஞர்

பலதரப்பட்ட வழிகளில் 'இளைஞர்' என்ற வரைவிலக்கணம் வேறுபடுகின்றது. 'பக்குவ நிலைக்கும், முதிர்ந்த நிலைக்கும் இடையிலான காலத்தையே' இளைஞர் பருவமாக மனோதத்துவவியலாளர்கள் வரையறுக்கின்ற அதேவேளை, அதை வயது மீதான அடிப்படையாக சட்ட சபை உறுப்பினர்கள் வரையறுக்கின்றனர். பொருளாதார உணர்வில், தனது தொழில்நிலையிலான ஆற்றலளவுகளை அவர் விருத்திசெய்கின்ற விதத்தில் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில் உள்ள காலமொன்றே "இளைஞர் பருவமாகும்". சமூக மட்டத்தைக் கருத்திற்கெடுக்கையில், முதலீட்டின் காலமொன்றாக இளைஞர் பருவம் வரையறுக்கப்பட முடியும் (அமர்வு கட்டுரை III, 1967).

"15க்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்களையே" இளைஞர்களாக ஐக்கிய நாடுகள் வரையறுக்கின்ற அதேவேளை, "13-29 வயதிற்கு இடைப்பட்டவர்களையே" இளைஞர்களாக இலங்கைத் தேசிய இளைஞர் சேவை மன்றம் வரையறுக்கின்றது (Ibargüen, 2004). வயது எல்லைக்கு அப்பால், இலங்கை போன்ற சில நாடுகள் இளைஞர் பருவத்தை வரையறுப்பதற்கு திருமணம் மற்றும் தொழில் போன்ற சில சமூக-கலாசார அம்சங்களைப் பயன்படுத்துகின்றன. 15-29 வயதான திருமணமாகாதவர்களாக இளைஞர்கள் என்ற வரைவிலக்கணத்தை 2000இல் இலங்கையில் தேசிய இளைஞர் அளவீடு ஏற்றுக்கொண்டது. ஆணையும், பெண்ணையும் உள்ளடக்கி 15-29 வயதானவர்களாக இளைஞரின் வரைவிலக்கணத்தை இவ்வாய்வு ஏற்றுக்கொள்கின்றது.

## 2.5 "பொருளாதாரரீதியில் "தீவிரமான", "தொழில்", மற்றும் "தொழில்நிலை" ஆகியவற்றின் வரைவிலக்கணங்கள்

தொழிலின்மை, தொழில் மற்றும் பொருளாதாரரீதியில் தீவிரம் ஆகியவற்றின் கருத்துருக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை என்பதுடன், பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அம்சங்களைப் பொறுத்தளவில் நாடொன்றுக்கு முக்கியமானதாகும். 'ஒன்றில் தொழிலாற்றுகின்ற அல்லது தொழிலுக்கு கிட்டுகின்ற நபர்' ஒருவராக 'பொருளாதாரரீதியில் தீவிரமான நபராக' இலங்கை குடிசனக் கணக்கெடுப்பு, புள்ளவிபரத் திணைக்களம் வரையறுக்கின்றது. குறிப்பிட்ட நேரகாலமொன்றின் போது பொருளாதாரப் பொருட்களினதும், சேவைகளினதும் உற்பத்திக்காக சரீரஉழைப்பை விநியோகிக்கும் இரு பால்நிலைகளையும் கொண்ட குறிப்பான வயதொன்றுக்கு மேற்பட்ட (இலங்கையின் விடயத்தில் 10 வயதும், அதற்கு மேலும்) சகல நபர்களையும் உள்ளடக்கியவாறு பரந்தரீதியில் 'பொருளாதாரரீதியில் தீவிரமான சனத்தொகை' வரையறுக்கப்படுகின்றது. நீண்ட மேற்கோள் காலமொன்றுக்கு (ஒரு வருடம்) அது அளவிடப்படும் போது, இது 'பொருளாதாரரீதியில் தீவிரமான சனத்தொகையாக' குறிப்பிடப்படுகின்றது.

குடிசனக் கணக்கெடுப்பு, புள்ளவிபரத் திணைக்களத்தின் கூற்றுப்படி, மேற்கோள் காலத்தின் போது, பணமாக அல்லது பொருளாக ஊதியத்திற்கு அல்லது சம்பளத்திற்கு அல்லது இலாபத்திற்கு அல்லது குடும்ப ஆதாயத்திற்கு சிறிதளவு வேலையை நிறைவேற்றிய சகல குடித்தன உறுப்பினர்களும் தொழிலாற்றுகின்றவர்களாவர். இலாபமொன்றுக்காக அல்லது குடும்ப ஆதாயத்திற்காக 'கொடுப்பனவற்ற குடும்ப ஊழியர்' ஒருவராக, 'ஊழியராக' அல்லது 'தொழில்வழங்குனராக/சொந்த வகைபொறுப்பு ஊழியராக' (சுய-தொழில்புரியும்) மேற்கோள் காலத்தின் போது

('தொழிலின் தற்போதைய' நிலையை அளவிடும் போது, 'ஒரு வாரத்தைக்' கொண்ட குறுகிய மேற்கோள் காலம் கரிசனைக்கு எடுக்கப்படும் போது முன்னைய நாட்காட்டி வாரம்) குறைந்தபட்ச ஒரு மணித்தியாலத்திற்கு பணியாற்றிய (அதாவது, ஏதாவது பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும்) நபர் ஒருவரே தற்போது தொழிலாற்றும் நபருக்கான சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வரைவிலக்கணமாகும் (நாணயக்கார, 2004).

குடிசனக் கணக்கெடுப்பு, புள்ளவிபரத் திணைக்களத்தினால் வரையறுக்கப்பட்டவாறு, 10 வயதையும (அல்லது 15 வயது), அதற்கு மேற்பட்டதையும் சார்ந்ததும், வேலைக்கு கிட்டுகின்றதும் (கொடுப்பனவிலான அல்லது சுயதொழில்), வேலையை நாடுகின்றதும் ஆனால் குறித்துரைக்கப்பட்டுள்ள மேற்கோள் காலத்தின் போது கொடுப்பனவில் அல்லது சுய-தொழில் வேலையை தொடர்ந்தும் செய்யாத சகல நபர்களையும் 'தொழிலற்ற சனத்தொகை' கொண்டுள்ளது.

## 2.6 இலங்கையில் இளைஞரின் தொழிலின்மை

இலங்கையில் மொத்தச் சனத்தொகையில் 28 சதவீதத்தினர் 15 முதல் 29 வயதுக் குழுவைச் சார்ந்தவர்களாவர். மேலும், 75 சதவீதத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் 1960-2000 காலத்தின் போது கிராமியத் துறையில் வாழ்ந்தனர் (Ibargüen, 2004). அட்டவணை 2.4இல் காட்டப்பட்டுள்ளவாறு, 1990-2011 காலத்தின் போது நாட்டின் இளைஞர் தொழிலின்மை மொத்த சரீரஉழைப்புப் படையில் 72.7 சதவீதத்திலிருந்து 84.4 சதவீதத்திற்கு பொறுப்புக்காட்டியது. கிராமியப் பகுதிகளில் மிகப் பெரும்பான்மையிலான இளைஞர்கள் வாழ்வதனால், இளைஞர்களின் தொழிலின்மையானது இலங்கையில் கிராமிய அம்சமொன்றாகும்.

1990-2011 காலத்தின் போது, தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. தொழில் உருவாக்கம், குடித்தொகையியல் மாற்றம் மற்றும் வெளி நோக்கிய புலம்பெயர்வு ஆகியவற்றின் இணைப்பொன்றின் காரணமாக, இந்தப் போக்கு பெரிதுமே இடம்பெற்றுள்ளது (நாணயக்கார, 2004). இருந்த போதிலும், இளைஞர் தொழிலின்மையானது தொடர்ந்துமே ஒரு பாரதூரமான பிரச்சனையாக இருப்பதுடன், மொத்த தொழிலின்மையின் அரைவாசிக்கு மேற்பட்டதற்கு பொறுப்புக்காட்டுகின்றது. அட்டவணை 2.3இல் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கையில் இளைஞர் தொழிலின்மையானது மிகவும் உயர்வானது என்பதுடன், நாடொன்றுக்கான தொழிலின்மையின் சராசரி வீதத்தை விட பெருமளவு தடவைகள் உயர்வாக தொடர்ந்துமே இருந்துள்ளது. கல்வியில் உயர் மட்டத்தைக் கொண்ட சாதனையின் விளைவொன்றாக சில வேலைத் துறைகளில் சிறந்த தொழில்களைப் பெறுவதில் தெளிவானதும், வரையறுக்கப்பட்டதுமான விருப்பார்வங்களை இலங்கையின் இளைஞர்கள் கொண்டுள்ளனர். பொருளாதாரம் உருவாக்குகின்ற தொழில்களின் பாங்குக்கும், தொழிலாற்றுவதற்கு காத்திருக்கின்றவர்களின் தொழில் விருப்பங்களின் பாங்குக்கும் இடையில் குறிப்பிடத்தக்க பொருத்தமின்மையொன்று உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அட்டவணை 2.3: இளைஞர் தொழிலின்மை (15-29 வயதுக் குழு)

| ஆண்டு | தொழிலற்றவர்களின் மொத்த எண்ணிக்கையிலிருந்து தொழிலற்றவர்களின் (15-29 வயது) சதவீதம் | தொழிலற்றவர்களின் மொத்த எண்ணிக்கை | மொத்த தொழிலற்றவர்களின் வீதம் (மொத்த சாீரஉழைப்புப் படையின் சதவீதம்) |
|---|---|---|---|
| 1990 | 79.9 | 953,794 | 15.9 |
| 1991 | 78.2 | 861,680 | 14.7 |
| 1992 | 80.5 | 845,957 | 14.6 |
| 1993 | 77.8 | 830,910 | 13.8 |
| 1994 | 79.2 | 797,591 | 13.1 |
| 1995 | 79.4 | 749,021 | 12.3 |
| 1996 | 81.4 | 704,604 | 11.3 |
| 1997 | 83.0 | 658,297 | 10.5 |
| 1998 | 80.3 | 611,285 | 9.2 |
| 1999 | 81.6 | 590,846 | 8.9 |
| 2000 | 82.3 | 517,168 | 7.6 |
| 2001 | 84.4 | 537,246 | 7.9 |
| 2002 | 83.5 | 625,967 | 8.8 |
| 2003* | 82.9 | 640,961 | 8.4 |
| 2004** | 81.4 | 667,324 | 8.3 |
| 2005**** | 80.7 | 623,341 | 7.7 |
| 2006*** | 78.3 | 493,440 | 6.5 |
| 2007*** | 76.6 | 447,021 | 6.0 |
| 2008* | 75.1 | 433,397 | 5.4 |
| 2009* | 72.7 | 471,254 | 5.8 |
| 2010* | 74.7 | 215,578 | 7.7 |
| 2011 (3வது காலாண்டு) * | 77.6 | 323,033 | 3.9 |

2002இன் இரண்டாவது காலாண்டு வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை.
* கிழக்கு மாகாணம் உட்பட ஆனால், வட மாகாணம் புறநீங்கலாக
** முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் புறநீங்கலாக
*** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் புறநீங்கலாக
**** சகல மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
மூலம்: சாீரஉழைப்புப் படை அளவீடு - வருடாந்த அறிக்கை - 2009 சாீரஉழைப்புப் படை அளவீடு - காலாண்டு அறிக்கை - 2011, 3ஆவது காலாண்டு

பொருளாதாரத்தின் கிராக்கிகளுடன் ஒப்பிடும் போது, வாழ்க்கைத்தொழில் மற்றும் வெள்ளை உடை வகையிலான தொழில்களுக்கு மிகையான சாீரஉழைப்பு விநியோகம் ஒன்றுள்ளது. ஆனால், கமத்தொழில், மீன்பிடித்தல், கைவினைகள் மற்றும் சேவைகள் போன்ற துறைகளில் கைவேலைக்கும் மற்றும் ஆரம்பநிலையிலான தொழில்களுக்கும் குறைந்தளவு விநியோகமேயுள்ளது. ஹெட்டிகே மற்றும் மேயர் (2002) ஆகியோர் குறிப்பிட்டுள்ளவாறு, இலங்கையின் இளைஞர் மத்தியில் தொழிலின்மை வீதம் உயர்வாகவுள்ள அதேவேளை, இளைஞர்களில் ஒரு மிகவும் உயர்வான சதவீதத்தினர்



24244
පුස්තකාලය
LIBRARY
HARTI

தொடர்ந்துமே கற்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு தமது அடிப்படைத் தேவைகளுக்காக தமது குடும்பங்கள் மீது பெருமளவு இளைஞர்கள் பொருளாதாரரீதியில் தங்கியுள்ளனர்.

2009, இலங்கையில் சரீரஉழைப்பு மற்றும் சமூகப் போக்குகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு மூன்று கருதுகோள்களைப் பொறுத்தளவில் நாட்டின் இளைஞர் தொழிலின்மையின் விடாப்பிடித்தன்மையை விளக்குவதற்கு பகுப்பாய்வாளர்கள் முயன்றுள்ளனர்.

1. கல்வி முறைமையில் பல்வீனங்களின் காரணமாக பொருத்தமற்றதும், சந்தைப்படுத்த முடியாததுமான திறன்களைக் கற்றறிந்த ஊழியர்கள் கொண்டுள்ளதாக மிகவும் அடிக்கடி குறிப்பிடப்படும் திறன்களின் பொருத்தமின்மை கருதுகோள் பேணுகின்றது.

2. அரசாங்கத் துறை தொடர்பில் வகுத்தமைக்கப்பட்ட வரிசையில் நிற்கும் கருதுகோள் அரசாங்கத் துறையில் "சிறந்த தொழில்களைப்" பெறுவதற்கான வாய்ப்பொன்றுக்காக தொழிலற்றவர்கள் காத்திருக்கின்றனர் என்பதை ஆதரிக்கின்றது. இது பாதுகாப்பு, தாராளத்திலான சலுகையிலான நன்மைகள் மற்றும் உயர் சமூக அந்தஸ்து ஆகியவற்றினால் சித்தரிக்கப்படுகின்றது. ஒத்திசைவாக, சிவில் சேவைக்கான தொடர்ச்சியான ஆட்சேர்ப்புக்கு செலுத்துகின்ற அரசியல் அழுத்தங்கள் பிரச்சனையைப் பெரிதாக்குகின்றன.

3. முறைமையான தொழில் உருவாக்கத்தின் ஆகுசெலவை நடைமுறையிலான சரீரஉழைப்பு சந்தை நிறுவனங்கள் உயர்த்துகின்றன என்ற கருத்தினை நிறுவனரீதியான கருதுகோள் மேம்படுத்துகின்றது. இவ்வாறாக முறைமையான துறையில் தொழில் உருவாக்க வீதங்களை மூடிக்கட்டுவதுடன், முறைசாராத் தொழிலினுள் பாரிய பாங்கிலான ஊழியர்களைத் தள்ளுகின்றது. குறிப்பாக உயர்ந்தளவு கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழிலும், பாதுகாப்புச் சட்டவாக்கமும் தொழில் ஆகுசெலவுகளையும், பதிந்துள்ள தொழில் உருவாக்கத்தையும் உயர்த்துகின்றன.

இளைஞரின் தொழிலின்மையையும், குறைந்த தொழிலாற்றலையும் அதிகரிப்பதில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தொகையிலான வேறு காரணிகளும் உள்ளன. உதாரணமாக, சமூகப் பெறுமதிகள், தொழிற்றுறை உரிமைக் கலாச்சாரமின்மை மற்றும் திறன்கள் ஆகியனவே இளைஞர் மத்தியில் தொழிலின்மையின் உயர்வான வீதத்திற்கு ஆதிக்கம் செலுத்தும் காரணிகளில் சிலவாகும். எனினும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கௌரவமானதும், சிறந்த கொடுப்பனவிலானதுமான தொழில் வாய்ப்புக்கள் இன்மையில், குறைந்த கொடுப்பனவிலான மற்றும் அனேகமாக பாதுகாப்பற்ற வேதனத்திலான தொழிலில் அல்லது முறைசாராத் துறையில் சுய-தொழிலில் உறுதியற்ற வருமானத்தை அல்லது குறைந்த விளைச்சலிலான காணித் துண்டுகளை ஏற்றுக்கொள்வதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் (கீஸ்ற், 2010). இதையொத்த சூழ்நிலைக்கு இலங்கையின் இளைஞர் முகங்கொடுக்கின்றனர்.

## 2.7 முன்னைய ஆய்வுகள்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இளைஞர்களின் தொழில் மீது நோக்கினைக் கொண்டு உணவு விவசாயத் தாபனத்தினால் நடத்தப்பட்ட உலகளாவிய ஆய்வொன்று கமத்தொழிலில் இளைஞருக்கான கவனத்தை செலுத்தியுள்ளது. இந்த ஆய்வின் பிரகாரம், கமத்தொழிலில் கண்கூடான குறைந்த தொழிலாற்றலானது கமத்தொழில் சுற்றில் பலமான பருவகாலத்தன்மையொன்று இருக்கும் போதே இடம்பெறுகின்றது. இத்தகைய வேளாண்மை முறைமைகளில் வருடமொன்றில் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே சரீரஉழைப்புக்கான கிராக்கி உச்சமடைகின்றது. தளர்ந்த காலத்தின் போது கணிசமானளவு கிராமிய சரீரஉழைப்புப் படையின் பகுதி குறைத்தே பயன்படுத்தப்படுகின்றது. இச் சூழ்நிலையுடன் பருவகாலப் புலம்பெயர்வும், தொழில்

நிலையிலான நகர்வும் பருவகாலத்தில் சோம்பிக்கிடப்பதை தணிப்பதற்கான முக்கியமான உபாயங்களாகும். நூற்றாண்டு காலமாக இத்தகைய வாழ்வாதார அனுசரிப்புகள் நிலவியுள்ளன. ஆனால், காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளன. காணி பற்றாக்குறைவிலான பகுதிகளிலும் கண்கூடான குறைந்த தொழிலாற்றல் பொதுவானதாக விளங்குகின்றது. இங்கு மக்கள் மிகவும் சிறிய பண்ணைகளைக் கொண்டிருப்பதுடன், அவை முழு நேரக் கவனத்தை அவசியப்படுத்துவதில்லை. கமத்தொழிலில் கண்கூடான குறைந்த தொழிலாற்றலானது மிக வறிய நாடுகளில் ஒரு முக்கியமான பிரச்சனையாகும். சாதகமற்ற கம-சூழலியல் நிலைமைகளின் காரணமாக குறைந்த தொழில்நுட்ப மட்டங்கள், மோசமான சந்தை அடைதல் மற்றும் முதலீட்டு மூலதனமின்மை ஆகியவற்றின் காரணமாக பண்ணை சரீரத்தொழிலுக்கான வரும்படிகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அனேகமாக குறைவானதாகும் (கீஸ்ற், 2010).

கிராமிய இளைஞர்களின் தொழிலின் தரம் மீதும் இவ்வாய்வு நோக்கினைக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள இளவயதினர் தமது பெற்றோரின் சந்ததியைவிட பொதுவாகவே கல்வியில் சிறந்தவர்களாக விளங்குவதுடன், மாற்றத்துக்கு அனேகமாக அதிகளவு வெளிப்படையாகவே இருக்கின்றனர். எனவே, இளைஞர் மீது கமத்தொழில் விஸ்தரிப்பு முயற்சிகளை நோக்குப்படுத்துவது நம்பிக்கையூட்டுவதாகத் தெரிகின்றது. பண்ணை சரீரஉழைப்பாளராக, பங்களிக்கும் குடும்ப ஊழியராக அல்லது சுதந்திரமான கமக்காரராக இருந்தாலும், காணியில் பணிபுரிவதன் மூலம் கௌரவமான வாழ்க்கையொன்றை இளம்வயதினர் மேற்கொள்ள முடியுமென்றால் மட்டுமே கமத்தொழிலில் இளைஞருக்கு தரத்திலான தொழில் சாத்தியப்படும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இளைஞர் தொடர்பில் "தொழிலின்மையானது ஒரு மிகவும் முக்கியமான பிரச்சனையல்ல என பெனல் (2007) குறிப்பிடுகின்றார். ஏனெனில் பெருமளவு கிராமிய இளைஞர் ஒன்றில் தொழிலாற்றுகின்றார்கள் (ஊதியத்திலான அல்லது சுயதொழில்) அல்லது 'சரீரஉழைப்புப் படையில் இல்லை'. எனினும், பாரதூரமான குறைந்த தொழிலாற்றலும் மற்றும் குடித்தன-அடிப்படையிலான செயற்பாடுகளின் குறைந்த உற்பத்தித்திறனும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பிரச்சனையாகும். மேலும், பெனலினால் வெளிப்படுத்தப்பட்டவாறு இளைஞர் வாழ்கின்ற குடித்தனங்களில் தலையொன்றுக்கான நாளாந்த வருமானம் ஒரு அமெரிக்க டொலருக்கு குறைவானதாகும். சிறுஉடைமையாளர் வேளாண்மையிலிருந்தும் மற்றும் தொழில்களுக்காக வெளி புலம்பெயர்விலிருந்தும் (தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும்) நகர்வதை நோக்கி கிராம இளைஞர் மத்தியில் அதிகரிக்கின்ற போக்கொன்றுள்ளது.

கிராமிய சீனாவில், கல்வி மற்றும் திறன்கள் உட்பட பால்நிலை மற்றும் திருமண அந்தஸ்து போன்ற சமூகக் காரணிகளும், குடித்தனத்தின் ஊழியரொருவருக்கான காணியின் கிட்டுந்தன்மையும், குடும்ப அளவும், குடும்பத்தில் தங்கியிருக்கும் விகிதமும், குடித்தன வருமானமும், சந்தைக் காரணிகளும் பண்ணை மற்றும் பண்ணை-சாரா தொழில்நிலையின் தெரிவில் குறிப்பிடத்தக்களவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும், கட்சி உறுப்பினரொருவராக இருத்தல் அல்லது உள்ளூராட்சி அலுவலர் ஒருவராக இருத்தல் போன்ற அரசியல் காரணிகளும், மிகக் கிட்டிய நகரத்துக்கான தூரம் போன்ற புவியியல்சார்ந்த காரணிகளும் மற்றும் ஏற்றியிறக்கல் வசதிகளின் கிட்டுந்தன்மையும் கிராமிய சீன மக்கள் மத்தியில் பண்ணை அல்லது பண்ணை-சாரா தொழிலின் தெரிவுக்கு மிக அதிகளவில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாகும் (ஸியா, திகதியில்லை).

கல்வியின் மட்டம், பண்ணையின் அளவு (காணிப் பகுதியையும் மற்றும் கால்நடை அலகுகளையும் பொறுத்தளவில்) மற்றும் கமப் பண்ணை வருமானத்தின் நடைமுறையிலான மட்டங்கள் ஆகியன அயர்லாந்தில் நியமிக்கப்பட்ட பண்ணை வாரிசுகள் மத்தியில் தொழில்நிலையிலான தெரிவுகளுடன் குறிப்பிடத்தக்களவில் இணைந்திருந்தன (ஹென்னசி மற்றும் ரெஹ்மான்). ஹென்னசி மற்றும் ரெஹ்மான் ஆகியோரின் கூற்றுப்படி, மூன்றாம்நிலைக் கல்வியில் சம்பந்தப்படுவதற்கு பண்ணைக்

குடும்பங்களில் இளைஞரின் அதிகரித்த போக்கொன்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக அயர்லாந்தில் முழுநேரக் கமக்காரர்களின் எண்ணிக்கையிலும், மற்றும் மொத்த பண்ணை எண்ணிக்கைகளிலும் குறைப்பொன்றுள்ளது. எனவே, மூன்றாம்நிலைக் கல்வியில் சம்பந்தப்படுவதற்கான தீர்மானம் பண்ணை வருமானம் மீது மறுதலையிலான தாக்கங்களைக் கொண்டுள்ளது.

பாகிஸ்தானில் கமத்தொழிலிலும் மற்றும் கிராமிய அபிவிருத்தியிலும் கிராமிய இளைஞரின் வகிபங்கு பற்றிய ஆய்வு முடிவுகள் தேசத்தின் முக்கியமான சொத்தொன்றாக இளைஞர் விளங்குகின்ற போதிலும், அவர்கள் வேறுபட்ட முகவராண்மைகளினால் சுரண்டப்படுவதுடன், அரசாங்கத்தினால் அல்லது தேசத்தினால் அவர்களது ஆற்றலளவுகளும்/தகுதிகளும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை எனக் காட்டுகின்றது (தாகீர் மற்றும் ஏனையோர், 2011). வேளாண்மைக்கு அதிகளவு சரீரஉழைப்பு அவுஸ்திரேலியாவுக்கு அவசியம் என்ற போதிலும், துறைக்கு இளைஞர்களை அவர்களினால் கவர முடியாதிருக்கின்றது. வேளாண்மையின் வாழ்க்கைத்தொழில்தன்மையின்மை, வேறுபட்ட இளைஞர் விருப்பார்வங்கள் மற்றும் வெள்ளைச் சட்டை தொழில்களை நோக்கிய மனவுணர்வு ஆகியனவே காரணங்களாகும் (லிவிங்ஸ்ரோன், 2011).

இந்தியாவில் வேளாண்மையிலிருந்து இளைஞர்களை மீளப்பெறுவதில் அதிகரிக்கின்ற போக்கைக் காட்டுகின்ற போதியளவு சான்றுள்ளதாக சர்மா (2007) சுட்டிக்காட்டியுள்ளார். தனிப்பட்ட அல்லது குடித்தன மட்டங்களில் உயர் சாதியினரினதும், சிறந்த கல்வி கற்றவர்களினதும் மற்றும் வேளாண்மை-சாராத திறன்களுடனான இளைஞர்களினதும் மத்தியில் போக்கு பலமானதாகும். சர்மா (2007) விளக்கியுள்ளவாறு, இந்தியாவிலுள்ள சுமார் 34 சதவீதத்தைக் கொண்ட இளைஞர்கள் தமது தந்தைக்கு அல்லது சிறிய தந்தைக்கு உதவியளிப்பதற்காக பகுதிநேரச் செயற்பாடொன்றாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள அதேவேளை, இது நகரத்திற்கு கிட்டிய கிராமங்களில் 46 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. காணி உடைமைகளின் அளவு, ஆளொருவருக்கான கமத்தொழில் உற்பத்தியின் பெறுமதி, கல்வியின் மட்டம், திறன்கள், மற்றும் சாதி முறைமை போன்றன இந்தியாவில் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்புக்கு ஆதிக்கம் செலுத்திய ஒரு தொகைக் காரணிகளாகும். முழுநேர வேளாண்மை தொடர்பில் இந்தியாவில் கீழ்மட்ட மற்றும் பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்த அனேகமாக 60 சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் முழுநேர வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். சிறிய மற்றும் விளிம்புநிலையிலான காணி உடைமை வகுப்பினரும் மற்றும் பாரிய காணி உடைமை வகுப்பினரும் மீளப்பெறுதலை நோக்கிய போக்கொன்றினை காட்டுகின்றார்கள் என்பது ஆர்வமிக்கதாகும்.

இலங்கையில் காணியற்றதன்மை, நிருவாக மற்றும் தொழில்நுட்பத் திறன்களின்மை, வேளாண்மையை நோக்கிய மறுதலையான மனவுணர்வு (ஜயதிஸ்ஸ, செனிவிரத்ன மற்றும் சங்கர், 2005) மற்றும் வெள்ளைச் சட்டைத் தொழில்களை நோக்கிய மனவுணர்வுகள் (ஹெட்டிகே மற்றும் மேயர், 2002) ஆகியன வேளாண்மைத் துறையில் இளைஞரின் குறைந்த பங்களிப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றன என சிலர் விவாதிக்கின்றனர். வயது, கமத்தொழிலில் அனுபவம், முறைமையான கமத்தொழில் கல்வி, தொழில்முன்னிலைப் பயிற்சி, நெற் காணியின் உயர்வான விஸ்தீரணம் மற்றும் கால்நடையின் கிட்டுந்தன்மை போன்ற ஒரு தொகையிலான காரணிகள் தொழிலொன்றாக வேளாண்மையின் தெரிவில் ஆதிக்கம் செலுத்துகின்றன என 2011இல் பொலன்னறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்ட அளவீடொன்று (சந்திரசிறி, சி. மற்றும் கருணாகொட, கே., 2011) வெளிப்படுத்துகின்றது.

UNESCAPஇனால் (ஆசியாவுக்கும், பசுபிக்குக்குமான ஐக்கிய நாடுகள் பொருளாதார, சமூக ஆணைக்குழு) நடத்தப்பட்ட தேசிய ஆய்வின் பிரகாரம், இலங்கையில் பாரிய எண்ணிக்கையிலான மக்கள் உரிமையாளராக, ஊதிய உழைப்பாளர்களாக அல்லது பங்குப் பயிர்ச்செய்கையாளர்களாக சிறிய பண்ணைகளில் ஈடுபட்டுள்ளனர். நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் நாட்டில் குறிப்பிட்ட முக்கியத்துவத்தினைக்

கொண்டவர்களாவர். கமநல சமூகத்தின் இத்தொகுதியினரை சித்தரிக்கின்ற பலதரப்பட்ட நிறுவனரீதியிலானதும், கட்டமைப்பிலானதுமான அம்சங்கள் உள்ளன. அவை மேன்மையான காணி உடைமைகள் ஆகும். இவை தொழிற்படுத்துவதற்கு சிறியதும், சிக்கனமற்றதுமாகும். பங்கிலான பயிர்ச்செய்கை போன்ற வழக்கத்தில இல்லாத ஆட்சி நடைமுறைகள், காணி பிரபுத்துவமின்மை, கிராம வாழ்க்கையில் பாரம்பரிய அதிகாரக் கட்டமைப்புக்கள், கிராமப்புறப் பகுதியினுள் முறைமையான கடன் தாபனங்கள் பரவியிருந்த போதிலும் முறைசாராக் கடன் நிறுவனங்களின் ஆதிக்கம், கமத்தொழில் உற்பத்தியைச் சந்தைப்படுத்தலில் தரகர்களின் பிடி, பயனுறுதிவாய்ந்த கூட்டுறவுச் சங்கங்களும், வேறு கமக்காரர் தாபனங்களும் இன்மை ஆகியன கமத்தொழில் துறையில் பிரவேசிப்பதிலிருந்து இளம் வயதினரைத் தடுக்கின்றது.

# அத்தியாயம் மூன்று

## பதிலிறுப்பாளர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணி

### 3.1 அறிமுகம்

ஆய்வின் பதிலிறுப்பாளர்களின் சமூக-பொருளாதாரப் பின்னணியை இந்த அத்தியாயம் சித்தரிக்கின்றது. இதன் பிரகாரம் பதிலிறுப்பாளர்களின் குடித்தொகையியல் பின்னணி, கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் அவர்களது பங்கெடுப்பு, காணி உரித்துரிமை, பதிலிறுப்பாளர்களின் காணி உபயோக மாதிரிகள் மற்றும் தொழில்முன்னிலைப் பயிற்சிகள் ஆகியன அத்தியாயத்தில் முனைவுபடுத்தப்பட்டுள்ளன.

### 3.2 பதிலிறுப்பாளர்களின் குடித்தொகையியல் பின்னணி

இலங்கையில் உள்ள ஒன்பது மாவட்டங்களில், அதாவது நுவரெலியா, குருநாகல், மாத்தளை, பொலன்னறுவை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகியவற்றில் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் மாதிரி 533 இளம்வயதினரைக் கொண்டிருந்ததுடன், இவர்களது வயது 15க்கும், 29க்கும் இடைப்பட்டதாகும்.

**அட்டவணை 3.1: வயதினாலும், பால்நிலையினாலும் மாதிரி**

| வயதுக் குழு | பால்நிலை | | | | மொத்தம் (N=533) | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் (N=181) | | ஆண் (N=352) | | | |
| | எண். | (%) | எண். | (%) | எண். | (%) |
| வயது=15 | 13 | 7.2 | 22 | 6.3 | 35 | 6.6 |
| 15<வயது<=20 | 63 | 34.8 | 127 | 36.1 | 190 | 35.6 |
| 20<வயது<=25 | 52 | 28.7 | 81 | 23.0 | 133 | 24.9 |
| 25<வயது<=29 | 53 | 29.3 | 122 | 34.6 | 175 | 32.8 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

ஆய்வு மாதிரிகளில் 35.6 சதவீதத்தை கொண்ட பதிலிறுப்பாளர்கள் (190) 15<வயது<=20 ஆண்டுகள் என்ற வயது வகுதியைச் சார்ந்தவர்களாக உள்ள அதேவேளை, பதிலிறுப்பாளர்களின் 24.9 சதவீதத்தினரும் (133) மற்றும் 32.8 சதவீதத்தினரும் (175) முறையே 20<வயது<=25 மற்றும் 25<வயது<=29 வயது வகுதியைச் சார்ந்தவர்களாவர் (அட்டவணை 3.1). ஆய்வு மாதிரியின் மொத்தப் பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 34 சதவீதத்தினர் (181) பெண்களாக இருந்த அதேவேளை, 66 சதவீதத்தினர் (352) ஆண்களாவர் (அட்டவணை 3.1).

### அட்டவணை 3.2: வயதுக் குழுவினாலும், திருமணநிலையினாலும் மாதிரி

| வயதுக் குழு | திருமணநிலை | | | |
|---|---|---|---|---|
| | திருமணமான | | திருமணமாகாத | |
| | எண். | (%) | எண். | (%) |
| வயது=15 | 0 | 0.0 | 35 | 9.9 |
| 15<வயது<=20 | 10 | 5.6 | 180 | 50.8 |
| 20<வயது<=25 | 44 | 24.6 | 89 | 25.1 |
| 25<வயது<=29 | 125 | 69.6 | 50 | 14.1 |
| மொத்தம் | 179 | 100.0 | 354 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.2இல் காட்டப்பட்டுள்ளவாறு, 66.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (354) திருமணமாகாதவர்களாக விளங்கிய அதேவேளை, 33.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (179) மட்டுமே திருமணமாகியிருந்தனர். திருமணமாகிய பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 69.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (125) 25<வயது<=29 என்ற வயது வகுப்பினைச் சார்ந்தவர்களாவர். 15<வயது<=20 கொண்ட வயது வகுதியில் 5.6 சதவீத பதிலிறுப்பாளர்கள் (10) மட்டுமே திருமணமாகியிருந்தனர்.


### அட்டவணை 3.3: இனத்துவத்தினால் மாதிரி

| இனத்துவம் | பால்நிலை | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | | ஆண் | | | |
| | எண். | (%) | எண். | (%) | எண். | (%) |
| சிங்களவர் | 162 | 89.5 | 313 | 88.9 | 475 | 89.1 |
| இலங்கைத் தமிழர் | 9 | 5.0 | 17 | 4.8 | 26 | 4.9 |
| இந்தியத் தமிழர் | 8 | 4.4 | 16 | 44.5 | 24 | 4.5 |
| முஸ்லிம் | 2 | 1.1 | 6 | 1.7 | 8 | 1.5 |
| மொத்தம் | 181 | 100.0 | 352 | 100.0 | 533 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

ஆய்வுச் சனத்தொகையில் 89.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (475) சிங்களவராக விளங்கிய அதேவேளை, 4.9 சதவீதத்தினர் (26), 4.5 சதவீதத்தினர் (24), மற்றும் 1.5 சதவீதத்தினர் (8) முறையே இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆவர் (அட்டவணை 3.3).

## உருபு 3.1: வயதினாலும், தொழிற்பாட்டினாலும் மாதிரி





மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

மாதிரியில் 15 வயது மற்றும் 15<வயது<=20 ஆகிய வயது வகுதிகளில் அதிகளவு மாணவர்கள் இருந்தனர் (உருபு 3.1). இதன் பிரகாரம் 25.4 சதவீத (31) மற்றும் 61.5 சதவீதப் பதிலிறுப்பாளர்கள் (75) கற்கையில் ஈடுபட்டிருந்ததுடன், இவர்கள் முறையே 15 வயது மற்றும் 15<வயது<=20 ஆகிய வயது வகுதிகளைச் சார்ந்திருந்தனர். பெரும்பான்மையான தொழிலாற்றிய பதிலிறுப்பாளர்கள் 25<வயது<=29 என்ற வயது வகுதியைச் சார்ந்திருந்தனர். தொழிலாற்றிய பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 53 சதவீதத்தினரும் (148) மற்றும் 27.2 சதவீதத்தினரும் (76) முறையே 25<வயது<=29 மற்றும் 20<வயது<=25 என்ற வயது வகுதிகளைச் சார்ந்திருந்தனர். 25 வயதுக்கு குறைந்த பதிலிறுப்பாளர்களுடன் ஒப்பிடும் போது, 25<வயது<=29 என்ற வயது வகுதியில் உள்ள தொழிலாற்றுகின்ற பதிலிறுப்பாளர்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றிருந்தது.

எனினும், வயதுக்கும், தொழிற்பாட்டுக்கும் இடையில் ஒரு குறிப்பிடத்தக்க உறவிருந்தது. இதன் பிரகாரம், 20 வயதுக்கு குறைந்த பதிலிறுப்பாளர்கள் மத்தியில் அதிகளவு மாணவர்களும், தொழிலற்ற இளைஞர்களும் இருந்தனர். மறுதலையாக, 20 வயதுக்கு மேற்பட்ட பதிலிறுப்பாளர்கள் மத்தியில் தொழிலாற்றும் வீதம் உயர்வானதாக விளங்கியது.

**உருபு 3.2: தொழிற்பாட்டினாலும், பால்நிலையினாலும் மாதிரி**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

ஆண் பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 65.9 சதவீதத்தினர் (232) தொழிலாற்றிய அதேவேளை, 12.2 சதவீதத்தினர் (43) தொழிலற்றிருந்தனர் (உருபு 3.2). பெண் பதிலிறுப்பாளர்கள் மத்தியில் தொழிலுக்கும், தொழிலின்மைக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் இருக்கவில்லை. இதன் பிரகாரம், 26.5 சதவீத (48) பெண் பதிலிறுப்பாளர்கள் தொழிலாற்றிய அதேவேளை, 27.6 சதவீதத்தினர் (50) தொழிலாற்றவில்லை.

பெரும்பான்மையான ஆண் பதிலிறுப்பாளர்கள் பொருளாதாரரீதியில் சுறுசுறுப்பாக இருந்த அதேவேளை, குறிப்பிடத்தக்க எண்ணிக்கைகளைக் கொண்ட பெண் பதிலிறுப்பாளர்கள், விசேடமாக தமது திருமணத்தின் பின்னர் குடித்தன வேலைகளில் சம்பந்தப்பட்டிருந்தனர். குடும்பத்துக்கு பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பு இருந்த போதிலும், சில வேளைகளில் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பு மறைந்துள்ள காரணியொன்றாகவே தொடர்ந்தும் இருந்ததாக அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, பெண் பதிலிறுப்பாளர்கள் மத்தியில் கணிசமானளவு எண்ணிக்கையைக் கொண்ட குடும்ப சரீரஉழைப்பாளர்கள் இருந்தனர். ஆனால், அவர்களாலேயே கூட தொழிலற்றவர்களாக அவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

**அட்டவணை 3.4: ஆரம்பநிலைத் தொழிலினாலும், வயதினாலும் மாதிரி**


| தொழில் | வயதுக் குழு | | | | மொத்தம் % (N=283) |
|---|---|---|---|---|---|
| | 15 | 15>வயது<=20 | 20>வயது<=25 | 25>வயது<=29 | |
| | % (N=2) | % (N=65) | % (N=76) | % (N=145) | |
| கமக்காரர் | 100 | 55.4 | 56.6 | 69.6 | 64.3 |
| திறனற்ற சரீர உழைப்பாளர் | 0 | 11 | 6.6 | 2.8 | 5.7 |
| எழுதுவினைஞர்/ ஆசிரியர் | 0 | 0 | 2.6 | 1.4 | 1.4 |
| சுய-தொழில் /வியாபாரம் | 0 | 7.7 | 3.9 | 9.7 | 7.8 |
| நிறைவேற்று தரத்திலான தொழில் | 0 | 0 | 0 | 0.7 | 0.3 |
| திறனுள்ள சரீர உழைப்பாளர் | 0 | 4.6 | 10.5 | 7.7 | 7.8 |
| படைகள்/பாதுகாப்பு/ பொலிஸ் | 0 | 6.1 | 2.6 | 2.8 | 3.5 |
| வேறு – தனியார் துறை | 0 | 7.7 | 11.8 | 2.1 | 6.1 |
| வேறு – அரசாங்கம் | 0 | 7.7 | 5.3 | 2.9 | 2.8 |
| வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வேறு நிதிசார் நிறுவனங்கள் | 0 | 0 | 0 | 0.7 | 0.3 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

ஆரம்பநிலையிலான தொழிலொன்றைக் கொண்டிருந்த பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 64.3 சதவீதத்தினர் (183) கமக்காரர்களாக இருந்த அதேவேளை, 7.8 சதவீதத்தினர் (22) திறனைக் கொண்ட சரீரஉழைப்பாளர்களாகவும், 5.7 சதவீதத்தினர் (16) திறனற்ற சரீரஉழைப்பாளர்களாகவும் விளங்கினர் (அட்டவணை 3.4). ஒரு பதிலிறுப்பாளர் மட்டுமே நிறைவேற்றுத்தரத்திலான தொழிலொன்றைக் கொண்டிருந்ததுடன், இன்னொரு பதிலிறுப்பாளர் நிதிசார் துறையில் தொழிலொன்றைக் கொண்டிருந்தார். இவை பொதுவாகவே சிறந்த கொடுப்பனவிலானதும், அதிக அங்கீகரிக்கப்பட்டதுமான தொழில்களாகக் கருதப்படுகின்றன.

சகல வகுதிகளையும் கொண்ட பெரும்பான்மையான தொழிலாற்றுகின்ற பதிலிறுப்பாளர்கள் கமக்காரர்களாவர். இதன் பிரகாரம் 25<வயது<=29 என்ற வயது வகுதியில் 69.6 சதவீத (101) பதிலிறுப்பாளர்களின் ஆரம்பநிலையிலான தொழில் பயிர்ச்செய்கையாகும். 55.4 சதவீதத்தையும் (36) மற்றும் 56.6 சதவீதத்தையும் (43) கொண்ட பதிலிறுப்பாளர்கள் முறையே 15<வயது<=20 மற்றும் 20<வயது<=25 என்ற வயது வகுதிகளில் உள்ள கமக்காரர்களாவர். 15 வயதில் தமது பாடசாலை செல்லும் வயதில் இன்னுமே இருந்த போதிலும், கமக்காரர்களாக இரு பதிலிறுப்பாளர்கள் பணியாற்றினார்கள்.

**உருபு 3.3: குடித்தனங்களில் தங்கியிருப்போரின் எண்ணிக்கையினால் மாதிரி**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் தமது குடித்தனங்களில் ஐந்துக்கு குறைந்த தங்கியிருப்போரைக் கொண்டிருந்தனர். ஆய்வு மாதிரியில் 35.8 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (191) இரண்டு தங்கியிருப்போரை மட்டுமே கொண்டிருந்த அதேவேளை, 23.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (126) மற்றும் 18 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (96) தமது குடித்தனங்களில் முறையே ஒரு தங்கியிருப்பவரையும் மற்றும் மூன்று தங்கியிருப்பவர்களையும் கொண்டிருந்தனர். மேலும், 9.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (50) எந்த தங்கியிருப்போர்களையும் கொண்டிருக்காத அதேவேளை, 0.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (3) தமது குடித்தனங்களில் ஐந்து மேற்பட்ட தங்கியிருப்போர்களைக் கொண்டிருந்தனர் (உருபு 3.3).

**அட்டவணை 3.5: பால்நிலையினால் கல்வியின் மட்டம்**

| கல்வி மட்டம் | பெண் | | ஆண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | % | எண். | % | எண். | % |
| பள்ளிக்கூடம் செல்லவில்லை | 1 | 0.6 | 1 | 0.3 | 2 | 0.4 |
| ஆண்டு 1 முதல் 5 வரை | 1 | 0.6 | 3 | 0.9 | 4 | 0.7 |
| ஆண்டு 6 முதல் க.பொ.த. சா./த. வரை | 69 | 38.1 | 166 | 47.2 | 235 | 44.1 |
| க.பொ.த. சா./த.இல் படித்தல் | 7 | 3.9 | 20 | 5.7 | 27 | 5.1 |
| க.பொ.த. சா./த.இல் சித்தி | 30 | 16.6 | 62 | 17.6 | 92 | 17.3 |
| க.பொ.த. உ./த.இல் படித்தல் | 15 | 8.3 | 22 | 6.3 | 37 | 6.9 |
| க.பொ.த. உ./த.இல் வரை | 25 | 13.8 | 15 | 4.3 | 40 | 7.5 |
| க.பொ.த. உ./த.இல் சித்தி | 21 | 11.6 | 35 | 9.9 | 56 | 10.5 |
| விவசாய டிப்ளோமா | 0 | 0.0 | 2 | 0.6 | 2 | 0.4 |
| பட்டப்படிப்பு | 4 | 2.2 | 13 | 3.7 | 17 | 3.2 |
| பட்டதாரி – விவசாயம் | 4 | 2.2 | 10 | 2.8 | 14 | 2.6 |
| பட்டதாரி – வேறு | 3 | 1.7 | 2 | 0.6 | 5 | 0.9 |
| வேறு | 1 | 0.6 | 1 | 0.3 | 2 | 0.4 |
| மொத்தம் | 181 | 100.0 | 352 | 100 | 533 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.5இல் காட்டப்பட்டுள்ளவாறு, 44.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (235) ஆண்டு 6இலிருந்து க.பொ.த. சா./த. வரை கல்வி கற்றுள்ள அதேவேளை, 17.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (92) க.பொ.த. சா./த.இல் சித்தியடைந்துள்ளதுடன், 10.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (56) க.பொ.த. உ./த.இல் சித்தியடைந்துள்ளனர். ஆய்வு மாதிரியில் 2.6 சதவீதத்தைக் கொண்ட (14) கமத்தொழில் பட்டதாரிகளும், 3.2 சதவீதத்தைக் கொண்ட (17) பட்டப்படிப்பு மாணவர்களும் இருந்தனர். மறுதலையாக, 0.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (2) பாடசாலைக்கு சென்றிருக்கவில்லை. மாதிரியில் கமத்தொழில் பட்டதாரிகள் மத்தியில் ஒரேயொரு பதிலிறுப்பாளர் மட்டும் (7.1 சதவீதம்) முழு நேரமாக கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை, இரு கமத்தொழில் பட்டதாரிகள் (14.2 சதவீதம்) பகுதிநேரக் கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். வெளிக்கள ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டவாறு, வேளாண்மைச் சனசமூகங்களிலுள்ள பெரும்பான்மையான இளவயதினர் தமது பெற்றோர்களை விட சிறந்த கல்வியொன்றைப் பெற்றிருந்ததுடன், தமது குழந்தைப் பராயத்திலிருந்து கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் கஷ்டங்களையும் அவர்கள் அனுபவித்துள்ளனர். மறுபுறத்தில், தமது கல்வி மட்டம் உயர்ந்திருந்த போது, வேளாண்மையுடன் ஒப்பிடுகையில் சமூகரீதியில் அங்கீகரிக்கப்பட்டதும், இலகுவானதும் மற்றும் சிறந்த கொடுப்பனவிலானதுமான தொழிலைக் கொண்டிருப்பதற்கே சில பதிலிறுப்பாளர்கள் விரும்பினார்கள்.

## 3.3 கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் இளைஞர்களின் சம்பந்தம்

மாதிரியில் முழுநேர அல்லது பகுதிநேரத் தொழிலில் அத்துடன் குடும்ப சரீரஉழைப்பாளர்களாக (தொழிலொன்றாக அல்ல) ஏதேனும் அமைப்பிலான கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் சில பதிலிறுப்பாளர்கள் ஈடுபட்டிருந்த அதேவேளை, சிலர் கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை. வெளிக்கள ஆய்வில் அவதானிக்கப்பட்டவாறு, கமத்தொழில் பின்னணியிலான குடும்பங்களிலிருந்து ஒரு தொகையிலான பதிலிறுப்பாளர்கள் வந்த போதிலும், அவர்கள் ஏதாவது வகையிலான கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

**அட்டவணை 3.6: கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் சம்பந்தம்**

| கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா | பதிலிறுப்பாளர்களின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் | 375 | 70.4 |
| கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை | 158 | 29.6 |
| மொத்தம் | 533 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.6இல் காட்டப்பட்டுள்ளவாறு, ஆய்வு மாதிரியில் உள்ளவர்களில் 70.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (375) கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்கள் சரீரஉழைப்பாளர்களாக அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக முழு நேரமாக அல்லது பகுதி நேரமாக இச்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

**அட்டவணை 3.7: பால்நிலையினால் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் சம்பந்தத்தின் வகை**

| கமத்தொழில் தொடர்பான யெற்பாடுகளில் ஈடுபாட்டின் வகை | பால்நிலை | | | | பதிலிறுப் பாளர்களின் எண்ணி க்கை | (%) |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | | பெண் | | | |
| | எண். | (%) | எண். | (%) | எண். | |
| முழு நேரத் தொழிலாக | 26 | 26.3 | 122 | 44.2 | 148 | 39.5 |
| பகுதி நேரத் தொழிலாக | 13 | 13.1 | 86 | 31.2 | 99 | 26.4 |
| குடும்ப சரீரஉழைப்பாளர் ஒருவராக (தொழலொன்றாக அல்ல) | 60 | 60.6 | 67 | 24.3 | 127 | 33.9 |
| வேறு | 0 | 0.0 | 1 | 4.0 | 1 | 0.3 |
| மொத்தம் | 99 | 100.0 | 276 | 100.0 | 375 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவர்களில் 39.5 சதவீதத்தினர் (148) முழுநேரக் கமத்தொழில் ஊழியர்களாக விளங்கிய அதேவேளை, 26.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (99) பகுதிநேர ஊழியர்களாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர் (அட்டவணை 3.7). முழுநேர ஊழியர்களில் 44.2 சதவீதத்தினர் (122) ஆண்கள் என்பதுடன், 26.3 சதவீதத்தினர் (26)

பெண்களாவர். 33.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (127) ஊதியங்கள் அல்லது சம்பளங்கள் இன்றி, குடும்பச் சரீரஉழைப்பாளர்களாகப் பணியாற்றியதுடன், அவர்கள் மத்தியில் 60.6 சதவீதத்தினர் (60) பெண்களாக இருந்த அதேவேளை, 24.3 சதவீதத்தினர் (67) மட்டுமே ஆண்களாவர். வெளிக்கள ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டவாறு, கமத்தொழில் துறையின் சில பகுதி நேர ஊழியர்கள் பருவகால ஊழியர்களாக கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையானோர், விசேடமாக ஓய்வு காலத்தின் போது, நிருமாணத் துறையில் மேசன்மார்களாக அல்லது தச்சுத்தொழிலாளர்களாக அல்லது ஊதிய சரீரஉழைப்பாளர்களாக கமத்தொழில்-சாராத மாற்று வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

## அட்டவணை 3.8: செய்கைபண்ணப்பட்ட பயிர்/செயற்பாடு


| பயிரின் வகை/செயற்பாடு | பதிலிறுப்பாளர்களின் எண்ணிக்கை | (%) N= 375 |
|---|---|---|
| நெல் வேளாண்மை | 275 | 73.3 |
| கலப்புப் பயிர்ச்செய்கை | 22 | 5.9 |
| மரக்கறிச் செய்கை | 192 | 51.2 |
| பழச் செய்கை | 45 | 12.0 |
| பயிற்றினச் செய்கை | 81 | 21.6 |
| கால்நடை வளர்ப்பு | 21 | 5.6 |
| வீட்டுத் தோட்டம் | 14 | 3.7 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள்/வாசனைத்திரவியச் செய்கை | 10 | 27.0 |
| பாரிய ஏற்றுமதிப் பயிர் (தேயிலை, தெங்கு, இறப்பர்) செய்கை | 7 | 1.9 |
| மலர்ச்செடி செய்கை | 3 | 0.8 |
| வெங்காயச் செய்கை | 27 | 7.2 |
| காளான் செய்கை | 2 | 0.5 |
| வெற்றிலைச் செய்கை | 5 | 1.3 |
| வேறு | 3 | 0.8 |

குறிப்பு: பெருமளவு வகைகளைக் கொண்ட செயற்பாடுகளில் தான் ஈடுபட்டதாக ஒரே பதிலிறுப்பாளர் பதிலளித்ததினால், மொத்த சதவீதம் 100க்கு சமமில்லை

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.8இல் காட்டப்பட்டுள்ளவாறு, 73.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (275) முழு நேர, பகுதி நேர அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக நெல்லைச் செய்கைபண்ணினார்கள். 51 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (192) மரக்கறியைச் செய்கை பண்ணிய அதேவேளை, 21.6 சதவீதம் (81), 12.0 சதவீதம் (45) மற்றும் 7.2 சதவீதம் (27) ஆகியவற்றை கொண்ட பதிலிறுப்பாளர்கள் முறையே பருப்புவகைகள், பழங்கள் மற்றும் வெங்காயம் ஆகியவற்றை செய்கைபண்ணினார்கள் (அட்டவணை 3.8). சில பதிலிறுப்பாளர்களினால் மட்டுமே மலர்கள், காளான் மற்றும் வெற்றிலை ஆகியன செய்கைபண்ணப்பட்டன. அட்டவணையில், வேறு வகுதியாக தாவர நாற்றுமேடையொன்றைப் பராமரித்தல், கமத்தொழில் உற்பத்திகள் விற்பனைக் கூடம் அல்லது கமத்தொழில் தொடர்பிலான அரசாங்கத் தொழிலில் ஈடுபட்டிருத்தல் ஆகியனவற்றை வேறுபட்ட கமத்தொழில் செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

## உருபு 3.4: கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஆண்டுக்கணக்கான அனுபவம்




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

உருபு 3.4இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் (70.7 சதவீதம்) பத்து வருடங்களுக்கு குறைந்த அனுபவத்தையே கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் 31.2 சதவீதத்திலான (117), 33.4 சதவீதத்திலான (125) மற்றும் 22.7 சதவீதத்திலான (85) பதிலிறுப்பாளர்கள் முறையே 2<=ஆண்டுகள்<5 மற்றும் 5<=ஆண்டுகள்<10 மற்றும் 10<=ஆண்டுகள்<15 ஆகியனவற்றைக் கொண்ட வேளாண்மை அனுபவத்தினைக் கொண்டிருந்தனர். தமது குழந்தைப் பராயத்திலிருந்து, விசேடமாக பாடசாலை வேளைகளின் பின்னரும், பாடசாலை விடுமுறைகளின் போதும் தமது பெற்றோரின் வேளாண்மைச் செயற்பாடுகளில் உதவியளித்ததன் காரணமாக, கணிசமானளவு ஆண்டுகளைக் கொண்ட வேளாண்மை அனுபவத்தினைப் பெருமளவு பதிலிறுப்பாளர்கள் கொண்டிருந்தனர்.

## அட்டவணை 3.9: வேளாண்மையில் சம்பந்தத்தின் வகை

| சம்பந்தத்தின் வகை | பதிலிறுப்புக்கள் | |
|---|---|---|
| | எண். | (%) |
| சுய உரிமையிலான பண்ணையொன்றைப் பராமரித்தல் | 106 | 28.3 |
| குடும்ப உறுப்பினர்களுடன் பண்ணையொன்றைப் பராமரித்தல் | 61 | 16.3 |
| நண்பர்களுடன்/உறவினரற்றோருடன் பண்ணையொன்றைப் பராமரித்தல் | 187 | 49.9 |
| குடும்பத்திற்குச் சொந்தமான பண்ணைக்கு சரீரஉழைப்பை வழங்குதல் | 13 | 3.5 |
| நாளாந்த சரீரஉழைப்பு/ஊதியத்திலான சரீரஉழைப்பு | 5 | 1.3 |
| வீட்டுத் தோட்டம் | 4 | 1.1 |
| குத்தகைப் பயிர்ச்செய்கை (நெல்) | 1 | 0.3 |
| வேறு | 1 | 0.3 |

குறிப்பு: பெருமளவு வகைகளைக் கொண்ட செயற்பாடுகளில் தான் ஈடுபட்டதாக ஒரே பதிலிறுப்பாளர் பதிலளித்ததினால், மொத்த சதவீதம் 100க்குச் சமமில்லை

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.9இல் காட்டப்பட்டுள்ளவாறு, ' வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவர்களில் 49.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (187) தமது குடும்பத்திற்குச் சொந்தமான பண்ணைகளில் குடும்பச் சரீரஉழைப்பாளர்களாக பணியாற்றிய அதேவேளை, 28.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (106) சுய-சொந்தத்திலான பண்ணையொன்றைப் பராமரித்ததுடன், 16.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (61) சொந்தப் பண்ணையொன்றை இணைந்து பராமரித்தனர். 1.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (5) மட்டுமே நாளாந்த ஊதிய சரீரஉழைப்பாளர்களாகப் பணியாற்றினார்கள்.

**அட்டவணை 3.10: காணித் துண்டுகளின் உரித்துரிமை**

| உரித்துரிமை | காணியின் வகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மேட்டுநிலம் | | நெற் காணி | | சேனைக் காணி | |
| | காணித் துண்டுகளைக் கொண்டுள்ள பதிலிறுப்பாளர்களின் எண். | % | காணித் துண்டுகளைக் கொண்டுள்ள பதிலிறுப்பாளர்களின் எண். | % | காணித் துண்டுகளைக் கொண்டுள்ள பதிலிறுப்பாளர்களின் எண். | % |
| சுய-உரிமை | 124 | 26.8 | 84 | 23.9 | 11 | 16.4 |
| பெற்றோர் | 283 | 61.3 | 195 | 55.4 | 33 | 49.3 |
| வேறு உறவினர்கள் | 27 | 5.8 | 23 | 6.5 | 4 | 6.0 |
| அத்துமீறிய | 6 | 1.3 | 2 | 0.6 | 12 | 17.9 |
| குத்தகையிலான/ அடமானத்திலான/ வாடகைக்குத்தகை | 17 | 3.7 | 47 | 13.4 | 4 | 6.0 |
| வாழ்க்கைத்துணை | 5 | 1.1 | 1 | 0.3 | 3 | 4.5 |
| மொத்தம் | 462 | 100.0 | 352 | 100.0 | 67 | 100.0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

## 3.4 பதிலிறுப்பாளர்களின் காணி உபயோகப் பாங்கு

சுமார் 87 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் (462) மேட்டு நிலங்களைக் கொண்டிருந்த அதேவேளை, 66.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் (352) நெற்காணிகளைக் கொண்டிருந்தனர். 12.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (67) மட்டுமே தாம் சேனைக் காணிகளைப் பயன்படுத்தியதாக அறிவித்தனர் (அட்டவணை 3.10). காணிகளின் வகையினால், 61.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களின் (283) மேட்டுநிலங்களும், 55.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களின் (195) நெற்காணிகளும் மற்றும் 49.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களின் (33) சேனைக் காணிகளும் அவர்களது பெற்றோருக்கு சொந்தமாகவிருந்த அதேவேளை, 26.8 சதவீதத்தைக் கொண்ட மேட்டு நிலங்களும் (124), 23.9 சதவீதத்தைக் கொண்ட நெற்காணிகளும் (84) மற்றும் 16.4 சதவீதத்தைக் கொண்ட சேனைக் காணிகளும் (11) அவர்களுக்குச் சொந்தமானதாகும். பெரும்பான்மையான சேனைக் காணிகள் அத்துமீறிய காணிகளாகும். கணிசமானளவு எண்ணிக்கையிலான சேனைக் காணிகள் அரசாங்கத்தைச் சார்ந்தவை என்பதுடன், ஒதுக்குகளின் கீழும் இருந்தன. மறுபுறத்தில், பெரும்பான்மையான குத்தகைக்கு விடப்பட்ட அல்லது அடமானத்துக்கு விடப்பட்ட அல்லது குத்தகைக் காணிகள் நெல் வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்பட்டன. எனினும், தாம் பயன்படுத்திய காணிகளை

பெரும்பான்மையான இளவயதினர் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லையென வெளிக்கள ஆய்வில் அவதானிக்கப்பட்டது. முறைமையான தன்மையொன்றில் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு காணிகள் இன்மையும், உரித்துரிமையுமே ஒரு பிரச்சனையாகும் என சில பதிலிறுப்பாளர்கள் கூறினார்கள். காணியின்றி அவர்களினால் பண்ணைக் காணிகளை விருத்திசெய்வதற்கு கடனொன்றைக் கூட பெறமுடியாதிருந்தது அல்லது கமக்காரர் தாபனத்தின் உறுப்பினரொருவராக வர முடியாதிருந்தது. மேலும், காணிக்கு உறுப்புரிமையைக் கொண்டிருந்தால் அதிகளவு ஆர்வத்துடன் வேளாண்மைச் செயற்பாடுகளில் இளவயதினர் ஈடுபட்டிருப்பதாக வெளிக்கள ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டது. தமது சொந்தக் காணிகளில் செய்கை பண்ணுவதிலிருந்து சிறந்த இலாபங்களை அவர்களால் ஈட்ட முடியும் என்பதனால், விசேடமாக சூரியவெவ (ஹம்பாந்தோட்டை) மற்றும் நுவரெலியா போன்ற பகுதிகளில் இதைப் பாரியளவொன்றுக்கு காண முடிகின்றது.


**அட்டவணை 3.11: சராசரி காணி விஸ்தீரணம்**

| காணியின் சராசரி விஸ்தீரணம் | காணியின் வகை | | | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மேட்டுநிலம் | | நெற் காணி | | சேனைக் காணி | | | |
| | எண். | % | எண். | % | எண். | % | எண். | % |
| ¼ ஏக்கர்களுக்கு குறைவாக | 42 | 9.1 | 2 | 0.6 | 0 | 0.0 | 44 | 5.0 |
| ¼-½ ஏக்கர்கள் | 44 | 9.5 | 13 | 3.7 | 0 | 0.0 | 57 | 6.5 |
| ½- ¾ ஏக்கர்கள் | 87 | 18.8 | 36 | 10.2 | 8 | 11.9 | 131 | 14.9 |
| ¾ -1 ஏக்கர் | 10 | 2.2 | 4 | 1.1 | 0 | 0.0 | 14 | 1.6 |
| 1-2 ஏக்கர்கள் | 116 | 25.1 | 109 | 31.0 | 18 | 26.9 | 243 | 27.6 |
| 2-5 ஏக்கர்கள் | 134 | 29.0 | 154 | 43.8 | 21 | 31.3 | 309 | 35.1 |
| 5-10 ஏக்கர்கள் | 23 | 5.0 | 34 | 9.7 | 16 | 23.9 | 73 | 8.3 |
| 10 ஏக்கர்களுக்கு மேல் | 6 | 1.3 | 0 | 0.0 | 4 | 6.0 | 10 | 1.1 |
| மொத்தம் | 462 | 100.0 | 352 | 100.0 | 67 | 100.0 | 881 | 100 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 3.11இல் காட்டப்பட்டுள்ளவாறு, பதிலிறுப்பாளர்களின் மொத்தக் காணிகளில் 35.1 சதவீதத்தைக் கொண்ட காணித்துண்டுகள் (309) 2-5 ஏக்கர்களுக்கு இடைப்பட்டவையாக விளங்கிய அதேவேளை, 27.6 சதவீதத்தைக் கொண்ட காணிகள் (243) 1-2 ஏக்கர்களுக்கு இடைப்பட்டவையாகும். பத்துக் காணித்துண்டுகளின் அளவு பத்து ஏக்கர்களுக்கு மேற்பட்டதாகும். இது குறிப்பிடத்தக்கதாகும். இந்த பத்துக் காணித்துண்டுகளில் நான்கு காணித்துண்டுகள் சுய-உரிமையிலான மேட்டு நிலங்களாகும். மறுபுறத்தில், கணிசமான எண்ணிக்கைகளைக் கொண்ட மேட்டுநிலத் துண்டுகள் (28 சதவீதம்) ஓர் ஏக்கருக்கு குறைவானது என்பதுடன், அதிக பெரும்பான்மையைக் கொண்ட சேனைக் காணிகள் (88.1 சதவீதம்) ஓர் ஏக்கருக்கு மேற்பட்டதாகும்.

உருபு 3.5: சகல வகையான காணியின் சராசரி மொத்த விஸ்தீரணமும், சராசரி செய்கையிலான விஸ்தீரணமும்





மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

வெளிக்கள ஆய்வின் பிரகாரம், மொத்தக் காணித் துண்டுகளில் 88.2 சதவீதம் (779 துண்டுகள்) செய்கை பண்ணப்பட்டது. சகல காணிகளினதும் மற்றும் செய்கை பண்ணப்பட்ட காணிகளினதும் சராசரி விஸ்தீரணம் 2 ஏக்கர்களாகும். உருபு 3.6இல் காட்டப்பட்டுள்ளவாறு, மொத்த மேட்டுநிலத் துண்டுகளில் 79 சதவீதத்தைக் கொண்ட காணித்துண்டுகள் (365 துண்டுகள்) செய்கைபண்ணப்பட்ட அதேவேளை, மொத்த நெற்காணிகளில் 98.8 சதவீதத்தைக் கொண்ட காணித் துண்டுகளும் (348 துண்டுகள்) மற்றும் 98.5 சதவீதத்தைக் கொண்ட மொத்த சேனைக் காணித் துண்டுகளும் செய்கை பண்ணப்பட்டன. நெல் மற்றும் சேனைக் காணிகளின் மொத்த காணிகளுக்கும், செய்கைபண்ணப்பட்ட காணிகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளி இருக்கவில்லை. எனினும், 21 சதவீதத்தைக் கொண்ட மேட்டுநிலங்கள் (97 துண்டுகள்) செய்கை பண்ணப்படவில்லை. அந்த சில இடங்களில் காணிகளின் பகுதியொன்றின் மீது வீடுகள் கட்டப்பட்டிருப்பதனால், தமது மேட்டுநிலங்களில் செய்கைபண்ணுவதற்கு போதிய இடமில்லையென பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். மறுபுறத்தில், சில இடங்களில் வெற்றிகரமான வீட்டுத் தோட்டங்களைக் காண முடிந்தது.

## 3.5 தொழில்முன்னிலைப் பயிற்சிகளின் நிலை

கிரமமாக எழுகின்றதும், புதியதுமான சவால்களுடன் கமக்காரர்களைக் கமத்தொழிலினுள் மாற்றத்தின் அழுத்தம் எதிர்நோக்குகின்றது. கட்டமைப்பிலான மாற்றங்கள் அத்துடன் தொழில்நுட்பப் பொருளியல் மற்றும் சூழலியல் மேம்படுத்தல்கள் ஆகியன பண்ணை முகாமையாளரின் அறிவுக்கான தேவைப்பாடுகளை அதிகரிக்கின்றன. இவ்வாறாக வாழ்க்கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் வெற்றிகரமாக இருத்தல் தகுதியினதும், அடிப்படை வாழ்க்கைத்தொழில் அறிவினதும் விடயமொன்று மட்டுமல்ல, ஆனால் தொழில்முன்னிலைப் பயிற்சிகளில் தொடர்ச்சியான பங்கெடுப்புமுமாகும் (ஸ்பில்லர் மற்றும் வோஸ், N.N.இல் குறிப்பிடப்பட்டுள்ளது, 2006) எனவே, தனிப்பட்ட ஒருவரின் திறன்களை விருத்திசெய்வதற்கும், போட்டித்தன்மையைப் பேணுவதற்கும் முக்கியமான வகிபங்கொன்றை தொழில்முன்னிலைப் பயிற்சி ஆற்றுகின்றது.

**உருபு 3.6: தொழில் முன்னிலைப் பயிற்சிகளில் பங்கெடுப்பு**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

உருபு 3.6இல் காட்டப்பட்டுள்ளவாறு, 63.8 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (340) ஏதாவது வகையிலான தொழில்முன்னிலைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளாத அதேவேளை, 36.2 சதவீதத்தைக் கொண்டவர்கள் (193) பயிற்சிகளைப் பெற்றிருந்தனர் (உருபு 3.6). சில பதிலிறுப்பாளர்கள் வேறுபட்ட துறைகளின் அல்லது வேறுபட்ட நிறுவனங்களின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிநெறியினைப் பின்பற்றியுள்ளனர். ஆய்வினால் அவதானிக்கப்பட்டவாறு, நிதிசார் கஷ்டங்கள் உட்பட விழிப்பியலின்மை, அடைதலின்மை மற்றும் வசதிகளின்மை ஆகியனவே பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்களினால் பயிற்சிகளைக் கொண்டிருக்காதற்கான காரணமாகும்.

அட்டவணை 3.12இல் காட்டப்பட்டுள்ளவாறு, பதிலிறுப்பாளர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான தொழில்முன்னிலைப் பயிற்சியாக கணனிப் பயிற்சி விளங்கியது. இதன் பிரகாரம், தொழில்முன்னிலைப் பயிற்சிகளைப் பின்பற்றிய பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 37.8 சதவீதத்தைக் கொண்ட ஆண் மற்றும் பெண் பதிலிறுப்பாளர்கள் (73) குறைந்தபட்சம் ஒரு கணனி நெறியினைப் பின்பற்றியுள்ளனர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கணனி நெறியினைப் பின்பற்றியுள்ளனர். 12 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (23) மின்சாரப் பொறிமுறை, மோட்டார் பொறிமுறை மற்றும் எந்திரவியல் ஆகியன உட்பட தொழில்நுட்பப் பணி தொடர்பிலான பயிற்சி நெறிகளைப் பின்பற்றியுள்ளனர். காய்ச்சியொட்டுதல், மின்சாரப் பொறிமுறை, மோட்டார் பொறிமுறை மற்றும் எந்திரவியல் ஆகியன மீது பயிற்சிகளைப் பெற்ற பதிலிறுப்பாளர்களில் 100 சதவீதத்தினர் ஆண்கள் என்பதுடன், இது தொழில்முன்னிலைப் பயிற்சிகளைத் தெரிவுசெய்வதற்கான பால்நிலை விருப்பினைக் காட்டுகின்றது.

## அட்டவணை 3.12: தொழில்முன்னிலைப் பயிற்சியின் வகையும், பால்நிலையும்

| பயிற்சியின் வகை | பால்நிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் பதிலிறுப்புக்கள் (N=87) | | ஆண் பதிலிறுப்பு க்கள் (N=125) | | பதிலிறுப்புக்க ளின் மொத்த எண்ணிக்கை (N= 193) | |
| | எண். | % | எண். | % | எண். | % |
| கணனி | 40 | 45.98 | 33 | 26.4 | 73 | 37.8 |
| மின் பொறிமுறை/மோட்டார் பொறிமுறை/எந்திரவியல் | 0 | 0.00 | 23 | 18.4 | 23 | 11.6 |
| காய்ச்சியொட்டுதல் | 0 | 0.00 | 6 | 4.8 | 6 | 3.1 |
| தச்சுத்தொழில்/கட்டுமானம் | 1 | 1.15 | 14 | 11.2 | 15 | 7.8 |
| உணவு உற்பத்தி/உணவுத் தொழில்நுட்பம் | 1 | 1.15 | 1 | 0.8 | 2 | 1.0 |
| விலங்கு வேளாண்மை/தேனீ வளர்ப்பு | 0 | 0.00 | 4 | 3.2 | 4 | 2.1 |
| தைத்தல்/ஜூகி/கைவினை/நெசவு | 27 | 31.03 | 3 | 2.4 | 30 | 15.5 |
| வாகனமோட்டல் /பார வாகனத் தொழிற்பாடு | 0 | 0.00 | 15 | 12 | 15 | 7.8 |
| பாதுகாப்பு தொடர்பான பயிற்சி/சாரணர் பயிற்சி | 0 | 0.00 | 5 | 4 | 5 | 2.6 |
| அழகுக்கலை | 2 | 2.30 | 2 | 1.6 | 4 | 2.1 |
| ஹொட்டேல் பயிற்சி | 0 | 0.00 | 5 | 4 | 5 | 2.6 |
| சமூகப் பணி | 7 | 8.05 | 9 | 7.2 | 16 | 8.3 |
| வேறு | 9 | 10.34 | 5 | 4 | 14 | 7.2 |

குறிப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிநெறியை ஒரே பதிலிறுப்பாளர்கள் பின்பற்றியதனால் பல எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்கள் கணக்கிடப்படுகின்றன.
மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழிலுக்கு நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ள உணவு உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம் ஆகியன மீது தொழில்முன்னிலைப் பயிற்சிகள் 1.0 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களினால் (2) பின்பற்றப்பட்ட அதேவேளை, விலங்கு வேளாண்மை மீதான பயிற்சிகள் 2.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களினால் (4) பின்பற்றப்பட்டன. மறுதலையாக, தைத்தல், ஜூகி/கைவினைகள் மற்றும் நெசவுப் பயிற்சிகள் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பதிலிறுப்பாளர்களினால் பின்பற்றப்பட்டன. இதனால் சில பயிற்சியை 30 பதிலிறுப்பாளர்கள் பெற்றுள்ளதுடன், அவர்கள் மத்தியில் 90 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (27) பெண்களாகவுள்ள அதேவேளை, 10 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (3) மட்டுமே ஆண்களாவர். ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கிராமியச் சனசமூகத்திலுள்ள இளம் பெண்கள் மத்தியில் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில்வாய்ப்புக்கள் உள்ளன அல்லது வேறு நெறிகளைப் பின்பற்றுவதை விட இப்பயிற்சிகளை தொடர்ந்த பின்னர் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக்களுள்ளன. அட்டவணை 3.12இல் குறிப்பிடப்பட்டுள்ள வேறு வகுதியானது புகைப்படப்பிடிப்பு, கணக்கியல், வியாபாரம் மற்றும் முன்பள்ளியில் கற்பித்தல் ஆகியன மீதான பயிற்சி நெறிகளை உள்ளடக்குகின்றது. எனினும், பதிலிறுப்பாளர்கள் மத்தியில் கமத்தொழில் செயற்பாடுகள் தொடர்பிலான பயிற்சி நெறிகளுக்கு குறைந்தளவு கிராக்கியே இருந்தது. மறுதலையாக, தனியார் துறை

தொழில்முனைப்பிலான பயிற்சிநெறிகள் பாரியளவுக்கு அவர்கள் மத்தியில் பிரபலமாக இருந்தன.

**அட்டவணை 3.13: தொழில்முன்னிலைப் பயிற்சியினால் மாதிரியும், பயன்தன்மையும்**

| பயிற்சியின் வகை | ஒரு தொழிலைப் பெறுவதற்கு பயனுள்ளது | ஒரு தொழிலைப் பெறுவதற்கு பயனற்றது | ஒரு தொழிலைப் பெறுவதற்கு முயற்சியொன்று எடுக்கப்பட வில்லை |
|---|---|---|---|
| | % | % | % |
| கணனி (N =73) | 8.2 | 72.6 | 19.2 |
| மின் பொறிமுறை/மோட்டார் பொறிமுறை/எந்திரவியல் (N=23) | 30.4 | 65.2 | 4.3 |
| காய்ச்சியொட்டுதல் (N=6) | 33.3 | 66.7 | 0.0 |
| தச்சுத்தொழில்/கட்டுமானம் (N=15) | 46.7 | 53.3 | 0.0 |
| உணவு உற்பத்தி/உணவுத் தொழில்நுட்பம் (N=2) | 50.0 | 50.0 | 0.0 |
| விலங்கு வேளாண்மை/தேனீ வளர்ப்பு (N=4) | 75.0 | 25.0 | 0.0 |
| தைத்தல்/ஜூகி/கைவினை/நெசவு (N=30) | 26.7 | 63.3 | 10.0 |
| வாகனமோட்டல் /பார வாகன தொழிற்பாடு (N=15) | 60.0 | 40.0 | 0.0 |
| பாதுகாப்பு தொடர்பான பயிற்சி/சாரணர் பயிற்சி (N=5) | 0.0 | 100.0 | 0.0 |
| அழகுக்கலை (N=4) | 0.0 | 50.0 | 50.0 |
| ஹொட்டேல் பயிற்சி (N=5) | 40.0 | 20.0 | 40.0 |
| சமூகப் பணி (N=16) | 18.8 | 75.0 | 6.3 |
| வேறு (N=14) | 28.6 | 64.3 | 7.1 |
| மொத்தம் | 24.5 | 64.2 | 11.3 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

பதிலிறுப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட தொழில்முன்னிலைப் பயிற்சிநெறிகளின் பயனுள்ளதன்மையை கரிசனைக்கெடுக்கும் போது, தொழிலொன்றைப் பெறுவதற்கு பயிற்சிகள் பயனற்றவை என 64.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (136) குறிப்பிட்ட அதேவேளை, தொழிலொன்றைப் பெறுவதற்கு இப்பயிற்சிகள் பயனுள்ளவை என 24.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (52) குறிப்பிட்டனர் (அட்டவணை 3.13). தொழில்முன்னிலைப் பயிற்சியைப் பின்பற்றிய பதிலிறுப்பாளர்களில் தொழிலொன்றைப் பெறுவதற்கு ஏதாவது முயற்சியை 11.3 சதவீதத்தினர் (24) எடுக்கவில்லை. கணனிப் பயிற்சிகளை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பதிலிறுப்பாளர்கள் பெற்றிருந்தனர் என்ற உண்மை இருந்தபோதிலும், தொழிலொன்றைப் பெறுவதற்கு 8.2 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களுக்கே (6) பயனுள்ளதாக இருந்தது. தைத்தல், ஜூகி, கைவினைகள் மற்றும் நெசவு ஆகியன மீதான தொழில்முன்னிலைப் பயிற்சியைப் பின்பற்றிய பதிலிறுப்பாளர்களில் 26.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (8) மட்டுமே தொழில்களைப் பெற்றனர். விலங்கு வேளாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு ஆகியன மீது பயிற்சிகளைப் பின்பற்றிய

4 பதிலிறுப்பாளர்களில், தொழிலொன்றைப் பெறுவதற்கு அல்லது தமது வாழ்வாதாரப் பாங்கினை மேம்படுத்துவதற்கு பயிற்சி பயனுள்ளதாக இருந்தது என 75 சதவீதத்தினர் (3) குறிப்பிட்டனர். பொதுவாக, பதிலிறுப்பாளர்களின் பெருமளவு தொழில்முன்னிலைப் பயிற்சிகள் தொழில் சந்தையை அடைவதற்கு பயனுள்ளதாக இருக்கவில்லை.

## 3.6 முடிவுரை

ஆய்வு மாதிரியின் மொத்த பதிலிறுப்பாளர்கள் மத்தியில் 66.0 சதவீதத்தைக் கொண்டவர்கள் ஆண்களாகவிருந்த அதேவேளை, 34.0 சதவீதத்தைக் கொண்டவர்கள் பெண்களாவர். 66.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் திருமணமாகாதவர்கள் என்பதுடன், பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் சிங்களவராவர். இருபது வயதுக்கு மேற்பட்ட பதிலிறுப்பாளர்கள் மத்தியில் தொழில் வீதம் உயர்வானதாகும். பயிர்ச்செய்கை சனசமூகங்களில் பெருமளவு இளம் வயதினர் தமது பெற்றோர்களை விட சிறந்த கல்வியொன்றைப் பெற்றிருந்தனர். அவர்களது குடும்பங்கள் கமத்தொழில் பின்னணியைக் கொண்டிருந்த போதிலும், ஒரு தொகையிலான பதிலிறுப்பாளர்கள் ஏதாவது வகையிலான கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை. எனினும், 70.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை, 29.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் ஏதாவது அமைப்பில் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை. கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்களில் 39.5 சதவீதத்தினர் மட்டுமே முழு நேரக் கமக்காரர்களாவர். நெல், மரக்கறிகள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியனவே பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்களினால் செய்கைபண்ணப்பட்ட பிரதான பயிர்களாகும். கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் பத்து வருடங்களுக்கு குறைந்த அனுபவத்தையே கொண்டிருந்தனர். தமது குடும்பத்திற்கு சொந்தமான பண்ணைகளில் 50 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் பணியாற்றிய அதேவேளை, 28.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுய உரிமையிலான பண்ணைகளைப் பராமரித்தனர். சகல காணிகளினதும் மற்றும் செய்கைபண்ணிய காணிகளினதும் சராசரி விஸ்தீரணம் 2 ஏக்கர்களாகும். 63.8 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் ஏதாவது வகையிலான தொழில்முன்னிலைப் பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை. எனினும், உணவு உற்பத்தி, உணவுத் தொழில்நுட்பம் மற்றும் விலங்கு வேளாண்மை போன்ற கமத்தொழில் தொடர்பிலான தொழில்முன்னிலைப் பயிற்சிகள் பதிலிறுப்பாளர்கள் மத்தியில் பிரசித்தமானவை அல்ல என்பதுடன், ஒரு சில பதிலிறுப்பாளர்கள் மட்டுமே அத்தகைய பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

# அத்தியாயம் நான்கு

## சிறுஉடைமைக் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பு


### 4.1 அறிமுகம்

வேளாண்மைச் செயற்பாடுகள் அத்துடன் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்கள்/வியாபாரம் ஆகிய இரண்டிலும் சிறுஉடைமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பினை இந்த அத்தியாயம் முன்வைக்கின்றது. மேலும், பால்நிலை, வயது, கல்வி மட்டம் மற்றும் பயிர் ஆகியவற்றினால் இளைஞரின் பங்கெடுப்பின் வேறுபாடுகளை அத்தியாயம் பகுப்பாய்கின்றது.

### 4.2 வேளாண்மையில் இளைஞரின் பங்கெடுப்பு

பதிலிறுப்பாளர்களில் 70.4 சதவீதத்தினர் (375 பதிலிறுப்பாளர்கள்) பலதரப்பட்ட வழிகளில் கமத்தொழில் செயற்பாடுகளில் தாம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர்களில் 39.5 சதவீதத்தையும் (148) மற்றும் 33.9 சதவீதத்தையும் (127) கொண்ட பதிலிறுப்பாளர்கள் முறையே முழுநேர கமக்காரர்களாகவும், ஊதியமற்ற அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாகவும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள் (உருபு 4.1). பகுதிநேர வேளாண்மையாக கமத்தொழிலில் 26.4 சதவீதத்தினர் (99) ஈடுபட்டிருந்த அதேவேளை, தமது கடமையின் பங்கொன்றாக வேளாண்மையில் 0.3 சதவீதத்தினர் (1) ஈடுபட்டிருந்தனர். தமது அதிகாரவர்க்கத்தினால் குறித்தொதுக்கப்பட்ட காணியில் செய்கையை மேற்கொண்ட சிவில் படைகளின் உறுப்பினர்களை பின்னைய வகுதி உள்ளடக்குகின்றது.


**உருபு 4.1: கமத்தொழிலில் சம்பந்தத்தின் வகையினால் பதிலிறுப்பாளர்கள்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில், 73.6 சதவீதத்தினர் ஆண்களாகவுள்ள அதேவேளை, 26.4 சதவீதத்தினர் பெண்களாவர். உருபு 4.2இல் காட்டப்பட்டுள்ளவாறு, ஊதியமற்ற அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்கள் புறநீங்கலாக, கமத்தொழிலில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான சம்பந்தத்தில் பரந்த இடைவெளியொன்றிருந்தது. முழு நேரக் கமக்காரர்களில், 82.4 சதவீதத்தினர் ஆண்களாகவுள்ள அதேவேளை, மீதியானோர் பெண்களாவர். பகுதி நேரமாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் 86.9 சதவீதத்தினர் ஆண்களாகவுள்ள அதேவேளை, மீதியானோர் பெண்களாவர். எனினும், குடும்ப சரீரஉழைப்பாளர் தொடர்பில் பாங்கு மாற்றமடைந்துள்ளது. இது 52.7 சதவீதம் மற்றும் 47.2 சதவீதம் என முறையே ஆண்களையும், பெண்களையும் காட்டுகின்றது.

உருபு 4.2: **பால்நிலையினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர் களின் பங்கீடு**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அளவீட்டினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, சில அமைப்பில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் 61.7 சதவீதத்தினர் (231) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருந்த அதேவேளை, 6.2 சதவீதத்தினர் குறைந்தளவு அல்லது இரண்டு வருடங்களைக் கொண்ட அனுபவத்தைக் கொண்டிருந்தனர் (அட்டவணை 4.2). தமது பிள்ளைகளுக்கு குழந்தைப்பராயத்திலிருந்தே கமத்தொழில் வேலைகளுக்கு பண்ணைக் குடும்பங்களின் பெருமளவு பெற்றோர்களும், முதியோர்களும் வழிகாட்டியுள்ளனர். இதுவே கமத்தொழிலில் நீண்ட அனுபவத்தை உயர் சதவீதத்திலானோர் கொண்டுள்ளமைக்கு ஒரு பாரிய காரணமாகும். மேலதிகமாக, நுவரெலியா போன்ற உயர் பெறுமதியிலான பணப் பயிர்ச்செய்கை பகுதிகளிலுள்ள சிறுவர்கள் பயிரினால் வழங்கப்படும் உயர்ந்த வருமானத்தின் காரணமாக கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முனைகின்றனர். ஜயலங்கமம், கந்தப்பளை, நுவரெலியா ஆகியவற்றில் உள்ள கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களின் கூற்றுப்படி, குறைந்தபட்சம் மரக்கறி நாற்றுமேடையொன்றைப் பராமரிப்பதன் மூலம் கமத்தொழிலிலிருந்து கிராமத்திலுள்ள 12 வயது சிறுவர்கள் கூட வருமானமொன்றை ஈட்டுகின்றனர். மேலும், வெலிக்கந்த பிரதேசச் செயலக பிரிவில் (பி.செ.பி.) உள்ள சிங்கபுர, நொச்சியாகம பி.செ.பி.இல் உள்ள ஒயாமடுவ, கரடியனாறு பி.செ.பி.இல் உள்ள மாவலையாறு மற்றும் மரப்பாலம் போன்ற பின்தங்கிய கிராம பகுதியிலுள்ள இளைஞர் கல்வி வசதிகள் இன்மை, குடித்தன மட்டத்தில் உயர் மட்டத்திலான வறுமை, குடும்ப பொறுப்புக்களைச் சுமப்பதற்கு யாரேனும் ஒருவர் இருக்காமை மற்றும் குடும்பத்திற்கு சொந்தமான காணிகளைச் செய்கைபண்ணுதல் போன்ற ஒரு தொகையிலான காரணங்களின் நிமித்தம் கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முனைவதாக ஆராய்ச்சிக் குழாம் கவனத்திற்கெடுத்தது. எனினும், கமக்காரர் தாபனங்களின் பெருமளவு பிரதிநிதிகளால் குறிப்பிடப்பட்டவாறு, நெல் வேளாண்மைக்கு இளம் சந்ததியினரிடமிருந்து ஆதரவைப் பெறுதல் கஷ்டமானதாகும். ஏனெனில் அவர்கள் சேற்று வயல்களில் வேலை செய்வதற்கு விரும்பவில்லை. மேலும், நெல் வேளாண்மையிலிருந்து நஷ்டங்களினால் அல்லது குறைந்த இலாபத்தினால் இளம் சந்ததியினர் அதைரியமடைந்தனர் என அவர்கள் குறிப்பிட்டனர். பயிர்ச் செய்கையின் மூலம் இளைஞர் பங்கெடுப்பு வேறுபடுகின்றது.

**அட்டவணை 4.1: அனுபவத்தின் ஆண்டுகளின் எண்ணிகையினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் பங்கீடு**

| வருடங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | கமத்தொழில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையின் சதவீதம் |
|---|---|---|
| 1ஐ விடக் குறைவு | 4 | 1.1 |
| 1–2 வருடங்கள் | 19 | 5.1 |
| 2–5 வருடங்கள் | 117 | 31.2 |
| 5–10 வருடங்கள் | 121 | 32.3 |
| 10–15 வருடங்கள் | 85 | 22.7 |
| 15 வருடங்களுக்கு மேல் | 25 | 6.7 |
| அறிவிக்கப்படவில்லை | 4 | 1.1 |
| மொத்தம் | 375 | 100.0 |


மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் ஆகக்கூடுதலான சதவீதத்தினர் (38.9 சதவீதம்) 25-29 வயது வகுதியைச் சார்ந்திருந்த அதேவேளை, ஆகக்குறைந்த சதவீதத்தினர் (5.3 சதவீதம்) 15 வயது வகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆகக்கூடுதலான வகுதிக்கு அடுத்ததாக, 30.7 சதவீதத்தினர் 15-20 வயதுப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், 24.8 சதவீதத்தினர் 20-25 வயதுப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

15 வயதில் எவருமே முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடாத அதேவேளை, ஆகக்கூடுதலான எண்ணிக்கை (68.0 சதவீதம்) 25-29 வயதுப் பிரிவிலிருந்தேயாகும். 25-29 வயது வகுதியிலிருந்தவர்கள் பெருமளவு சமூக மற்றும் குடும்ப பொறுப்புக்களைக் கொண்டிருந்ததுடன், ஏதாவது வகையிலான தொழிலில் ஈடுபடுவதற்கு இச் சூழ்நிலை அவர்களை நிர்ப்பந்தித்தது. அவர்கள் முதிர்ச்சியடைந்து பொறுப்புக்களைத் தாங்கிக் கொள்ளும் போது சிறந்த தொழில்களுக்காக அவர்கள் வரிசையில் நிற்க வேண்டும் என்பதுடன், வாழ்வதற்காக தொழிலொன்றையும் கண்டறிய வேண்டும். "தமது கல்விசார் தகைமைக்குப் பொருத்தமான தொழிலை அவர்களினால் கண்டறிய முடியாவிட்டால் அவர்கள் குறைந்தபட்சம் தொழிலுக்காக கமத்தொழிலில் ஈடுபடவேண்டும்" என பெருமளவு கமக்காரர் தலைவர்களும், இளைஞர்களும் குறிப்பிட்டனர்.

பகுதி நேரச் சம்பந்தம் தொடர்பில் ஆகக்குறைந்த எண்ணிக்கை (5.0 சதவீதம்) 15 வயதிலிருந்தே என்பதுடன், ஆகக்கூடுதலான எண்ணிக்கை (37.4 சதவீதம்) 25-29 வயது பிரிவிலிருந்தேயாகும்.. குடும்பச் சரீரஉழைப்பாளர் வகுதியில் அல்லது ஊதியமற்ற வகுதியில் உள்ளவர்களில் ஆகக்கூடுதலான சதவீதம் (49.6 சதவீதம்) 15-20 வயதுக் குழுக்களிலிருந்தே என்பதுடன், ஆகக்குறைந்த சதவீதம் 15 வயதான இளைஞரிடமிருந்தேயாகும் (உருபு 4.3).

**உருபு 4.3: வயதுக் குழுக்களினால் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களின் பங்கீடு**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களில் 50.1 சதவீதத்திலான (187) பதிலிறுப்பாளர்கள் குடும்பத்திற்குச் சொந்தமான பண்ணைக்கு சரீரஉழைப்பை வழங்கிய அதேவேளை, தனிப்பட்ட விதத்தில் சொந்தமான பண்ணையொன்றை 28.4 சதவீதத்திலான (106) பதிலிறுப்பாளர்கள் பராமரித்தனர். கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள 16.4 சதவீதத்தினரும், 3.5 சதவீதத்தினரும் முறையே குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து சொந்தப் பண்ணையையும், உறவினர்கள் சாராதவர்களுடன் அல்லது நண்பர்களுடன் இணைந்து சொந்தப் பண்ணையையும் பராமரித்தனர். 1.1 சதவீதத்தினர் மட்டுமே (4 பதிலிறுப்பாளர்கள்) நாளாந்த ஊதிய சரீரஉழைப்பாளர்களாகப் பணியாற்றினார்கள்.

அட்டவணை 4.2இல் காட்டப்பட்டுள்ளவாறு, முழுநேர வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் தரம் 5 (66.6 சதவீதம்) வரையும், 46.2 சதவீதத்தினர் க.பொ.த. சா./த. வரையும் கல்வி கற்றிருந்ததுடன், 52.4 சதவீதத்தினர் க.பொ.த. சா./த.இல் சித்தியடைந்திருந்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், 57.4 சதவீதத்தைக் கொண்ட முழு நேரக் கமக்காரர்கள் க.பொ.த. சா./த. வரை மட்டுமே கல்விகற்றுள்ளனர். மறுதலையாக, பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் க.பொ.த. சா./த. வகுப்புகளில் படித்துக்கொண்டிருக்கிறார்கள் (50.0 சதவீதம்). 48.4 சதவீதத்தினர் க.பொ.த. உ./த. வரை கல்விகற்றுள்ளனர். குடும்பச் சரீரஉழைப்பாளர்களாக கமத்தொழிலில் க.பொ.த. உ./த. வகுப்புக்களில் 79.2 சதவீதத்தினரும், பட்டதாரி மாணவர்களாக 46.2 சதவீதத்தினரும், கமத்தொழில் பட்டதாரிகளாக 66.6 சதவீதத்தினரும் மற்றும் பட்டப்பின்படிப்பினை 100.0 சதவீதத்தினரும் ஈடுபட்டுள்ளனர். நேர்மாறான உறவின் முன்னைய ஆய்வு முடிவுகளை மேற்படி தரவு உறுதிப்படுத்தியுள்ளது (சந்திரசிறி மற்றும் கருணாகொட, 2011, சர்மா, 2007).

**அட்டவணை 4.2: கல்வியின் மட்டத்தினால் கமத்தொழிலில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்களும், ஈடுபாட்டின் வகையும்**

| கல்வி மட்டம் | முழு நேரம் | | பகுதி நேரம் | | குடும்பச் சரீர உழைப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண். | % | எண். | % | எண். | % | எண். | % |
| பாடசாலை செல்லவில்லை | 1 | 50.0 | 1 | 50.0 | 0 | 0.0 | 2 | 100.0 |
| தரங்கள் 1-5 வரை கல்வி கற்கப்பட்டது | 2 | 66.6 | 1 | 33.3 | 0 | 0.0 | 3 | 100.0 |
| க.பொ.த. சா./த. வரை கல்வி கற்கப்பட்டது | 85 | 46.2 | 48 | 26.1 | 50 | 27.2 | 184 | 99.5* |
| க.பொ.த. சா./தஇல் சித்தி | 32 | 52.4 | 12 | 19.6 | 17 | 27.9 | 61 | 100.0 |
| க.பொ.த. சா./த வகுப்பில் கல்வி கற்கப்படுகிறது | 4 | 25.0 | 4 | 25.0 | 8 | 50.0 | 16 | 100.0 |
| க.பொ.த. உ./த. வரை கல்வி கற்கப்பட்டது | 7 | 22.6 | 9 | 29.0 | 15 | 48.4 | 31 | 100.0 |
| க.பொ.த. உ./த. வகுப்பில் கல்வி கற்கப்படுகிறது | 1 | 4.2 | 4 | 16.7 | 19 | 79.2 | 24 | 100.0 |
| உ./த. இல் சித்தி | 11 | 36.7 | 13 | 43.3 | 6 | 20.0 | 30 | 100.0 |
| கமத்தொழிலில் டிப்ளோமா | 1 | 50.0 | 0 | 0.0 | 1 | 50.0 | 2 | 100.0 |
| பட்டதாரி மாணவர் | 2 | 15.4 | 5 | 38.5 | 6 | 46.2 | 13 | 100.0 |
| கமத்தொழில் தவிர்ந்த பட்டதாரி | 1 | 20.0 | 2 | 40.0 | 2 | 40.0 | 5 | 100.0 |
| கமத்தொழில் பட்டதாரி | 1 | 33.3 | 0 | 0.0 | 2 | 66.6 | 3 | 100.0 |
| பட்டப்பின்படிப்பு கமத்தொழில் தவிர்ந்த | 0 | 0.0 | 0 | 0.0 | 1 | 100.0 | 1 | 100.0 |
| மொத்தம் | 148 | 39.6 | 99 | 26.5 | 127 | 33.9 | 375 | 100.0 |

குறிப்பு: *க.பொ.த. சா./த. வரை கல்விகற்ற வகுதியின் 0.5 சதவீதத்தினர் (ஒரு நபர்) தனது தொழிலின் பாகமொன்றாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012


## 4.3 கம அடிப்படையிலான கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் இளைஞரின் பங்கெடுப்பு

மொத்தப் பதிலிறுப்பாளர்களில் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் தாம் ஈடுபட்டுள்ளதாக 7.3 சதவீதத்தினர் (39 பதிலிறுப்பாளர்கள்) அறிவித்தனர். அவர்களில் 84.6 சதவீதத்தினர் (33 பதிலிறுப்பாளர்கள்) ஆண்களாகவுள்ள அதேவேளை, 18.4 சதவீதத்தினர் (6 பதிலிறுப்பாளர்கள்) பெண்களாவர். கமத்தொழில் தொடர்பான வியாபாரத்தில்/கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் 51.3 சதவீதத்தினர் 25-29 வயதுக் குழுக்களைச் சார்ந்திருந்தனர். 25.6 சதவீதத்தினரும் மற்றும் 23.1 சதவீதத்தினரும்

முறையே 15-20 வயது மற்றும் 20-25 வயதுக் குழுக்களைச் சார்ந்திருந்தனர். கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில்/வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்களில் ஆகக்கூடுதலான பகுதியைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (46.2 சதவீதம்) க.பொ.த. சா./த. வரை கல்வி கற்றிருந்த அதேவேளை, 2.6 சதவீதத்தினர் மட்டுமே பட்டதாரிகளாவர் (உருபு 4.4).

கமத்தொழில் தொடர்பான கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் (18.9 சதவீதம்) அரைக்கும் ஆலைகளைப் பராமரித்தனர். அட்டவணை 4.3இல் காட்டப்பட்டுள்ளவாறு, 16.2 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தயிர்/யோகர்ட் ஆகியவற்றை உற்பத்திசெய்வதிலும், மரக்கறி பழங்கள் ஆகியவற்றின் மொத்த விற்பனையிலும் ஈடுபட்டிருந்ததுடன், மேலும் 16.2 சதவீதத்தினர் வேறு பயிர் உற்பத்திகளில் ஈடுபட்டிருந்தனர். பெருமளவு செயற்பாடுகள் கைத்தொழில்களை விட கமத்தொழில் தொடர்பிலான சிறிய அளவிலான வியாபாரங்களே என்பது சுவாரஷ்யமிக்கதாகும்.

**உருபு 4.4: கல்வியின் மட்டத்தினால் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில்/வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்கள்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

**அட்டவணை 4.3: கைத்தொழிலின்/வியாபாரத்தின் வகையினால் கமத்தொழில் கைத்தொழில்களில்/வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்கள்**

| கைத்தொழில்/ வியாபாரம் | நபர்களின் எண். | சதவீதம் (N=39) |
|---|---|---|
| அரைக்கும் ஆலையொன்றை பராமரித்தல் | 7 | 18.9 |
| கமத்தொழில் இயந்திராதிகளை கேள்வுக்கு விடுதல் | 5 | 13.5 |
| இனிப்புக்களை தயாரித்தல் | 1 | 2.7 |
| வாசனைத் திரவியங்களையும் பருப்பு வகைகளையும் பொதிப்படுத்துதலும், விற்பனை செய்தலும் | 3 | 8.1 |
| விதைகளையும், நாற்றுக்களையும் உற்பத்திசெய்தல் | 1 | 2.7 |
| வெளிநாட்டுக்குரிய தாவரங்களை உற்பத்தி செய்தல் | 1 | 2.7 |
| தயிரை/யோகர்ட்டை தயாரித்தல் | 6 | 16.2 |
| மரக்கறிகள்/பழங்கள் மற்றும் வேறு பயிர்களின் மொத்த விற்பனை | 6 | 16.2 |
| சேதன உரத்தை தயாரித்தலும், விற்பனை செய்தலும் | 2 | 5.4 |
| காளான்களை உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும் | 2 | 5.4 |
| கோழி வளர்ப்பு பண்ணையையும் கடையையும் பராமரித்தல் | 2 | 5.4 |
| பாக்குகளை விற்பனை செய்தல் | 1 | 2.7 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்களில், 73.2 சதவீதத்தினர் (360) எதிர்காலத்தில் அவற்றில் ஈடுபடுவதற்கு இணக்கமாக இருந்தனர். அவர்களில் 65.2 சதவீதத்தினர் (234) ஆண்களாவர்.

## 4.4 முடிவுரை

மொத்த மாதிரியில், கமத்தொழிலில் 70.4 சதவீதத்தினர் ஈடுபட்டிருந்தனர். ஆனால், ஈடுபாட்டின் மட்டமும், வகையும் வேறுபட்டவையாகும். அவர்களில் சுமார் 40 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் முழுநேர வேளாண்மையில் ஈடுபட்டிருந்த அதேவேளை, அனேகமாக 34 சதவீதத்தினர் ஊதியமற்ற சரீரஉழைப்பாளர்களாக அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக ஈடுபட்டிருந்தனர். கல்வியின் மட்டமும் மற்றும் கமத்தொழிலில் சம்பந்தமும் உறவொன்றைக் கொண்டிருந்ததாக அளவீட்டு முடிவுகள் வெளிப்படுத்தின. சுமார் 7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களில் பெரும்பாலானோர் சிறிய அளவிலான வியாபாரங்களிலேயே ஈடுபட்டிருந்தனர்.

# அத்தியாயம் ஐந்து

## கமத்தொழிலில் இளைஞரின் மனவுணர்வுகள்


### 5.1 அறிமுகம்

விசேடமாக முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் இளைஞரின் மனவுணர்வினை இந்த அத்தியாயம் விளக்குகின்றது. உண்மையான சூழ்நிலையை அடையாளம் காணுமுகமாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் சம்பந்தத்தின் வழிகளினதும், மற்றும் இளைஞர்களின் சம்பந்தங்களுக்கு பின்னாலுள்ள காரணங்களினதும் மீது அது நோக்கினைக் கொண்டுள்ளது. கம அடிப்படையிலான கைத்தொழில்கள் மீதான இளைஞரின் மனவுணர்வும் இந்த அத்தியாயத்தில் விளக்கமளிக்கப்படுகின்றது. மேலதிகமாக, முழுநேரத் தொழிலைக் கொண்டிருக்காத இளைஞர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில் வகுதிகளும் கலந்துரையாடப்படுகின்றன.

### 5.2 முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கம்

ஆய்வு மாதிரியில் உள்ளவர்களில் முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக 58.2 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்த அதேவேளை, முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென 39.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர் (உருபு 5.1). மேலதிகமாக, முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான தமது இணக்கம் தொடர்பில் தெளிவான கருத்தொன்றை தாம் கொண்டிருக்கவில்லையென 2.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். கமத்தொழில் துறையானது நன்மைகள் மற்றும் அனுகூலமின்மைகள் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

**உருபு 5.1: முழுநேரக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கம்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பதிலிறுப்பாளர்களின் இணக்கத்திற்கான காரணம் பன்னிலையானவை என்பதுடன், அவர்களது அனுபவம், அறிவு, பொருளாதார நன்மைகள் மற்றும் தனிப்பட்ட சிறப்பியல்புகள் ஆகியன மீது அடிப்படையைக் கொண்டுள்ளன. எனவே,

முழு நேரத் தொழிலொன்றாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பிய பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் அவர்களது குழந்தைப்பராயத்திலிருந்து வேலை அனுபவத்தைக் கொண்டிருந்ததினால், கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான திறன்களைக் கொண்டிருந்தனர். மறுபுறத்தில், போதியளவு சரீரஉழைப்புப் படையையும் (விசேடமாக குடும்ப சரீரஉழைப்பாளர்கள்) மற்றும் காணி உட்பட அடிப்படையிலான சொத்துக்களையும் அவர்கள் கொண்டிருந்தனர். எனவே, போதியளவு திறன்களும், பயிற்சியும் மற்றும் கல்வியும் இன்றி திறந்த தொழில் சந்தையில் இன்னொரு தொழிலுக்காக நகர்வதை விட கமத்தொழில் செயற்பாடுகளை அவர்கள் விரும்பினார்கள்.

மறுபுறத்தில், பதிலிறுப்பாளர்களின் சொந்தக் கிராமங்கள் மீதே கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளின் பெரும்பான்மை அடிப்படையைக் கொண்டிருந்ததுடன், தமது அயல்புறத்திலிருந்து தூரச்செல்லாமல் கமத்தொழில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சில இளைஞர் விரும்பினர். மேலதிகமாக, பதிலிறுப்பாளர்கள் மத்தியில் ஒரு தொகையிலான இளம் வயதினர் தமது குடித்தனங்களில் பலதரப்பட்ட கடப்பாடுகளைக் கொண்டிருந்தனர். இதன் பிரகாரம், முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் கிராமங்களிலுள்ள சில இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஏனெனில் தமது குடித்தனங்களிலிருந்து வெளியேறுவதற்கு அவர்கள் கஷ்டங்களைக் கொண்டிருந்தார்கள். சில குடித்தனங்களில், சிறுவர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், சுகவீனமுற்றவர்கள் அல்லது வயதுமுதிர்ந்தவர்கள் தமது வீடுகளில் வாழ்ந்ததுடன், தமது சொந்த மரபுரீதியிலான கமத்தொழில் காணிகளில் வேளாண்மையை மேற்கொள்வதற்கு வேறு உறவினர்களைக் கொண்டிருக்கவில்லை. கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் தமது பெற்றோர்களுக்கு சிலர் உதவியளிக்க வேண்டியிருந்தது. எனவே, அவர்களுக்கு வேறு தொழில்களைச் செய்வதற்கு கிராமங்களிலிருந்து தூரத்திற்கு நகர்வதற்கு கஷ்டமாக இருந்தது. இது கமக்காரர் தாபனங்களின் தலைவர்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டது.

வெளிக்கள ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, தனியார் துறையிலும் மற்றும் முறைசாராத் துறையிலும் தொழில்களுக்காக கல்வியை முடித்த பின்னர், தமது வீடுகளை விட்டு ஒரு தொகையிலான இளம் வயதினர் வெளியேறினர். வெளியிலான தொழில்களுக்காக கிராமத்தை விட்டு வெளியேறிய பதிலிறுப்பாளர்கள் சிலரின் அனுபவங்களின் பிரகாரம் அவர்களுக்கு குறைந்த சம்பளங்கள் கொடுப்பனவு செய்வதுடன், மாதாந்தச் செலவினங்களை உள்ளடக்குவதற்குக் கூட கஷ்டமாக இருந்துள்ளது. அத்தகைய அனுபவத்தைக் கொண்டிருந்த பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் திறந்த தொழில் சந்தையில் தொழில்கள் செய்வதையிட்டு மனக்கசப்படைந்திருந்தனர். எனவே, அவர்கள் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளைச் செய்வதற்கு விரும்பியிருந்தனர். அத்தகைய பதிலிறுப்பாளர்களின் கருத்துக்களின் பிரகாரம் அவர்கள் ஏற்கனவே ஈட்டியதை விட குறைந்தளவு பணத்தை அவர்கள் ஈட்டுகின்றனர் என்ற உண்மை இருந்த போதிலும், கிராமத்தில் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளையே அவர்கள் விரும்பினார்கள். எனவே, கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு, குறைந்த வாழ்க்கைச் செலவினங்களுடனும், குறைந்த மனஅழுத்தத்துடனும், அத்துடன் அதிகளவு சுதந்திரத்துடனும் கிராமத்தில் வாழ்வதற்கே அவர்கள் இன்னுமே விரும்பினார்கள். இக்காரணங்களுக்குப் புறம்பாக, வேளாண்மையைச் செய்வதற்கு சுய அக்கறையும், சுய திருப்தியும் கமத்தொழில் தொடர்பான தொழில்களை செய்வதற்கு அவர்களது விருப்பத்திற்கான காரணங்களாக கருதப்படுகின்றன.

முழுநேரமாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான இளைஞர்களின் இணக்கத்தைத் தீர்மானிப்பதில் இலாபகரமான கமத்தொழில் செயற்பாடுகளும் முக்கியமான வகிபங்கொன்றை ஆற்றின. நுவரெலியா மாவட்டத்தில் வெளிக்கள ஆய்வின் பிரகாரம், மலையக மரக்கறி வேளாண்மைக் குடும்பங்கள் மத்தியிலுள்ள இளம் சந்ததியினர், வேறு பகுதிகளை விட கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இணக்கமாக இருந்தனர். ஏனெனில் சிறிய துண்டுகளைக் கொண்ட காணியைச் செய்கைபண்ணுவதன் மூலம் கூட சிறந்த

வருமானத்தை அவர்களினால் ஈட்ட முடியும். மேலும், மரக்கறிகள், பழங்கள் மற்றும் வேறு களப் பயிர்கள் ஆகியவற்றின் வேளாண்மையானது பொதுவில் நெல் வேளாண்மை மேற்கொள்வதை விட மிகவும் இலாபகரமானதாகும். எனவே, நெல் வேளாண்மையை விட இப்பயிர்களைச் செய்கைபண்ணுவதில் இளைஞர்கள் அக்கறையைக் கொண்டிருந்தனர். நியாயமான விலைகளில் அறுவடையை விற்றல், உயர்ந்த உற்பத்தி ஆகுசெலவு, காணியின்மை மற்றும் நீர்ப் பற்றாக்குறை ஆகியன போன்ற காரணங்களின் நிமித்தம் முழுநேரத் தொழிலாக பண்ணை வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அதிகளவு இளைஞர்கள் விரும்பவில்லை. விசேடமாக, பெரும் அளவுக்கு குத்தகை வேளாண்மையில் ஈடுபடுவதற்கு பெருமளவு இளைஞர்கள் விரும்பவில்லையென்பதுடன், இதன் விளைவாக ஒரு தொகையிலான கைவிடப்பட்ட நெற்காணிகளை கிராமங்களில் காண முடிகின்றது. மறுபுறத்தில், நோக்குக் குழு கலந்துரையாடல்களின் பிரகாரம், வேளாண்மைச் சனசமூகங்களில் உள்ள இளம் சந்ததியினர் மத்தியிலுள்ள சில உறுப்பினர்கள் அது பாரம்பரியமான வழியிலான வேளாண்மை என்பதனால், வேளாண்மையில் ஈடுபடுவதற்கு விரும்பவில்லை. நவீன வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கு பெருமளவு இளைஞர்கள் விரும்பியதுடன், எனவே, மிகக் கஷ்டமான வேலை நிலைமைகளின் கீழ் பணியாற்றுவதற்கும் அவர்கள் விரும்பவில்லை.

**அட்டவணை 5.1: முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான வயதும் இணக்கமும்**

| வயதுக் குழு | இணக்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விருப்பம் | | விருப்பமில்லை | | தெளிவான கருத்தைக் கொண்டிருக்க வில்லை | |
| | எண். | % | எண். | % | எண். | % |
| வயது 15 | 19 | 54.2 | 14 | 40.0 | 2 | 5.8 |
| 15<வயது<=20 | 87 | 45.8 | 100 | 52.6 | 3 | 1.6 |
| 20<வயது<=25 | 82 | 61.7 | 47 | 35.3 | 4 | 3.0 |
| 25<வயது<=29 | 122 | 69.7 | 50 | 28.6 | 3 | 1.7 |
| மொத்தம் | 310 | 58.2 | 211 | 39.6 | 12 | 2.2 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 5.1இல் காட்டப்பட்டுள்ளவாறு, 25<வயது<=29 வயது வகுதியிலுள்ள பதிலிறுப்பாளர்கள் மத்தியில் முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு 69.7 சதவீதத்தினர் (122) விரும்பிய அதேவேளை, 20<வயது<=25 வயது வகுதியைச் சார்ந்த பதிலிறுப்பாளர்களில் 61.7 சதவீதத்தினர் (82) முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பினார்கள். மறுபுறத்தில், 15<வயது<=20 வயது வகுதியிலுள்ளவர்களில் 52.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (100) முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பவில்லை.

முழுநேரமாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென்றும், திறந்த தொழில் சந்தையில் தொழில்களுக்காக நகர்கின்ற அல்லது தமது கல்வியைத் தொடருகின்ற நோக்கத்தினைக் கொண்டிருந்தனென்றும் 25 வயதுக்குக் குறைந்த பெருமளவு பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். அவர்கள் மத்தியில், குறைந்தளவு படித்த இளைஞர்கள் முச்சக்கரவண்டி செலுத்துதல், தொழிற்சாலைகளில் தொழில்கள், வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் நிருமாணத் துறையில் தொழில்கள் போன்ற சிறந்த கொடுப்பனவிலான தொழில்களையே விரும்பினார்கள். நிருமாணத் துறையில் அனுபவத்தைக் கொண்டிருந்தவர்கள் வேளாண்மையிலிருந்து அவர்களினால் ஈட்டமுடியாததை குறைந்த கால நேரத்தினுள் சிறந்த வருமானமொன்றை

ஈட்டக்கூடியதாகவிருந்தது. மிகவும் முக்கியமாக, இவை குறைந்த அபாயத்திலான தொழில்கள் என்பதுடன், வேளாண்மை போலன்றி தமது வருமானம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து 25 வயதுக்கு மேற்பட்ட பெருமளவு பதிலிறுப்பாளர்கள் முழுநேரக் கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாகத் தெரிவித்தனர். வெளிக்கள ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டவாறு, அவர்களது இணக்கத்திற்குப் பின்னால் பலதரப்பட்ட காரணங்கள் உள்ளன. மிகவும் முக்கியமாக, அவர்கள் முதிர்ச்சியடைந்து வாழ்க்கை அனுபவத்தைக் கொண்ட போது, மிகவும் பொருத்தமான தொழிலொன்றைப் பற்றி நினைப்பதற்கு அவர்கள் முனைகின்றனர். தமது பதின்ம வயதிலிருந்து அல்லது இருபது வயதின் ஆரம்பத்திலிருந்து பலதரப்பட்ட வகைகளைக் கொண்ட தொழில்களில் சில பதிலிறுப்பாளர்கள் ஈடுபட்டிருந்தனர். எனினும், பெருமளவு வருடங்களுக்கு அத்தகைய தொழில்களில் ஈடுபட்ட பின்னர், அத்தொழில்களுடன் அவர்கள் மனக்கசப்பு அடைந்ததுடன், வேளாண்மையானது அதிகளவு சுதந்திரத்தைக் கொண்டிருப்பதாகவே உணர்ந்தனர். தொழிற்சாலைகளில் கடுமையான வேலைச் சூழலையும் அத்துடன் நியாயமான கொடுப்பனவின்றி பெருமளவு திறனற்ற துறைகளையும் அவர்கள் அனுபவித்திருந்தனர்.

**அட்டவணை 5.2: வேளாண்மைச் செயற்பாடும், முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும்**

| செயற்பாட்டின் வகை | இணக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விருப்பம் (N=238) | | விருப்பம் இன்மை (N=130) | | தெளிவான கருத்தைக் கொண்டிருக்க வில்லை (N=7) | | மொத்தம் (N=375) | |
| | எண். | % | எண். | % | எண். | % | எண். | % |
| முழு நேரத் தொழிலாக | 115 | 77.7 | 31 | 20.9 | 2 | 1.4 | 148 | 100.0 |
| பகுதி நேரத் தொழிலாக | 56 | 56.6 | 38 | 38.4 | 5 | 5.1 | 99 | 100.0 |
| குடும்ப சரீரஉழைப்பாக (தொழிலொன்றாக அல்ல) | 67 | 52.3 | 61 | 47.7 | 0 | 0.0 | 128 | 100.0 |

குறிப்பு: குடும்பச் சரீரஉழைப்பாளர்களாக, முழுநேர மற்றும் பகுதி நேர ஊழியர்களாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்ட பதிலிறுப்பாளர்களை மட்டுமே இந்த அட்டவணை உள்ளடக்குகின்றது.
மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 5.2இல் உள்ளவாறு, தொடர்ச்சியாக முழுநேரக் கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக முழுநேரக் கமத்தொழில் ஊழியர்களில் பெரும்பான்மையினர் (77.7 சதவீதம்) கூறினர். மேலும், முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக பகுதிநேரக் கமத்தொழில் ஊழியர்களில் 56.6 சதவீதத்தினர் தெரிவித்தனர். மேலும், தற்போது குடும்பச் சரீரஉழைப்பாளர்களாகப் பணியாற்றும் 52.3 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் முழுநேரக் கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்புவதாக தெரிவித்தனர்.


ஆய்வின் பிரகாரம், மாதிரியிலுள்ள பெருமளவு முழுநேரக் கமத்தொழில் ஊழியர்கள் காணி உட்பட தமது சொந்தப் பண்ணைச் சொத்துக்களைக் கொண்டிருந்தனர். எனவே, காணிகளும், சகல நன்மைகளும் அவர்களுக்கே என்ற காரணத்தினால், தமது சொந்தக் காணிகளை விருத்திசெய்வதற்கு சிறந்த முயற்சியொன்றை அவர்கள் மேற்கொண்டனர். மேலதிகமாக, முழுப் பண்ணை அல்லது வியாபாரம் அவர்களினால் முழுமையாக ஆட்சிப்படுத்தப்பட்டதனால், தமது பணியின் ஏக பொறுப்பினை அவர்கள் கொண்டிருந்தனர்.



පුස්තකාලය
LIBRARY
හෙ.කො.ශො,ප.ජු.ආ
HARTI

குடும்ப சரீரஉழைப்பாளர்களைப் பொறுத்தளவில், காணியின் உரித்துரிமையை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதுடன், நன்மைகள் உறுதிப்படுத்தப்படவுமில்லை. மறுபுறத்தில், அவர்கள் தமது உற்பத்திகளை விற்பனை செய்த பின்னர் அவர்களது பெற்றோர்களினால் வெகுமதிகளாக சில குடும்ப சரீரஉழைப்பாளருக்கு பணம் வழங்கப்பட்டது. ஆனால், பெருமளவு நேரத்தில் தமது பிள்ளைகளின் நாளாந்தத் தேவைகளுக்காகவும், அத்துடன் கல்வி உட்பட வேறு அவசியமான தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் தமது பணத்தைப் பெற்றோர்கள் செலவழித்தார்கள். விசேடமாக, குடும்பச் சரீரஉழைப்பாளர்களாகப் பணியாற்றிய சில பதிலிறுப்பாளர்கள் வாழ்க்கைத்தொழிலொன்றைக் கொண்டிருக்கும் நோக்கத்துடன் படிப்பை மேற்கொண்டிருந்தனர்.

**உருபு 5.2: பால்நிலையும், முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும்**




| | விருப்பம் | விருப்பமில்லை | தெளிவான கருத்தில்லை |
|---|---|---|---|
| பெண் (N=181) | 50.8 | 47.0 | 2.2 |
| ஆண் (N=352) | 61.9 | 35.8 | 2.3 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

உருபு 5.2இல் காட்டப்பட்டுள்ளவாறு, பெண்களை விட முழுநேரத் தொழிலாக கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆண் பதிலிறுப்பாளர்கள் அதிகளவு விரும்பினார்கள். இதன் பிரகாரம், கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக 61.9 சதவீதத்தைக் கொண்ட ஆண் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்த அதேவேளை, முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு தமது இணக்கத்தினை 50.8 சதவீதத்தைக் கொண்ட பெண் பதிலிறுப்பாளர்கள் வெளிப்படுத்தினர்.

சில பெண் பதிலிறுப்பாளர்களின் கருத்துக்களின் பிரகாரம், அன்றாடக் குடித்தனக் கருமங்களுடன் முழுநேரமாக கமத்தொழிலில் ஈடுபடுவது கஷ்டமானதாகும். விசேடமாக, கமநல சமூகத்தில் பண்ணை வேலையில் தமது கணவர்மார்களுக்கு உதவியளித்தல் அத்துடன் அவர்களுக்கு உணவு தயாரித்தல் போன்ற குறிப்பான பணிகளை அவர்கள் கொண்டுள்ளனர். மேலதிகமாக, தமது சிறிய குழந்தைகளைக் கவனிப்பதற்கான பொறுப்பையும் அவர்கள் கொண்டுள்ளனர். மறுபுறத்தில், தமது கணவர்மார் பணத்தை ஈட்டுவதனாலும், குடும்பத் தலைவிகளாக வீட்டிலேயே இருக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்வனதாலும் கமத்தொழிலை அல்லது ஏதாவது வேறு தொழிலை செய்வதற்கு விரும்பவில்லையென அவர்கள் தெரிவித்தனர். மேலும், கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் அல்லது சுயதொழிலில் ஈடுபடுவதற்கு அல்லது வியாபார முயற்சியாளராகப் பணியாற்றுவதற்கு தாம் விரும்புவதாக சில பெண்கள் தெரிவித்தனர். ஆண்களைப் பொறுத்தளவில், தமது குடும்பங்களைப்

பராமரிப்பதற்கான பொறுப்பை தாம் கொண்டிருந்தபடியினால், கமத்தொழில் தொடர்பிலான பணியில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக கணிசமான எண்ணிக்கையைக் கொண்ட ஆண்கள் தெரிவித்தனர். மறுதலையாக, கமத்தொழில் செயற்பாடுகளில் முழுநேரமாக ஈடுபட்டிருந்த சில ஆண்கள், அதிக உற்பத்தி ஆகுசெலவுடன் குறைந்த வருமானத்தை மட்டுமே அது வழங்குவதனால், முழுநேரத் தொழிலொன்றாக கமத்தொழிலைச் செய்வதற்கு தாம் விரும்பவில்லையென தெரிவித்தனர்.

**அட்டவணை 5.3: திருமண நிலையும், முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும்**


| திருமண நிலை | இணக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விருப்பம் | | விருப்பமில்லை | | தெளிவான கருத்தைக் கொண்டிருக்க வில்லை | | மொத்தம் | |
| | எண். | (%) | எண். | (%) | எண். | (%) | எண். | (%) |
| திருமணமாகியுள்ளது | 127 | 70.6 | 50 | 27.8 | 3 | 1.7 | 180 | 100 |
| திருமணமாகவில்லை | 183 | 51.8 | 161 | 45.6 | 9 | 2.5 | 353 | 100 |
| மொத்தம் | 310 | 58.2 | 211 | 39.6 | 12 | 2.3 | 533 | 100 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

முழுநேரத் தொழிலொன்றாகக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு பெரும்பான்மையான திருமணமாகிய பதிலிறுப்பாளர்கள் (70.6 சதவீதம்) விரும்பிய அதேவேளை, முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு 51.8 சதவீதத்தைக் கொண்ட திருமணமாகாத பதிலிறுப்பாளர்கள் விரும்பினார்கள் (அட்டவணை 5.3). ஆய்வின் பிரகாரம், பெரும்பான்மையிலான இளம் திருமணமாகாத பதிலிறுப்பாளர்கள் (பதின்ம வயதினர் மற்றும் 20இன் முற்பகுதியிலுள்ளவர்கள்) தமது குடும்பங்கள் மீது முழு அளவில் அல்லது பகுதியளவில் தங்கியிருந்தனர். எனினும், திருமணமாகாதவர்களைவிட திருமணமாகிய பதிலிறுப்பாளர்கள் தமது குடும்பப் பொறுப்பினை தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறாக பண்ணை வேலையை விட்டு விலகுவதை விட, வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அவர்களில் பெரும்பான்மையானோர் விரும்பினர்.

உருபு 5.3இல் காட்டப்பட்டுள்ளவாறு, குடும்பத்தின் வருமானத்திற்கும், கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குமான இணக்கத்துக்கு இடையில், சில வருமான வகுதிகளில் புறநீங்கலாக, குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கவில்லை. இதன் பிரகாரம், ரூபா 5,000க்கு குறைந்த வருமானத்தைக் கொண்டிருந்த 71.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்பினார்கள். மேலும், ரூபா 5,000க்கும், ரூபா 10,000க்கும் இடையிலான வருமான மட்டத்தைக் கொண்டிருந்த 62.8 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும், ரூபா 20,000க்கும் ரூபா 30,000க்கும் இடையிலான வருமான மட்டத்தைக் கொண்டிருந்த 64.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும் முழுநேரக் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்பினார்கள்.

உருபு 5.3: குடும்பத்தின் மாதாந்த வருமானத்தின் மட்டமும், முழுநேரத் தொழிலாகக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும்





| | Income<=5000 (N=14) | 5000<income 10,000(N=43) | 10,000<income 20,000(N=160) | 20,000<income 30,000(N=128) | 30,000<income 40,000(N=69) | 40,000<income 50,000(N=37) | Income>50,000 (N=75) |
|---|---|---|---|---|---|---|---|
| Like | 71.5 | 62.8 | 54.4 | 64.1 | 52.1 | 54 | 57.3 |
| Dislike | 28.5 | 37.3 | 44.4 | 33.6 | 46.4 | 43.2 | 36 |
| Do not have a clear idea | 0 | 0 | 1.3 | 2.3 | 1.4 | 2.7 | 6.7 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

இப் பாங்குக்கான காரணம் மிகவும் தெளிவாகவில்லை. எனினும், குறைந்த வருமான மட்டத்தைச் சார்ந்த பதிலிறுப்பாளர்கள் வேளாண்மையை விட தொழில்களுக்கெனச் செல்வதற்கு குறைந்தளவு சொத்துக்களையும் அத்துடன் குறைந்த அடைதலையுமே கொண்டிருந்தனர். அவர்களது தொழில்களுக்கான விருப்புக்கு ஊறுபடத்தக்கதாக இருந்த நிதிசார் வசதி மற்றும் கல்வியின்மை அத்துடன் திறந்த தொழில் சந்தைக்கான குறைந்த அடைதல் ஆகியனவே இதற்கான காரணமாகும். மறுபுறத்தில், அவர்கள் கமத்தொழில் கிராமங்களில் வாழ்ந்ததுடன், மிகவும் அடிப்படை மட்டத்தில் கூட கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வசதிகளை அவர்கள் கொண்டிருந்தார்கள். அதிகளவு வருமான வகுதிகளில் இருந்த பதிலிறுப்பாளர்கள் தமது பொருளாதாரப் பின்னணியுடன் வேறு வாழ்வாதார வாய்ப்புக்களை அடைவதற்கான வளங்களையும், வாய்ப்புக்களையும் கொண்டிருந்தனர். இதனால் குறைந்த வருமானக் குழுக்களைப் போலன்றி, சிறந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை அவர்கள் கொண்டிருந்ததனால், வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது வெளிநாட்டுத் தொழில்கள் உட்பட வேறு தொழில்களுக்கு நகர்வதற்கு இக்குடும்பங்களின் இளைஞர்களினால் இயலக்கூடியதாக இருந்தது.

**உருபு 5.4: கல்வியின் மட்டமும், முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கமும்**




| | Not attended (N=2) | Year 1 to 5 (N=4) | Year 6 to O/L (N=235) | Passed O/L (N=92) | Studding O/L (N=27) | Up to A/L (N=40) | Studding A/L (N=37) | Passed A/L (N=56) | Diploma in Agriculture (N=2) | Undergraduate (N=17) | Graduate - Agriculture (N=14) | Other (N=7) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Like | 100 | 75 | 67.7 | 68.5 | 48.1 | 37.5 | 29.7 | 44.6 | 50 | 58.8 | 28.6 | 57.2 |
| Dislike | 0 | 25 | 30.2 | 30.4 | 51.9 | 55 | 64.9 | 55.4 | 50 | 41.2 | 64.3 | 42.9 |
| Do not have clear idea | 0 | 0 | 2.1 | 1.1 | 0 | 7.5 | 5.4 | 0 | 0 | 0 | 7.1 | 0 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

உருபு 5.4இல் காட்டப்பட்டுள்ளவாறு, பொதுவாகவே உயர்ந்த கல்வி மட்டத்தைக் கொண்டிருந்த பதிலிறுப்பாளர்களை விட, முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு குறைந்த கல்விகற்ற பதிலிறுப்பாளர்கள் விரும்பினார்கள். விசேடமாக, க.பொ.த. சா/தரத்தை விட குறைந்த கல்வி மட்டத்தைக் கொண்டிருந்த பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்பினார்கள். மறுதலையாக, க.பொ.த. சா/த. வரை அல்லது அதற்கு மேலாக படித்திருந்தால், முழுநேரமாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதன் பிரகாரம், ஆண்டு 1 முதல் 5 வரை படித்த 75 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள், முழுநேர அடிப்படையில் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளைத் தாம் விரும்புவதாக தெரிவித்த அதேவேளை, ஆண்டு 6 முதல் க.பொ.த. சா./த. வரை படித்த 67.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும், க.பொ.த. சா./தரத்தில் சித்தியடைந்த 68.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும் முழுநேரமாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக தெரிவித்தனர். பதிலிறுப்பாளர்களின் கல்வி மட்டம் உயர்வாக இருந்த போது, பாங்கு மறுதலையாக விளங்கியது. க.பொ.த. உ./த. வரை படித்த 55 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும், க.பொ.த. உ./தரத்தில் படிக்கின்ற 64.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களும் முழுநேர அடிப்படையில் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக தெரிவித்தனர்.

மாதிரியிலுள்ள பட்டப் படிப்பு மாணவர்கள் ஓரளவுக்கு வேறுபட்ட மனவுணர்களைக் கொண்டிருந்ததுடன், எதிர்காலத்தில் முழுநேரக் கமத்தொழில் அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்புவதாக 58.8 சதவீதத்தினர் தெரிவித்தனர். கமத்தொழில் பட்டதாரிகள் மத்தியில் 28.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் மட்டுமே கமத்தொழில் தொடர்பான தொழில்களைக் கொண்டிருப்பதற்கு தாம்

விரும்புவதாகத் தெரிவித்தனர். அவர்களது கல்வி முழுமையாக கமத்தொழில் மீதான அடிப்படையிலானது என்பதனால், இது ஒரு விவாதத்திற்குரிய காரணியாகும். எனினும், அவர்களது கருத்துக்களின் பிரகாரம் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போலன்றி, இலங்கையில் முழுநேரக் கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவது கஷ்டமானதாகும். எனினும், முழுநேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான இணக்கத்திற்கும், கல்வி மட்டத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தமை தெளிவாகும். உருபு 5.4இல் கமத்தொழில் உட்பட வேறுபட்ட துறைகளில் டிப்ளோமாவைக் கொண்டிருந்தவர்களையும், கணக்கியல் போன்ற வேறு வாழ்க்கைத்தொழில் பரீட்சைகளின் பகுதியளவில் தகுதிபெற்ற பதிலிறுப்பாளர்களையும் வேறு வகுதி/கொண்டிருந்தது.

மறுபுறத்தில் க.பொ.த. உ./தரத்திற்கு ஒத்த கல்வியைப் பெற்றதும், தமது கல்வியைத் தொடர்ந்ததுமான இளைஞர்கள் அரசாங்கத்தில் அல்லது தனியார் துறையில் நன்கு அங்கீகரிக்கப்பட்டதும், சிறந்த கொடுப்பனவிலானதும் அத்துடன் பாதுகாப்பிலானதுமான தொழில்களைக் கொண்டிருக்கவே ஆர்வத்தைக் காட்டினர். தமது கல்வி மட்டத்துடன் பொருந்திய தொழிலொன்றுக்காகவே அவர்களில் பெரும்பாலானோர் எப்பொழுதும் காத்திருந்தனர். இது தமது குடும்பங்கள் மீது அவர்கள் தங்கியிருத்தலை அதிகரித்துள்ளது. அவர்களின் தங்கியிருத்தலின் சுமை இருந்த போதிலும், அத்தகைய தொழில்களைக் கண்டறிவதற்கே அவர்களை அவர்களது பெற்றோர் ஊக்குவித்தனர். கமக்காரர் தாபனங்களினுடனான கலந்துரையாடலின் பிரகாரம், பிரதானமாக வருமானத்தின் உறுதியற்றதன்மையின் காரணமாக வேளாண்மையைச் செய்வதற்கு தமது பிள்ளைகளை ஊக்குவிப்பதற்கு தாம் விரும்பவில்லையென சில உறுப்பினர்கள் தெரிவித்தனர். தாம் அனுபவித்திருந்தவாறு கமத்தொழில் செயற்பாடுகளில் கஷ்டப்படுவதை விட, தமது பிள்ளைகள் நிரந்தரமான தொழிலை செய்வதைப் பார்ப்பதற்கே தாம் விரும்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். மறுபுறத்தில், வேளாண்மைச் சனசமூகங்களில் உள்ள பெருமளவு இளம் வயதினர், விசேடமாக படித்த இளைஞர்கள் அரசாங்க அல்லது தனியார் துறைத் தொழில்களை விரும்பியதுடன், அவர்களது எதிர்பார்ப்புக்களை அவர்களினால் பூர்த்திசெய்ய முடியாத போதே கடைசி விருப்பொன்றாக வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தள்ளப்பட்டனர்.

**அட்டவணை 5.4: முழு நேரத் தொழிலாக கமத்தொழிலைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்**

| காரணங்கள் | பதிலிறுப்பாளர் களின் எண். | (%) (N=148) |
|---|---|---|
| சுதந்திரமொன்றைக் கொண்டுள்ள தொழில்/ சுய–செலுத்தலிலான தொழில் | 125 | 84.5 |
| இன்னொரு தொழிலைப் பெறவில்லை/வேறு விருப்பில்லை | 104 | 70.3 |
| சுய-திருப்தியின் காரணமாக | 33 | 22.3 |
| கமத்தொழில் துறையில் பெற்றோர்/குடும்ப உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர் | 31 | 20.9 |
| அடிப்படை வசதிகள் கிட்டுகின்றன | 29 | 19.6 |
| சிறந்த வருமானத்தை ஈட்டலாம் | 24 | 16.2 |
| நகரத்திற்கு நகர்வதை விரும்பவில்லை | 21 | 14.2 |
| கமத்தொழில் தொடர்பிலான கல்வி/அனுபவம் பெறப்பட்டுள்ளது | 13 | 8.8 |

குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால் சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமமல்ல

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

முழுநேரத் தொழிலாக கமத்தொழிலை மாதிரியிலுள்ள 148 பதிலிறுப்பாளர்கள் தெரிவுசெய்திருந்ததுடன், தெரிவுக்காக அவர்கள் குறிப்பான காரணங்களைக் கொண்டிருந்தனர். அட்டவணை 5.4இல் காட்டப்பட்டுள்ளவாறு, பொருளாதாரக் காரணிகளை விட, சமூகக் காரணிகள் மற்றும் தனிப்பட்ட சிறப்பியல்புகள் ஆகியன மீதே இக்காரணிகள் அடிப்படையைக் கொண்டிருந்தன. இதன் பிரகாரம், கமத்தொழில் சுதந்திரத்தைக் கொண்டிருந்ததனால் அது தொடர்பான வாழ்வாதாரத்தை தாம் தெரிவுசெய்ததாக 84.5 சதவீதத்தைக் (125) கொண்ட முழுநேரக் கமத்தொழில் ஊழியர்கள் குறிப்பிட்டனர். பதிலிறுப்பாளர்கள் ஈடுபட்டுள்ள பெருமளவு கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகள் சுய-செலுத்தலிலானவை என்பதுடன், கம-இரசாயன விற்பனையாளர்களுடன் முறைசாராக் கடன் உடன்படிக்கைகள் போன்ற சில மறைந்த கட்டுப்பாடுகள் புறநீங்கலாக, அவர்களுடனேயே தொழிலின் தீர்மானமெடுக்கும் சக்தி இருந்தது. விசேடமாக, வேளாண்மைச் செயற்பாடுகளில் தமது குடித்தனத்தின் அன்றாடக் காரியங்களையும் மற்றும் குடும்பக் கடமைகளையும் செய்வது மீது அதிகளவு தடைகளையும், கட்டுப்பாடுகளையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. இதுவும் தொழிலொன்றின் தெரிவினைப் பாதித்துள்ளது.

முழுநேரக் கமக்காரர்களில் இன்னொரு தொழிலை தாம் பெற்றிருந்தால் தொழிலொன்றாக கமத்தொழிலில் தாம் ஈடுபட்டிருப்பதாக 70.3 சதவீதத்தினர் (104) குறிப்பிட்டனர். எனவே, கடைசி விருப்பொன்றாக அவர்கள் கமத்தொழிலைத் தெரிவுசெய்துள்ளனர். மாற்றுத் தொழில்களை அவர்கள் பெற்றிருந்தால் அவர்கள் கமத்தொழிலை விட்டு வெளியேறுவதற்கான மனப்போக்கே இதன் கருத்தாகும். நோக்குக் குழுக் கலந்துரையாடலின் பிரகாரம், முழுநேர வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையிலான இளைஞர்கள் குறைந்தளவு படித்திருந்தார்கள். போதியளவு கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் தகைமைகள் இன்றி, வேறு தொழில்களைக் கண்டறிவதில் அவர்களுக்கு கஷ்டங்கள் இருந்ததினால், அவர்கள் தொடர்ந்துமே கமத்தொழில் துறையில் இருந்தனர். மறுபுறத்தில், அதிகளவு படித்ததும், வாழ்க்கைத்தொழில்ரீதியில் தகைமை பெற்றதுமான இளைஞர்கள் தொழில்களுக்காக நகரங்களுக்கு சென்றனர். மாற்றுத் தொழிலொன்றைத் தாம் கொண்டிருந்தால், வாழ்வாதாரச் செயற்பாடொன்றாக வேளாண்மையை நிலைத்திருக்க வைக்கும் கஷ்டங்களின் காரணமாக வேளாண்மையிலிருந்து தாமும் நகர்வதற்கு விரும்புவதாக ஒரு கணிசமான எண்ணிக்கையிலான நன்கு அனுபவத்தைக் கொண்டதும், வயதானதுமான கமக்காரர்கள் குறிப்பிட்டனர்.

பதிலிறுப்பாளர்களின் பிரகாரம், சுயதிருப்தி (22.3 சதவீதம்), கமத்தொழில் செயற்பாடுகளில் பெற்றோர்/குடும்ப உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்தனர் (20.9 சதவீதம்), அடிப்படை வசதிகளின் கிடைக்கும்தன்மை (19.6 சதவீதம்), சிறந்த வருமானத்தை ஈட்ட முடியும் (16.2 சதவீதம்), நகரங்களுக்கு நகர்வதற்கு விருப்பமின்மை (14.2 சதவீதம்) அச் செயற்பாடுகள் மீது கமத்தொழில் தொடர்பிலான கல்வியும், அனுபவமும் பெறப்பட்டன (8.8 சதவீதம்) ஆகியனவே முழுநேரத் தொழிலாக கமத்தொழிலை தெரிவுசெய்வதற்கான வேறு காரணங்களாகும்.

**அட்டவணை 5.5: முழு நேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பாததற்கான காரணங்கள்**

| காரணங்கள் | பதிலிறுப்புக் கள் எண். | மொத்தத்தின் சதவீதம் N=211 |
|---|---|---|
| அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு கஷ்டமாகவுள்ளது/முடியாதுள்ளது | | |
| *i. காணி* | 83 | 26.0 |
| *ii. நிதிசார் வசதிகள்* | 31 | 9.7 |
| *iii. சரீரஉழைப்பு* | 17 | 5.3 |
| *iv. உள்ளீடுகள் (உரம் மற்றும் விதைகள் போன்ற)* | 27 | 8.5 |
| *v. நீர்ப்பாசன மற்றும் நீர் வசதிகள்* | 28 | 8.8 |
| சந்தையின் உறுதியற்றதன்மையும், குறைந்த வருமானமும் | 186 | 58.1 |
| தனிப்பட்டரீதியில் இன்னொரு தொழிலுக்கான விருப்பம் | 50 | 15.7 |
| கல்வித் தகைமைகளுடன் பொருத்தமற்றது | 41 | 12.9 |
| படிப்பில் ஈடுபட்டிருத்தல் | 39 | 12.2 |
| சமுகத்திலிருந்து அங்கீகாரத்தைக் கொண்டிருக்கவில்லை | 39 | 12.1 |
| தொழில் பாதுகாப்பு கிட்டாதிருத்தல் | 36 | 11.3 |
| மாற்று வருமானத் தோற்றுவிப்புச் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமானவை | 34 | 10.7 |
| வேளாண்மை மீது விழிப்பியல்/பயிற்சி கிட்டாதிருத்தல் /இன்மை/நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தாதிருத்தல் | 31 | 9.7 |
| இன்னொரு தொழிலுக்கு பெற்றோரின் விருப்புரிமை | 27 | 8.5 |
| கடுமையாக வேலை செய்ய வேண்டும்/கடுமையான வேலைச் சுமை | 24 | 7.5 |
| போதிய நேரமில்லை | 17 | 5.3 |
| இன்னொரு துறையில் தொழிலொன்றைப் பெறுதல் | 16 | 5.0 |
| பயிர் காப்புறுதி கிட்டாதிருத்தல் | 11 | 3.4 |
| கவர்ச்சியானதல்ல | 9 | 2.8 |
| சுகாதாரப் பிரச்சனைகள் /சுகாதாரக் கெடுதலைக் கொண்டிருப்பதற்கான போக்கு | 8 | 2.5 |
| வேறு | 12 | 3.6 |

குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால் சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமனல்ல

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

முழுநேர வாழ்வாதாரச் செயற்பாடொன்றைத் தெரிவுசெய்வதற்கான பிரதான நியதிகளில் ஒன்றாக, பொருளாதாரக் காரணி விளங்குகின்ற போதிலும், சிறந்த வருமானமொன்றைத் தம்மால் ஈட்ட முடியும் என்ற காரணத்தினால், முழுநேரத் தொழிலாக தாம் கமத்தொழிலைத் தெரிவுசெய்ததாக சில பதிலிறுப்பாளர்கள் (16.2 சதவீதம்) தெரிவித்தனர்.

குறிப்பிடப்பட்டவாறு, முழுநேரத் தொழிலாக கமத்தொழிலைத் தெரிவுசெய்வதில் பொருளாதாரக் காரணி அதிகளவு செல்வாக்கினைக் கொண்டிருக்கவில்லை. எனினும், முழுநேரத் தொழிலாக கமத்தொழிலைத் தெரிவுசெய்யாத பதிலிறுப்பாளர்களின் கூற்றுப்படி, பொருளாதாரக் காரணியினாலேயே அவர்களது தீர்மானம் அதிகளவு செல்வாக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த பதிலிறுப்பாளர்களின் கருத்துக்களின் பிரகாரம், கமத்தொழில் துறையில் முழுநேரத் தொழிலை விரும்பாததற்கான பாரிய காரணங்களில் ஒன்றாக, அடிப்படையிலான வசதிகளின்மை விளங்குகின்றது. உண்மையில், காணிகளுடன் தாம் பிரச்சனைகளைக் கொண்டிருந்ததாக 26.0 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (83) தெரிவித்த அதேவேளை, தாம் போதியளவு நிதிசார் வசதிகளை, போதியளவு நீரை/நீர்ப்பாசன வசதிகளை, உரம் மற்றும் விதைகள் போன்ற கமத்தொழில் உள்ளீடுகளை அத்துடன் போதியளவு சரீரஉழைப்பினை கொண்டிருக்கவில்லையென முறையே 9.7 சதவீதத்தை (31), 8.8 சதவீதத்தை (28), 8.5 சதவீதத்தை (27), 5.3 சதவீதத்தை (17) கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர் (அட்டவணை 5.5).

மேலதிகமாக, சந்தையின் உறுதியற்றதன்மையும், கமத்தொழிலின் குறைந்த வருமானமும் முழுநேரத் தொழிலாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு தம்மை அதைரியப்படுத்தியதாக 58.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (186) தெரிவித்தனர். ஒரு தொகையிலான பதிலிறுப்பாளர்களின் கூற்றுப்படி, கமத்தொழில் செயற்பாடுகள் ஊடாக சிறந்த வருமானமொன்றைத் தம்மால் ஈட்ட முடியுமென்றால், முழுநேரமாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாகத் தெரிவித்தனர். நஷ்டங்களின் காரணமாக வேளாண்மையை விட்டு ஒரு தொகையிலான இளம் வயதினர் சென்றதாக கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்கள் உறுதிப்படுத்தினர். மாத்தளை மாவட்டத்தில் கமக்காரர் தாபனங்களின் கூற்றுப்படி, சிறந்த இலாபமொன்றை பெறமுடியுமென்பதனால், தக்காளி மற்றும் போஞ்சி போன்ற பயிர்களை செய்கை பண்ணுவதற்காக இளைஞர் மத்தியில் அதிகளவு கிராக்கியொன்று முன்னர் இருந்தது. எனினும், விலைகளின் உறுதியற்றதன்மையின் காரணமாக, அண்மைய வருடங்களில் வேளாண்மையை விட்டு இளம் கமக்காரர்கள் விலகியுள்ளனர். இப் பிரச்சனை அத்தியாயம் ஆறில் விபரமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், 15.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (50) தனிப்பட்டரீதியில் தாம் இன்னொரு தொழிலை விரும்புவதாகவும், முழு நேரமாக கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட விரும்பவில்லையென்றும் தெரிவித்தனர். விசேடமாக, பதிலிறுப்பாளர்கள் மத்தியிலான பெருமளவு இளவயதினர் காணியொன்றைச் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லையென்பதுடன், உரித்துரிமையின்றி சுதந்திரமான கமக்காரர்களாக அல்லது வியாபார முயற்சியாளர்களாக வேளாண்மையை அல்லது கைத்தொழிலை அவர்களினால் கட்டுப்படுத்த முடியவில்லை. பொருத்தமான கல்வித் தகைமைகள் இன்மை (12.9 சதவீதம்), படிப்பில் ஈடுபட்டிருத்தல் (12.2 சதவீதம்), சமூகத்திலிருந்து அங்கீகாரம் கிட்டாமை (12.1 சதவீதம்), தொழில் பாதுகாப்பு கிட்டாமை (11.3 சதவீதம்), வேறு வருமானம் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் சிறப்பானவை (10.7 சதவீதம்), தொழில்நுட்ப இடைவெளி உட்பட விழிப்பியல்/பயிற்சி கிட்டாமை/இன்மை (9.7 சதவீதம்), இன்னொரு தொழிலுக்கு செல்வதில் பெற்றோரின் விருப்பம் (8.5 சதவீதம்), கஷ்டத்துடன்/கடுமையாக வேலைசெய்ய வேண்டும்/பாரமான வேலைச்சுமை (7.5 சதவீதம்) ஆகியனவே முழுநேரக் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்புக்கு ஊறுவிளைவித்த ஏனைய பாரிய காரணங்களாகும். சிறந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை குடும்பம் கொண்டுள்ளது, உதவியின்றி செய்ய முடியாமலிருத்தல், கணவரின் இணக்கமின்மை, கணவரின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு உதவ வேண்டும், தொழிலொன்றைச் செய்வதற்கு முதிர்ச்சியின்மை, இன்னுமே இளவயதில் இருத்தல், மற்றும் கமத்தொழில் செயற்பாடுகள் ஊடாக சமூக நகரும்தன்மையின் தலையீடு போன்ற காரணங்களை அட்டவணையின் ஏனைய வகுதி கொண்டுள்ளது.

## 5.3 கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் மீது இளைஞரின் மனவுணர்வுகள்

கமத்தொழில் தொடர்பிலான முக்கியமான வாழ்வாதாரச் செயற்பாடுகளாக கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் கருதப்பட முடியும். எனினும், ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கிராமிய இளைஞர் மத்தியில் கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் அதிகளவு பிரசித்தமானவையல்ல. மொத்த பதிலிறுப்பாளர்களில் 23.6 சதவீதத்தினர் (126) பெருமளவு காரணங்களின் நிமித்தம் கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென கூறினர் (அட்டவணை 5.6).

**அட்டவணை 5.6: கமத்தொழில் அடிப்படையிலான கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு இணக்கமின்மைக்கான காரணங்கள்**

| காரணங்கள் | கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு விரும்பாதவர்கள் (N=126) | |
|---|---|---|
| | எண். | % |
| வெற்றியைச் சாதிப்பதில் உறுதியற்றதன்மை | 39 | 31.0 |
| குறைந்த வருமானம் | 26 | 20.9 |
| கல்வித் தகைமைகளுக்கு பொருத்தமானதல்ல | 25 | 19.7 |
| விழிப்பியல்/பயிற்சிகள் இன்மை/பற்றாக்குறை | 25 | 19.7 |
| தோதான சந்தை/சந்தைக் கிராக்கி இன்மை | 16 | 12.7 |
| நேரமில்லை | 20 | 16.2 |
| மாற்று வருமானம் தோற்றுவித்தல் செயற்பாடுகள் மிகவும் பயனுறுதிவாய்ந்தவை | 20 | 16.2 |
| அடிப்படை வசதிகளைப் பெற முடியாதுள்ளது/கஷ்டம் | 18 | 13.9 |
| பெற்றோர்களிடமிருந்து செல்வாக்கு இல்லை/பற்றாக்குறை | 10 | 8.1 |
| சமூகத்திலிருந்து அங்கீகாரம் இல்லை | 10 | 8.1 |
| வேறு | 10 | 8.1 |

குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால் சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமனல்ல

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 5.6இல் காட்டப்பட்டுள்ளவாறு, வெற்றியின் உறுதியற்ற காரணத்தினால் கம-அடிப்படையிலான கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென 31.0 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (39) தெரிவித்தனர். எனவே, இளம் சந்ததியினருக்கு கம-அடிப்படையிலான கைத்தொழில்களை விட, சில வேறு தொழிலில் ஈடுபடுவது மிகவும் கவர்ச்சிகரமானது என்பதுடன், பாதுகாப்பானதாகும். பெருமளவு கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் பாரம்பரியமானவை, சிறிய அளவிலானவை, குறைந்த இலாபத்தன்மையிலானவை அத்துடன் குறைந்த இயக்காற்றலிலானவை. கம-அடிப்படையிலான கைத்தொழில்களின் இச் சிறப்பியல்புகள் இளம் சந்ததியினரைக் கவரமாட்டா.

குறைந்த வருமானம் (20.9 சதவீதம்), தமது கல்வித் தகைமைகளுக்கு பொருத்தமின்மை (19.7 சதவீதம்), விழிப்பியலும், பயிற்சிகளும் இன்மை (19.7 சதவீதம்), தோதான சந்தை அல்லது சந்தைக் கிராக்கி இன்மை (12.7 சதவீதம்), போதிய நேரம் கிட்டாமை (16.2 சதவீதம்), கம-அடிப்படையிலான கைத்தொழில்களை

விட வேறு வருமானம் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் பயனுறுதிவாய்ந்தவை (16.2 சதவீதம்), அடிப்படை வசதிகளைப் பெறமுடியாதுள்ளது/கஷ்டமானது (13.9 சதவீதம்), பெற்றோர்களிடமிருந்து ஆதரவின்மை/போதாமை (8.1 சதவீதம்), சமூகத்திலிருந்து அங்கீகாரமின்மை (8.1 சதவீதம்) ஆகியனவே கம-அடிப்படையிலான கைத்தொழில்களை இளைஞர்கள் விரும்பாததற்கரன வேறு காரணங்களாகும். படிப்பில் ஈடுபட்டிருத்தல், பதிலிறுப்பாளர்கள் வாழ்கின்ற கிராமியப் பின்னணிக்குப் பொருத்தமின்மை, சிறந்த தொழிலில் ஈடுபட்டிருத்தல் மற்றும் கம-அடிப்படையிலான கைத்தொழிலில் போதிய அனுபவமின்மை போன்றனவே வேறு வகுதியிலான காரணங்களைக் கொண்டுள்ளன.

அட்டவணை 5.7இல் காட்டப்பட்டுள்ளவாறு, கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அக்கறையைக் கொண்டிருந்த பதிலிறுப்பாளர்கள் மத்தியில் கம-அடிப்படையிலான கைத்தொழிலில் ஈடுபடாததிற்கு முக்கிய காரணமாக அடிப்படை வசதிகளின்மை விளங்குகின்றது. இதன் பிரகாரம், 63.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (232) கம-அடிப்படையிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அல்லது தொடர்வதற்கு தாம் நிதிசார் பலத்தினை கொண்டிருக்கவில்லையெனத் திட்டவட்டமாக குறிப்பிட்டனர். கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பமுள்ள, ஆனால் அவற்றில் ஈடுபடாதவர்களில் 25.2 சதவீதத்தினர் கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு பொருத்தமான அமைவிடத்தை அல்லது கட்டிடத்தைத் தாம் கொண்டிருக்க வில்லையெனக் குறிப்பிட்ட அதேவேளை, 28.8 சதவீதத்தையும், 3.8 சதவீதத்தையும் கொண்ட பதிலிறுப்பாளர்கள் இயந்திராதிகளையும், பதப்படுத்தாத பொருட்களையும் மற்றும் போதியளவு எண்ணிக்கையிலான பொருத்தமான ஊழியர்களையும் பெறுவதில் பிரச்சனைகள் இருந்ததாக தெரிவித்தனர். ஒரு கணிசமான எண்ணிக்கையிலான பதிலிறுப்பாளர்களுக்கு (38.1 சதவீதம்) அறிவையும், பயிற்சியையும் பெறுவதில் கஷ்டங்களும், குறைந்த அடையும்தன்மையுமே கம-அடிப்படையிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான தடைகளாகும். இத்தகைய கைத்தொழில்களை சில இளைஞர்களின் பெற்றோர்கள் சொந்தமாகக் கொண்டிருந்த போதிலும், தொழில்நுட்ப செய்அறிவு இன்மை உட்பட அறிவு இடைவெளியின் காரணமாக இக் கைத்தொழில்களை இந்த இளைஞர்களினால் மேம்படுத்த முடியவில்லை. இதன் விளைவாக, குறைந்தபட்சம் பிராந்திய மட்டத்தில் விசேடமாக பாரிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரப் போட்டியாளர்களுடன் அவர்களுக்கு போட்டியிடுவதற்கு கஷ்டமாக இருந்தது. மிகவும் முக்கியமாக, விழிப்பியல் இன்மையானது (23.6 சதவீதம்) கம-அடிப்படையிலான கைத்தொழிலில் இளைஞரின் சம்பந்தத்திற்கு ஊறுவிளைவித்த பாரிய காரணிகளில் ஒன்றாகும். கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்காத பெருமளவு இளைஞர்கள் அடிப்படை மட்டத்தில் கூட கம-அடிப்படையிலான கைத்தொழில்களை எவ்வாறு செய்வது என்பது பற்றிய விழிப்பியலைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அந்த விழிப்பியலின்றி கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் வியாபார முயற்சியாளர்களாக அவர்களினால் முன்னோக்கிப் பார்க்க முடியவில்லை என்பதே இதன் கருத்தாகும்.

படிப்பில் ஈடுபட்டிருத்தல் (18.4 சதவீதம்), சந்தை வசதிகள் கிட்டாமை/இன்மை (18.1 சதவீதம்), நேரக் கட்டுப்பாடு (8 சதவீதம்), குடும்பச் சுமை (2.2 சதவீதம்), வேறு தொழிலில் ஈடுபட்டிருத்தல் (2.2 சதவீதம்), கம-அடிப்படையிலான கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு தோதான திட்டம் கிட்டாமை (1.4 சதவீதம்) மற்றும் வெற்றியை சாதிப்பது பற்றிய உறுதியற்றதன்மை/ஆபத்து (0.8 சதவீதம்) ஆகியனவே கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் ஈடுபடாததற்கான வேறு காரணங்களாகும்.

**அட்டவணை 5.7: கம அடிப்படையிலான கைத்தொழில்களில்/வியாபாரத்தில் ஈடுபடாததற்கான காரணங்கள்**

| காரணங்கள் | பதிலிறுப்பாளர்கள் (N=365) | |
|---|---|---|
| | எண். | % |
| அடிப்படை வசதிகளைப் பெற முடியாதுள்ளது/கஷ்டமாகவுள்ளது | | |
| *i. நிதிசார் வசதி* | 232 | 63.6 |
| *ii. அமைவிடம்* | 92 | 25.2 |
| *iii. அறிவு/பயிற்சி* | 139 | 38.1 |
| *vi. இயந்திராதி மற்றும் மூலப்பொருட்கள்* | 105 | 28.8 |
| *v. சரீரஉழைப்பு* | 14 | 3.8 |
| கைத்தொழில் தொடர்பில் விழிப்பியல் இன்மை | 86 | 23.6 |
| படிப்பில் ஈடுபடுவதன் காரணமாக | 67 | 18.4 |
| சந்தை வசதிகளின்மை/பற்றாக்குறை | 66 | 18.1 |
| கம அடிப்படையிலான கைத்தொழிலில் செலவழிப்பதற்கு போதிய நேரம் கிட்டாமை | 29 | 8.0 |
| குடும்பச் சுமை | 8 | 2.2 |
| இன்னொரு தொழிலில் ஈடுபட்டிருத்தல் | 8 | 2.2 |
| வெற்றியைச் சாதிப்பது பற்றிய உறுதியற்றதன்மை/ஆபத்து | 3 | 0.8 |
| தோதான திட்டம் கிட்டாதிருத்தல் | 5 | 1.4 |
| வேறு | 4 | 1.2 |

குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால் சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமனல்ல

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

பதிலிறுப்பாளர்களின் கருத்துக்களின் பிரகாரம், சந்தை வசதிகளின் கிட்டாமையின் விளைவொன்றாக இத்தகைய கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு உயர்வான ஆபத்துள்ளது. பெருமளவு இளைஞர்கள் நிதிசார் வசதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடைதலையே கொண்டிருந்ததுடன், இச் சூழ்நிலைகளின் கீழ் வெற்றிக்கான சிறிதளவு போக்குகளுடன் இத்தகைய கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு அவர்களால் முடியவில்லை. இதன் தொடர்ச்சியாக, கிராமியத் துறையில் உள்ள இளம் வியாபார முயற்சியாளர்களை அறிவு இடைவெளியும் முட்டுக்கட்டை போட்டுள்ளது.

## 5.4 மிகவும் விருப்புக்குரிய தொழில்களும், தொழிலைத் தெரிவுசெய்வதற்கான காரணங்களும்

முழு நேரத் தொழில்களைக் கொண்டிருக்காத மாதிரியிலுள்ள பதிலிறுப்பாளர்கள் (283) இருந்ததுடன், வேறுபட்ட துறைகளில் பலதரப்பட்ட வகைகளைக் கொண்ட தொழில்களை கொண்டிருக்கவே அவர்கள் விரும்பினார்கள்.

**அட்டவணை 5.8: பால்நிலையிலான முழு நேரத் தொழிலில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில்**

| விருப்புக்குரிய தொழில் | பால்நிலை | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | | ஆண் | | | |
| | எண். | % | எண். | % | எண். | % |
| அரசாங்கத் தொழில் | 80 | 48.2 | 86 | 51.8 | 166 | 58.7 |
| தனியார் துறைத் தொழில் | 11 | 35.5 | 20 | 64.5 | 31 | 11.0 |
| வெளிநாட்டுத் தொழில் | 0 | 0 | 7 | 100.0 | 7 | 2.5 |
| கமத்தொழில் துறைத் தொழில் (வேளாண்மை உட்பட) | 13 | 35.1 | 24 | 64.9 | 37 | 13.1 |
| கைத்தொழில் துறைத் தொழில் | 2 | 28.6 | 5 | 71.4 | 7 | 2.5 |
| சுய-தொழில்/வியாபாரம் | 18 | 81.8 | 4 | 18.2 | 22 | 7.8 |
| பாதுகாப்பு படைகளில்/துறையில் ஒரு தொழில் | 0 | 0 | 2 | 100.0 | 2 | 0.7 |
| தொழிலொன்றைக் கொண்டிருப்பதற்கான நோக்கமில்லை | 4 | 100 | 0 | 0.0 | 4 | 1.4 |
| தெளிவான கருத்தொன்றில்லை | 6 | 85.7 | 1 | 14.3 | 7 | 2.5 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 5.8இல் காட்டப்பட்டுள்ளவாறு, முழுநேரத் தொழிலில் ஈடுபட்டிருக்காத 58.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில் துறையாக அரசாங்கத் துறை விளங்கியது. இது கிராமியப் பகுதிகளில் அரசாங்கத் தொழில்களுக்கான உயர்வான கிராக்கியை எடுத்துக்காட்டுகின்றது. சமூக அங்கீகாரம், தொழில் பாதுகாப்பு, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் நிலையான வருமானம் ஆகியனவே அரசாங்கத் தொழிலொன்றுக்கான அவர்களின் விருப்புக்குப் பின்னாலுள்ள முக்கிய காரணங்களாகும். கமத்தொழில் தொடர்பிலான தொழில்களில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக கணிசமான விகிதாசாரத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (13.1 சதவீதம்) தெரிவித்தனர். பதினொரு சதவீதத்தையும் 7.8 சதவீதத்தையும் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தாம் முறையே தனியார் துறை தொழிலொன்றை செய்வதற்கும், சுய-தொழிலை/வியாபாரத்தை செய்வதற்கும் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

அரசாங்கத் தொழிலொன்றைக் கொண்டிருப்பதற்கு ஆண் பதிலிறுப்பாளர்களினதும், பெண் பதிலிறுப்பாளர்களினதும் விருப்புக்கிடையில் குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கவில்லை. எனினும், ஏதாவது தொழிலைக் கொண்டிருப்பதற்கான விருப்பைப் பொறுத்தளவில் தொழில்களைத் தெரிவுசெய்வதில் பால்நிலை வித்தியாசம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதன் பிரகாரம், தனியார் துறையில் தொழில், கமத்தொழில் தொடர்பிலான தொழில்கள், வெளிநாட்டுத் தொழில்கள், பாதுகாப்புத் துறையில் தொழில்கள் மற்றும் கைத்தொழில் துறையில் தொழில்கள் ஆகியனவே பெண் பதிலிறுப்பாளர்களை விட, ஆண் பதிலிறுப்பாளர்களினால் விரும்பப்பட்ட தொழில்களாகும். மறுதலையாக, 18 பெண் பதிலிறுப்பாளர்களினாலும் (81.8 சதவீதம்), 4 ஆண் பதிலிறுப்பாளர்களினாலும் (18.2 சதவீதம்) சுயதொழில்/வியாபாரம் விரும்பப்பட்டது. தாம் திருமணம் செய்திருப்பதனாலும், முழுநேர வீட்டுக் கடமைகளில் ஈடுபட்டிருப்பதனாலும் தொழிலொன்றைச் செய்வதற்கான ஏதேனும் நோக்கத்தை தாம் கொண்டிருக்கவில்லையென சில பெண் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

அட்டவணை 5.9இல் காட்டப்பட்டுள்ளவாறு, சகல வயது வகுதிகளைக் கொண்ட பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழிலாக அரசாங்கத் தொழிலொன்றே விளங்குகின்றது. விசேடமாக 15 வயது மற்றும் 15<வயது<=20 ஆகிய வகுதியிலுள்ள வயதிலான பதிலிறுப்பாளர்கள் மத்தியில் முறையே 76.7 சதவீதம் மற்றும் 70.4 சதவீதம் கொண்ட பதிலிறுப்பாளர்கள் அரசாங்கத் தொழிலொன்றைக் கொண்டிருக்கவே விரும்பினார்கள். 20<வயது<=25 மற்றும் 25<வயது<=29 ஆகிய வயது வகுதிகளில் உள்ள பதிலிறுப்பாளர்களில் கணிசமானளவு எண்ணிக்கையினர் கமத்தொழில் தொடர்பான தொழிலில் ஈடுபடுவதற்கே விரும்பினர்.

**அட்டவணை 5.9: வயதினால் முழுநேரத் தொழிலில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரிய தொழில்**

| விருப்புக்குரிய தொழில் | வயதுக் குழு (N=283) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வயது=15 (N=30) | 15<வயது <=20 (N=145) | 20<வயது< =25 (N=67) | 25<வயது< =29 (N=41) | மொத்தம் (N=283) | |
| | % | % | % | % | எண். | % |
| அரசாங்கத் தொழில் | 76.7 | 70.4 | 46.3 | 24.4 | 166 | 58.7 |
| தனியார் துறைத் தொழில் | 10.0 | 10.3 | 14.9 | 7.3 | 31 | 11.0 |
| வெளிநாட்டுத் தொழில் | 6.7 | 0.7 | 1.5 | 7.3 | 7 | 2.5 |
| கமத்தொழில் துறைத் தொழில் (வேளாண்மை உட்பட) | 0.0 | 9.7 | 20.9 | 22 | 37 | 13.1 |
| கைத்தொழில் துறைத் தொழில் | 3.3 | 2.8 | 3.0 | 0.0 | 7 | 2.5 |
| சுய-தொழில்/ வியாபாரம் | 3.3 | 4.2 | 9.0 | 22.0 | 22 | 7.8 |
| பாதுகாப்பு படைகளில்/துறையில் ஒரு தொழில் | 0.0 | 0.7 | 1.5 | 0.0 | 2 | 0.7 |
| தொழிலொன்றைக் கொண்டிருப்பதற்கான நோக்கமில்லை | 0.0 | 0.0 | 3.0 | 4.9 | 4 | 1.4 |
| தெளிவான கருத்தொன்றில்லை | 0.0 | 1.4 | 0.0 | 12.2 | 7 | 2.5 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 283 | 100 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

வெளிக்கள ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, இளம் வயதினர் முதிர்ச்சியடையும் போது, தமது எதிர்பார்ப்புக்களுக்கும் மற்றும் உண்மையான சூழ்நிலையில் தமது விருப்பார்வத்தை சாதிப்பதில் உள்ள கஷ்டங்களுக்கும் இடையிலான இடைவெளியையிட்டு உணர்ந்துகொண்டனர். மறுபுறத்தில், கமத்தொழில் தொடர்பிலான தொழில்களில் அவர்கள் அதிகளவு அனுபவத்தினையும், அறிவினையும் கொண்டிருந்தனர். இச் சூழ்நிலைகளின் கீழ், 20<வயது<=25 மற்றும் 25<வயது<=29 ஆகிய வயது வகுதிகளில் உள்ள இளம் வயதினர் இளம் வயதிலான

குழுக்களிலுள்ளவர்களை விட, முழு நேரக் கமத்தொழில் ஊழியர்களாக இருப்பதற்கே விரும்பினர்.

தற்போது முழு நேரத் தொழிலொன்றைக் கொண்டிருக்காத பதிலிறுப்பாளர்கள் மத்தியில், தொழில்களின் விருப்புரிமையின் பின்னால் பெருமளவு காரணங்கள் இருந்தன. தொழிலொன்றைத் தெரிவுசெய்வதற்கு ஒரேயொரு காரணத்தையே சில பதிலிறுப்பாளர்கள் கொண்டிருந்த அதேவேளை, தமது தொழில் விருப்புரிமைக்குப் பின்னால் பெருமளவு காரணங்களை சில பதிலிறுப்பாளர்கள் கொண்டிருந்தனர்.

## அட்டவணை 5.10: மிகவும் விருப்புக்குரிய தொழிலுக்கான காரணங்கள்

| காரணங்கள் | பதிலிறுப்புக்களின் எண். (N=283) | (%) |
|---|---|---|
| பொருளாதார ஸ்திரத்தன்மை/சிறந்த வருமானமொன்றை ஈட்ட முடியும் | 129 | 45.6 |
| தொழில் பாதுகாப்பு | 90 | 31.8 |
| சமூக அங்கீகாரத்தின் உயர்வான தரம் | 75 | 26.5 |
| கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் தகைமைகளுடன் பொருத்தம் | 75 | 26.5 |
| தொழில் கவர்ச்சிகரமானது | 35 | 12.4 |
| பெற்றோர்களின் இணக்கத்தின் காரணமாக | 30 | 10.6 |
| ஓய்வூதியம் கிட்டுகின்றது | 25 | 8.8 |
| உடல்ரீதியில் கடுமையாக வேலை செய்வதற்கு அவசியமில்லை/களைப்பின்மை | 21 | 7.4 |
| தொழிலொன்று சுதந்திரத்தைக் கொண்டுள்ளது | 19 | 6.7 |
| தெளிவான வேலை செய்யும் நேரங்களின் கிட்டுந்தன்மை | 17 | 6.0 |
| வீட்டிலிருந்தே தொழிலைச் செய்யலாம் | 10 | 3.5 |
| தெளிவான கருத்தில்லை | 9 | 3.2 |
| அனுபவமும், பழக்கமும் மற்றும் பயிற்சியும் உள்ளது | 8 | 2.8 |
| வேறு | 10 | 3.5 |

குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால், சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமனல்ல

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

விருப்புக்குரிய தொழிலுக்கான காரணங்களைப் பொறுத்தளவில், விருப்புரிமையிலான தொழிலினூடாக பொருளாதாரரீதியில் ஸ்திரத்தன்மையைத் தாம் விரும்பியதாக 45.6 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (129) குறிப்பிட்டனர். அண்ணளவாக 32 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (90) தொழில் பாதுகாப்பைக் குறிப்பிட்ட அதேவேளை, 26.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (75) உயர் தரத்திலான சமூக அங்கீகாரத்துடனான தொழில்களைக் கொண்டிருப்பதற்கே தாம் விரும்புவதாகத் தெரிவித்தனர். தமது வாழ்க்கைத்தொழில் மற்றும் கல்விசார் தகைமைகளுக்குப் பொருத்தமான குறிப்பான தொழிலொன்றையே தாம் விரும்பியதாக மேலும் 75 பதிலிறுப்பாளர்கள் (26.5 சதவீதம்) தெரிவித்தனர். தொழில் கவர்ச்சிகரமானது (12.4 சதவீதம்), குறிப்பான தொழிலுக்கு பெற்றோர்களின் இணக்கம் (10.6 சதவீதம்), ஓய்வூதியம் கிட்டுகின்றது (8.8 சதவீதம்), உடல்ரீதியில் கடுமையாக வேலை செய்வதற்கு அவசியமில்லை (7.4 சதவீதம்), சுதந்திரம் (6.7 சதவீதம்), திட்டவட்டமான வேலைசெய்யும் நேரம் (6.0 சதவீதம்), வீட்டிலிருந்தே தொழிலைச் செய்யலாம் (3.5 சதவீதம்), விரும்பிய தொழில் தொடர்பில் அனுபவமும், பழக்கமும் மற்றும் பயிற்சியும்


உள்ளன (2.8 சதவீதம்) ஆகியனவே குறிப்பான தொழில்களின் விருப்புரிமைக்கான ஏனைய காரணங்களாகும் (அட்டவணை 5.10). குறிப்பான தொழிலுக்கான தமது விருப்புரிமை தொடர்பில் தெளிவான கருத்தொன்றை தாம் கொண்டிருக்கவில்லையென சில பதிலிறுப்பாளர்கள் (3.5 சதவீதம்) குறிப்பிட்டனர். நாட்டுக்குச் சேவையாற்ற இயலக்கூடியதாக உள்ளது, சுய-திருப்தி, இன்னொரு தொழிலைப் பெறுவதற்கான கஷ்டம் மற்றும் தொழிலினூடாக திருமணத் துணையொன்றைக் கண்டறிவது இலகுவானது ஆகியனவற்றை குறிப்பான காரணங்களின் ஏனைய வகுதி உள்ளடக்கியுள்ளது.

வெளிக்கள அளவீட்டினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கிராமியப் பகுதியிலுள்ள பெருமளவு இளம் வயதினர் தாம் தொழிலொன்றைத் தெரிவுசெய்யும் போது தொழிலிலிருந்து தம்மால் வருமானத்தை பெற முடியும் எனக் கருதுகின்றனர். இது நகர சமூகங்களிலும் கூட மிகவும் பொதுவான அம்சமொன்றாகும். இதன் விளைவாக ஒரு தொகையிலான இளம் வயதினர் திறனற்ற ஊழியர்களாக, விசேடமாக நிருமாணத் துறையில் பணியாற்றுவதற்காக நகரங்களுக்கு செல்கின்றனர்.

எனினும், அரசாங்கத் தொழிலொன்றைக் கொண்டிருப்பதற்கு விருப்புரிமையைக் கொண்டிருப்பதாக கூறிய பதிலிறுப்பாளர்கள், சில தொழில்களின் குறைந்த சம்பள விகிதங்கள் இருந்த போதிலும், தொழிலின் அங்கீகாரத்தை கரிசனைக்கெடுத்தனர். மேலே குறிப்பிட்டவாறு, பதிலிறுப்பாளர்கள் மத்தியில் தொழிலொன்றின் விருப்புரிமைக்கு தொழில் பாதுகாப்பு ஒரு கணிசமான காரணியாக விளங்குகின்றது. வருமானத்துடன், குறிப்பாக அரசாங்கத்தின் அல்லது தனியார் துறையின் ஊடாக நிலையான வருமானத்துடன் தொழில் பாதுகாப்பு எப்பொழுதுமே இணைந்துள்ளது.

கல்வித் தகைமையே குறிப்பான தொழில் ஒன்றைக் கொண்டிருப்பதற்கான விருப்புரிமையின் இன்னொரு முனைப்பான காரணியாகும். இன்னுமே இலங்கையின் சமூகத்தில் குறைந்த கல்வியைக் கொண்டுள்ள மக்களால் செய்யப்படும் தொழிலொன்றாகவே வேளாண்மை கருதப்படுகின்றது. இக் கருத்தினை கமக்காரர் தாபனங்களின் சில உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியதுடன், தமது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதற்கும், அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தொழில்களைச் செய்வதைப் பார்ப்பதற்கும் விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனர். இக் கருத்தானது கமக்காரர் குடும்பங்களின் இளைஞர்களிலும் செல்வாக்குச் செலுத்தியது. எனவே, பெருமளவு நேரங்களில் க.பொ.த. உ/தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தமை போன்ற ஓரளவுக்கு சிறந்த கல்வியைப் பெற்ற கமக்காரர் குடும்பங்களின் இளைஞர்கள் அனேகமாக அரசாங்க அல்லது தனியார் துறைகளில் நிரந்தரமான தொழில்களையே நோக்குகின்றனர். கமத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு போதியளவு சொத்துக்களை அவர்கள் கொண்டிருந்தாலும் கூட, தமது கல்விக்கு பொருத்தமான தொழிலொன்றுக்கு நகர்வதற்கு அவர்கள் முனைகின்றனர். சில வேளைகளில் இவ்வாறான தொழில்களுக்காக ஆண்டுக்கணக்கில் அவர்கள் காத்திருக்கின்றனர்.

**உருபு 5.5: கமத்தொழில் தொடர்பான தொழில்களைக் கொண்டிருப்பதற்கான விருப்புரிமைக்கான காரணங்கள்**




குறிப்பு: பல்-எண்ணிக்கையிலான பதிலிறுப்புக்களை ஒரே பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளதனால் சதவீதத்தின் எண்ணிக்கை 100க்கு சமனல்ல (பதிலிறுப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 47)

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

வெளிக்கள அளவீட்டின் பிரகாரம், வேளாண்மை மற்றும் கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் ஆகியன உட்பட கமத்தொழில் தொடர்பான பணி பற்றி சில இளம் வயதினர் உண்மையிலேயே ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றனர். எனினும், இச் செயற்பாடுகளை ஆரம்பித்து தொடர்வதற்கு பெருமளவு மட்டுப்படுத்தல்கள் உள்ளன. முழு நேரத் தொழிலைக் கொண்டிருக்காத மாதிரியிலுள்ளவர்களில் 13.1 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் (34) முழு நேரத் தொழிலாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இணக்கமாக இருந்தனர். தொழிலொன்றைக் கொண்டிருப்பதில் தமது விருப்புரிமை தொடர்பில் இந்த பதிலிறுப்பாளர்கள் வேறுபட்ட பதிலிறுப்புக்களையும், மனவுணர்வுகளையும் கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில், 71.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் எதிர்காலத்தில் முழு நேரத் தொழிலொன்றாக கமத்தொழிலைத் தெரிவுசெய்வதற்கு தாம் விரும்புவதாகத் தெரிவித்தனர். ஏனெனில் கமத்தொழில் சுதந்திரத்தைக் கொண்டிருந்ததுடன், பெருமளவு கமத்தொழில் செயற்பாடுகள் சுய-செலுத்தலிலானவையாகும். வேறுபட்ட அம்சங்களில் அவர்கள் சுதந்திரத்தை வரையறுத்தனர். இதன் பிரகாரம், ஏனையோரின் மேற்பார்வையின்றி தொழிலை அவர்களால் மேற்கொள்ள முடியும் என்பதால், ஏனையோர் மீது தங்கியிருப்பது அவசியமில்லை. மறுபுறத்தில், தமது வீட்டு மற்றும் தனிப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம், வேளாண்மைச் செயற்பாடுகளையும் மற்றும் வேறு கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளையும் அவர்களினால் செய்ய முடியும். கமக்காரர் அல்லது தொழில் முயற்சியாளர் கமத்தொழில் தொடர்பான தொழிலைச் செய்யும் போது, பெருமளவு நேரங்களில் அவர்களுடனேயே தீர்மானமெடுக்கும் சக்தி இருக்கும். மேலும், கிராம வாழ்க்கையானது அதிகளவு சுதந்திரத்தைக் கொண்டிருப்பதுடன், நகர வாழ்க்கையை விட சௌகரியமானதாகும்.

கமத்தொழில் தொடர்பிலான அனுபவம், பழக்கம், பயிற்சி மற்றும் அறிவு ஆகியவற்றை தாம் பெற்றுக்கொண்டதன் காரணத்தினால், தாம் கமத்தொழிலை விரும்புவதாக மேலும்

71.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். முழு நேரமாக கமத்தொழில் தொடர்பிலான தொழில்களைச் செய்வதன் மூலம், சிறந்த வருமானமொன்றை தம்மால் ஈட்டிக்கொள்ளலாம் என 44.2 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். கமத்தொழில் எப்பொழுதுமே இலாபகரமானதல்ல என்ற மனவுணர்வுக்கு அக்கறையின்றி, பொருளாதார நன்மைகளைக் கருத்திற்கெடுத்து கமத்தொழில் தொடர்பிலான தொழிலைச் செய்வதற்கு சில இளைஞர்கள் விரும்புகின்றனர் என்பதை இது காட்டுகின்றது.

## 5.5 முடிவுரை

முழு நேரமாக கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் இணங்குகின்ற அதேவேளை, முழு நேரமாக கமத்தொழிலில் ஈடுபடுவதற்கு கணிசமான எண்ணிக்கையிலான பதிலிறுப்பாளர்கள் இணக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. முழு நேரத் தொழிலாக கமத்தொழிலை தெரிவு செய்வதில் பொருளாதார காரணங்கள் அதிகளவு செல்வாக்கினைச் செலுத்தவில்லை. எனினும், முழு நேரத் தொழிலாக கமத்தொழிலைத் தெரிவுசெய்யாதவர்களுக்கு பிரதான காரணிகளாக பொருளாதார காரணங்களே விளங்கின. முழு நேரக் கமத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு, தமது தொழிலைத் தெரிவுசெய்வதற்கான காரியகாரணங்களாக சுதந்திரம், இன்னொரு தொழிலைப் பெறமுடியவில்லை/வேறு விருப்பினை கொண்டிருக்கவில்லை, சுய-திருப்தியைப் பெறமுடிகின்றது, கமத்தொழில் தொடர்பிலான செயற்பாடுகளில் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர், அடிப்படை வசதிகள் கிட்டுகின்றன ஆகியன விளங்குகின்றன. சந்தையின் உறுதியற்றதன்மை, குறைந்த வருமானம், இன்னொரு தொழிலுக்கான தனிப்பட்ட விருப்புரிமை, கல்விகற்பதில் ஈடுபாடு மற்றும் சமூகத்திலிருந்து அங்கீகாரமின்மை போன்ற காரணங்களை முழு நேரக் கமத்தொழிலில் ஈடுபடாதவர்கள் குறிப்பிட்டனர்.

பிரதானமாக அடிப்படை வசதிகளைப் பெறுவதில் கஷ்டங்களினதும், விழிப்பியல் இன்மையினதும் காரணமாக, பதிலிறுப்பாளர்கள் மத்தியில் கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் பிரசித்தமானவையல்ல. முழுநேரத் தொழிலொன்றைக் கொண்டிருக்காத பதிலிறுப்பாளர்களின் மிகவும் விருப்புக்குரியதாக அரசாங்கத் தொழிலொன்று விளங்கிய அதேவேளை, கணிசமான எண்ணிக்கைகளைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தனியார் துறைத் தொழிலை அல்லது சுய-தொழிலைக் கொண்டிருப்பதற்கு விரும்பினார்கள். பொருளாதார ஸ்திரத்தன்மை, தொழில் பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் கல்வித் தகைமைகளுடன் பொருத்தம் ஆகியனவே அவர்களது விருப்புக்குரிய தொழில்களின் பின்னாலுள்ள பாரிய நான்கு காரணங்களாகும்.

# அத்தியாயம் ஆறு

## வேளாண்மையில் இளைஞரினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள்

### 6.1 அறிமுகம்

தொழிலொன்றாக வேளாண்மையில் ஈடுபடுவதற்கு இளம் சந்ததியினர் முயற்சிக்கின்ற போது, அவர்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகளையும், கஷ்டங்களையும் இந்த அத்தியாயம் முன்வைக்கின்றது. வேளாண்மை மீது அடிப்படை வசதிகள், சொத்துக்கள் மற்றும் சமூக அங்கீகாரம் ஆகியன தொடர்பிலான பிரச்சனைகளுக்கு அத்தியாயம் விசேடமாக கவனத்தைச் செலுத்துகின்றது. மேலதிகமாக, இளைஞரினால் வழங்கப்பட்ட கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்காக கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்ட தகவல் பயன்படுத்தப்படுகின்றது.

### 6.2 வேளாண்மையில் இளைஞரினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள்


#### 6.2.1 சந்தை வசதிகள்

தொழிலொன்றாக வேளாண்மையில் இளைஞர்களினால் முகங்கொடுக்கப்படும் ஒரு தொகையிலான பிரச்சனைகளினதும், கஷ்டங்களினதும் மத்தியில் கமத்தொழில் பண்டங்களுக்கான குறைந்த விலை அல்லது வேளாண்மையினால் வழங்கப்படும் குறைந்த வருமானம் ஆகியனவே மிகவும் முக்கியமான பிரச்சனையாகும். குறைந்த உற்பத்தி இடத்திலான விலைகளினால் தாம் அதைரியப்படுத்தப்படுவதாக பெருமளவு இளைஞர்கள் விளக்கமளித்தனர். தொழிலொன்றாக வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளம் வயதினர், குறைந்த உற்பத்தி இடத்திலான விலைகளின் காரணமாக, திருப்திகரமான வருமானமொன்றைப் பெறமுடியாத போது, வேளாண்மையை விட்டுவிலகி கொழும்புக்கு அல்லது வேறு பகுதிகளுக்கு நாள்கூலித் தொழிலுக்காக புலம்பெயர்கின்றனர். இச் சூழ்நிலை பற்றி விடய ஆய்வு 6.1இல் மேலும் விளக்கமளிக்கப்படுகின்றது. மேலும், பெருமளவு இளைஞர்கள் விளக்கமளித்தவாறு, அவர்கள் வேளாண்மையில் ஈடுபடுவதற்கு இணக்கமாக இருக்கின்ற போதிலும், சந்தைப்படுத்தல் பிரச்சனைகளினதும் மற்றும் வேளாண்மையிலிருந்து குறைந்த வருமானம் மீது எழுகின்ற விடயங்களினதும் மீது தமது பெற்றோர்களின் மனக்குறைகளை அவர்கள் அறியும் போது, வேளாண்மையிலிருந்து அவர்கள் விலகிச் செல்கின்றனர்.

வெளிக்கள அளவீட்டுத் தரவின் பிரகாரம், 13.4 சதவீதத்தைக் கொண்ட மொத்தப் பதிலிறுப்பாளர்கள் ஒரு போதுமே போதியளவு சந்தை வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. பண்டங்களுக்கும், உள்ளீடுகளுக்கும் நியாயமான விலை, உள்ளீடுகளின் தரம், இயந்திராதிகளின் கட்டணங்கள் மற்றும் சந்தை வசதிகளாக சேகரிப்பு நிலையம் ஆகியனவற்றை அவை உள்ளடக்கியிருந்தன. 14.3 சதவீதத்தையும், 12.2 சதவீதத்தையும் மற்றும் 13.4 சதவீதத்தையும் கொண்ட முறையே முழுநேரக் கமக்காரர்களும், பகுதி நேரக் கமக்காரர்களும் மற்றும் குடும்ப சீரஉழைப்பாளர்களும் தமது உற்பத்திப்பொருட்களுக்கு போதிய சந்தை வசதிகளைத் தாம் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டனர் (உருபு 6.1).

ஓரளவுக்கு போதிய வசதிகளை தாம் கொண்டிருந்ததாக மொத்தப் பதிலிறுப்பாளர்களில் அண்ணளவாக 59 சதவீதத்தினர் குறிப்பிட்ட அதேவேளை, இது முழு நேரக் கமக்காரர்களின் 64 சதவீதத்திலிருந்து குடும்ப சீரஉழைப்பாளர்களுக்கான 70.4 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. சந்தை வசதிகள் அதிகளவு நிறைவிலானவை எனக் குறிப்பிட்டவர்கள் 13.4 சதவீதத்தினராகவுள்ள அதேவேளை, இது குடும்ப சீரஉழைப்பாளர்களின் 10.3 சதவீதத்திலிருந்து முழு நேரக் கமக்காரர்களுக்கான 17 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது (அட்டவணை 6.1). அவர்கள் சந்தைப் பிரச்சனைகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை இந்த எண்ணிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

உருபு 6.1: சந்தை வசதிகளின் நிறைவின் மட்டம்




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

**அட்டவணை 6.1: வேளாண்மைச் செயற்பாடுகளினால் சந்தை வசதிகளின் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | குடும்பச் சரீரஉழைப்பாளர்கள் (N=127) |
|---|---|---|---|
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 14.3 | 12.2 | 13.4 |
| சிறிதளவு நிறைவிலானது | 64.0 | 61.3 | 70.4 |
| அதிகளவு நிறைவிலானது | 17.0 | 11.2 | 10.3 |
| அவசியமில்லை | 4.8 | 15.3 | 6.3 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

சந்தை வசதிகள் தொடர்பிலான ஒரு தொகையிலான பிரச்சனைகளுக்கும், கஷ்டங்களுக்கும அவர்கள் முகங்கொடுக்கின்ற போதிலும், சகல பயிர்களுக்கும் அவர்களது உற்பத்திக்கு உற்பத்தி இடத்திலான குறைந்த விலையே மிகவும் முக்கியமான பிரச்சனையாகும். சகல ஆய்வு அமைவிடங்களிலும் அளவீட்டுக் காலத்தின் போது, நெற் கொள்வனவு விலை சுமார் ரூபா 20/கி.கி.[4] ஆகும். பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, வெற்றிலைச் சுருளை யாரேனும் ஒருவர் கொள்வனவு செய்வது அவசியமென்றால், அவர் குறைந்தபட்சம் ஒரு கிலோ கிராம் நெல்லை விற்பனைசெய்ய வேண்டும். பெருமளவு பண்ணைக் குடித்தனங்கள் நாளொன்றுக்கு அல்லது இரு நாட்களுக்கு ஒரு சவர்க்காரக் கட்டி அவசியமென அவர்கள் மேலும் விளக்கமளித்தனர். அவர்களுக்கு மாதமொன்றுக்கு 30 கட்டிகள் சவர்க்காரம் அவசியமென்றால், அவர்கள் மாதமொன்றுக்கு 1,200 ரூபாவை செலவழிக்க வேண்டியிருந்தது. அத்தகைய தொகையிலான பணத்தை ஈட்டுவதற்கு நெற் கமக்காரர்கள் 60 கி.கி. கொண்ட நெல்லை விற்பனை செய்வது

[4] இவ்விலை சம்பாவுக்கு ரூபா 20-24, நாடு அரிசிக்கு ரூபா 16-19 என வேறுபட்டிருந்தது

அவசியமானதாகும். எனவே, இன்னொரு வருமான மூலமின்றி நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவது கஷ்டமாகவிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலையின் காரணமாக, வேளாண்மைத் துறையிலிருந்து விலகிச்செல்வதற்கு இளம் சந்ததியினர் முனைந்தனர். மேலும், வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அவர்கள் பழக்கப்பட்டிருந்தாலும் கூட, வேளாண்மையை இரண்டாவது வருமான மூலமொன்றாகக் கருதி வேறு வருமானத்தைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவர்கள் முனைந்தனர்.

**விடய ஆய்வு 6.1: திரு.சுஜீவ, ரண்முதுவெவ, சூரியவெவ**

24 வயதான சுஜீவ பரணமன்ன ஒரு முழு நேரக் கமக்காரராவார். அவர் தனது மனைவியுடனும், மகளுடனும் சூரியவெவவில் வாழ்கின்றார். அவரது பண்ணை நிலம் சுமார் 2.5 ஏக்கர்கள் என்பதுடன், கத்தரி, கறிமிளகாய், பச்சை மிளகாய், கெக்கரி மற்றும் தக்காளி போன்ற ஒரு தொகையிலான பயிர்களை அவர் செய்கை பண்ணினார். பருவமொன்றுக்கு அவர் குறைந்தது 150,000 ரூபாவை மூலதனமிடுவார். உற்பத்தி இடத்திலான விலை நியாயமானதாக அல்லது உயர்வானதாக இருக்கும் போது, அவர் பருவமொன்றுக்கு ஓர் ஏக்கரிலிருந்து இலாபமாகக் குறைந்தபட்சம் 75,000 ரூபாவை ஈட்டினார்.

2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் மரக்கறி விலைகள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன. உதாரணமாக, கத்தரியின் விலை ஒரு கிலோவுக்கு 2-5 ரூபாவாக விளங்கியது. அந் நேரத்தில் போக்குவரத்து ஆகுசெலவின் சில தொகையை தாங்கிக்கொண்டு தனது உற்பத்தியைக் கொண்டு வந்த போதிலும், ஹம்பேகமுவ சந்தையில் கூட அவரினால் மரக்கறிகளை விற்க முடியவில்லை. மூன்று தடவைகள் சாக்கு பைகளுடன் தனது உற்பத்தியை அவர் ஹம்பேகமுவ சந்தையிலிருந்து தூக்கியெறிந்ததுடன், வீட்டுக்கு வெறுங்கையுடன் திரும்பி வந்தார். அந்நேரத்தின் போது தனது உற்பத்தியிலிருந்து ஒரு ரூபாயைக் கூட அவரினால் ஈட்ட முடியவில்லை. எனவே, போக்குவரத்துக் கட்டணத்தைச் செலுத்துவதற்கும், நாளாந்தச் செலவினத்தை நிறைவேற்றுவதற்கும் அவர் கிராமத்திலுள்ள பணத்தை இரவல் கொடுப்பவரிடமிருந்து இரவல்பெறுவதுண்டு. முறைமையான நிறுவனங்களிலிருந்து பணத்தை இரவல்பெறுவதற்கு அவர் விரும்பிய போதும், ஏதேனும் வங்கியின் கடன் திட்டங்களுக்கு அவரால் அடைய முடியவில்லையென அவர் விளக்கமளித்தார். ஏனெனில் வங்கிக்கு சமர்ப்பிப்பதற்கு அவரிடம் காணியின் உறுதி கூட இருக்கவில்லை.

அவர் வெறுங்கையுடன் திரும்பி வந்த போது, சந்தையிலிருந்து தனக்கு என்ன வாங்கி வந்ததாக அவரது சிறிய மகள் கேட்டிருந்தார். அவர் முற்றிலுமே உதவியற்றவராக விளங்கினார். தனது செய்கையிலிருந்து நஷ்டங்களின் காரணமாக மேலும் வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அவர் விரும்பவில்லை என்பதுடன், கட்டிட நிருமாண அமைவிடமொன்றில் உதவியாளராகப் பணியாற்றுவதற்காக கொழும்புக்கு புலம்பெயர்ந்தார்.


ஆய்வுப் பகுதியிலுள்ள பெருமளவு கமக்காரர் தலைவர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, சிறுஉடைமையாளர் வேளாண்மைத் துறையிலிருந்து இளைஞர்கள் விட்டுவிலகுவதற்கான பாரிய காரணமாக சந்தைப்படுத்தல் பிரச்சனை விளங்குகின்றது. அரசாங்கம் நெற் கொள்வனவுத் திட்டத்தை அமுல்படுத்திய போதிலும், மோசமான நடைமுறைகளினதும், மோசமான திட்டமிடலினதும் காரணமாக நெல் சந்தைப்படுத்தல் பிரச்சனைக்குக் கூட தீர்வொன்றை வழங்குவதற்கு முடியவில்லை. சந்தைப்படுத்தல் பிரச்சனைகள் தொடர்பில் தனது கருத்தினை உகன, ஹிமிதொரவவில் உள்ள கமக்காரர் தாபனத்தின் தலைவர்களில் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்:

"யாரேனும் ஒருவர் ஏதாவதொன்றை உற்பத்தி செய்தால், விற்பனை விலை மீது தீர்மானமெடுப்பதற்கான உரிமையை அல்லது தகுதியை உற்பத்தியாளர் கொண்டுள்ளார். ஆனால், ஏகபோகவுரிமையின் அல்லது கொள்வனவாளர்களின் சிலர்சர்வாதினத்தின் காரணமாக அத்தகைய சக்தியைக் கமக்காரர்கள் கொண்டிருக்கவில்லை."

### 6.2.2 விஸ்தரிப்புச் சேவைகள்

விஸ்தரிப்புச் சேவைகளின் பலவீனமே இளம் கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் இன்னொரு பிரச்சனையாகும். கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் பாரிய எண்ணிக்கையிலான வெளிக்கள ஊழியர்கள் இருந்த போதிலும், கமக்காரர்களினதும், இளம் பதிலிறுப்பாளர்களினதும் கூற்றுப்படி, கமத்தொழில் நடைமுறைகள் மற்றும் பயிர் நோய்கள் ஆகியன மீது போதியளவு அறிவை அவர்களில் பெரும்பான்மையோர் கொண்டிருக்கவில்லை. 18.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் கமத்தொழில் விஸ்தரிப்புச் சேவையை ஒரு போதுமே நிறைவிலானதல்ல எனக் குறிப்பிட்ட அதேவேளை, அது ஓரளவுக்கு நிறைவிலானது என 51.7 சதவீதத்தினர் குறிப்பிட்டனர். மொத்தப் பதிலிறுப்பாளர்களில் விஸ்தரிப்புச் சேவைகள் தமக்கு தேவையில்லையென 5.9 சதவீதத்தினர் குறிப்பிட்ட அதேவேளை, தமது வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு விஸ்தரிப்புச் சேவை நிறைவிலானது என 20 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர் (உருபு 6.2).

**உருபு 6.2: விஸ்தரிப்புச் சேவையின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

விஸ்தரிப்புச் சேவை ஒரு போதுமே நிறைவிலானதல்ல என குறிப்பிட்ட இளம் கமக்காரர்களின் சதவீதமானது முழு நேரக் கமக்காரர்களின் 16.9 சதவீதத்திலிருந்து, குடும்பச் சரீரஉழைப்பாளர்களின் 21.3 சதவீதம் வரை வேறுபட்டிருந்த அதேவேளை, ஓரளவுக்கு நிறைவிலானது மீதான வகுதியின் சதவீதமானது 48.6 சதவீதத்தைக் கொண்ட முழு நேர கமக்காரர்களிலிருந்து, 63.3 சதவீதத்தைக் கொண்ட பகுதி நேர கமக்காரர்கள் வரை வேறுபட்டிருந்தது (அட்டவணை 6.2). விஸ்தரிப்புச் சேவைகள் பெரிதுமே நிறைவிலானவை என 20-30 சதவீதத்தைக் கொண்ட இளம் கமக்காரர்கள் குறிப்பிட்ட போதிலும், அவை நிறைவிலானவையல்ல என உயர் சதவீதத்திலான பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். விஸ்தரிப்புச் சேவைகள் இன்மையினால் இளம் கமக்காரர்கள் பாதிப்படைகின்றனர் என்பதை மேற்படி தரவு உறுதிப்படுத்துகின்றது.

விஸ்தரிப்புச் சேவை பெரிதுமே நிறைவிலானது என கணிசமான சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் குறிப்பிட்ட போதிலும், மாதிரியினுள் உயர் தொழில்நுட்பக் கமத்தொழிலில் யாரேனும் இளம் கமக்காரர்கள் ஈடுபட்டுள்ளதை ஆராய்ச்சிக் குழாமினால் கண்டறிய முடியவில்லை.

HARTI

**அட்டவணை 6.2: வேளாண்மைச் செயற்பாட்டினால் விஸ்தரிப்பு வசதிகளின் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | குடும்பச் சரீரஉழைப்பாளர்கள் (N=127) |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 16.9 | 14.3 | 21.3 |
| சிறிதளவு நிறைவிலானது | 48.6 | 63.3 | 53.8 |
| அதிகளவு நிறைவிலானது | 30.4 | 21.4 | 22.1 |
| அவசியமில்லை | 4.1 | 1.0 | 3.1 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

வேறு ஆய்வுகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, மாகாண சபை முறைமை தாபிக்கப்பட்ட பின்னர் விஸ்தரிப்புச் சேவைகளின் நிறுவனரீதியான கூறுபடுத்தலொன்றுள்ளது. மேலும், இது 1988இல் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு (கிராம அலுவலர்களாக) 2,400 கிராம மட்ட விஸ்தரிப்பு ஊழியர்களின் இடமாற்றத்துடன், பிரிவு மற்றும் கிராம மட்டங்களுக்கு இடையில் பாரிய இடைவெளிகளை உருவாக்கியுள்ளது. அதன் பின்னர், ஒரு கமத்தொழில் போதனாசிரியருக்கு சுமார் 3,000 பண்ணைக் குடித்தனங்களுக்கு விஸ்தரிப்பு-கமக்காரர் விகிதம் அதிகரித்துள்ளது. சில பகுதிகளில் கமத்தொழில் போதனாசிரியர் ஒருவருக்கு 7,000 பண்ணைக் குடித்தனங்களுக்கு விகிதம் அதிகரித்துள்ளது. 1990களில் கமத்தொழில் அமைச்சுக்கு சுமார் 9,600 வெளிக்கள ஊழியர்களை (கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள்) அரசாங்கம் நியமித்திருந்தது. வாரமொன்றுக்கு மூன்று நாட்களுக்கு விஸ்தரிப்பு வேலையை அமுல்படுத்துவதற்கு கமத்தொழில் போதனாசிரியர்களுக்கு அவர்கள் உதவியளிக்க வேண்டுமென்ற போதிலும், 2008இல் உள்ளவாறு, அவர்களில் 10 சதவீதத்தினர் மட்டுமே கமத்தொழில் டிப்ளோமாக்களைக் கொண்டிருந்தனர் (தமயந்தி மற்றும் நாணயக்கார, 2008).

வேளாண்மை நடைமுறைகள் பற்றி அறிவைக் கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் கொண்டிருக்கவில்லை அல்லது தமது அனுபவங்களினுள் கமக்காரர்களுக்கு தெரிந்தளவுக்குக் கூட அறிவினைக் கொண்டிருக்கவில்லையென சில கமக்காரர்கள் தெரிவித்தனர். மேற்படி பிரச்சனையின் காரணமாக, விஸ்தரிப்புச் சேவைகளைத் திருப்திகரமாகப் பெற கமக்காரர்களுக்கு முடியவில்லை. எனவே, நோய்களினால் தமது செய்கை பாதிப்படைந்த போது, கம-இரசாயன வர்த்தகர்களுடன் தாம் ஆலோசனை நடத்த வேண்டியிருந்ததாக பெருமளவு இளைஞர்கள் குறிப்பிட்டனர். எனினும், தமது விற்பனையை அதிகரிப்பதற்காகவும், கமக்காரர்களின் தேவையைக் கரிசனைக்கெடுக்காமலும் விதைகளையும், கம-இரசாயனங்களையும் விற்பனையாளர்கள் எப்பொழுதுமே பரிந்துரைத்தனர்.

இதனிடையே, மாணவர்களுக்கு அடிப்படை விஞ்ஞான அறிவை வழங்குவதற்காக கிராமப் பாடசாலைகளில் தகுதிவாய்ந்த கமத்தொழில் ஆசிரியர்கள் இன்மையானது கமத்தொழில் விழிப்பியல் இன்மைக்கான இன்னொரு பங்களிக்கும் காரணியாகும்.

### 6.2.3 கமத்தொழில் பயிற்சி

கமத்தொழில் தொடர்பிலான பயிற்சியின் மோசமான அடையும்தன்மையும், கிட்டுந்தன்மையும் இளம் கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் இன்னுமொரு பிரச்சனையாகும். கமத்தொழில் தொடர்பிலான பயிற்சி வசதிகளைத் தாம் பெறவில்லை அல்லது பயிற்சி வசதிகள் ஒரு போதுமே நிறைவிலானதாக இருக்கவில்லையென மொத்த பதிலிறுப்பாளர்களில் 58.9 சதவீதத்தினர் தெரிவித்தனர் (அட்டவணை 6.2). மறுபுறத்தில், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பெரிதுமே நிறைவிலானவை எனக் குறிப்பிட்ட

பதிலிறுப்பாளர்கள் குறைந்த தொகையினரேயாவர். இச் சூழ்நிலைகள் முழுநேர, பகுதிநேர வேளாண்மைக்கும் அத்துடன் குடும்ப சரீரஉழைப்பாளர்களுக்கும் சகல வகையான ஈடுபாடுகளுக்கும் பொதுவானதாகும்.

**அட்டவணை 6.3: வேளாண்மைச் செயற்பாடுகளினால் பயிற்சி வசதிகளின் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்த பதிலிறுப்பாளர்களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | குடும்பச் சரீரஉழைப்பாளர்கள் (N=127) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 61.4 | 55.1 | 67.7 | 58.9 |
| சிறிதளவு நிறைவிலானது | 32.5 | 38.8 | 22.1 | 29.3 |
| அதிகளவு நிறைவிலானது | 7.4 | 5.1 | 8.7 | 7.4 |
| அவசியமில்லை | 2.0 | 1.0 | 1.6 | 4.4 |


மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

பாரம்பரியமான வேளாண்மை நடைமுறைகள் நஷ்டங்களில் அல்லது குறைந்த இலாபத்தில் விளைந்தபோதிலும், உயர் தொழில் மட்டத்திலான கமத்தொழில், கால்நடை மற்றும் மலர்ச்செடி வளர்ப்பு போன்ற சில வேளாண்மை நடைமுறைகள் ஓரளவுக்கு உயர்ந்த இலாபமொன்றையே வழங்குகின்றன. ஆனால், இவ்வகையான வேளாண்மையைச் செய்வதற்கு, அவர்கள் அறிவு, அனுபவம், மூலதனம் மற்றும் சந்தைப்படுத்தல் தகவல் ஆகியவற்றைக் கொண்டிருக்கவில்லை. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக்கும் அத்துடன் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைப்பதற்கும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம், கமத்தொழில் திணைக்களம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை போன்ற ஒரு தொகையிலான அரசாங்க நிறுவனங்கள் இருந்த போதிலும், இந்த தொழில்நுட்பங்கள் அடிமட்டங்களை அடையவில்லை. பழ ஜாம், கோடியல், உடன்பழச் சாறு, புளிக் கூழ், நொதிய வைத்தல் ஊடாக மரக்கறிகளைப் பேணுதல், பிஸ்கட்கள் மற்றும் அரிசி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்வதற்கான தொழில்நுட்பத்தை அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் கொண்டுள்ளது. எனினும், பயிற்சியாளரின் செலவினங்கள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவலின்மை மற்றும் அமுலாக்கல் பிரச்சனைகளின் காரணமாக பயிற்சியைப் பெறுவதற்கான இணக்கமின்மை ஆகியவற்றின் காரணமாக, இந்த தொழில்நுட்பங்கள் போதியளவு அடிமட்டங்களை அடைவதில்லை.

### 6.2.4 காணி

இளம் பதிலிறுப்பாளர்களின் கூற்றுப்படி, மேட்டு நிலத்தின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் அவர்களினால் முகங்கொடுக்கப்பட்ட இன்னொரு பிரச்சனையாகும். மேட்டுநிலங்களின் பற்றாக்குறையின் காரணமாக, தொழிலொன்றாக வேளாண்மையில் தம்மால் ஈடுபட முடியாதிருப்பதாக 16 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். விசேடமாக, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் மற்றும் சூரியவெவ (மகாவலிப் பகுதி) போன்ற வர்த்தகமயப்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கைப் பகுதிகளிலுள்ள இளைஞர்கள் மேற்படி பிரச்சனையை அடிக்கடி குறிப்பிட்டனர். மேட்டுநிலத்தின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் அதிகளவு நிறைவில்லானவை என குறிப்பிட்ட பதிலிறுப்பாளர்கள் 24.2 சதவீதத்தினராவர். கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் ஓரளவுக்கு நிறைவிலானவை என 58.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர் (உருபு 6.3).


உருபு 6.3: மேட்டுநிலத்தின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள்




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

மேட்டுநிலத்தின் கிட்டுந்தன்மையையும், அடையும்தன்மையையும் பற்றிய பதிலிறுப்புக்கள் வேளாண்மைச் செயற்பாட்டின் வகையினால் வேறுபட்டிருந்தன. மேட்டுநிலம் மீதான பதிலிறுப்புக்கள் ஒருபோதுமே நிறைவிலானவையல்ல என்பது பகுதிநேரக் கமக்காரர்களின் 12.1 சதவீதத்திலிருந்து முழுநேரக் கமக்காரர்களின் 16.2 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. ஓரளவுக்கு நிறைவிலானவை மீதான பதிலிறுப்பாளர்கள் பகுதி நேரக் கமக்காரர்களின் 58.7 சதவீதத்திலிருந்து குடும்பச் சரீரஉழைப்பாளர்களின் 68.7 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. அதிகளவு நிறைவிலானவை மீதான பதிலிறுப்புக்கள் முழு நேரக் கமக்காரர்களின் 12.9 சதவீதத்திலிருந்து குடும்ப சரீரஉழைப்பாளர்களின் 20.4 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது (உருபு 6.4). வேளாண்மையில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற இளம் சந்ததியினருக்கான பிரச்சனைகளில் ஒன்றாக மேட்டுநிலத்தின் கிட்டாத்தன்மையை இது சுட்டிக்காட்டுகின்றது. காணியைக் கொள்வனவு செய்வதற்கு தம்மிடம் பணம் இல்லாததினால் தமது பெற்றோரின் காணியில் அல்லது குத்தகைக்கெடுத்த காணியில் தாம் செய்கை பண்ணியதாக உயர் பெறுமதியிலான பணப் பயிர்ச்செய்கையிலுள்ள பெருமளவு இளம் கமக்காரர்கள் விளக்கமளித்தனர். குடும்பமொன்று ஒரு தொகையிலான பிள்ளைகளைக் கொண்டிருந்தால், போதியளவு காணிகளைச் செய்கை பண்ணுவது கஷ்டமானதாகும். மேலும், உயர் பெறுமதியிலான பணப் பயிர்ச்செய்கைப் பகுதிகளில் காணிக் கட்டணம் உயர்வானது என்பதனால், காணியைக் குத்தகைக்கு எடுப்பதும் கஷ்டமானதாகும்.

உருபு 6.4: **வேளாண்மைச் செயற்பாடுகளினால் மேட்டுநிலத்தின் கிட்டுந்தன்மையின் மட்டம்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

நெற்காணியின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் மிகவும் நிறைவிலானவை என மொத்தப் பதிலிறுப்பாளர்களில் அண்ணளவாக கால் பங்கினர் தெரிவித்த அதேவேளை, முழு நேரக் கமக்காரர்களின் வகுதியில் 29.4 சதவீதம் என்றவாறு உயர்வானதென அறிவிக்கப்பட்டது. எனினும், நெற் காணியின் கிட்டுந்தன்மையும், அடையுந்தன்மையும் ஒரு போதுமே நிறைவிலானலையல்ல என 17.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் கூறிய அதேவேளை, இதையே 19.9 சதவீதத்தைக் கொண்ட முழுநேரக் கமக்காரர்கள் தெரிவித்தனர். மேலும், நெற் காணியின் கிட்டுந்தன்மையும், அடையுந்தன்மையும் ஓரளவுக்கு நிறைவிலானவையென 28.5 சதவீதத்தைக் கொண்ட மொத்த பதிலிறுப்பாளர்கள் அறிவித்தனர். இவ் விகிதமானது பகுதி நேரக் கமக்காரர்களினதும், முழுநேரக் கமக்காரர்களினதும் வகுதியில் முறையே 57.9 சதவீதம் மற்றும் 45.2 சதவீதம் என்றவாறு உயர்வானதாகும் (அட்டவணை 6.4). "எமக்குப் போதியளவு காணி இருந்தால் தொழில்களைத் தேடுவதற்காக நேரத்தையும், பணத்தையும் செலவழிப்பதற்குப் பதிலாக செய்கையில் ஈடுபட்டிருப்போம்" என விசேடமாக சில குடும்பச் சரீரஉழைப்பாளர்கள் குறிப்பிட்டனர். தொழிலொன்றாக வேளாண்மைத் துறையில் ஈடுபடுவதற்கு இளம் சந்ததியினரால் முகங்கொடுக்கப்படும் தடைகளில் ஒன்றாக நெற் காணியின் அடைதலின்மையை இது சுட்டிக்காட்டுகின்றது.

எனினும், 9.8 சதவீதத்தைக் கொண்ட மொத்தப் பதிலிறுப்பாளர்கள் தமக்கு நெற் காணி அவசியமில்லையென தெரிவித்த அதேவேளை, இதையே 27.4 சதவீதத்தைக் கொண்ட குடும்பச் சரீரஉழைப்பாளர்களும் தெரிவித்தனர். மேற்படி சூழ்நிலைகளை இரு காரணங்கள் அதாவது நெல் வேளாண்மையில் ஈடுபடுவதற்கான இணக்கமின்மை மற்றும் செய்கைபண்ணுவதற்கு தமது குடும்பங்களினால் போதியளவு காணியைக் கொண்டிருக்காமை ஆகியன பாதித்தன.

**அட்டவணை 6.4: வேளாண்மைச் செயற்பாட்டினால் நெற் காணிகளின் கிட்டுந்தன்மையின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்த பதிலிறுப்பாளர் களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | குடும்பச் சரீரஉழைப்பா ளர்கள் (N=127) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 19.9 | 10.5 | 16.0 | 17.9 |
| சிறிதளவு நிறைவிலானது | 45.2 | 57.9 | 42.7 | 48.5 |
| அதிகளவு நிறைவிலானது | 29.4 | 23.2 | 16.2 | 23.7 |
| அவசியமில்லை | 5.5 | 8.4 | 27.4 | 9.8 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

மொனராகலை மாவட்டத்திலுள்ள எதிமலை, அம்பாறை மாவட்டத்திலுள்ள உகன மற்றும் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள தந்திரிமலை மற்றும் நொச்சியாகம போன்ற பின்தங்கிய கிராமியப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் வாழ்வாதார முறைகளில் ஒன்றாக அவர்கள் சேனை வேளாண்மையில் ஈடுபடுவதுடன், இது அவர்களுக்கு முக்கியமான வருமான மூலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. எனினும், செய்கைக்காக தமக்கு சேனைக் காணிகள் அவசியமில்லையென உயர்வான சதவீதத்தைக் கொண்ட மொத்த பதிலிறுப்பாளர்கள் (38.1 சதவீதம்) தெரிவித்த அதேவேளை, அதையே 53.8 சதவீதத்தைக் கொண்ட பகுதி நேரக் கமக்காரர்கள் தெரிவித்தனர். சேனைக் காணிகளின் கிட்டுந்தன்மையும், அடையுந்தன்மையும் ஒரு போதுமே நிறைவிலானவையல்ல என அண்ணளவாக 14 சதவீதத்தைக் கொண்ட மொத்தப் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர் (அட்டவணை 6.5). தம்மிடம் சேனைக் காணிகள் இருந்தன, ஆனால் சிறிதளவே நிறைவிலானவை என 33.5 சதவீதத்தைக் கொண்ட மொத்தப் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். இது பகுதி நேரக் கமக்காரர்களுக்கு 31.9 சதவீதத்திலிருந்து, குடும்பச் சரீரஉழைப்பாளர்களுக்கு 42.7 சதவீதம் வரை என வேறுபட்டிருந்தது. சேனை வேளாண்மையில் ஈடுபடுவதற்கு அவர்கள் விரும்பிய போதிலும், சேனைச் செய்கைக்கு காணிகளின் கிட்டுந்தன்மையையும், அடையும்தன்மையையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதையே இந்த எண்ணிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

**அட்டவணை 6.5: வேளாண்மைச் செயற்பாட்டினால் சேனைக் காணிகளின் கிட்டுந்தன்மையின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்த பதிலிறுப்பாளர் களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | குடும்பச் சரீரஉழைப்பா ளர்கள் (N=127) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 14.6 | 5.5 | 13.7 | 14.3 |
| சிறிதளவு நிறைவிலானது | 32.3 | 31.9 | 42.7 | 33.5 |
| அதிகளவு நிறைவிலானது | 18.4 | 7.7 | 16.2 | 14.1 |
| அவசியமில்லை | 34.6 | 53.8 | 27.4 | 38.1 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.5 கமத்தொழில் இயந்திராதிகள்

அட்டவணை 6.6இனால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கமத்தொழில் இயந்திராதிகள் கிட்டாததினாலும், அவற்றை அடையமுடியாததினாலும் மொத்தப் பதிலிறுப்பாளர்களில் கணிசமானளவு பகுதியினர் கஷ்டப்படுகின்றனர். தமது வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு கமத்தொழில் இயந்திராதிகள் ஒருபோதுமே நிறைவிலானவையல்ல என அண்ணளவாக 15-20 சதவீதத்தைக் கொண்ட மொத்த பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். கமத்தொழில் இயந்திராதிகளின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் மிகவும் நிறைவிலானவை என தெரிவித்த மொத்த பதிலிறுப்பாளர்களின் சதவீதமானது அக்ரிமக்கில் 4.3 சதவீதத்திலிருந்து விசிறல் கருவிகளில் 24.3 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. ஓரளவுக்கு நிறைவிலானவை என்ற சதவீதமானது அக்ரிமக்கில் 41.2 சதவீதத்திலிருந்து விசிறல் கருவிகளில் 46.5 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. பதிலீட்டிலான இயந்திராதிகளை தாம் பயன்படுத்துவதன் காரணமாக, தமக்கு அக்ரிமக், சுனாமி, இணைப்பு அறுவடைக்கருவி அல்லது நான்கு சக்கர ட்ரக்டர்கள் அவசியமில்லையென மொத்த பதிலிறுப்பாளர்களில் அனேகமாக மூன்றிலொரு பேர் தெரிவித்தனர்.

**அட்டவணை 6.6: கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் பதிலிறுப்பாளர்கள்**

| நிறைவின் மட்டம் | மொத்தத்தின் சதவீதம் (N=525) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இரு சக்கர ட்ரக்டர்கள் | நான்கு சக்கர ட்ரக்டர்கள் | விசிறல் கருவிகள் | சூடடிக்கும் கருவி (அக்ரிமெக்) | சூடடிக்கும் கருவி (சுனாமி) | இணைப்பு அறுவடைக் கருவி (பூதயா) |
| ஒரு போதும் நிறைவிலான தல்ல | 17.3 | 19.2 | 14.6 | 16.4 | 18.5 | 16.6 |
| சிறிதளவு நிறைவிலானது | 44.2 | 43.6 | 46.5 | 41.2 | 44.2 | 42.3 |
| அதிகளவு நிறைவிலானது | 16.7 | 4.5 | 24.3 | 4.3 | 7.8 | 4.7 |
| நிறைவிலானது | 21.9 | 32.6 | 14.8 | 38.1 | 29.2 | 36.4 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

தமது வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு கமத்தொழில் இயந்திராதிகளின் கிட்டுந்தன்மையும், அடையுந்தன்மையும் போதாது எனத் தெரிவித்த பதிலிறுப்பாளர்கள், ஒரு தொகையிலான காரணிகளை வழங்கி, சூழ்நிலையை விளக்கினர். காரணங்கள் வருமாறு: உயர் ஆகுசெலவிலான இயந்திராதிகள் அத்துடன் உயர்ந்த ஆகுசெலவிலான வாடகைக்கெடுக்கும் இயந்திராதிகள் (சூடடிக்கும் கருவி, சுனாமி அல்லது இணைப்பு அறுவடைக்கருவி) மற்றும் அறுவடைக் காலத்தின் போது நேரத்திற்கு சேவையைப் பெறுவதிலுள்ள கஷ்டம். உதாரணமாக, சுனாமி என்ற இயந்திரத்திற்காக மணித்தியாலமொன்றுக்கு 4,000-5,000 ரூபாவை கமக்காரர்கள் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது.

முழு நேர வேளாண்மையில் சம்பந்தப்பட்டிருந்த இளைஞர் பெரிதுமே நான்கு சக்கர டிரக்டர்களின் பற்றாக்குறையிலிருந்து பாதிப்படைந்தனர் (அட்டவணை 6.7). நான்கு சக்கர ட்ரக்டர்களுக்கு கிட்டுந்தன்மையினதும், அடையும்தன்மையினதும் ஒன்றுதிரண்ட சதவீதமானது ஒரு போதும் நிறைவிலானதல்ல அத்துடன் சிறிதளவு நிறைவிலானது என்றவாறு 74.3 சதவீதமாக உயர்வான நிலையிலிருந்து, ஒரு போதும் நிறைவிலானதல்ல அத்துடன் சிறிதளவு நிறைவிலானது என குறிப்பிட்ட முழுநேர கமக்காரர்களின் ஒன்றுதிரண்ட சதவீதமானது அக்ரிமக்கிற்கு 60 சதவீதத்திற்கு மேற்பட்டது (63.5 சதவீதம்), சுனாமிக்கு 70.3 சதவீதம் மற்றும் இணைப்பு அறுவடைக் கருவிக்கு 66.2 சதவீதமாகும். முழு நேர வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர் அந்த இயந்திராதிகள் கிட்டாததினாலும், அடைய முடியாததினாலும் பாதிப்படைகின்றனர் என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை 6.7: கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் முழு நேரக் கமக்காரர்கள்**

| நிறைவின் மட்டம் | மொத்தத்தின் சதவீதம் (N=98) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இரு சக்கர ட்ரக்டர்கள் | நான்கு சக்கர ட்ரக்டர்கள் | விசிறல் கருவிகள் | சூடடிக்கும் கருவி (அக்ரிமெக்) | சூடடிக்கும் கருவி (சுனாமி) | இணைப்பு அறுவடைக் கருவி (பூதயா) |
| ஒரு போதும் நிறைவிலான தல்ல | 16.9 | 24.3 | 18.9 | 18.9 | 19.6 | 20.6 |
| சிறிதளவு நிறை விலானது | 43.3 | 50.0 | 53.3 | 44.6 | 50.7 | 45.6 |
| அதிகளவு நிறைவி லானது | 27.7 | 3.0 | 22.9 | 2.7 | 8.7 | 2.2 |
| அவசியமில்லை | 12.2 | 22.3 | 4.7 | 33.8 | 20.3 | 31.3 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 6.8இன் பிரகாரம், விசிறல் கருவிகளைத் தவிர இயந்திராதிகளின் கிட்டுந்தன்மையினதும், அடையும்தன்மையினதும் பற்றாக்குறையினால் பகுதி நேர வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் பெரிதுமே பாதிப்படைந்தனர். ஒரு போதுமே நிறைவற்றது அத்துடன் ஓரளவு நிறைவானது ஆகியவற்றின் ஒன்றுதிரண்ட சதவீதங்கள் இரு சக்கர ட்ரக்டர்கள் (70.4 சதவீதம்), நான்கு சக்கர ட்ரக்டர்கள் (67.4 சதவீதம்), விசிறல் கருவிகள் (63.7 சதவீதம்), அக்ரிமக் (67.7 சதவீதம்), சுனாமி (72.6 சதவீதம்) மற்றும் இணைப்பு அறுவடைக் கருவி (64.4 சதவீதம்) ஆகியவற்றுக்கு 60 சதவீதத்திற்கு மேற்பட்டதாகும்.

**அட்டவணை 6.8: கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் பகுதி நேரக் கமக்காரர்கள்**

| நிறைவின் மட்டம் | மொத்தத்தின் சதவீதம் (N=127) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இரு சக்கர ட்ரக்டர் கள் | நான்கு சக்கர ட்ரக்டர் கள் | விசிறல் கருவி கள் | சூடடிக்கும் கருவி (அக்ரி மெக்) | சூடடி க்கும் கருவி (சுனாமி) | இணைப்பு அறுவடைக் கருவி (பூதயா) |
| ஒரு போதும் நிறைவிலான தல்ல | 23.5 | 27.6 | 17.2 | 24.7 | 28.4 | 23.7 |
| சிறிதளவு நிறை விலானது | 46.9 | 39.8 | 46.5 | 43.0 | 44.2 | 40.9 |
| அதிகளவு நிறை விலானது | 17.3 | 7.1 | 27.3 | 2.2 | 7.4 | 4.3 |
| ஆவசிய மில்லை | 12.2 | 25.5 | 9.1 | 30.1 | 20.0 | 31.2 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

குடும்பச் சரீரஉழைப்பாளர்கள் வகுதியின் மத்தியில் அக்ரிமக் (68.0 சதவீதம்), சுனாமி (72 சதவீதம்), இணைப்பு அறுவடைக் கருவி (70.9 சதவீதம்), நான்கு சக்கர ட்ரக்டர்கள் (73.1 சதவீதம்), இரு சக்கர ட்ரக்டர்கள் (73.0 சதவீதம்), மற்றும் விசிறல் கருவிகள் (68.5 சதவீதம்) ஆகியவற்றுக்கு பங்கிடுதல் இதையொத்த சூழ்நிலையொன்றாகும் (அட்டவணை 6.9). குடும்பச் சரீரஉழைப்பாளர்களாக அல்லது பகுதி நேர ஊழியர்களாக வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளம் பதிலிறுப்பாளர்கள் இந்த இயந்திராதிகளைப் பெறுவதில் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தார்கள் என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை 6.9: கமத்தொழில் இயந்திராதிகளின் நிறைவின் மட்டத்தினால் குடும்ப சரீரஉழைப்பாளர்கள்**

| நிறைவின் மட்டம் | மொத்தத்தின் சதவீதம் (N=127) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இரு சக்கர ட்ரக்டர்கள் | நான்கு சக்கர ட்ரக்டர்கள் | விசிறல் கருவிகள் | சூடடிக்கும் கருவி (அக்ரிமெக்) | சூடடிக்கும் கருவி (சுனாமி) | இணைப்பு அறுவடைக் கருவி (பூதயா) |
| ஒரு போதும் நிறைவிலான தல்ல | 12.7 | 11.9 | 7.9 | 10.4 | 13.6 | 12.1 |
| சிறிதளவு நிறைவிலானது | 60.3 | 61.2 | 60.6 | 57.6 | 58.4 | 58.8 |
| அதிகளவு நிறைவிலானது | 11.9 | 5.6 | 21.2 | 4.8 | 5.6 | 6.4 |
| அவசியமில்லை | 15.1 | 21.4 | 10.2 | 27.2 | 22.4 | 22.6 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.6 பயிர்க் காப்புறுதி

பயிர்க் காப்புறுதித் திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்திய போதிலும், பெருமளவு கமக்காரர்கள் அதையிட்டு திருப்தியடையவில்லை (ரம்புக்வெல, ஏனையோர், 2008). தரவினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, பயிர்க் காப்புறுதி வசதிகளையிட்டு 61 சதவீதத்தைக் கொண்ட மொத்த பதிலிறுப்பாளர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. பயிர்க் காப்புறுதியின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் ஒரு போதுமே நிறைவானவையல்ல என 73.8 சதவீதத்தைக் கொண்ட மொத்தப் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். இது முழு நேரக் கமக்காரர்கள், பகுதி நேரக் கமக்காரர்கள் மற்றும் குடும்பச் சீரஉழைப்பாளர்கள் ஆகியோருக்கு முறையே 73 சதவீதம், 74 சதவீதம் மற்றும் 59.2 சதவீதம் என்றவாறு உயர்வானதாகும். மறுபுறத்தில், மிகவும் போதுமானது என்பதன் சதவீதம் பகுதி நேரக் கமக்காரர்களில் 1.0 சதவீதத்திலிருந்து முழு நேரக் கமக்காரர்களில் 5.4 சதவீதம் வரை வேறுபடுகின்றது. வேளாண்மையானது ஓர் அபாயகரமான தொழிலென்பதனால், பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றின் அவசியத்தையிட்டு பெருமளவு இளம் பதிலிறுப்பாளர்கள் உறுதியாக குறிப்பிட்டார்கள். இயற்கையான அழிவினால் அல்லது நோய்களினால் தமது செய்கை சேதமடைந்த அல்லது அழிவடைந்த போது அதிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி காப்புறுதித் திட்டமாகும். ஆனால், தற்போதைய காப்புறுதித் திட்டத்தின் செயற்றிறன் இன்மையினதும், விளைதிறன் இன்மையினதும் காரணமாக, தமது சேதத்தை கமக்காரர்களினால் மீளப்பெற முடியவில்லை. இச் சூழ்நிலையானது வேளாண்மையிலிருந்து இளைஞர்களைத் தூரத்தள்ளுகின்றது என இளம் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

**அட்டவணை 6.10: வேளாண்மைச் செயற்பாட்டினால் பயிர்க் காப்புறுதியின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்தப் பதிலிறுப்பாளர்களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 73.0 | 59.2 | 74.0 | 73.8 |
| சிறிதளவு நிறைவிலானது | 18.3 | 34.6 | 20.4 | 12.3 |
| அதிகளவு நிறைவிலானது | 5.4 | 1.0 | 1.6 | 2.7 |
| அவசியமில்லை | 3.4 | 5.1 | 3.9 | 7.6 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012


### 6.2.7 கமத்தொழில் உள்ளீடுகள்

#### 6.2.7.1 உரம்

உருபு 6.5இல் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு, உரத்தின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் ஒரு போதுமே நிறைவானவையல்ல என குறிப்பிட்ட மொத்த பதிலிறுப்பாளர்களின் சதவீதம் அண்ணளவாக 4.0 ஆகும். எனினும், ஓரளவுக்கு போதுமானவை என்ற வகுதியில் பதிலிறுப்பாளர்களின் சதவீதம் 68ஆக உள்ள அதேவேளை, இது முழு நேரக் கமக்காரர்களின் 6.2 சதவீதத்திலிருந்து பகுதி நேரக் கமக்காரர்களின் 77.6 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது (உருபு 6.6). மேற்படி தகவலினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்கள் உரத்தின் கிட்டுந்தன்மையினதும், அடையுந்தன்மையினதும் தொடர்பிலான ஏதோ வகையிலான பிரச்சனைகளுக்கு வேளாண்மைச் செயற்பாடுகளில்


ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்கள் முகங்கொடுக்கின்றார்கள். மானியத்திலான உர விநியோகத்தில் தாமதம் (9.7 சதவீதம்), நெல்லைத் தவிர[5] பயிர்களின் உர மானியம் கிட்டாமை (12.5 சதவீதம்), உரத்தின் உயர் ஆகுசெலவு (17.2 சதவீதம்) மற்றும் போதியளவு தொகையைப் பெறுவதில் உள்ள கஷ்டம் (7.3 சதவீதம்) ஆகியனவே மேற்படி சூழ்நிலைக்கு பின்னாலுள்ள காரணங்களாகும்.

**உருபு 6.5: மொத்த மாதிரிக்கு உரத்தின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

**உருபு 6.6: வேளாண்மையின் வகையினால் உரத்தின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**




மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

[5] மரக்கறி உட்பட சகல பயிர்களுக்கும் மானியத்திலான உரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும் இது வெளிக்கள ஆய்வுக்காலத்தின் போது அமுல்படுத்தப்படவில்லை.

### 6.2.7.2 விதைகள்/நாற்றுக்கள்

இளம் பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, உயர்ந்த ஆகுசெலவு (34.4 சதவீதம்), உச்ச நேரத்தின் போது போதிய அளவினைப் பெறுவதில் கஷ்டம் (26.7 சதவீதம்), குறைந்த தரம் (6.8 சதவீதம்) மற்றும் கடன் மீது வாங்கும் போது வர்த்தகருக்கு உயர்ந்த வட்டி வீதத்தைச் செலுத்துவதற்கான அவசியம் (9.5 சதவீதம்), மற்றும் வர்த்தகருடன் முறைசாரா ஒப்பந்தம் ஆகியனவற்றின் காரணமாக தரத்திலான விதைகளினதும் விதை நாற்றுக்களினதும் அடைதல்தன்மை இன்னொரு பிரச்சனையாக விளங்கியது. இத்தகைய வகையிலான ஒப்பந்தம் கமக்காரர்களுக்கு கெடுதலானதாகும். ஏனெனில், பேரம்பேசாமல் வர்த்தகர்களுக்கு அவர்களது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதற்கு அது தள்ளுகின்றது. அட்டவணை 6.11இல் முன் வைக்கப்பட்டுள்ள தரவின் பிரகாரம், மொத்தப் பதிலிறுப்பாளர்களில் 77.2 சதவீதத்தினர் (ஒரு போதும் நிறைவிலானதல்ல மற்றும் சிறிதளவு நிறைவிலானது என்ற கூட்டு சதவீதம்) விதைகளின் கிட்டுந்தன்மை நிறைவிலானதல்ல என தெரிவித்தனர். இவ் விகிதமானது முழு நேரக் கமக்காரர்களுக்கு 78.2 சதவீதம் மற்றும் பகுதி நேரக் கமக்காரர்களுக்கு 84.6 சதவீதம் என்றவாறு உயர்வாகவுள்ள அதேவேளை, இது குடும்பச் சீரஉழைப்பாளர்களுக்கு 83.5 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

**அட்டவணை 6.11: வேளாண்மையின் வகையினால் விதைகளின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்தப் பதிலிறுப்பாளர்களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 12.9 | 12.2 | 8.7 | 10.9 |
| சிறிதளவு நிறைவிலானது | 65.3 | 72.4 | 74.8 | 66.3 |
| அதிகளவு நிறைவிலானது | 17.7 | 12.3 | 13.3 | 13.9 |
| அவசியமில்லை | 4.1 | 3.1 | 3.1 | 8.8 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.7.3 பூச்சிநாசினிகள்/களைநாசினிகள்

மேலும் உயர்வான விலை (32 சதவீதம்), கடன் மீது பெறப்பட்ட போது உயர்வான வட்டி விகிதம் (28.4 சதவீதம்) மற்றும் குறைந்த தரம் (26.2 சதவீதம்) ஆகியனவற்றின் காரணமாக, பூச்சிநாசினிகளினதும், களைநாசினிகளினதும் அடையுந்தன்மை இளைஞர்களுக்கு கஷ்டமாக விளங்கியது. மொத்தப் பதிலிறுப்பாளர்களில், 82.7 சதவீதத்தினர் (ஒரு போதும் நிறைவிலானதல்ல மற்றும் ஓரளவு நிறைவிலானது என்ற இரு வகுதியினர்) பூச்சிநாசினிகளினதும், களைநாசினிகளினதும் கிட்டுந்தன்மை நிறைவிலானதல்ல எனக் குறிப்பிட்டனர் (அட்டவணை 6.12). அட்டவணை 6.12இல் முன்வைக்கப்பட்டுள்ளவாறு, மேற்படி விகிதமானது குடும்பச் சீரஉழைப்பாளர்கள் மத்தியில் 83.5 சதவீதத்திலிருந்து பகுதி நேரக் கமக்காரர்கள் மத்தியில் 91.8 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது.

**அட்டவணை 6.12: வேளாண்மையின் வகையினால் பூச்சிநாசினியின்/ களைநாசினியின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்தப் பதிலிறுப்பாளர்களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 14.2 | 16.5 | 11.8 | 13.2 |
| சிறிதளவு நிறைவிலானது | 73.6 | 75.3 | 71.7 | 69.5 |
| அதிகளவு நிறைவிலானது | 8.1 | 5.1 | 12.6 | 8.0 |
| அவசியமில்லை | 4.1 | 3.1 | 3.9 | 9.2 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.8 கமத்தொழில் தகவல்

நோக்குக் குழுக் கலந்துரையாடல்களில் இளம் பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கமத்தொழிலில் இலாபகரமாக ஈடுபடுவதற்கு அவர்கள் இணக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வசதியளிக்கும் நிறுவனங்கள், வியாபார முயற்சிகளுக்கான பயிற்சி மற்றும் வேறு வசதிகள் மற்றும் உயர் தொழில்நுட்பத்திலான கமத்தொழில், விலை, வேறுபட்ட பயிர்களின் கீழ் காணியின் விஸ்தீரணம் போன்றவை பற்றிய சம்பந்தப்பட்ட தகவலைக் கொண்டிருக்கவில்லை. எனவே, தகவலின் பற்றாக்குறையானது அவர்களுக்கு ஒரு தடையாக விளங்கியது. அட்டவணை 6.13இல் காட்டப்பட்டுள்ளவாறு, அவர்களுக்கு தகவலின் அடையுந்தன்மை ஒருபோதும் நிறைவிலானதல்ல மற்றும் ஓரளவு நிறைவிலானது என மொத்தப் பதிலிறுப்பாளர்களில் முறையே 14.1 சதவீதத்தினரும் மற்றும் 65.7 சதவீதத்தினரும் தெரிவித்தனர். தகவல் வசதிகளின் கிட்டுந்தன்மை ஒரு போதும் நிறைவிலானதல்ல எனக் குறிப்பிட்ட பதிலிறுப்பாளர்களின் சதவீதம் குடும்பச் சரீரஉழைப்பாளர்களுக்கான 6.3 சதவீதத்திலிருந்து பகுதி நேரக் கமக்காரர்களுக்கான 16.3 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. மேலும், அடையுந்தன்மை ஓரளவுக்கு நிறைவிலானது எனக் குறிப்பிட்ட பதிலிறுப்பாளர்களின் சதவீதமானது பகுதி நேரக் கமக்காரர்களின் 68.9 சதவீதத்திலிருந்து குடும்பச் சரீரஉழைப்பாளர்களின் 79.5 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. மறுதலையாக, தகவலின் அடைதலானது மிகவும் நிறைவிலானது எனக் குறிப்பிட்ட மொத்த பதிலிறுப்பாளர்களின் சதவீதமானது 15.4 சதவீதமாக விளங்கிய அதேவேளை, இது பகுதி நேரக் கமக்காரர்களின் 10.2 சதவீதத்திலிருந்து குடும்பச் சரீரஉழைப்பாளர்களின் 13.4 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது.

**அட்டவணை 6.13: வேளாண்மையின் செயற்பாடுகளினால் தகவல் வசதிகளின் அடைதல்தன்மையினதும், கிட்டுந்தன்மையினதும் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்தப் பதிலிறுப்பாளர்களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர்கள் (N=98) | முழு நேரக் கமக்காரர்கள் (N=148) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 15.5 | 16.3 | 6.3 | 14.1 |
| சிறிதளவு நிறைவிலானது | 68.9 | 70.4 | 79.5 | 65.7 |
| அதிகளவு நிறைவிலானது | 12.8 | 10.2 | 13.4 | 15.4 |
| அவசியமில்லை | 2.7 | 3.1 | 0.8 | 4.8 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.9 நீர்ப்பாசன வசதிகள்

வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு நீர்ப்பாசன வசதிகளின் கிட்டுந்தன்மையினதும், அடையுந்தன்மையினதும் தொடர்பாக வசதியானது மிகவும் நிறைவிலானது என 38.7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்ட அதேவேளை, ஒரு போதும் அது நிறைவிலானதல்ல என 10.2 சதவீதத்தினர் தெரிவித்தனர் (அட்டவணை 6.14). நீர்ப்பாசன வசதிகள் சிறிதளவு நிறைவிலானவை என மொத்தப் பதிலிறுப்பாளர்களில் 47.2 சதவீதத்தினர் தெரிவித்தனர். வேளாண்மைக்கு நீர்ப்பாசன வசதிகள் போதுமானவையல்ல என்பதுடன், மட்டக்களப்பு, குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் முழு நேர சிறுஉடமையாளர் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அது அழுத்தும் காரணியொன்றாகச் செயற்பட்டது எனப் பெருமளவு பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். தமது காணியைச் செய்கைபண்ணுவதற்கு நீர்ப்பாசன வசதிகள் போதுமானவையல்ல எனக் குறிப்பிட்டவர்கள் ஒரு தொகையிலான காரணங்களை வழங்குவதன் மூலம் சூழ்நிலைக்கு விளக்கமளித்தனர். பகுதியில் நீர்ப்பாசன வசதிகள் கிட்டவில்லை அல்லது பழுதடைந்த கால்வாய்களினதும், குளங்களினதும் காரணமாக நீர் சரிவரப் பங்கிடப்படவில்லை (37.9 சதவீதம்) என்பதுடன், நீர்ப்பாசன வசதிகள் கிட்டாததினால் கிணறுகளிலிருந்து நீர் பம்பிகளைப் பயன்படுத்தி கமக்காரர்களுக்கு வழங்குவதற்கு நீரை இறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகவிருந்தது (27.1 சதவீதம்). நீர்ப்பாசன வசதிகள் கிட்டுகின்ற போதிலும், நீர்த்தேக்கங்களில் நீரின் பற்றாக்குறையினதும் மற்றும் நீர் வழங்கலின் தவறான நிருவாகத்தினதும் காரணமாக நேர காலத்திற்கு அல்லது போதியளவு (20.8 சதவீதம்) நீரை வழங்குவதைத் தடுத்ததாக இளைஞர்களினால் முன்வைக்கப்பட்ட இன்னொரு காரணமாகும். விசேடமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி மற்றும் ஒவளியாறு ஆகிய பகுதிகளிலும் மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஹிமிதுரவ மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய பகுதிகளிலும் உள்ள கமக்காரர்கள் யுத்தத்தின் போது வெடிவைக்கப்பட்ட நீர்த்தேக்கங்களும், அணைக்கட்டுகளும் மற்றும் கால்வாய்களும் நீண்ட காலமொன்றுக்கு பழுதுபார்க்கப்படாததன் காரணமாக, பாசன நீரின் பிரச்சனைக்கு முகங்கொடுத்தனர்.

இளைஞர்கள் மத்தியில் நீர்ப்பாசன வசதிகள் மீது வேறுபட்ட மனவுணர்வுகளை வேளாண்மையின் வகையினால் அடையாளம் காண முடியும். நீர்ப்பாசன வசதிகள் ஒரு போதுமே நிறைவிலானதல்ல எனத் தெரிவித்தவர்களில் ஆகக்கூடுதலான சதவீதத்தினர் (16.3 சதவீதம்) பகுதி நேரக் கமக்காரர்களாவர் (அட்டவணை 6.14). ஒரு போதும் நிறைவிலானதல்ல மற்றும் சிறிதளவு நிறைவிலானது என்ற ஒன்றுதிரண்ட சதவீதமானது முழு நேரக் கமக்காரர்களின் 56.1 சதவீதத்திலிருந்து பகுதி நேரக் கமக்காரர்களின்

67.3 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. எனவே, நீர்ப்பாசன வசதிகளின் பற்றாக்குறையினால் வேளாண்மையில் இளைஞர்களுக்கான அழுத்துகின்ற காரணியொன்றாக இது செயற்பட்டதாக விவாதிக்கப்பட முடியும்.

**அட்டவணை 6.14: நீர்ப்பாசன வசதிகளின் நிறைவின் மட்டம்**

| நிறைவின் மட்டம் | வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் சதவீதம் | | | மொத்த பதிலிறுப்பாளர் களின் சதவீதம் (N=525) |
|---|---|---|---|---|
| | முழு நேரக் கமக்காரர் கள் (N=148) | பகுதி நேரக் கமக்காரர் கள் (N=98) | முழு நேரக் கமக்காரர் கள் (N=148) | |
| ஒரு போதும் நிறைவிலானதல்ல | 9.5 | 16.3 | 7.1 | 10.2 |
| சிறிதளவு நிறைவிலானது | 46.6 | 51.0 | 59.0 | 47.2 |
| அதிகளவு நிறைவிலானது | 40.6 | 31.6 | 33.8 | 38.7 |
| அவசியமில்லை | 3.4 | 1.0 | 0.0 | 3.8 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

### 6.2.10 சமூகப் பெறுமதிகள்

நாட்டுக்காக கமக்காரர்கள் உணவை உற்பத்தி செய்த போதிலும், சமூகத்திலிருந்து அல்லது முறைமையான நிறுவனங்களிலிருந்து அவர்கள் அங்கீகாரத்தைக் கொண்டிருக்கவில்லையென பெருமளவு இளைஞர்களும், கமக்காரர் பிரதிநிதிகளும் விளக்கினர். கமக்காரர்களின் கௌரவத்தையும், முக்கியத்துவத்தையும் விளக்கமளிக்கின்ற ஒரு சிங்கள பொன்மொழியொன்று (தனது சேற்றைக் கழுவிய பின்னர் அரச பதவிக்கு கமக்காரர் பொருந்துகின்றார்) இருந்த போதிலும், தற்போதைய சூழமைவில் சமூகமும் அத்துடன் அதிகாரவர்க்கத்தினரும் கமக்காரர்களை ஏழைகளாகவே பாவிக்கின்றனர் என அவர்கள் குறிப்பிட்டனர். இளைஞர்களின் கூற்றுப்படி, தனது தொழிலாக வேளாண்மையை யாரேனும் ஒருவர் தெரிவுசெய்தால், அவர்கள் முறைமையான நிறுவனமொன்றுக்குச் செல்லும் போது (அரசாங்க அல்லது தனியார் துறையின் வேறுபாடுகளின்றி) அவர்கள் சிறந்த கல்வித் தகைமைகளையும் அத்துடன் அலுவலர்களை விட திருப்திகரமான வருமானத்தையும் கொண்டிருந்த போதிலும், அலுவர்களது கீழ்ப்படிவோர்களாகவே அவர்கள் நடத்தப்படுகின்றனர்.

சில இளம் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளவாறு, தொழிலொன்றாக வேளாண்மையில் ஈடுபடுதல் சில வேளைகளில் திருமணத்திற்கு தகுதியற்றதாகக் கருதப்படுகின்றது. அலுவலக உதவியாளர் அல்லது வலதுகுறைந்த யுத்த வீரர் அல்லது சிவில் பாதுகாப்புப் படையின் உறுப்பினர் (ஊர்க்காவல் படையினர்) போன்ற தொழில்கள் கூட நிரந்தரமான மாதாந்த வருமானத்தினதும் மற்றும் சமூக பாதுகாப்பினதும் காரணமாக சிறப்பாகக் கருதப்பட்டன. இவ்வாறாக இளைஞர்கள் காணியையும், வேறு வசதிகளையும் கொண்டிருந்த போதும் கூட, தொழிலொன்றாக வேளாண்மையில் ஈடுபடுவதை விட 'சிறந்த தொழில்களைத்' தேடுவதற்கு முனைகின்றனர்.

தோதான ஓய்வூதியத் திட்டத்தை அல்லது சமூகப் பாதுகாப்பு முறைமையை கமக்காரர்கள் கொண்டிருக்காதபடியினால், பெரிதும் அனேகமாக அவர்கள் ஊறுபடுவதற்கு முனைகின்றனர். அவர்கள் போதியளவு காணியைக் கொண்டிருக்காவிட்டால் அல்லது சிறிய காணித்துண்டுகளில் உயர் தொழில்நுட்பத்துடன் வேளாண்மையில் ஈடுபடாவிட்டால் சூழ்நிலை மிகவும் சிக்கலாக விளங்குகின்றது. எனவே, யாரேனும் ஒருவர் காணியைக் கொண்டிருந்தால் கூட, இரண்டாம்நிலையிலான வருமான மூலமொன்றாக அதைச் செய்கைபண்ணுவதே சிறந்தது என அவர்கள் எண்ணுகின்றனர்.

## 6.3 வேறு நிறுவனரீதியிலான பொறிமுறைகள்

சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர்களின் பங்கெடுப்பை மேம்படுத்துவதற்கு அடுத்தடுத்த பதவிக்கு வந்த அரசாங்கங்களும் மற்றும் மாகாண சபைகளும் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவே, நேரத்திற்கு நேரம் இளம் கமக்காரர் தாபனங்களைத் தாபித்தல் போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது. எனினும், இந் நிகழ்ச்சித்திட்டங்கள் சில பலவீனங்களையும் அத்துடன் பலங்களையும் கொண்டிருந்தன. இந்த அம்சத்தை விடய ஆய்வுகள் இலக்கம் 6.2 மற்றும் 6.3 எடுத்துரைக்கின்றன.

**விடய ஆய்வு 6.2: ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனம்**

நொச்சியாகமவில் உள்ள ரன்னொருவ பகுதியின் இளைஞர்களின் பங்கெடுப்புடன் 1992இல் ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனம் அமைக்கப்பட்டது. எனினும், அது தாபிக்கப்பட்ட பின்னர் 6 வருடங்களுக்கு மட்டுமே தொழிற்பட்டது. அதன் மோசமான தொழிற்படுத்தலின் காரணமாக நேரத்திற்கு நேரம் தாபனத்திலிருந்து தாபக உறுப்பினர்கள் வெளியேறினர். 2007இல் 39 உறுப்பினர்களுடன் தாபனம் மீள்-தாபிக்கப்பட்டது.

தற்போது 14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதிலான 15 உறுப்பினர்களைத் தாபனம் கொண்டுள்ளது. ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனத்தின் உறுப்பினர்கள் மூன்று வயது வகுதிகளாக அதாவது 14-18 வயது, 18-25 வயது மற்றும் 25-30 வயது என பிரிக்கப்பட முடியும். விதியொன்றாக தாபனத்தின் சபை உறுப்பினர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக விளங்க வேண்டும். அது தாபிக்கப்பட்ட போது தாபனத்தில் ஆண் உறுப்பினர்களே இருந்த போதிலும், தாபனத்தின் தற்போதைய உறுப்பினர்கள் யாவருமே பெண்களாவர். வேறு தொழில்களைப் பெற்றதனால் புதிதாக அமைக்கப்பட்ட தாபனத்தின் ஆண் உறுப்பினர்கள் தாபனத்திலிருந்து விலகிச்சென்றனர். இதன் விளைவாக தற்போது 15 பெண் உறுப்பினர்கள் மட்டுமே தொடர்ந்துமிருக்கின்றனர்.

தாபனத்தின் உறுப்புரிமைக் கட்டணம் ரூபா 10 என்பதுடன், மாதாந்தக் கூட்டங்களில் தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் பங்கெடுக்காவிட்டால், அவர்கள் ஒவ்வொரு முறையும் வராமல் இருக்கும் போது 25 ரூபாவை அபராதமொன்றாகச் செலுத்த வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களின் நிமித்தம் உறுப்பினர் ஒருவர் வராவிட்டால், இந்த அபராதம் பொருத்தமானதல்ல. வழமையாக கூட்டங்கள் தாபனத்தின் தலைவரின் வீட்டிலேயே நடைபெறுகின்றன.

அவசியப்பட்டால் மாதாந்தக் கூட்டங்களில் பங்கெடுப்பதற்கு கமத்தொழில் போதனாசிரியரை அழைப்பதற்கான வாய்ப்பொன்றை அவர்கள் கொண்டுள்ளனர். தாபனத்தின் தற்போதைய நிதியின் பெறுமதி ரூபா 36,000 என்பதுடன், வேளாண்மைக் காலத்தில் 5 சதவீத மாதாந்த வட்டி வீதத்தில் இந் நிதியிலிருந்து கடனொன்றாக உறுப்பினர்களுக்கு பணம் வழங்கப்படுகின்றது. கடனின் ஆகக் கூடுதலான எல்லை ரூபா 2,900 ஆகும். கடன்களைப் பெற்ற உறுப்பினர்கள் மூன்று மாதங்களினுள் வட்டியுடன் தொகையை மீளச்செலுத்த வேண்டும். உறுப்பினரொருவர் மூன்று மாதங்களினுள் கடனை மீளச்செலுத்துவதற்கு தவறினால், வட்டி விகிதம் பத்து சதவீதத்திற்கு அதிகரிக்கும் என்பதுடன், ஆறு மாதங்களினுள் கடனை மீளச்செலுத்துவதற்கான கடப்பாட்டினை அவர்கள் கொண்டுள்ளார்கள். எனினும், நொச்சியாகம மக்கள் வங்கியில் தமது சொந்த வங்கிக் கணக்கினை ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனம் கொண்டுள்ளதுடன், நடைமுறையிலான கணக்கு மீதி ரூபா 4,000 மட்டுமேயாகும்.

உறுப்பினர்களாக சில நன்மைகளை ரன்னொருவ இளம் கமக்காரர் தாபனத்தின் உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடியும். 2008இல் ஓர் ஏக்கருக்கு தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உழுந்து விதைகள் வழங்கப்பட்டன. 2007இல் ஓர் ஏக்கர் சோளச் செய்கைக்காக சலுகையிலான விலையில் அவர்களுக்கு உரம் வழங்கப்பட்டது. 2011 டிசம்பரில் நெல் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த ஆறு உறுப்பினர்களுக்கு இலவசமாக அரிசி ஆவியில் வேக வைக்கும் பீப்பாய்கள் வழங்கப்பட்டன. எனினும், இந்த பீப்பாய்களைப் பயன்படுத்தி அரிசியை ஆவியில் வேக வைப்பது மீதான பயிற்சி இன்னுமே வழங்கப்படவில்லை. இந்த நன்மைகளுக்குப் புறம்பாக, கூட்டுப்பசளை தயாரித்தல் மற்றும் பெரிய வெங்காயச் செய்கை ஆகியன மீது மகாஇலுப்பள்ளமை பண்ணை மற்றும் கன்னொருவ பண்ணை ஆகியவற்றில் கமக்காரர் தாபனத்தின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் விசேட பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். இந்தப் பயிற்சிகளை தோதான வழியொன்றில் உறுப்பினர்கள் பயன்படுத்துகின்றார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு கமத்தொழில் போதனாசிரியர் நேரத்துக்கு நேரம் அவர்களது வயல்களுக்கு வருகைதருகின்றார். எனினும், கமத்தொழில் போதனாசிரியர் பாரிய பகுதியொன்றை உள்ளடக்க வேண்டும் என்பதனால், அடிக்கடி வருகை தருவதற்கான நிலையொன்றில் அவர் இருக்கவில்லை.

மேலும், 2007இல் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து உணவு பதப்படுத்தல் மீது பயிற்சிகளை அவர்கள் பெற்றுள்ளனர். இப் பயிற்சியின் கீழ் இயற்கைப் பழப் பானங்கள் மற்றும் பிஸ்கட்கள் ஆகியனவற்றைத் தயாரிப்பது மீது அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அத்துடன் இந்த உற்பத்திப்பொருட்களின் பொதிப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் மீதான பயிற்சிகளையும் அவர்கள் பெற்றுள்ளனர். இந்தப் பயிற்சிகளை பெற்றவுடனேயே, சில உறுப்பினர்கள் பிஸ்கட்களை தயாரித்து, அவற்றைப் பொதிப்படுத்தி தமது அயலவர்களுக்கு விற்பனை செய்தனர். அரிசி மாவைப் பயன்படுத்தி பிஸ்கட்டுக்களைப் பதப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த உறுப்பினர்கள் ஒவ்வொரு பொதிக்கும் 20 ரூபாவை இலாபமொன்றாகப் பெற முடியும். எனினும், அறுவடைக்குப் பின்னர் போன்ற சில காலங்களில் அந்த உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அவர்களது அயலவர்கள் பணத்தைக் கொண்டிருந்ததனால் உற்பத்திப்பொருட்களை அவர்களினால் விற்க முடிந்தது. உற்பத்திப்பொருளுக்கு தோதான சந்தை இல்லாததினால் பெருமளவு நேரங்களில் உற்பத்திப்பொருட்களை விற்பது கஷ்டமாகவிருந்தது. எனினும், செய்கை மற்றும் அறுவடைக் காலங்களின் போது அவர்கள் அத்தகைய உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. எனவே, பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக் காலங்களின் பின்னர் பிஸ்கட்களையும், வேறு பொருட்களையும் தயாரிப்பதற்கு அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட போதிலும், அவற்றைத் தயாரிக்கும் நடைமுறையை சில உறுப்பினர்கள் மறந்துவிட்டனர்.

கமக்காரர் புதிர் போட்டி நிகழ்ச்சியில் பங்கெடுப்பதே கமக்காரர் தாபனத்தின் இன்னொரு பிரசித்தமான செயற்பாடாகும். இது இளம் கமக்காரர்களின் வேளாண்மை அறிவை அளவிடுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சியில் வேறுபட்ட இளம் கமக்காரர் தாபனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு இளம் கமக்காரர்களை அவர்கள் சந்தித்து தமது அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். எனினும், பெருமளவு தருணங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதில் உறுப்பினர்கள் ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மை நிலவிய போதிலும், நிகழ்ச்சி நடப்பதற்கு முதல் தினத்திலேயே இந் நிகழ்ச்சிகள் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. நீற்றுப்பூசணிக்காய், பூசணிக்காய், பச்சை மிளகாய், சோளம், உழுந்து ஆகியனவே ரன்னொருவ பகுதியில் செய்கை பண்ணப்படும் பாரிய பயிர்களாகும். அதிகரித்த உற்பத்தி ஆகுசெலவின் காரணமாக அறுவடையின் இலாபமும் குறைவடைந்துள்ளது. தமது குறைந்தபட்ச அனுபவத்துடன் மட்டுமே வேளாண்மையை தாபனத்தின் உறுப்பினர்கள் செய்கின்றனர். இதனால் அறுவடையின் தரத்தைப் பாதிக்கின்ற தோதான முறைகளை பயன்படுத்தாமல் செய்கை பண்ணுவதில்லை. வேறெங்கிருந்தாவது போதிய அறிவைப் பெறுவதற்கான இயலாமையின் காரணமாக, வாழ்வாதாரச் செயற்பாடாக வேளாண்மையை விருத்திசெய்வதற்கு பெருமளவு உறுப்பினர்களில் தற்போதைய வேளாண்மை அறிவு போதுமானதல்ல.

சிறந்த வழியொன்றில் வேளாண்மையைச் செய்வதற்காக தோதான வழிகாட்டலையும், பயிற்சியையும் கொண்டிருப்பதனை ரன்னொரு இளம் கமக்காரர் தாபனத்தின் உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும், இளம் கமக்காரர்களாக இதுவரை அவர்கள் பெற்றிருக்காத புதிய அறிவையும், புதிய பயிர்களையும் மற்றும் புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்களையும் பெற்று, வெற்றிகரமான கமக்காரர்களாக விளங்குவதனை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**விடய ஆய்வு 6.3: மொனராகல மாவட்டத்தில் கெமுனு இளம் கமக்காரர் தாபனம்**

2002இல் கெமுனு இளம் கமக்காரர் தாபனம் தாபிக்கப்பட்டதுடன், தாபனத்தின் தற்போதைய உறுப்புரிமை 25 ஆகும். எனினும், மொத்த உறுப்புரிமையில், தற்போது 18 உறுப்பினர்கள் மட்டுமே தீவிரமாகப் பங்கெடுக்கின்றனர். தாபனத்தின் உறுப்புரிமையை 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வகுதியிலுள்ள இளைஞர்கள் பெற முடியும். 2010இல் ஊவா மாகாணத்தின் சிறந்த இளம் கமக்காரர் தாபன விருது கெமுனு இளம் கமக்காரர் தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஊவா மாகாணத்தில் புதிர் போட்டி நிகழ்ச்சியில் இரண்டாவது பரிசை வெற்றியீட்டியதுடன், மாகாணத்தில் வேறு இளம் கமக்காரர் தாபனங்களை விட பொது மற்றும் சேமநலன் பணியில் தீவிரமாக ஈடுபட்டமை ஆகியனவே இந்த சாதனைக்கான காரணங்களாகும்.

கமத்தொழில் போதனாசிரியர் ஊடாக இளம் கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களுக்கும் அத்துடன் வயது வந்தோருக்கும் விதைகளின் பங்கீடே தாபனத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். இதன் பிரகாரம் மிளகாய், உழுந்து, பாசிப்பயறு, கௌபீ விதைகள் கமக்காரர் தாபனத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, நிலக்கடலைச் செய்கை பண்ணும் உறுப்பினர்கள் கமக்காரர் தாபனத்தில் உறுப்பினர்களாக இருக்கும் நன்மையொன்றாக விதைகளுக்காக 50 சதவீதத்தைக் கொண்ட பங்களிப்பினைப் பெற்றுள்ளார்கள்.

கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்கள் கூட்டுப்பசளை தயாரிப்பு மீது மூன்று தடவைகள் பயிற்சியைப் பெற்றுள்ளனர். இதன் விளைவொன்றாக, தமது சொந்தப் பண்ணைகளில் பயன்படுத்துவதற்காக அவர்கள் கூட்டுப்பசளையை உற்பத்தி செய்கின்றனர். எனினும், வியாபாரமொன்றாக கூட்டுப்பசளை தயாரிப்பதை அவர்கள் மேற்கொள்வதில்லை. மேலதிகமாக, கமக்காரர் தாபனத்தின் உறுப்பினர்கள் வீதிகளையும், ஆலயங்களையும் தூய்மைப்படுத்தல் மற்றும் விருத்திசெய்தல் ஆகியன உட்பட சிரமதான இயக்கங்களை ஒழுங்குபடுத்தி, அதில் பங்கெடுக்கின்றனர்.

இடையிடையே கமத்தொழில் போதனாசிரியர் அவர்களது வயல்களுக்கு வருகை தந்து பயிற்சிகளை வழங்குகின்றார். மேலதிகமாக, கமத்தொழில் தொடர்பிலான போதியளவு பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மேலும், கம-அடிப்படையிலான கைத்தொழில்கள்/வியாபாரங்கள் மீது பயனுறுதிவாய்ந்த பயிற்சிகளை உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், அவர்கள் ஒருபோதுமே அத்தகைய பயிற்சியைப் பெறவில்லை. மேலும், தமது உற்பத்திப்பொருட்களுக்கு தோதான சந்தையொன்றைக் கண்டறிதலும், நம்பிக்கையான இடமொன்றிலிருந்து தரத்திலான விதைகளை பெறுவதில் உள்ள கஷ்டங்களும் அவர்களினால் முகங்கொடுக்கப்படும் பாரிய சவால்களாகும்.

## 6.4 முடிவுரை

இளம் பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, சந்தை வசதிகள், கமத்தொழில் தகவல், செய்கைக்குரிய காணிகள், பயிர் காப்புறுதி, விஸ்தரிப்புச் சேவைகள் ஆகியவற்றின் அடையுந்தன்மை மற்றும் கிட்டுந்தன்மை, கடன் மற்றும் நிதி வசதிகளின் அடையுந்தன்மை, தமது உற்பத்திப்பொருட்களுக்கான குறைந்த உற்பத்தியிடத்திலான விலை, பயிற்சி வசதிகளும், புதிய தொழில்நுட்பமும் கிட்டாதிருத்தல் அல்லது அடைதலின் பற்றாக்குறை, பாசன நீரின் மட்டுப்படுத்தப்பட்ட கிட்டுந்தன்மை, விதைகளினதும், கம இரசாயனங்களினதும் உயர்ந்த ஆகுசெலவு மற்றும் குறைந்த தரம், கமத்தொழில் இயந்திராதிகளின் உயர்ந்த ஆகுசெலவு, கமத்தொழில் இயந்திராதிகளை கேள்வுக்கெடுப்பதற்கான உயர்ந்த ஆகுசெலவு ஆகியன தொடர்பான பிரச்சனைகளுக்கு அவர்கள் முகங்கொடுத்தனர். மேலும், பொருத்தமான சமூக பாதுகாப்புத் திட்டம் அல்லது ஓய்வூதியத் திட்டம் கிட்டாமை, கமத்தொழில் தொடர்பிலான தொழில்களின் சமூக அங்கீகாரமின்மை அல்லது பற்றாக்குறை ஆகியன வேளாண்மையிலிருந்து இளைஞர்களை வெளியேற்றுவதற்கு அழுத்துகின்ற காரணிகளாக செயற்படுகின்றன.



පුස්තකාලය
LIBRARY
ஹெ.ගො.ப.ஐ.ஆ
HARTI

# அத்தியாயம் ஏழு

## கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

### 7.1 அறிமுகம்

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் தமது பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு இளம் பதிலிறுப்பாளர்களினால் செய்யப்பட்ட ஆலோசனைகளை இந்த அத்தியாயம் கலந்துரையாடுகின்றது. மேலதிகமாக, சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்காக, கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளின் கருத்துநோக்குகளையும் அத்தியாயம் விளக்குகின்றது.

### 7.2 பயிர்ச் செய்கையில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்

அட்டவணை 7.1இல் காட்டப்பட்டுள்ளவாறு, ஒரு தொகையிலான ஆலோசனைகளை பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளனர். ஒரு தொகையிலான ஆலோசனைகள் இருந்த போதிலும், அவர்களது உற்பத்திப்பொருட்களின் சந்தைப்படுத்தல் பிரச்சனைகளுக்கே அவற்றில் பெரும்பாலானவை இணைந்திருந்தன. தமது உற்பத்திப்பொருளுக்கு நியாயமான/சிறந்த விலைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்ணளவாக 43 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொல்லிய அதேவேளை, வேளாண்மையின் செலவிலான அல்லது கடுமையான வேலைக்கான நன்மைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையை எடுப்பது அவசியமாகும் என அனேகமாக 15 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், கிராம அல்லது பிரிவு மட்டத்தில் சந்தை வசதிகளை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பான அமைச்சுக்கள் நடவடிக்கையை எடுப்பது அவசியமானதாகும் என 29.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் மாவட்டத்தில் செய்கைபண்ணப்படும் பாரிய பயிர்களைக் கரிசனைக்கெடுத்து உணவுப் பதப்படுத்தல் தொழிற்சாலைகளைத் தாபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென அவர்களில் சிலர் சுட்டிச்சொன்னார்கள். ஆய்வுப் பகுதிகளில் நோக்குக் குழு கலந்துரையாடல்களை ஆராய்ச்சிக் குழாம் நடத்திய போது கமக்காரர்களின் பிரதிநிதிகளினாலும் இக்கருத்து உறுதிப்படுத்தப்பட்டது. தரமான உள்ளீடுகளை, விசேடமாக பூச்சிநாசினிகள், களைநாசினிகள் மற்றும் திருந்திய விதை வகைகள் ஆகியனவற்றை தம்மால் பெற முடியாதிருப்பதாக பெருமளவு இளம் பதிலிறுப்பாளர்கள் வலியுறுத்தினர். மேலும், விதைப் பொதியில் அல்லது தகரத்தின் விபரச்சிட்டையில் அதிகபட்ச விலைகள் அச்சிடப்பட்ட போதிலும், பயிரிடும் காலத்தில் அல்லது உச்ச கிராக்கியிலான காலத்தில் விதை வகைகளுக்கு உயர் தொகையிலான விலையை கமக்காரர்கள் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். உண்மையில் உடனடியாகவே பணத்தைச் செலுத்தி கம-இரசாயனங்களை வாங்குவதற்காக தாம் செல்கின்ற போது விற்பனையாளர் கழிவு விலைகளை வழங்குகின்றார்கள். ஆனால், அவர்கள் கடன் மீது அவற்றை வாங்கும் போது அவர்கள் ஏதேனும் கழிவினை வழங்குவதில்லையென பெருமளவு பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டார்கள். மேலதிகமாக, கடனை அவர்கள் இணக்கும் போது, விற்பனையாளருக்கு வட்டியாக சிறு அளவு தொகையிலான பணத்தை அவர்கள் செலுத்த வேண்டியிருந்தது. இந்தப் பிரச்சனைகளின் அடிப்படையின் மீது, சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதற்கான அரசாங்கத்தின் அவசியம் (29.7 சதவீதம்), வரி விடுமுறைகளின் ஏற்பாடுகள், மற்றும் விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்தல் (2.5 சதவீதம்) மற்றும் உள்ளீடு விலைகளின் குறைப்பு (2.5 சதவீதம்) போன்ற சந்தைப்படுத்தல் பிரச்சனைகள் தொடர்பிலான வேறு சில ஆலோசனைகளை இளைஞர்கள் முன்வைத்தனர்.

முன்னைய பகுதியில் விளக்கமளிக்கப்பட்டவாறு, வேளாண்மையிலிருந்து இளம் சந்ததியினர் மீளப்பெறுவதற்கான பாரிய காரணமொன்றாக சந்தைப்படுத்தலை கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகள் அடையாளம் கண்டனர். எனவே, சந்தைப்படுத்தல் பிரச்சனைகளைத் தீர்த்து, அதைத் தொடர்ந்து கமத்தொழில் துறையில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்காக ஒரு தொகையிலான நடவடிக்கைகளை அவர்கள் சுட்டிச்சொன்னார்கள். இந்த ஆலோசனைகள் வருமாறு: கூட்டுறவுச் சங்கங்களுடனும், கமக்காரர் தாபனங்களுடனும் இணைப்புக்களைத் தாபித்தல், அறுவடைக்குப் பிந்திய அறிவை வழங்குதல், சகல பயிர்களுக்கும் உத்தரவாத விலைகளை அமுல்படுத்தல், கமத்தொழில் உள்ளீடுகளுக்கு கட்டுப்பாட்டு விலையை ஒழுங்குபடுத்தல், பிராந்திய மட்டத்தில் பொருளாதார நிலையங்களைத் தாபித்தல், அறுவடை நேரத்தில் கமத்தொழில் பண்டங்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தல்/தடைசெய்தல், சந்தையில் உயர் தரத்திலான விதைகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்தல், மேன்மிகையிலான உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கு கருத்திட்டத்தை தயாரித்து அமுல்படுத்துதல், அத்துடன் அடிமட்டத்தில் கமக்காரர் தாபனங்களுடன் அதை இணைத்தல், தோதான திட்டமொன்றின் கீழ் செய்கைபண்ணுதல், சந்தையில் விதை வகைகளின் மேன்மிகையிலான விநியோகத்தை கட்டுப்படுத்தல், பகுதியின் தேவைகள் மீதான அடிப்படையில் கமநல அபிவிருத்தி நிலையங்களினால் வழங்கப்படும் கடன் வசதிகளை (உள்ளீடு) அதிகரித்தல்.

சந்தைப்படுத்தல் பிரச்சனைகளைத் தீர்ப்பதை நோக்கிய ஆலோசனைகளுக்கு புறம்பாக, பயிற்சித் தேவைகள் தொடர்பிலான சில வேறு ஆலோசனைகளையும் இளைஞர்கள் முன்வைத்துள்ளனர். கமத்தொழில் துறையில் ஒரு தொகையிலான தொழில், வியாபார முயற்சி மற்றும் வியாபார வாய்ப்புக்கள் ஆகியன கிட்டுகின்ற போதிலும், அவை பற்றி தாம் தெளிவான கருத்தொன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அவர்கள் பின்தங்கிய கிராமியப் பகுதிகளில் வாழ்வதனால் தகவலைப் பெறுவது கஷ்டமாகவுள்ளதாக அண்ணளவாக கால்வாசிப் பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். எனவே, இளைஞர்களின் கமத்தொழில் தொழில் மற்றும் வியாபார வாய்ப்புக்கள் ஆகியன தொடர்பில் விழிப்பியல் திட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 26.5 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். இளம் பதிலிறுப்பாளர்களினாலும் அத்துடன் கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளினாலும் வெளிப்படுத்தப்பட்டவாறு, விஸ்தரிப்பு வசதிகளின் பற்றாக்குறையின் பிரச்சனைகளுக்கு கமக்காரர்கள் முகங்கொடுத்துள்ளனர். எனவே, இளைஞர்களுக்கு செயன்முறையிலான அமர்வுகள் உட்பட நவீன வேளாண்மைத் தொழில்நுட்பத்தை வழங்குவதை 21.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொன்னார்கள். சேதன கமத்தொழில் உட்பட வேளாண்மை தொடர்பிலான பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கம், மாகாண சபைகள் அல்லது ஏதாவது வேறு தொடர்பான முகவராண்மை ஆகியவற்றுக்கு அவசியமென மேலும் 21.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொன்னார்கள். செயன்முறை அமர்வுகள் போன்று தமது கிராம மட்டத்தில் இவ்வகையான பயிற்சித் திட்டத்தை வழங்குவது சிறந்ததாகுமென அவர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்டனர். வேளாண்மையின் சிறந்த செயற்பாடுகளையும், மாதிரிகளையும் அவதானிப்பதற்கான வாய்ப்பினை வழங்குவதன் ஊடாக இளைஞரை செயல்நோக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கு அல்லது வேறு தொடர்பான முகவராண்மைகளுக்கு அவசியமென மேலும் 7.9 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். இளைஞர்களுக்கு அரசாங்க அல்லது தனிப்பட்ட பண்ணைகளுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கல்விசார் சுற்றுலாக்கள் ஊடாக இது செய்யப்பட முடியும். முகாமைத்துவம், விசேடமாக பண்ணை முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சி வசதிகளை வழங்குவதன் ஊடாக, இளைஞரின் பங்கெடுப்பு அதிகரிக்கப்பட முடியுமென அண்ணளவாக 7 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொன்னார்கள்.

கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளின் கூற்றுப்படி, விஸ்தரிப்பு தொடர்பிலான பாரதூரமான பிரச்சனைகளுக்கு கமக்காரர்கள் முகங்கொடுத்துள்ளார்கள். அதிகாரத்தின் பரவலாக்கத்தின் அமுலாக்கத்தின் பின்னர் பொறிமுறை கூறுபடுத்தப்பட்டதன்

காரணமாக, தோதான விஸ்தரிப்புச் சேவைகளைப் பெறுவதற்கு கமக்காரர்களுக்கு முடியாதுள்ளதாக முன்னைய ஆராய்ச்சிகள் விவாதித்துள்ளன (தமயந்தி மற்றும் நாணயக்கார, 2008). மேலும், பயிர் நோய்களுக்கான ஆலோசனை கமக்காரர்களுக்கு அவசியப்பட்ட போது, அலுவலர்களின் பற்றாக்குறையினதும், அடைதல் தன்மைகளினதும் பிரச்சனைகளின் காரணமாக கம-இரசாயன வர்த்தகர்களுடன் தாம் ஆலோசனை நடத்துவதாக அவர்கள் குறிப்பிட்டனர். எனவே, விஸ்தரிப்பு அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அத்துடன் விஸ்தரிப்புச் சேவையை மேம்படுத்தி விஸ்தரிப்புச் சேவைகளுக்காக தோதான மதிப்பாய்வு முறைமையை அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதும் அரசாங்கத்திற்கு அவசியமாகுமென கமக்காரர் பிரதிநிதிகள் சுட்டிச்சொன்னார்கள்.

சிறுஉடமையாளர் கமத்தொழில் துறையில் தமது பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு மீள்-பங்கீட்டுக் கொள்கைகள் தொடர்பில் சில ஆலோசனைகளை இளைஞர்கள் முன்வைத்தனர். கமத்தொழில் இயந்திராதிகள், நீர்ப்பாசனம் மற்றும் பொருத்தமான காணிகள் போன்ற அடிப்படை வசதிகளை இளைஞர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என அனேகமாக 50 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொன்ன அதேவேளை, இளைஞர்களுக்கு கமத்தொழில் காணிகளையும் மற்றும் இயந்திராதிகளையும் பங்கிடுவதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கு அவசியமாகும் என முறையே 3.8 சதவீதத்தையும் மற்றும் 3.2 சதவீதத்தையும் கொண்ட பதிலிறுப்பாளர்கள் குறிப்பாக சுட்டிச்சொன்னார்கள். சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிக்கும் முறையொன்றாக அரசாங்கத்தினால் மானியங்கள் வழங்கப்பட வேண்டுமென 34.4 சதவீதத்தைக் கொண்ட இளம் பதிலிறுப்பாளர்கள் சுட்டிச்சொன்னார்கள். இது ஒவ்வொரு பயிர்களுக்கும், உரம், விதைகளுக்கும், நாற்றுக்களுக்கும், பூச்சிநாசினிகளுக்கும் மற்றும் களைநாசினிகளுக்கும் மானியத்திலான விலை என்பவற்றை உள்ளடக்குகின்றது. வெளிக்கள அளவீட்டுக் காலத்தின் போது, அரசாங்க உர மானியத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட போதிலும், இது நெல்லைத் தவிர வேறு பயிர்களுக்கு வழங்கப்படவில்லை.

பொதுமக்களின் நிதியங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களைக் கண்காணிப்பதும், மதிப்பாய்வதும் அரசாங்கத்திற்கு அவசியமாகும் எனக் கூறிய 10 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள், அரசாங்கத் திட்டங்களின் கண்காணிப்பையும், மதிப்பாய்வையும் நோக்கி ஆலோசனைகளை முன்வைத்தனர். பாடசாலை மட்டத்திலிருந்தே வேளாண்மையை நோக்கி சிறந்த மனப்போக்குகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அண்ணளவாக 15 சதவீதப் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். கமக்காரர் தாபனங்களின் பெருமளவு பிரதிநிதிகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, தொழிலொன்றாக வேளாண்மைக்கு சமூகத்திலிருந்து போதியளவு மரியாதையை கமக்காரர்கள் பெறுவதில்லை.

மேலதிகமாக, கமக்காரர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது ஆகியன அரசாங்கத்திற்கு அவசியமானது என கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். இது தொடர்பில் தற்போதுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பயிர் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் தோதான மதிப்பாய்வுக்கான அவசியமொன்று உள்ளதாகவும், இதனால் அவை மேம்படுத்தப்பட முடியுமெனவும் அவர்கள் சுட்டிச்சொன்னார்கள்.

**அட்டவணை 7.1: சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு பதிலிறுப்பாளர்களின் ஆலோசனைகள்**

| ஆலோசனை | எண். (N=529) | மொத்த மாதிரியின் சதவீதம் |
|---|---|---|
| அடிப்படை வசதிகளை வழங்குதல் | 264 | 49.9 |
| உற்பத்திப்பொருட்களுக்கு நியாயமான/சிறந்த விலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 226 | 42.7 |
| அரசாங்கத்திலிருந்து மானியங்களை வழங்குதல் | 182 | 34.4 |
| சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துதல் | 157 | 29.7 |
| சந்தை வசதிகளை நிச்சயப்படுத்துதல் | 156 | 29.5 |
| இளைஞர்களுக்கு கமத்தொழில் தொடர்பிலான வேறு தொழில்களின் மீது விழிப்பியல் திட்டத்தை நடத்துதல் | 140 | 26.5 |
| இளைஞருக்கு வேளாண்மை தொடர்பிலான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் | 113 | 21.4 |
| இளைஞருக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல் | 113 | 21.4 |
| பாடசாலை மட்டத்திலிருந்து வேளாண்மையை நோக்கி சிறந்த மனப்போக்குகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் | 79 | 14.9 |
| கமக்காரர்களின் செலவினங்களுக்கான/கடுமையான வேலைக்கான நன்மைகளை உறுதிப்படுத்தல் | 79 | 14.9 |
| அரசாங்கத்தினால் உதவியும், வழிகாட்டலும் வழங்கப்படுதல் | 53 | 10.0 |
| அரசாங்கத்தினால் நடத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல் | 47 | 8.9 |
| சிறந்த செயற்பாடுகளினதும், மாதிரிகளினதும் ஊடாக இளைஞர்களைச் செயல்நோக்கப்படுத்தல் | 42 | 7.9 |
| முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சியை வழங்குதல் | 35 | 6.6 |
| காணியைப் பங்கிடுதல் | 20 | 3.8 |
| அரசாங்கத்தினால் கமத்தொழில் இயந்திராதிகள் வழங்கப்படுதல் | 17 | 3.2 |
| வரி விடுமுறைகளை வழங்குதலும், விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துதலும் | 13 | 2.5 |
| உள்ளீடு விலைகளைக் குறைத்தல் | 13 | 2.5 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அத்தியாயம் ஒன்றில் முன்வைக்கப்பட்டுள்ளவாறு, பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து 28 கமத்தொழில் பட்டதாரிகளையும் மற்றும் பட்டதாரி மாணவர்களையும் மாதிரி உள்ளடக்குகின்றது. சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான அவர்களின் ஆலோசனைகள் அட்டவணை 7.2இல் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலோசனைகள் மொத்த பதிலிறுப்பாளர்களின் ஆலோசனைக்கு ஒத்தவையாகும்.

**அட்டவணை 7.2: சிறுஉடமையாளர் கமத்தொழில் துறையில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு கமத்தொழில் பட்டதாரிகளினாலும், பட்டதாரி மாணவர்களினாலும் செய்யப்பட்ட ஆலோசனைகள்**

| ஆலோசனை | பதிலிறுப்பாளர்களின் எண். (N=28) | மொத்த கமத்தொழில் பட்டதாரிகளின்/ பட்டதாரி மாணவர்களின் சதவீதம் |
|---|---|---|
| அரசாங்கத்திலிருந்து மானியங்களை வழங்குதல் | 15 | 53.6 |
| வரி விடுமுறைகளை வழங்குதலும், விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துதலும் | 7 | 25.0 |
| அடிப்படை வசதிகளை வழங்குதல் | 12 | 42.9 |
| சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கையை எடுத்தல் | 20 | 71.4 |
| பாடசாலை மட்டத்திலிருந்து வேளாண்மையை நோக்கி சிறந்த மனப்போக்குகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் | 18 | 64.3 |
| கமத்தொழில் தொடர்பிலான வேறு தொழில் வாய்ப்புக்கள் மீது விழிப்பியல் திட்டத்தை நடத்துதல் | 16 | 57.1 |
| வேளாண்மை மீது பயிற்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துதலும், நடத்துதலும் | 7 | 25.0 |
| முகாமைத்துவம் மீது பயிற்சியை வழங்குதல் | 6 | 21.4 |
| இளைஞர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல் | 12 | 42.9 |
| அரசாங்கத்தினால் உதவியும், வழிகாட்டலும் வழங்கப்படுதல் | 7 | 25.0 |
| சிறந்த செயற்பாடுகளினதும், மாதிரிகளினதும் ஊடாக இளைஞர்களைச் செயல்நோக்கப்படுத்தல் | 8 | 28.6 |
| தனியார் துறையுடன் இணைப்புக்களை உருவாக்குதல் | 8 | 28.6 |
| உற்பத்திப்பொருட்களுக்கு நியாயமான/சிறந்த விலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 19 | 67.9 |
| சந்தை வசதிகளை வழங்குதல் | 7 | 25.0 |
| அரசாங்கத்தினால் நடத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தலும், மதிப்பாய்தலும் | 4 | 14.3 |
| கமக்காரர்களின் செலவினங்களுக்கான/கடுமையான வேலைக்கான நன்மைகளை உறுதிப்படுத்தல் | 13 | 46.4 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

அட்டவணை 7.2இல் வழங்கப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம், சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞரின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு மிகவும் முக்கியமான செயற்பாடாக விளங்குவது சந்தைப்படுத்தல் பிரச்சனைக்கான தீர்வே என உயர் சதவீதத்திலான கமத்தொழில் பட்டதாரிகள்/பட்டதாரி மாணவர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக, சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்தல் (71.4 சதவீதம்), உற்பத்திக்கு நியாயமான விலையை வழங்குதல் (67.9 சதவீதம்), வேளாண்மையின் கடுமையான வேலைக்கு போதியளவு நன்மைகளை உறுதிப்படுத்தல் (46.4 சதவீதம்) மற்றும் தனியார் துறையுடன் இணைப்புக்களை உருவாக்குதல் (28.6 சதவீதம்) ஆகியன முக்கியமானவையாக கருதப்பட்டன. எனினும்,

வேளாண்மையை (64.3 சதவீதம்) நோக்கிய மாற்றமடையும் சமூக மனப்பாங்குகளுக்கு அவர்கள் மிகவும் முக்கியமான இடத்தை வழங்கியுள்ளனர்.

## 7.3 கமத்தொழில் கைத்தொழில்களில்/வியாபாரங்களில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்

கமத்தொழில் கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் ஆகியன தொடர்பில் இளைஞரின் சம்பந்தத்தை அதிகரிப்பதற்கு ஒரு தொகையிலான ஆலோசனைகளை இளம் பதிலிறுப்பாளர்கள் வழங்கியுள்ளனர். இந்த ஆலோசனைகள் நான்கு பாரிய வகுதிகளினுள் அதாவது சந்தைப்படுத்தல் பிரச்சனைக்கான தீர்வுகள், கொள்கை மற்றும் சட்டப் பிரச்சனை, பயிற்சித் தேவைகள் மற்றும் சமூகப் பெறுமதிகள் ஆகியவற்றில் வகைப்படுத்தப்பட முடியும்.

சந்தைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் ஆலோசனைகள் பதிலிறுப்பாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன (அட்டவணை 7.3). உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை/இலாபத்தை உறுதிப்படுத்தல் (30.4 சதவீதம்), சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மை அதிகரிக்கப்பட வேண்டும் (9.7 சதவீதம்), தனியார் துறையுடன் இணைப்பினைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் (7.5 சதவீதம்), நாட்டில் உற்பத்தி செய்யப்படக்கூடிய கம அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட /குறைக்கப்பட வேண்டும் (0.6 சதவீதம்) அத்துடன் சந்தை வசதிகளும் மற்றும் சந்தைத் தகவலின் கிட்டுந்தன்மையும், அடையும்தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் (22.6 சதவீதம்) ஆகியனவற்றை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பான முகவராண்மைகளும், நிறுவனங்களும் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

அரசாங்கத்தினாலும் மற்றும் வேறு பங்காளர்களினாலும் இயந்திராதிகள் மற்றும் காணி போன்ற அடிப்படை வசதிகளின் ஏற்பாடு (51.2 சதவீதம்), கைத்தொழில்களுக்கு மானியங்களின் ஏற்பாடு (32.9 சதவீதம்) மற்றும் விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்தல் மற்றும் வரி விடுமுறைகளின் ஏற்பாடு (5.4 சதவீதம்) ஆகியனவே பதிலிறுப்பாளர்களினால் செய்யப்பட்ட கொள்கை மற்றும் சட்ட அம்சங்கள் தொடர்பிலான ஆலோசனைகளாகும். தமது வியாபாரங்களை அல்லது கைத்தொழில்களைப் பதிவுசெய்வதற்கு தாம் முயலும் போது, பலதரப்பட்ட நிறுவனங்களில் ஒரு தொகையிலான பிரச்சனைகளுக்கு தாம் முகங்கொடுப்பதாக சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனவே, விசேடமாக பதிவுசெய்வதற்கு வியாபாரங்களுக்கும், கைத்தொழில்களுக்கும் தொடர்பிலான விதிகளும், ஒழுங்குவிதிகளும் இலகுபடுத்தப்பட வேண்டுமென அவர்கள் ஆலோசனை கூறினர்.

பயிற்சித் தேவைகள் தொடர்பில் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் (31.9 சதவீதம்), இளைஞர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சியை வழங்குதல் (16.9 சதவீதம்), சிறந்த செயற்பாடுகளுக்கும் மற்றும் மாதிரிப் பண்ணைகளுக்கும் வருகைதருவதற்கு கல்விசார் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல் ஊடாக இளைஞரை செயல்நோக்கமளித்தல் (9.9 சதவீதம்), இளைஞருக்கு கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்/வியாபார வாய்ப்புக்கள் சம்பந்தமான விழிப்பியல் திட்டங்களை நடத்துதல் (26.0 சதவீதம்) மற்றும் அரசாங்கத்தினால் உதவியும், வழிகாட்டலும் வழங்கப்படுதல் (10.9 சதவீதம்) போன்ற கருத்துக்களைப் பதிலிறுப்பாளர்கள் ஆலோசனைகளாக வெளியிட்டனர்.

சமூகப் பெறுமதிகள் தொடர்பில் கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களையும், வியாபாரங்களையும் நோக்கி சிறந்த மனப்போக்குகளையும், பெறுமதிகளையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கும், சமூகத்திற்கும் அவசியமானது என பதிலிறுப்பாளர்கள் (10.1 சதவீதம்) ஆலோசனைகளை முன்வைத்தனர். இதே ஆலோசனைகள் அட்டவணை 7.4இல் முன்வைக்கப்பட்டுள்ளவாறு, கமத்தொழில் பட்டதாரிகளினாலும், பட்டதாரி மாணவர்களினாலும் முன்வைக்கப்பட்டன.

**அட்டவணை 7.3: கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்களில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

| ஆலோசனை | எண். (N=529) | மொத்த மாதிரியின் சதவீதம் |
|---|---|---|
| அடிப்படை வசதிகளை வழங்குதல் | 258 | 51.2 |
| உற்பத்திப்பொருட்களுக்கு நியாயமான/சிறந்த விலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 153 | 30.4 |
| அரசாங்கத்திலிருந்து மானியங்களை வழங்குதல் | 166 | 32.9 |
| சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துதல் | 49 | 9.7 |
| சந்தை வசதிகளை நிச்சயப்படுத்துதல் | 114 | 22.6 |
| இளைஞர்களுக்கு கமத்தொழில் தொடர்பிலான வேறு தொழில்களின் மீது விழிப்பியல் திட்டத்தை நடத்துதல் | 131 | 26.0 |
| இளைஞர்களுக்கு கைத்தொழில்கள் தொடர்பிலான பயிற்சித் திட்டங்களை நடத்துதல் | 123 | 24.4 |
| இளைஞருக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல் | 161 | 31.9 |
| பாடசாலை மட்டத்திலிருந்து வேளாண்மையை நோக்கி சிறந்த மனப்போக்குகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் | 51 | 10.1 |
| அரசாங்கத்தினால் உதவியும், வழிகாட்டலும் வழங்கப்படுதல் | 55 | 10.9 |
| அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட திட்டங்களைப் பின்தொடர்தல் | 45 | 8.9 |
| சிறந்த செயற்பாடுகளினதும், மாதிரிகளினதும் ஊடாக இளைஞர்களைச் செயல்நோக்கப்படுத்தல் | 50 | 9.9 |
| முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சியை வழங்குதல் | 85 | 16.9 |
| வரி விடுமுறைகளை வழங்குதலும், விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துதலும் | 27 | 5.4 |
| தனியார் துறையுடன் இணைப்பினைக் கட்டியெழுப்புதல் | 38 | 7.5 |
| கம-அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களின் இறக்குமதியை நிறுத்துதல்/குறைத்தல் | 03 | 0.6 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

**அட்டவணை 7.4: கமத்தொழில் கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு கமத்தொழில் பட்டதாரிகளினால்/பட்டதாரி மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள்**

| ஆலோசனை | பதிலிறுப்பாளர்களின் எண். (N=28) | மொத்த கமத்தொழில் பட்டதாரிகளின்/ பட்டதாரி மாணவர்களின் சதவீதம் |
|---|---|---|
| அரசாங்கத்திலிருந்து மானியங்களை வழங்குதல் | 14 | 50.0 |
| வரி விடுமுறைகளை வழங்குதலும், விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துதலும் | 11 | 39.3 |
| அடிப்படை வசதிகளை வழங்குதல் | 14 | 50.0 |
| சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துதல் | 12 | 42.9 |
| குழந்தைப் பராயத்திலிருந்து கமத்தொழில் தொடர்பிலான தொழிலை நோக்கி சிறந்த மனப்போக்கினை/ பெறுமதிகளைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் | 13 | 46.4 |
| கமத்தொழில் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் தொடர்பில் விழிப்பியல் திட்டங்களை நடத்துதல் | 17 | 60.7 |
| கமத்தொழில் தொடர்பிலான கைத்தொழில்கள் /வியாபாரங்கள் மீது பயிற்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துதலும், நடத்துதலும் | 13 | 46.4 |
| முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சியை வழங்குதல் | 10 | 35.7 |
| இளைஞருக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல் | 12 | 42.9 |
| அரசாங்கத்தினால் உதவியும், வழிகாட்டலும் வழங்கப்படுதல் | 7 | 25.0 |
| சிறந்த செயற்பாடுகளினதும், மாதிரிகளினதும் ஊடாக இளைஞர்களைச் செயல்நோக்கப்படுத்தல் | 9 | 32.1 |
| தனியார் துறையுடன் இணைப்புக்களை உருவாக்குதல் | 11 | 39.3 |
| உற்பத்திப்பொருட்களுக்கு நியாயமான/சிறந்த விலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 18 | 64.3 |
| சந்தை வசதிகளை வழங்குதல் | 10 | 35.7 |
| அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட திட்டங்களை கண்காணித்தலும், மதிப்பாய்தலும் | 6 | 21.4 |
| கமக்காரர்களின் செலவினங்களுக்கான/கடுமையான வேலைக்கான நன்மைகளை உறுதிப்படுத்தல் | 15 | 53.6 |

மூலம்: வெளிக்கள அளவீடு, 2012

## 7.4 முடிவுரை

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழில் துறையில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்காக ஒரு தொகையிலான ஆலோசனைகளை இளைஞர்களும் அத்துடன் கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளும் முன்வைத்துள்ளனர். பரந்த உணர்வொன்றில், சந்தைப்படுத்தல், பயிற்சி, கொள்கை மற்றும் சட்டப் பிரச்சனைகள், வேளாண்மை மீது சமூகப் பெறுமதிகளை மேம்படுத்தல், கமக்காரர்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் மீள்-பங்கீட்டுக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகிய துறைகளினுள் இந்த ஆலோசனைகள் வகைப்படுத்தப்பட முடியும்.

# அத்தியாயம் எட்டு

## சாராம்சம் மற்றும் பரிந்துரைப்புக்கள்

### 8.1 சாராம்சம்

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகளை பரீட்சிக்கும் பாரிய நோக்கத்துடன், நுவரெலியா, அம்பாறை, மொனராகலை, மாத்தளை, அனுராதபுரம், பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் மட்டக்களப்பு ஆகிய ஒன்பது மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 33 கமத்தொழில் பட்டதாரிகள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் உட்பட 533 பேரை மொத்த மாதிரி கொண்டிருந்தது. பதிலிறுப்பாளர்கள் 15-29 வயதைச் சார்ந்தவர்களாக இருந்த அதேவேளை, 35.6 சதவீதத்தினர், 24.9 சதவீதத்தினர், 32.8 சதவீதத்தினர், மற்றும் 6.6 சதவீதத்தினர் முறையே 15-20 வயது, 20-25 வயது, 25-29 வயது மற்றும் 15 வயது என்ற வயதுக் குழுவினைச் சார்ந்திருந்தார்கள். இனத்துவ சூழமைவில் 89.1 சதவீதத்தினர், 4.9 சதவீதத்தினர், 4.5 சதவீதத்தினர் மற்றும் 1.5 சதவீதத்தினர், முறையே சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆவர். மொத்த மாதிரியில் பெரும்பான்மையினர் ஆண்களாவர்.

மொத்த மாதிரியில் ஆண்டு 6 முதல் க.பொ.த. சா/த. வரை 44.1 சதவீதத்தினர் கல்வி கற்றிருந்த அதேவேளை, 17.3 சதவீதத்தினரும், 10.5 சதவீதத்தினரும் முறையே சா./த. மற்றும் உ./த. ஆகியவற்றில் சித்தியடைந்திருந்தனர். பதிலிறுப்பாளர்களில் 7.1 சதவீதத்தினர் டிப்ளோமாவைக் கொண்டவர்களாக, பட்டதாரி மாணவர்களாக அல்லது பட்டதாரிகளாக விளங்கினர். மொத்த பதிலிறுப்பாளர்களில் 36.2 சதவீதத்தினர் (193) கணனி விஞ்ஞானம், மின்சார மற்றும் மோட்டார் பொறிமுறை எந்திரவியல், தச்சுத்தொழில், மேசன்தொழில், விலங்கு வேளாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு, அழகுக்கலை, தைத்தல், நெசவு செய்தல், கைவினை, ஹொட்டேல் பயிற்சி, சமூகப் பணி மற்றும் வாகனமோட்டல் ஆகியவற்றில் தொழில்முன்னிலைப் பயிற்சியைப் பெற்றிருந்தனர்.

அண்ணளவாக 34 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் திருமணமாகியிருந்த அதேவேளை, ஏனையோர் திருமணமாகியிருக்கவில்லை. 52.4 சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் தொழிலாற்றிய அதேவேளை, 17.5 சதவீதத்தினரும், 7.1 சதவீதத்தினரும் மற்றும் 22.9 சதவீதத்தினரும் முறையே தொழிலற்றவர்களாகவும், இல்லத்தரசிகளாகவும் மற்றும் மாணவர்களாகவும் விளங்கினர். வயதுக்கும், தொழிற்பாட்டுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க உறவொன்றிருந்தது. இதன் பிரகாரம், 20 வயதுக்கு மேற்பட்ட பதிலிறுப்பாளர்கள் மத்தியில் தொழிலாற்றிய விகிதம் உயர்வானதாகும். தொழிலாற்றிய பதிலிறுப்பாளர்கள் மத்தியில், 64.3 சதவீதத்தினர் (183) கமக்காரர்களாக விளங்கிய அதேவேளை, 7.8 சதவீதத்தினரும் (22) மற்றும் 5.7 சதவீதத்தினரும் (16) முறையே திறனைப்பெற்ற மற்றும் திறனைப்பெறாத சரீரஉழைப்பாளர்கள் ஆவர்.

பெரும்பான்மையிலான பதிலிறுப்பாளர்கள் காணிகளின் உரித்துரிமையைக் கொண்டிருக்கவில்லை. 26.8 (124 துண்டுகள்) சதவீதத்தைக் கொண்ட பதிலிறுப்பாளர்கள் மேட்டுநிலத்தின் உரித்துரிமையைக் கொண்டிருந்த அதேவேளை, நெற் காணிகளுக்கு 23.9 (84 துண்டுகள்) சதவீதமாக அறிக்கையிடப்பட்டது. மொத்தக் காணித் துண்டுகளில் 88.2 சதவீதம் (779 துண்டுகள்) செய்கை பண்ணப்பட்டது. சகல காணிகளினதும் மற்றும் செய்கைபண்ணப்பட்ட காணிகளினதும் சராசரி காணி விஸ்தீரணம் 2 ஏக்கர்களாகும். மொத்தக் காணிகளில் 5 சதவீதமானது கால் ஏக்கர்களுக்கு குறைவாக இருந்த அதேவேளை, 1.1 சதவீதமானது 10 ஏக்கர்களுக்கு மேற்பட்டதாகும்.

அண்ணளவாக 70 சதவீதத்தினர் (375 பதிலிறுப்பாளர்கள்) முழு நேர, பகுதி நேர அல்லது குடும்ப சரீரஉழைப்பாளர்களாக கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பதிலிறுப்பாளர்களில் 39.5 சதவீதத்தினரும் (148) மற்றும் 26.4 சதவீதத்தினரும் (99) முறையே முழு நேரக் கமத்தொழிலிலும் மற்றும் பகுதி நேரக் கமத்தொழிலிலும் ஈடுபட்டிருந்த அதேவேளை, 33.9 சதவீதத்தினர் (127) குடும்ப சரீரஉழைப்பாளர்களாக ஈடுபட்டிருந்தனர். வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பெண்களில் 60.6 சதவீதத்தினர் (60) குடும்ப சரீரஉழைப்பாளர்களாவர். எனினும், ஆண் பதிலிறுப்பாளர்களில் குடும்ப சரீரஉழைப்பாளர்கள் 24.3 சதவீதத்தினராவர் (67).

மேலும், இளைஞர் பங்கெடுப்பின் வகையும், மட்டமும் வேளாண்மை முறைமை, பயிர் மற்றும் புவியியல் பிராந்தியங்கள் ஆகியவற்றினால் வேறுபட்டிருந்தன. உதாரணமாக, சேனையின் கமத்தொழிலிலும் மற்றும் பருப்பு வகைகளின் செய்கையிலும் இளைஞரின் பங்கெடுப்பின் சதவீதங்கள் அண்ணளவாக 100 சதவீதமாக விளங்கிய அதேவேளை, மலையக மரக்கறிகள், தாழ் நாட்டு மரக்கறிகள் மற்றும் மானாவாரி நெற் செய்கை போன்ற பயிர்களின் செய்கையில் இளைஞரின் பங்கெடுப்பின் சதவீதங்கள் அண்ணளவாக 60 சதவீதமாகும். மலையக மரக்கறிகளில் குறைந்த இளைஞர் பங்கெடுப்புக்கான பாரிய காரணங்களாக நுவரெலியா பகுதியில் காணியின் பற்றாக்குறை விளங்கிய அதேவேளை, தாழ் நாட்டு மரக்கறிகளில் குறைந்த இளைஞர் பங்கெடுப்புக்கான காரணங்களாக காணிகளின் கிட்டுந்தன்மையிலும், அடைதல் தன்மையிலும் பற்றாக்குறையும், தொடருகின்ற சந்தைப்படுத்தல் பிரச்சனைகளும் விளங்குகின்றன. வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் (61.7 சதவீதம்) ஐந்து வருடங்களுக்கு குறைந்த அனுபவத்தைக் கொண்டிருந்த அதேவேளை, பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை 6.7 சதவீதத்தினர் கொண்டிருந்தனர்.

மொத்த மாதிரியில் எதிர்காலத்திலும் கூட முழுநேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக 58.2 சதவீதத்தினர் குறிப்பிட்ட அதேவேளை, 39.6 சதவீதத்தையும் மற்றும் 2.3 சதவீதத்தையும் கொண்ட பதிலிறுப்பாளர்கள் முறையே முழு நேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென்றும், தெளிவான கருத்தொன்றைக் கொண்டிருக்கவில்லையென்றும் தெரிவித்தனர். முழு நேர வேளாண்மையில் ஈடுபடுவதற்கு இணக்கமாயிருந்த பெரும்பான்மையான பதிலிறுப்பாளர்கள் கமத்தொழில் தொடர்பான நீண்ட கால அனுபவத்தையும், காணியையும் மற்றும் சரீரஉழைப்பினையும் கொண்டிருந்தார்கள். மறுபுறத்தில், 'சிறந்த தொழிலுக்கு' போதியளவு திறன்களையும், பயிற்சியையும் மற்றும் கல்வியையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஒரேயொரு பிள்ளையாக விளங்கியமை, பெண்கள், அங்கவீனர்கள் அல்லது முதிர்ந்தவர்கள் வீட்டில் இருந்தமை, தமது காணிகளைச் செய்கை பண்ணுவதற்கு கிராமத்தில் யாரேனும் ஒருவர் கிட்டாததிருத்தல் போன்ற தமது குடித்தனங்களுடன் இணைந்த பிரச்சனைகளின் காரணமாக கிராமத்தை விட்டு அவர்களில் சிலரினால் வெளியேற முடியவில்லை. தொழில்களிலிருந்து கிடைப்பதை விட அதிகளவு வருமானத்தை வேளாண்மையிலிருந்து அவர்களால் ஈட்ட முடியும். ஆனால், வருவாய்களை விட வெளியிலான செலவினங்கள் மிகவும் உயர்வானவையாகும். சந்தையின் உறுதியற்றதன்மை மற்றும் குறைந்த இலாபம், இன்னொரு விருப்புக்குரிய தொழிலில் ஈடுபடுவதற்கான இணக்கம், கல்வியில் ஈடுபடுவதற்கான இணக்கம், சமூக அங்கீகாரம் கொண்டிருக்காமை, தமது சூழ்நிலைக்கு கமத்தொழில் சொத்துக்களின் கிட்டாமை மற்றும் அடைதலின் பற்றாக்குறை போன்ற காரணங்களை முழு நேர வேளாண்மையில் ஈடுபட்டிருக்காத பதிலிறுப்பாளர்கள் வழங்கினார்கள்.

மொத்த பதிலிறுப்பாளர்களில் 7.3 சதவீதத்தினர் (39 பதிலிறுப்பாளர்கள்) கமத்தொழில் தொடர்பான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில், 84.6 சதவீதத்தினர் ஆண்கள் என்பதுடன், 51.3 சதவீதத்தினர் 25-29 வயதுக் குழுக்களைச் சார்ந்திருந்தனர். இச் செயற்பாடுகளில் பெரும்பான்மையிலானவை கைத்தொழில்களை விட கமத்தொழில் தொடர்பான சிறிய

அளவிலான வியாபாரங்களாகும். கம-அடிப்படையிலான கைத்தொழில்களில் அல்லது வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக மொத்த மாதிரியில் 76.4 சதவீதத்தினர் குறிப்பிட்டனர். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தாம் விரும்பவில்லையென குறிப்பிட்டவர்கள் (23.6 சதவீதம்) ஒரு தொகையிலான காரணங்களை வழங்கினர். அவை: வெற்றியைச் சாதிப்பதில் உறுதியற்றதன்மை (20.6 சதவீதம்), கமக் கைத்தொழில்களிலிருந்து ஈட்டப்பட்ட குறைந்த வருமானம் (14.3 சதவீதம்), கல்விசார் தகைமைகளுடன் பொருந்தாமை (13.5 சதவீதம்), அடிப்படை வசதிகளைப் பெறுவதில் கஷ்டம் (9.5 சதவீதம்), சமூகத்திலிருந்து அங்கீகாரத்தின் பற்றாக்குறை/இன்மை (5.6 சதவீதம்), பயிற்சியினதும், விழிப்பியலினதும் பற்றாக்குறை/இன்மை (13.5 சதவீதம்), தனிப்பட்ட இணக்கமின்மை (54.7 சதவீதம்), உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை கிட்டாமை /அல்லது சந்தையைக் கண்டறிவதற்கான கஷ்டம் (8.7 சதவீதம்).

கமக் கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு தாம் விரும்புவதாக, ஆனால் இதுவரை அவற்றில் ஈடுபடாதவர்கள் தமது தீர்மானங்களுக்கு ஒரு தொகையிலான காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர். நிதி வசதிகளைப் பெறுவதில் கஷ்டம் (63.6 சதவீதம்), பயிற்சியைப் பெறுவதில் கஷ்டம் (38.1 சதவீதம்), இயந்திராதிகளையும், உள்ளீடுகளையும் பெறுவதில் கஷ்டம் (28.8 சதவீதம்), பொருத்தமான அமைவிடத்தை/கட்டிடத்தைக் கண்டறிவதில் கஷ்டம் (25.2 சதவீதம்), பயிற்சியை அல்லது விழிப்பியலைக் கொண்டிருக்காமை (23.6 சதவீதம்), படிப்பில் ஈடுபாடு (18.4 சதவீதம்), சந்தை வசதிகளின் பற்றாக்குறை (18.1 சதவீதம்), ஆபத்து (0.8 சதவீதம்), வேறொரு தொழிலில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக (2.2 சதவீதம்), குடும்பச் சுமை (2.2 சதவீதம்), தோதான திட்டம் கிட்டாமை (1.4 சதவீதம்), மற்றும் சரீரஉழைப்பாளருக்கான பற்றாக்குறை (3.8 சதவீதம்) ஆகியனவே கஷ்டத்துக்கான காரணங்களாகும்.

இளைஞர் பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, சந்தை வசதிகள், கமத்தொழில் தகவல், செய்கைபண்ணக்கூடிய காணிகள், பயிர் காப்புறுதி, விஸ்தரிப்பு சேவைகள் ஆகியவற்றுக்கான அடைதல்தன்மை மற்றும் கிட்டுந்தன்மை, கடன் மற்றும் நிதி வசதிகளின் அடையும்தன்மை, தமது உற்பத்திப்பொருட்களுக்கு குறைந்த உற்பத்தியிடத்திலான விலை, பயிற்சி வசதிகளினதும் புதிய தொழில்நுட்பத்தினதும் கிட்டாமை அல்லது அடைதலின் பற்றாக்குறை, போதியளவு பாசன நீர் கிட்டாமை, உயர்ந்த ஆகுசெலவிலானதும், குறைந்த தரத்திலானதுமான விதைகள் மற்றும் கம இரசாயனங்கள், கமத்தொழில் இயந்திராதிகளின் உயர்வான ஆகுசெலவு மற்றும் கொள்வனவுக்கான கமத்தொழில் இயந்திராதிகளின் உயர்வான ஆகுசெலவு ஆகியன தொடர்பான பிரச்சனைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்கின்றார்கள். மேலும், பொருத்தமான சமூகப் பாதுகாப்புத் திட்டம் அல்லது ஓய்வூதியத் திட்டம் கிட்டாமை, கமத்தொழில் தொடர்பான தொழில்களுக்கான சமூகம்-சாராத அங்கீகாரம் ஆகியன வேளாண்மையிலிருந்து இளைஞர்களை அழுத்தும் காரணிகளாகும்.

இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலிலும் அத்துடன் கம-அடிப்படையிலான கைத்தொழில்களிலும் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்காக இளம் பதிலிறுப்பாளர்களினாலும் அத்துடன் கமக்காரர் தாபனங்களின் பிரதிநிதிகளினாலும் பெருமளவு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. வேளாண்மையிலும் அத்துடன் கம-அடிப்படையிலான கைத்தொழிலிலும் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்காக உற்பத்திப்பொருட்களுக்கு நியாயமான விலைகளை வழங்குவதற்கும், அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும், அரசாங்கத்திலிருந்து மானியங்களை வழங்குவதற்கும் சந்தையில் உயர் தரத்திலான உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும், போதிய சந்தை வசதிகளை நிச்சயப்படுத்துவதற்காகவும், பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காகவும், தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காகவும், பாடசாலை மட்டங்களிலிருந்து வேளாண்மைக்கு - சமூக அங்கீகாரத்தை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுப்பதற்காகவும், கமத்தொழில் இயந்திராதிகளை வழங்குவதற்காகவும், உள்ளீடுகளின் விலைகளைக் குறைப்பதற்காகவும், சிறந்த பழக்கங்களினதும், மாதிரிகளினதும் ஊடாக இளைஞரை

செயல்நோக்கமளிப்பதற்காவும், கம-அடிப்படையிலான இறக்குமதியை நிறுத்துவதற்காகவும்/குறைப்பதற்காகவும், வரி விடுமுறைகளை வழங்குவதற்காகவும் விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துவதற்காகவும் அத்துடன் அரசாங்கத்தினால் நடத்தப்படும் திட்டங்களைக் கண்காணிப்பதற்காகவும் அரசாங்கம் அல்லது தனியார் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 8.2 கொள்கைப் பரிந்துரைப்புகள்

### 8.2.1 தொழிலொன்றாக வேளாண்மைக்கு சமூக மற்றும் நிறுவனரீதியிலான அங்கீகாரத்தின் பற்றாக்குறை

(அ) தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதிக்கு புள்ளிகளின் சில தொகையை வழங்குவதற்கு அவசியமான ஒழுங்கினைச் செய்வதன் மூலம் இளம் கமக்காரர்களுக்கு ஊக்கமளிப்பது அரசாங்கத்திற்கு அவசியமானதாகும். உதாரணமாக, சிறுஉடமையாளர் வேளாண்மை, கம-அடிப்படையிலான சுய தொழில் அல்லது கம-அடிப்படையிலான கைத்தொழில்கள்/வியாபாரங்கள் ஆகியவற்றில் ஈடுபடும் குடும்பங்களுக்கு 5 புள்ளிகள் வழங்கப்பட முடியும்.

(ஆ) தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறுவதற்கு தவறிய, ஆனால், வெட்டுப்புள்ளிகளுக்கு கிட்டிய புள்ளிகளைக் கொண்டதும், கமநல சேவை நிலையப் பகுதிகளில் க.பொ.த. சா./த. பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றதுமான சிறுவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம், இளம் கமக்காரர்களுக்கு அரசாங்கம் ஊக்கமளிக்க முடியும். இந் நோக்கத்திற்காக *"கொவிசெத"* லொத்தர் நிதியத்தை அல்லது கமக்காரர் வங்கிகள் நிதியத்தை அரசாங்கம் பயன்படுத்த முடியும். திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தினால் தீவகம் பூராவுமுள்ள பாடசாலைகளுக்கு இது பற்றி அறிவிக்க வேண்டும். இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக விழிப்பியல் திட்டங்களின் அமுலாக்கத்துடன் (எவ்வாறு விண்ணப்பிக்கலாம் மற்றும் தெரிவின் நியதி போன்ற), பின்தங்கிய கிராமியப் பகுதியிலுள்ள சிறுவர்களுக்கு நன்மையை வழங்குவதை நிச்சயப்படுத்த முடியும்.

(இ) தனியார் பல்கலைக்கழகங்கள் உட்பட பல்கலைக்கழக மட்டத்தில் சகல கமத்தொழில் தொடர்பான நெறிகளுக்கு சிறுஉடமையாளர் பண்ணைக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு 'கோட்டா' முறைமையை அமுல்படுத்தல். மேற்படி அடிப்படை மீது தனியார் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் போதனைக் கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவது அவசியமானதாகும். *"கொவிசெத"* லொத்தர் நிதியத்தின் கீழ் அவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டும்.

(ஈ) தற்போதைய தரவுகளின் பிரகாரம் கமத்தொழில் தொடர்பிலான தொழிலில் 33 சதவீதத்தைக் கொண்ட மொத்த சரீரஉழைப்புப் படை ஈடுபட்டுள்ளது. எனவே, அரசாங்கத் தொழிலுக்கு தகைமைகளைக் கொண்டுள்ள சிறுஉடமையாளர் பண்ணைக் குடும்பங்களின் இளம் உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் 20 சதவீத 'கோட்டா' முறைமையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், அரசாங்கத் தொழில் தொடர்பிலான கமத்தொழிலில், விசேடமாக ஓரளவு அரசாங்கத் தாபனங்களிலும் மற்றும் விஸ்தரிப்பு சேவைகளிலும் 30 சதவீதம் வரை இந்த 'கோட்டா' முறைமை அதிகரிக்கப்பட முடியும்.

(உ) சில பதிலிறுப்பாளர்களினால் சுட்டிச்சொல்லப்பட்டவாறு, பாடசாலை மட்டத்தில் கமத்தொழிலில் சம்பந்தப்படுவதற்கு இளைஞரை செயல்நோக்கமளிப்பதை ஆரம்பிக்க முடியும். கமத்தொழில் மீது கோட்பாட்டுரீதியிலானதும், நடைமுறையிலானதுமான அறிவைப் பரப்புவதற்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இலகுவான நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரம்பநிலை மட்டத்திலிருந்தும், இரண்டாம்நிலை மட்டத்திலிருந்தும் அவற்றைக் கட்டாயப்படுத்துவதிலிருந்து திட்டங்களை ஆரம்பிப்பது சிறந்ததாகும். குழுவொன்றாகப் பாடசாலைக் காணிகளில் பயிர்ச்செய்கைக்கு மேலதிகமாக, நடைமுறையிலான அறிவை வழங்குவதற்கு தொடர்ச்சியாக வீட்டுத் தோட்டச் செய்கையில் சம்பந்தப்படுவதற்கு அவர்கள் முன்னேற்றப்பட முடியும். ஒவ்வொரு வருடமும் போட்டியை நடத்தும் போது அவற்றில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான இழுத்தெடுக்கும் காரணியொன்றாக அது விளங்கும்.

(ஊ) தொழிலின் கடைசி விருப்பே வேளாண்மை என்றவாறு சமூகத்தில் மனவுணர்வொன்றுள்ளது. இந்த மனவுணர்வுகளின் காரணமாக வேளாண்மையிலிருந்து இளைஞர்கள் விலகிச்செல்வதுடன், எல்லோரையும் போலவே கௌரவமான தொழிலையே ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகின்றனர். தலையீடுகள் ஊடாக, விசேடமாக கமத்தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு, ஊடக அமைச்சு, கமத்தொழில் திணைக்களம், பாடசாலை மற்றும் ஊடகங்கள் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் ஊடாக, வேளாண்மையை நோக்கி இவ்வகைகளிலான தரம்குறைந்த போக்குகளை மாற்றுவது அவசியமொன்றாகும். பின்வரும் குறிப்பான நிகழ்ச்சிகள் அமுல்படுத்துவதற்காக சுட்டிச்சொல்லப்படுகின்றன. இளம் கமக்காரர்கள் மத்தியில் போட்டிகளை நடத்தி சிறந்த கமக்காரர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிச் சுற்றுலாக்களை வழங்குதல், வேறு நாடுகளில் வாழ்க்கையின் வழியொன்றாக எவ்வாறு வேளாண்மை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பது பற்றி அதிகளவு வெளிப்பாட்டினைக் கொண்டிருப்பதற்கு இளைஞரைத் தெரிவுசெய்தல். கமக்காரர் தினத்திற்கு மேலதிகமாக, இளம் கமக்காரர் தினமொன்றைக் கொண்டாடுதல்.

### 8.2.2 விஸ்தரிப்புச் சேவைகள் தொடர்பிலான பிரச்சனைகள்

(அ) பதிலிறுப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கமத்தொழில் செயற்பாடுகளுக்கு விஸ்தரிப்புச் சேவை போதுமானதல்ல. கிராமங்களில் கமக்காரர்களுக்கு ஈடுகொடுப்பதற்கு போதியளவு கமத்தொழில் போதனாசிரியர்கள் இல்லை என அவதானிக்கப்பட்டது. எனவே, தற்போதைக்கு கமத்தொழில் போதனாசிரியர் சேவையின் எண்ணிக்கையையும், தரத்தையும் அதிகரிப்பது அவசியமானதாகும். மாகாண மட்டத்தில் கமத்தொழில் போதனாசிரியர்களின் அதிகரித்த எண்ணிக்கைக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் கஷ்டமென்றால், புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட கமத்தொழில் பட்டதாரிப் பயிற்சியாளர்கள் கமத்தொழில் போதனாசிரியர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட முடியும். அவசியத்தின் பிரகாரம், ஒரு கமத்தொழில் பட்டதாரி ஒரு தொகையிலான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பயன்படுத்தப்பட முடியும். மேலும், அவர்களது பணி மீதான சிறந்த கண்காணித்தல் முறைமையானது அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், இலக்கைச் சாதிப்பவர்களுக்கான இலக்குகளும், மதிப்பாய்வு முறைமையும் தாபிக்கப்பட வேண்டும். கமத்தொழில் விஸ்தரிப்பானது ஒரு பரவலாக்கப்பட்ட விடயம் என்பதனால், அவசியப்பட்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள், மதிப்பாய்வு முறைமை மற்றும் இலக்குகள் ஆகியன மீது மாகாண சபைகளின் கலந்துரையாடலுடன் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.



පුස්තකාලය
LIBRARY
ගො.පො.ශො,ප.පු.ආ
HARTI

(ஆ) கமத்தொழில் போதனாசிரியர்களுக்கும்/விஸ்தரிப்பு அலுவலர்களுக்கும் மற்றும் இளம் கமக்காரர்களுக்கும் இடையில் ஒரு பலமானதும், ஒத்துழைப்பிலானதுமான உறவு பயனுறுதிவாய்ந்ததாக செய்யப்பட வேண்டும்.

(இ) புதிய தொழில்நுட்பத்திற்கும், அதிகளவு உற்பத்தித்திறனிலான விதைகளுக்கும்/நாற்று விதைகளுக்கும் மற்றும் நிலைத்திருக்கத்தக்க கமத்தொழிலுக்கும் இளம் கமக்காரர்களிடமிருந்து கணிசமானதொரு கிராக்கியுள்ளது. எனவே, செயற்றிறனானதும், பயனுறுதிவாய்ந்ததுமான சேவையை வழங்குவதற்காக, விஸ்தரிப்பு அலுவலர்களின் அறிவு புதுப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) தமது கடமைப் பட்டியலில் விஸ்தரிப்புச் சேவைகளின் செயற்பாடுகளைக் கொண்டிருக்காத போதிலும், இரு வருட கமத்தொழில் டிப்ளோமாவை சில கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் கொண்டுள்ளனர். எனவே, கமத்தொழில் விஸ்தரிப்பு சேவைக்கு அவர்களது பங்களிப்பினைப் பெறுவதற்காக சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதுடன், அவர்களது செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு அல்லது கண்காணிப்பதற்கு அவசியமான ஒழுங்குகளும் செய்யப்பட வேண்டும். இதன் பிரகாரம், தற்போதைய கிராம அலுவலர் பிரிவின் புவியியல்ரீதியிலான பகுதி விஸ்தரிப்பு சேவைகளுக்காக அவர்களினால் பயன்படுத்தப்பட முடியும்.

(உ) கிராம மட்டத்தில் விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப வசதிகளை விஸ்தரிப்பது அவசியமாகும். தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கு சில பகுதிகள் நனசல நிலையங்களைக் கொண்டுள்ள போதிலும், சில பகுதிகள் அவற்றைக் கொண்டிருக்கவில்லை. எனவே, இளம் கமக்காரர் சங்கங்கள்/கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களின் அலுவலகங்கள் அல்லது ஏதாவது வேறு வெளிக்கள அலுவலகங்கள் ஆகியன ஊடாக, தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவது பயனுள்ளதாகும். சலுகையிலான கட்டணமொன்றில் சேவைகளை வழங்குவதன் மூலம், ஆகுசெலவின் சிறிதளவு பகுதி உள்ளடக்கப்பட முடியும்.

(ஊ) கமத்தொழில் பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைப் பண்ணைகளில் பல்-குகை, சொட்டு நீர்ப்பாசன முறைமை மற்றும் வேறு உயர் தொழில்நுட்ப கமத்தொழில் நடைமுறைகள் ஆகியனவற்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக, இளைஞரை ஊக்குவித்து, பயிற்றுவிக்க முடியும். மேலும், அயல்புறப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு பயிற்சித் திட்டங்களை வழங்குவதன் மூலம், வளங்களின் ஆகக்கூடுதலான பயன்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(எ) கம-அடிப்படையிலான கைத்தொழில்கள், வியாபார முயற்சிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுக்கான உத்தேசமான வாய்ப்புக்கள் மீது பாடசாலை மட்ட மாணவர்களுக்கு செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியனவற்றை நடத்துவதன் மூலம் கமத்தொழிலுக்கு இளைஞர்கள் கவரப்பட முடியும்.

(ஏ) பாடசாலைப் பாடவிதானத்தில் கமத்தொழில் மற்றும் நிலைத்திருத்தல் அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பில் கமத்தொழிலின் முக்கியத்துவம் ஆகியன மீது பாட விடயங்களை உள்ளடக்குவதுடன், மாணவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக, வலய அல்லது பாடசாலை மட்டங்களில் செயலமர்வுகளை/கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல். மேலும், பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை கமத்தொழில் தொடர்பிலான இலக்கியப் போட்டிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், மாணவர்கள்

ஊக்கமளிக்கப்பட முடியும். மேலதிகமாக, வெற்றியீட்டுவோர்களின் கட்டுரைகளை வெளியிட்டு, அவற்றைப் பாடசாலைக்கும் மற்றும் வேறு பொது நூலகங்களுக்கும் பங்கிடுவதன் மூலம், கமத்தொழில் மீது அவர்களது அறிவையும், ஆர்வத்தையும் அதிகரிக்க முடியும்.

### 8.2.3 இளம் கமக்காரர் சங்கங்களுக்கு தொடர்பிலான பிரச்சனைகள்

(அ) கமத்தொழில் போதனாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ், இளம் கமக்காரர் சங்கங்கள் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும், எதிர்பார்க்கப்பட்டவாறு அவை அதிகளவு பயனுறுதிவாய்ந்தவையல்ல. எனவே, கிட்டுகின்ற இளம் கமக்காரர் சங்கங்களைப் பலப்படுத்துவதற்கும், கூட்டாண்மைப் பண்ணைகளைத் தாபிப்பதற்கும் இளம் கமக்காரர் சங்கங்களுக்கு காணி, உயர் தொழில்நுட்ப கமத்தொழிலுக்கு நிதிசார் உதவி, முகாமைத்துவப் பயிற்சி, கம-இரசாயனங்களினதும் மற்றும் கம-அடிப்படையிலான தொழில்களினதும் பிரயோகம் மீதான தோதான அறிவு, தனியார் துறையுடனும் அத்துடன் உத்தேசமான சந்தைகளுடனும் இணைப்பினைக் கட்டியெழுப்புதல் போன்றவாறு அவசியமான உதவியை வழங்குவதன் மூலம், பயனுறுதிவாய்ந்த வழியொன்றில் உத்தேசமான பகுதிகளில் புதிய இளம் கமக்காரர் சங்கங்களைத் தாபித்தல். பயிற்சிகளின் ஆகக்கூடுதலான நன்மைகளைப் பெறுவதற்காகவும், அவர்களது வாழ்வாதார செயற்பாடுகளின் நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்காக சந்தை வசதிகளை அடையாளம் கண்ட பின்னர், இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) அடிப்படைரீதியில், வீதிகளின் மீள்நிருமாணங்கள், வைத்தியசாலைகளையும் மற்றும் சமய ஸ்தலங்களையும் சுத்திகரித்தல் மற்றும் புதிர்போட்டிகளில் பங்கெடுத்தல் போன்ற பொதுசனச் செயற்பாடுகளில் தற்போதைய இளம் கமக்காரர் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தத் தாபனங்கள் தற்போதைய சூழ்நிலையிலிருந்து நகர்ந்து, கமத்தொழில் செயற்பாடுகளுடனும் மற்றும் கம வியாபார முயற்சிகளுடனும் நேரடியான இணைப்பைக் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கச் சேவைக்கு புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் உதவியுடன் இந்தத் தாபனங்கள் மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் தூண்டப்பட முடியும்.

(இ) சிறந்த கமக்காரர் சங்கத்தின் தற்போதைய தெரிவு நியதிக்குப் பதிலாக (புதிர்போட்டி), மிகவும் செயன்முறையிலான நியதியைப் பிரயோகிப்பது அவசியமானதாகும். தொழில் வாய்ப்புக்களையும் மற்றும் வருமான மட்டத்தையும் மற்றும் வேளாண்மை மீது தற்போதைய அறிவையும் மற்றும் பிரயோகத்தையும் அதிகரிப்பதற்கு, இளம் கமக்காரர் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறந்த இளம் கமக்காரர் சங்கங்களின் போட்டிகளினதும், செயற்பாடுகளினதும் இலத்திரனியல் ஊடகங்களின் உள்ளடக்கம் வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு இளைஞரை ஊக்குவிப்பதற்கு உதவும்.

(ஈ) கமத்தொழில் மற்றும் கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் ஆகியன மீது உறுப்பினர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு, கல்விசார் சுற்றுலாக்களும், செயலமர்வுகளும் உதவும். ஆனால், இத்தகைய செயற்பாடுகளுக்கு போதியளவு நிதியங்களைப் பெருமளவு இளம் கமக்காரர் சங்கங்கள் கொண்டிருக்கவில்லை. எனவே, மேற்படி பணிகளுக்கு நிதிசார் வசதிகளை வழங்கும் விடயம் மீது அவர்களது அறிவை மேம்படுத்துவதற்கு இது உதவும்.

(உ) கமத்தொழிலிலிருந்து அழுத்தும் காரணிகளில் ஒன்றாக இயந்திராதிகளின் உயர் ஆகுசெலவு விளங்குகின்றது. எனவே, இளம் கமக்காரர் சங்கங்களுக்கு இயந்திராதிகளை வழங்குதல் (ஒரு சில இளம் கமக்காரர்

சங்கங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு தொகுதியைக் கொண்ட இயந்திராதிகள்) வேளாண்மை மீது இளைஞரை கவர்வதற்கு உதவும்.

(ஊ) குறைந்தபட்ச வட்டி விகிதங்களுடன் பயிற்சிகள் மற்றும் கடன்கள் போன்ற விசேட வசதிகளை வழங்குவதன் மூலம், வெற்றிகரமான இளம் கமக்காரர்களுக்கு ஊக்கமளித்தல். கமத்தொழிலை நோக்கி இளைஞரைக் கவர்வதற்கு மாதிரிகளாக வெற்றிகரமான இளம் கமக்காரர்களைப் பயன்படுத்த முடியும்.

### 8.2.4 கம-அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் வியாபார முயற்சிகள் தொடர்பான பிரச்சனைகள்

(அ) பயிற்சிகளைப் பின்பற்றும் இளைஞர்களுக்கு கூட்டாண்மை கைத்தொழில்களையும் மற்றும் வியாபாரங்களையும் அத்துடன் பொருத்தமான முகவராண்மைகளினால் தோதான மேற்பார்வையுடனும் வழிகாட்டலுடனும் அக்கறையைக் கொண்டுள்ளவர்களுக்கும் மற்றும் ஆற்றலளவுகளையும் திறன்களையும் கொண்டுள்ளவர்களுக்கும் தாபித்தல். தோதான இளம் பட்டதாரிகளைத் தெரிவுசெய்கின்ற கூட்டாண்மைக் கைத்தொழில்களைத் தாபிப்பதற்கும், உதவியளிப்பதற்கும் ஆராய்ச்சிக் குழாம் அதிகளவில் பரிந்துரைக்கின்றது. அண்ணளவாக பத்து வருடங்களுக்கு வரி விடுமுறைகள் போன்ற அத்தகைய திட்டங்களின் கீழ் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக சில மூலோபாயங்கள் பின்பற்றப்பட முடியும். குறைந்தபட்ச வட்டி விகிதத்துடன் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படை ஆகுசெலவுடன் போதியளவு நிதிசார் வசதிகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இத்தகைய பரிந்துரைப்புக்களை அரசாங்கம் அமுல்படுத்தினால் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் நேர்முகங்காணல்கள் ஆகியன ஊடாக தோதான நபர்களைத் தெரிவுசெய்வது சிறந்ததாகும். திட்டத்தின் தயாரிப்பின் பின்னர், இலத்திரனியல் ஊடகங்கள், அரசாங்க அலுவலர்கள் அத்துடன் பல்கலைக்கழகங்கள் ஆகியன ஊடாக, திட்டத்திற்கு பரந்த பிரச்சாரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும்.

(ஆ) கமத்தொழில் பயிற்சிகளுக்கு மேலதிகமாக, தொழிற்றுறை உரிமை மற்றும் முகாமைத்துவப் பயிற்சி அத்துடன் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியன இளம் கமக்காரர்களின் நிலைத்திருத்தல் வாழ்வாதாரத்தைப் பராமரிப்பதற்கு உதவும்.

(இ) இளைஞர்களுக்கு வேளாண்மையையும் மற்றும் கம அடிப்படையிலான கைத்தொழில்களையும் மேம்படுத்துவதற்கு தனியார்-அரசாங்கப் பங்காண்மையொன்றைக் கட்டியெழுப்புதல். இளம் கமக்காரர்களுக்கு ஒப்பந்த வேளாண்மை வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கும், பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில்களைத் தாபிப்பதற்கும் அத்துடன் கமத்தொழில் துறையில் இளைஞர் பங்களிப்பினை மேம்படுத்துமுகமாக கம-அடிப்படையிலான கைத்தொழில்களைத் தாபிப்பதற்கும் அரசாங்க-தனியார் பங்காண்மை அறிமுகப்படுத்த முடியும்.

(ஈ) தற்போது கூட இளம் வியாபார முயற்சியாளர்களுக்காக வங்கிகளினால் ஒரு தொகையிலான கடன் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால், அவை பற்றி பெரும்பாலான கிராமிய இளைஞர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. எனவே, அத்தகைய கடன் திட்டங்களுக்கு போதியளவு பிரச்சாரத்தை வழங்குவது அவசியமானதாகும்.

(உ) கமத்தொழில் தொழில்துறை உரிமை வாய்ப்புக்கள், பலதரப்பட்ட நிறுவனங்களிலிருந்து பயிற்சி மற்றும் வேறு உதவி ஆகியன மீதான சம்பந்தப்பட்டதும், பயனுள்ளதுமான தகவல் தாமதமின்றி கிராம மட்டத்தில்

வழங்கப்பட வேண்டும். கமத்தொழில் தொடர்பான செயற்பாடுகளுக்கு கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர் பொறுப்பாக இருக்கின்ற போதிலும், கிராம மட்டத்தில் கிராம அலுவலருடன் அதிகளவு தொடர்பினை கிராமவாசிகள் கொண்டுள்ளனர். எனவே, இத்தகைய தகவலை கிராம அலுவலரினதும், கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளரினதும் ஊடாக வழங்குவது பயனுள்ளதாகும்.

(ஊ) கம-வியாபாரங்களுக்கு/கைத்தொழில்களுக்கு கடன், இயந்திராதிகள் மற்றும் உள்ளீடுகள் ஆகியவற்றின் கிட்டுந்தன்மை மற்றும் அடையும்தன்மை போன்ற தகவல் புதிய வியாபார முயற்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். எனவே, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இத்தகைய தகவல் வழங்கப்பட முடியும்.

(எ) வியாபாரங்களின்/கைத்தொழில்களின் சிக்கலானதும், நீளமானதுமான பதிவு நடைமுறைகளினால் புதிய தொழில்துறை உரிமையாளர்கள் அதைரியப்படுத்தப்படுகின்றனர். எனவே, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நேரத்தை வீணாக்காமல் பின்பற்றப்படுவதற்கான ஒரு தொகையிலான நடவடிக்கைகளைக் குறைப்பதன் மூலம், பதிவு நடைமுறை இலகுபடுத்தப்பட வேண்டும்.

(ஏ) கம வியாபார முயற்சிகள் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிகளின் பலவீனங்களில் ஒன்றாக விளங்குவது என்னவெனில், பயிற்சித் திட்டத்தின் பின்னர் பயிற்சியாளர்களின் செயற்பாடுகள் மீது ஏதாவது வழிகாட்டல், கண்காணித்தல்/மதிப்பாய்வு இல்லை என்பதாகும். எனவே, சில நிறுவனங்களின் தலையீட்டின் ஊடாக கம-வியாபார முயற்சிகள் மீது இளைஞர் பங்கெடுத்து, தொழில்நுட்பப் பயிற்சியைப் பெறுகின்ற போதிலும், கம-வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அவர்கள் அதிகளவு அக்கறையைக் கொண்டிருக்கவில்லை. மறுபுறத்தில், வியாபார முயற்சியொன்றை அவர்கள் ஆரம்பிக்கின்ற போதிலும், அனுபவங்களின் பற்றாக்குறையினதும், போட்டியினதும் மற்றும் வேறு காரணங்களினதும் நிமித்தம் வீழ்ச்சியடைவதற்கான சாத்தியக்கூறு அதிகளவானதாகும். எனவே, கிராம மட்ட வெளிக்கள உத்தியோகத்தரினால் அத்துடன் உயர் மட்டத்தில் சகல சம்பந்தப்பட்ட அலுவலரினால் குழந்தை நிலையிலான கைத்தொழில்கள் அல்லது வியாபார முயற்சிகள் மீது முறைமையான மேற்பார்வை செய்வதற்கு அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### 8.2.5 சந்தை வசதிகள் தொடர்பிலான பிரச்சனைகள்

(அ) கமநல சேவை நிலையங்களிலிருந்து கமத்தொழில் உள்ளீடுகள் கொள்வனவு செய்யப்பட முடியும் என்ற போதிலும், அவற்றை நேரகாலத்திற்கும், போதிய தொகைகளிலும் வாங்குவது கஷ்டமானதாகும். எனவே, நேரகாலத்திற்கும், போதியளவு தொகைகளிலும் உள்ளீடுகளை அவை வழங்க முடியும் என்பதனால், கமக்காரர் வங்கிகள் நிதியங்களையும், கமநல சேவை நிலையங்களையும் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ஆ) பெருமளவு விடயங்களில் பண்ணைக் குடித்தனத்திற்கும், கமநல சேவை நிலையங்களுக்கும் இடையில் கணிசமான தொகையிலான தூரம் உள்ளது. எனவே, உயர்ந்த ஆகுசெலவில் கூட தனியார் வர்த்தகர்களுடன் இணைந்து உள்ளீடுகளை வாங்குவதற்கு கமக்காரர்கள் முனைகின்றனர். கிராம மட்டத்தில் கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர் அலுவலகத்திலிருந்தும், கமநல சேவை நிலையங்களிலிருந்தும் கமத்தொழில் உள்ளீடுகளை வாங்குவதற்கு வசதிகள் வழங்கப்பட்டால், அவற்றினால்

சிறந்ததும், செயற்றிறனானதுமான சேவையை கமக்காரர்களுக்கு வழங்க முடியும்.

(இ) கமக்காரர் தாபனங்களின் உறுப்பினர்களினாலும் அத்துடன் இளைஞர்களினாலும் சுட்டிக்காட்டப்பட்டவாறு, கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்கெடுப்புக்கான பாரிய காரணங்களில் ஒன்றாக கமத்தொழில் செயற்பாடுகளிலிருந்து குறைந்த இலாபம் அல்லது நஷ்டம் விளங்குகின்றது. மேலும், ஆராய்ச்சியினால் வெளிப்படுத்தப்பட்டவாறு பண்டங்களுக்கான விலைகள் உயர்வாக இருக்கும் போது, கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பு 80 சதவீதத்திற்கும், 90 சதவீதத்திற்கும் என்றவாறு உயர்வானதாகும். எனவே, உணவுப் பண்டங்களுக்கான உள்ளக மற்றும் வெளியகச் சந்தைகள் கண்டறியப்படுவதுடன், கமக்காரர் தாபனங்களுடன்/ கமக்காரர்களுடன் மற்றும் கொள்வனவாளர்களுடன் இணைப்பு/ஒருங்கிணைப்பு பொறிமுறை கட்டியெழுப்பப்பட வேண்டும். நாடு பூராவும் பல்-நோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும், பாரியளவிலான வியாபாரங்களையும், கம-அடிப்படையிலான கைத்தொழில்களையும், கமக்காரர் தாபனங்களையும் மற்றும் இளம் கமக்காரர் சங்கங்களையும் ஒருங்கிணைப்பதற்கான பொறிமுறையொன்று தாபிக்கப்பட வேண்டும்.

(ஈ) சந்தைப்படுத்தல் பிரச்சனைகளின் காரணமாக, சில பகுதிகளில் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களுக்கு கிராக்கியொன்றுள்ளது. எனினும், நாடு முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களைத் தாபிப்பது சாத்தியமல்ல. ஆனால், தமது உற்பத்திகளை விற்பதற்கு போதியளவு வசதிகளைக் கமக்காரர்கள் கொண்டிருக்காத பின்தங்கிய கிராமப் பகுதிகளில், சாத்தியவள ஆய்வுகளின் பின்னர் சேகரிப்பு நிலையங்கள் தாபிக்கப்பட முடியும்.

(உ) உள்ளீடுகளின் கிட்டுந்தன்மையையும், சந்தை ஆற்றலளவையும் கரிசனைக்கெடுப்பதன் மூலம், உணவுப் பதப்படுத்தல் தொழிற்சாலைகளை தாபித்தல்.

### 8.2.6 அடிப்படை வசதிகள் தொடர்பிலான பிரச்சனைகள்

(அ) தற்காலிகமான கமத்தொழில் செயற்பாடுகளுக்காக குறுகிய கால குத்தகை முறைமையின் கீழ், அரசாங்கத்திற்கு அல்லது தனியாருக்கு சொந்தமான செய்கைபண்ணக்கூடிய, ஆனால் கமத்தொழில் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத அல்லது குறைத்துப் பயன்படுத்தப்படும் காணிகளை இளம் கமக்காரர் சங்கங்களுக்கு அல்லது இளம் கமக்காரர்களின் குழுவுக்கு வழங்குதல்.

(ஆ) யுத்தத்தின் காரணமாக அழிவடைந்ததும், முன்னுரிமை அடிப்படையொன்றின் மீது நீண்ட காலமொன்றுக்கு மீள் நிருமாணிக்கப்படாததுமான நீர்ப்பாசன திட்டங்களை மீள்-நிருமாணிப்பதற்கு அவசியமான ஒழுங்கினை செய்தல்.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட மீள்-நிருமாணச் செயற்பாடுகளுக்காக தேசிய சமாதானத்தையும் அத்துடன் வடக்கு-தெற்கு இளம் கமக்காரர் சங்கங்கள் சரீரஉழைப்பாளர் பரிமாற்றத் திட்டத்தின் ஊடாக இளைஞருக்கு வேறுபட்ட கலாசார நடைமுறைகள் மீது புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குதல்.

(ஈ) பொருத்தமான பகுதிகளில் பிரதேசச் செயலகப் பிரிவொன்றில் தெரிவுசெய்யப்பட்ட இளம் கமக்காரர் சங்கமொன்றுக்கு சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பல்-குகை போன்ற உயர் தொழில்நுட்பக் கமத்தொழில்

நடைமுறைகளுக்காக அவசியமான சாதனங்களையும், பயிற்சிகளையும் வழங்குதல். சாதனங்களையும், பயிற்சிகளையும் வழங்கிய பின்னர், கமநல அபிவிருத்தி அலுவலரினாலும், கமத்தொழில் போதனாசிரியரினாலும் குறைந்தபட்சம் மூன்று வருடங்களுக்கு அவர்களது செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்படுவதும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சூழ்நிலையை அவர்கள் அறிக்கையிடுவதும் அவசியமானதாகும்.

(உ) பருவ காலங்களில் அவசியமான அளவில் வாங்குவதிலுள்ள கஷ்டம், பருவகாலங்களில் உயர் விலையில் விதைகளையும், நடுகை திரவியங்களையும் வர்த்தகர்கள் விற்பனை செய்தல், பொதியில் குறிப்பிட்டுள்ளதை விட பயிரிடல் சதவீதம் குறைவாகவிருத்தல், பயிரிடல் திரவியம் மீண்டும் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்பதனால் உற்பத்தியின் ஆகுசெலவு அதிகரித்தல் போன்றவாறு விதைகள்/நாற்றுக்கள் தொடர்பில் ஒரு தொகையிலான முறைப்பாடுகள் உள்ளன. எனவே, விதைகள் அதிகாரச்சட்டத்தை சரிவர அமுல்படுத்துவது அவசியமென்பதுடன், ஒரு சில சந்ததிகளுக்கு பயன்படுத்தக்கூடிய விதை/நடுகைத் திரவியங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) ஆரோக்கியத்தினதும் அத்துடன் பொருளாதாரத்தினதும் மீது கம-இரசாயனங்களின் மோசமான விளைவுகள் மீது போதியளவு அறிவினைப் பெருமளவு கமக்காரர்களும், இளம் சந்ததியினரும் கொண்டுள்ளனர். குறைந்தபட்ச கம-இரசாயனங்களைப் பயன்படுத்தி பாரம்பரிய பயிர்களைச் செய்கைபண்ணுவதற்கான தமது இணக்கத்தினைப் பெருமளவு ஆய்வுப் பகுதிகளில் உள்ள இளம் கமக்காரர்கள் காட்டியுள்ளனர். மேலும், பாரம்பரியமான பயிர்களைச் செய்கைபண்ணுவதற்கு விரும்புகின்ற (உயர்வான கிராக்கி, ஆரோக்கியம் அத்துடன் சிறந்த வருமானம், குறைந்த ஆகுசெலவு ஆகியவற்றின் காரணமாக) ஆனால், பாரம்பரிய வகைகளின் கிட்டுந்தன்மையின் பற்றாக்குறையின் காரணமாக திருந்திய இனங்களைச் செய்கைபண்ணுகின்ற ஒரு கணிசமான தொகையிலான கமக்காரர்களை ஆராய்ச்சிக் குழாம் சந்தித்தது. எனவே, இத்தகைய கமக்காரர்களுக்கு உதவியளிப்பதற்கும், பாரம்பரியமான வேளாண்மையில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற தாபனங்கள், பாரம்பரியமான வேளாண்மைக்கு வளங்களைக் கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் இத்தகைய பயிர்களை செய்கைபண்ணுவதற்கு விரும்புகின்ற கமக்காரர் தாபனங்கள் போன்ற சகல பங்காளர்களையும் ஒருங்கிணைப்பதற்கும் திட்டமொன்றைத் தாபிப்பதற்கு கமத்தொழில் அமைச்சினாலும் மற்றும் மாகாண கமத்தொழில் அமைச்சினாலும் தலையீடு செய்யப்படுவது அவசியமானதாகும்.

(எ) சேதன உரத்தையும் (நெற் காணிகளுக்கான உயர்ந்த கிராக்கியின் காரணமாக), விதைகளையும் உற்பத்தி செய்வதற்கு பின்தங்கிய, கிராமிய கமத்தொழில் பகுதிகளில் உள்ள இளைஞர்கள் அதிகளவு அக்கறையைக் கொண்டுள்ளனர். எனவே, தொழில்நுட்ப அறிவுக்கான பொறிமுறை, தர உறுதிப்படுத்தல் சேவைகளுடனான இணைப்பு மற்றும் மாவட்டமொன்றினுள் கிட்டுகின்ற சந்தைகளுடன் இணைப்பு ஆகியன உட்பட அவர்களுக்கு உதவுவதற்கு திட்டமொன்றை அமுல்படுத்துவது பயனுள்ளதாகும்.

(ஏ) கமத்தொழிலில் அல்லது கம-அடிப்படையிலான வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அடிப்படையிலான மூலதனத்தைக் கொண்டிருக்காததினால் பெருமளவு இளைஞர்கள் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். வேறுபட்ட திட்டங்களின் கீழ், இளைஞருக்கு/கமத்தொழில் செயற்பாடுகளுக்கு வர்த்தக வங்கிகள் கடனை வழங்குகின்ற போதிலும், அத்தகைய திட்டங்கள் மீது அறிவின் பற்றாக்குறை, பிணையாக வைத்திருப்பதற்கு சொத்துக்களைக் கொண்டிருக்காமை, தமது கிரமமான வாடிக்கையாளர்களாக முதல்

தடவையில் இரவல்பெறுபவர்களில் வங்கிகள் நம்பிக்கை கொள்ளாமை போன்ற பெருமளவு காரணங்களின் நிமித்தம், இளைஞர்கள் அத்தகைய வசதிகளைப் பயன்படுத்துவதில்லை. மறுபுறத்தில், கமக்காரர்களுக்காக கமக்காரர் வங்கிகள் இயங்குகின்ற போதிலும், இந்த வங்கிகளிலிருந்து இளைஞர்களுக்கு கடனைப் பெறுவது கஷ்டமானதாகும். மேலும், ஏதாவது வகையிலான வங்கிக் கணக்கை மூன்றிலொரு பங்கிலான இளைஞர்கள் கொண்டிருக்கவில்லையென 2008/2009இல் தேசிய இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசிய இளைஞர் அளவீடு வெளிப்படுத்தியது. எனவே, சேமிப்புக்கு ஒப்பீட்டுரீதியில் உயர்ந்த வட்டி விகிதத்தையும், கடனுக்கு குறைந்த வட்டியையும், குறைந்த நிபந்தனைகளுடன் போதியளவு தொகையிலான பணத்தையும் வழங்கும் விசேட சேமிப்புக்களையும் மற்றும் கடன் திட்டங்களையும் அமுல்படுத்துவது அவசியமானதாகும்.

### 8.2.7 சமூகப் பாதுகாப்பு முறைமைக்கும், பயிர் காப்புறுதித் திட்டத்துக்கும் தொடர்பான பிரச்சனைகள்

(அ) சமூகத்தின் தற்போதைய சூழ்நிலையைக் கரிசனைக்கெடுப்பதன் மூலம் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தையும், காப்புறுதித் திட்டத்தையும் புதுப்பித்தல். அத்தகைய திட்டங்கள் மீது கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் மாற்றுவதற்கு முன்னால், விரிவான ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வது சிறந்ததாகும்.

(ஆ) காப்புறுதியை வழங்குவதில் தாமதம் மற்றும் பயிர்ச் சேதங்களுக்கு போதியவு பணத்தைப் பெறுவதில் உள்ள கஷ்டம் போன்ற காரணங்கள் மீது நம்பிக்கையை அல்லது தன்னம்பிக்கையை பெருமளவு கமக்காரர்கள் கொண்டிருப்பதில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தினால் முடிக்கப்பட்ட பயிர் காப்புறுதித் திட்டம் மீதான ஆய்வின் தற்போதைக்கு சம்பந்தமான விதந்துரைப்புக்கள் காப்புறுதித் திட்டத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட முடியும்.

### 8.2.8 இளைஞருக்கு வயதெல்லை

(அ) சில அம்சங்களிலும், சில நோக்கங்களுக்கும் இலங்கையில் இளைஞருக்கான வயதெல்லை 18-30ஆகக் கருதப்படுகின்றது. ஆனால், சில வேளைகளில் இளைஞராக 14-29 வயதும் கரிசனைக்கெடுக்கப்படுகின்றது. எனினும், இலங்கையில் பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு கணிசமானளவு அதிகரித்துள்ளதுடன் தொழிலில் ஈடுபடுவதற்கான வயதெல்லையானது கல்வியில் நீண்டகாலத்தை இளைஞர் செலவழிப்பதனால் அதிகரித்துள்ளது. எனவே, கமத்தொழிலில் இளைஞரின் பங்கெடுப்பினை அதிகரிப்பதற்கு அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இளைஞராக 15-40 வயது எல்லையாக கரிசனைக்கெடுப்பது சிறந்ததாகும்.

### 8.2.9 சமூக ஒப்புரவு, நல்லாட்சி மற்றும் சமத்துவம்

(அ) முன்னைய ஆய்வுகளினாலும் மற்றும் இளைஞர் மீதான ஜனாதிபதி ஆணைக்குழுவினாலும் (1990) வெளிப்படுத்தப்பட்டவாறு, சமூக நீதி மற்றும் நல்லாட்சி ஆகியன தொடர்பில் பாரதூரமான பிரச்சனைகளை இலங்கையின் சமூகம் முகங்கொடுக்கின்றது. Casteless or Caste-blind? Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka (2009) (சாதியின்மை அல்லது சாதி-குருட்டுத்தன்மை: இலங்கையில் மறைக்கப்பட்ட சாதி பாகுபாட்டினதும், சமூக ஓரங்கட்டுதலினதும் மற்றும் எதிர்ப்பினதும் இயக்காற்றல்) மீதான தமது ஆராய்ச்சி வெளியீட்டில் காலிங்க

தியுடர் சில்வாவினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, இலங்கையில் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையிலான மக்கள் தமது சாதியின் காரணமாக இரண்டாவது நிலையிலான பிரஜையாகக் கருதப்படுகின்றனர். நந்தசேன ரத்னபாலவின் கூற்றின் பிரகாரம் (1982), இலங்கையில் முதலாவது இளைஞர் கிளர்ச்சிக்கான பாரிய செலுத்துகின்ற விசைகளில் ஒன்றாக தொழிலுக்கான சமூக அநீதியினதும், வாய்ப்புக்களின்மையினதும் உணர்வுகளேயாகும். தேசிய இளைஞர் அளவீட்டினால் (2008/2009) வெளிப்படுத்தபபட்டவாறு, 81 சதவீதத்தைக் கொண்ட இளைஞர்கள் வாக்களித்த போதிலும், அரசியல் நிறுவனங்கள் மீது அவர்களது நம்பிக்கை குறைவானதாகும். மேற்படி அளவீட்டின் பிரகாரம், 29.1 சதவீதம், 25.8 சதவீதம், 25 சதவீதம் மற்றும் 31 சதவீதம் கொண்டவர்கள் முறையே பாராளுமன்றம், மாகாண சபைகள், மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றில் நம்பிக்கையிருப்பதாகத் தெரிவித்தனர். மேலும், 54.4 சதவீதத்தைக் கொண்ட இளைஞர்கள் தமது பாராளுமன்ற அல்லது மாகாண சபைப் பிரதிநிதிகளுடன் ஏதேனும் நம்பிக்கையை தாம் கொண்டிருக்கவில்லையென தெரிவித்தனர். “Youth and Politics: Why they Rebel?”இல் (இளைஞரும் அரசியலும்: அவர்கள் ஏன் கிளர்ந்தெழுகின்றனர்?) லக்சிறி பெர்னாண்டோவினால் (2002) பகுப்பாயப்பட்டவாறு, ஆயுதப் படைகள், நீதிமன்றங்கள், பொலிஸ் மற்றும் சிவில் சேவை ஆகியன உட்பட அரசாங்க நிறுவனங்களுடன் முழுமையான நம்பிக்கையை கொண்டுள்ள இளைஞரின் தொகை 26.3 சதவீதமாகவுள்ள அதேவேளை, இந் நிறுவனங்களில் 20.4 சதவீதத்தைக் கொண்ட இளைஞர் ஏதேனும் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை. எனினும், மேற்படி ஆய்வின் பிரகாரம், 8.1 சதவீதத்தையும், 4 சதவீதத்தையும் கொண்ட இளைஞர்கள் மட்டுமே சிவில் சேவையுடனும், அரசியல் கட்சிகளுடனும் முழுமையான நம்பிக்கையை தாம் கொண்டிருப்பதாகத் தெரிவித்த அதேவேளை, அரசியல் கட்சிகளுடன் ஏதேனும் நம்பிக்கையை தாம் கொண்டிருக்கவில்லையென 47 சதவீதத்தைக் கொண்ட இளைஞர்கள் தெரிவித்தனர். முழு சமூகத்தின் அரசியல்மயமாக்கலும், நல்லாட்சி கொள்கைகளின் அமுலாக்கத்தின் பற்றாக்குறையுமே அரசாங்கத்தினதும் அரசியல் நிறுவனங்களினதும் மீதான குறைந்த இளைஞர் நம்பிக்கைகளுக்கான காரணங்கள் என இந்த ஆய்வுகள் வெளிப்படுத்தின. மேற்படி சூழ்நிலை இளைஞர் மீதான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முழுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது (1990).

அரசாங்க நிறுவனங்களினதும், அரசியல்வாதிகளினதும் மீது இளைஞரின் மனப்போக்குகளை “Factors Affecting Less Youth Participation in Smallholder Agriculture in Sri Lanka” (இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் குறைந்த இளைஞர் பங்கெடுப்பினைப் பாதிக்கும் காரணிகள்) மீதான ஆய்வு பரிசீலிக்கவில்லை என்ற போதிலும், தமது கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அவை அமுல்படுத்தும் போது நல்லாட்சி நடைமுறைகளுக்கு மிகவும் கிட்டியதாக அரசாங்க நிறுவனங்கள் இல்லையென்பதை அவர்கள் நம்பினார்கள் என்ற பதிலிறுப்பாளர்களின் கருத்துக்களில் அது தோற்றமானதாக விளங்கியது. இது ஜனநாயக அரசியல் முறைமையொன்றில் மக்களுக்கு நம்பிக்கைக்கான அத்தியாவசியமான காரணமொன்றாகும். எனவே, நிகழ்ச்சித்திட்டத்துடனும், அலுவலர்களுடனும் இளைஞர் தன்னம்பிக்கையை/நம்பிக்கையைப் பலப்படுத்துவதன் மூலம், இலங்கையில் சிறுஉடமையாளர் கமத்தொழிலில் இளைஞர் பங்கெடுப்பினை அதிகரிப்பது மீது நோக்கினைக் கொண்டு ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கத்தினை ஆராய்ச்சிக் குழாம் அதிகளவில் பரிந்துரைக்கின்றது. இவ்வாறாக நல்லாட்சி நடைமுறைக்ளைப் பயன்படுத்தி, திறமை அடிப்படையுடன் சகல ஓரங்கட்டப்பட்ட குழுக்களை உள்ளடக்கி, வழங்குவதற்கு சகல நன்மைகளும், வசதிகளும் மற்றும் ஊக்குவிப்புக்களும் அவசியமாகும்.

## 8.3 மேலும் ஆராய்ச்சி துறைகள்

1. கம-இரசாயனங்களினதும், விதைகளினதும் குறைந்த தரம் மற்றும் உயர்வான விலை ஆகியன தொடர்பில் தமது மனக்குறைகளைப் பெருமளவு கமக்காரர்கள் முன்வைத்தனர். மேலும், கமக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் இடையில் முறைசாரா ஒப்பந்தத்தை (கடன் அடிப்படையின் கீழ் கம இரசாயனங்களையும், விதைகளையும் வழங்குதல்) பயன்படுத்தி, கமக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு கம-இரசாயன வர்த்தகர்கள் முயற்சிப்பதாக அவதானிக்கப்பட்டது. இது பெருமளவு வழிகளில் கமக்காரர்களையும், அவர்களது குடும்பங்களையும் பாதிப்பதாகத் தெரிகின்றது. எனவே, கமக்காரரினதும், கம-இரசாயன வர்த்தகர்களினதும் உறவின் தற்போதைய சூழ்நிலையும், கமக்காரரினதும் மற்றும் அவர்களது குடும்பங்களினதும் மீது அவற்றின் தாக்கங்களும் மேலும் ஆராய்ச்சிக்குரிய துறையொன்றாகும்.

2. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அல்லது மோதல் வலயத்தை அண்டியுள்ள கிராமங்களில் ஒரு பெற்றார் குடும்பங்களில் அல்லது பெற்றோர் அற்ற குடும்பங்களில் பாரிய எண்ணிக்கைகளைக் கொண்ட இளம் வயதினர் உள்ளனர். வேறு பகுதிகளிலுள்ள இளைஞர்களிடமிருந்து அவர்களது தேவைகளும், விருப்பார்வங்களும் வேறுபடுவதுடன், அவர்கள் பெருமளவு வகைகளில் ஊறுபடத்தக்கதாக விளங்குகின்றனர் என ஆராய்ச்சிக் குழாம் அவதானித்தது. எனவே, அவர்களது பிரச்சனைகளையும் அத்துடன் பலத்தையும் அடையாளம் காண்பதற்கு ஆழமான ஆய்வை செய்வதற்கான அவசியமொன்றுள்ளது. மேலும், அவர்களது சேமநலனைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாராய்ச்சி ஒன்றை நடத்துவது சிறந்ததாகும்.

# உசாத்துணைகளின் பட்டியல்


Bennell, P., 2007. *Promoting Livelihood Opportunities for Rural Youth*, Rome, IFAD. Available at: http://www.ifad.org/events/gc/30/roundtable/youth/benell.pdf [accessed 17th June 2012].

Butt, T., 2011. Role of rural youth in agricultural and rural development: A self perceived case study of Okara District, Punjab, Pakistan, *Journal of Agricultural Extension and Rural Development,* Vol. 3(2), pp. 23-28, February 2011. Available at: http://www.academicjournals.org/jaerd/PDF/Pdf%202011/February/Butta%20et%20al.pdf [accessed 27th June 2012].

Chandrasiri, C. and Karunagoda, K., 2011. "Youth Perception on Farming as an Occupation: Case Study in Polonnaruwa District", *Annals of the Sri Lanka Department of Agriculture*, 13, 35-46.

Clawson, D.L., 1985. "Harvest security and intraspecific diversity in traditional tropical agriculture". *Economic Botany*. vol. 39, no. 1, pp. 56–67

Damayanthi, M.K.N. and Bulankulama, S.W.G.K., 2006. Paddy Marketing in Polonnaruwa District, Colombo: Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute, Research Study 41 (in Sinhalese).

Damayanthi, M.K.N. and Gamage, D., 2011. Transformation of Smallholder Agriculture Sector in Sri Lanka, An annotated Compendium of Statistics, Colombo: Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute

Department of Census and Statistics, 2002. Census of Agriculture – 2002 Sri Lanka-Small Holding Sector, Colombo: Department of Census and Statistics.

Department of Census and Statistics, 2009. Labour Force Survey-2009, Colombo: Department of Census and Statistics.

Dixon, J., Taniguchi, K., and Wattenbach, H., (eds) 2003. Approaches to assessing the impact of globalization on African smallholders: Household and village economy modeling, proceedings of a working session on Globalization and the African Smallholder study, Rome: FAO.

Fernando, L., 2002. Youth and Politics: Why they Rebel? In *Sri Lankan Youth: Challenges and Responses*, Hettige, S.T., and Mayer, M. (ed.), Colombo: Ebert Stiftung.

Ganesh, T. and Raghav, G., 2011. Smallholder Farming in Asia and the Pacific: Challenges and Opportunities, Conference proceedings on new directions of smallholder agriculture, Rome: IFAD. Available at: http://www.ifad.org/events/agriculture/doc/papers/ganesh.pdf [accessed 12 July 2012].

Gamage, D. and Damayanthi, M.K.N., 2012. *Major Dimensions of Contemporary Smallholder Agriculture Sector in Sri Lanka*, Colombo: HARTI.

Geest, van, der., 2010. Rural Youth Employment in Developing Countries: A Global View,Rome:FAO. Available at: http://typ03.fao.org/fileadmin/user_upload/faoilo/pdf/Vandergeest_2010_ RurYouthEmpl150_ppi.pdf [accessed 17th June 2012].

Government of Ceylon, 1967. Youth in Ceylon part I &II, Sessional Paper III, February 1967, Colombo: The Government press.

Hazell, P.and et. Al., 2007. The Future of Small Farms for Poverty Reduction and Growth, International Food Policy Research Institute (IFPRI), 2020 Discussion Paper 42, Washington D.C.: IFPRI. Available at: http://www.ifpri.org/sites/default/files/publications/vp42.pdf [accessed 12 June 2012].

Hennessy, T.C. and Rehman, T., n.d. An Investigation in to Factors Affecting the Occupational Choices of Nominated Farm Heirs in Ireland, working paper 04-WP-Re-01. Ireland: The Rural Economy Research Centre. Available at www.agresearch.teagasc.ie/rerc/downloads/.../04wpre01.pdf [accessed 3 March 2012].

Heltberg, R. and Vodopivec, M., 2008. "Sri Lanka: Unemployment, Job Security and Labour Market Reform", *The Peradeniya Journal of Economics*. 2(1& 2) available at http://www.arts.pdn.ac.lk/econ/ejournal/v2/C_Heltberg-article.pdf. accessed [accessed 3 March 2012].

Hettige, S.T. and Mayer, M., 2002. *Sri Lankan Youth: Challenges and Responses*, Colombo: Friedrich Ebert Stiftung.

Ibarguen, C., 2004. Poverty and Youth issues in Sri Lanka, briefing paper series, poverty brief 5-2004, Colombo: Centre for Poverty Analysis.

Jayatissa, R.L.N., Seneviratne, D.G.P. and Sankar, M.S.S.G., 2005. "Performance, Consequence and Strategies in Relation to Rural Youth Out Migration from Agriculture in Sri Lanka: Critical Overview and Needed Policy Matrix", Paper presented at COE/JEPA International Conference, Kobe, Japan, 17-18 December 2005.

Karunagoda, K., 2004. "Changes in Labour Market and Domestic Agriculture". *Sri Lanka Journal of Agricultural Economics*, 6 (1), 82-97. Available at: www.slageconr. net/sjae/sjae61f/sjae06106.pdf [accessed 3 March 2012].

Livingstone, S., 2011. "Agriculture's future depends on attracting the next generation: put youth in the picture" in *The Weekly Times*, January 26, 2011. Opinion, Available at: http://www.marcusoldham.vic.edu.au/_literature_82236/Journal_Put_Youth_In_The_Picture [accessed 01 March 2012].

24244

Lundell, A., 2007. *Voice of Sri Lanka's Youth: Aspirations and Perceptions of Freedom and Possibilities*, Sweeden: Vaxjo University. Available at: www.diva-portal.org [accessed 3 March 2012].

Ministry of Labour Relations and Manpower, 2006. National policy for good jobs in Sri Lanka, Colombo: Ministry of Labour Relations and Manpower

Ministry of Labour Relations and Manpower, Central Bank of Sri Lanka and Department of Census and Statistics, 2009. Labour and Social Trends in Sri Lanka 2009, Colombo: Ministry of Labour Relations and Manpower.

Nananyakkara, A.G.W., 2004. Employment and Unemployment in Sri Lanka- Trends, issues and options, Colombo: Department of Census and Statistics.

National Youth Service Council, 2009. National Survey on Needs of Youth in Sri Lanka-2008/09, Maharagama: National Youth Service Council

Rathnayake, I. and Fernando, P., (Ed.) 2009. Opportunities for the productive poor: perspectives on Agriculture and rural livelihoods in Sri Lanka, Colombo: Centre for Poverty Analysis.

Rathnapala, N., 1982. The Role of Youth in the Process of Political Decision Making in Seminar report, Colombo: Sri Lanka Foundation Institute.

Sessional Paper No.1-1990, Report of the Presidential Commission on Youth, Colombo: Department of Government Printing.

Sharma, A., 2007. The Changing Agricultural Demography of India: Evidence from a Rural Youth Perception Survey. *International Journal of Rural Management*, 3 (1). 27-41 available at http://irm.sagepub.com/cgi/content/abstract/3/1/27 [accessed 1 March 2012].

Siddhisena, K.A.P., 2005. Socio-Economic Implications of Ageing in Sri Lanka: An Overview, Oxford Institute of Ageing Working Paper Available at: www.ageing.ox.ac.uk/files/workingpaper_105.pdf [accessed 2 March 2012].

Silva, K.T, Sivapragasam, P.P. and Thanges, P., 2009. Casteless or Caste-blind? Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka, Colombo-Chennai: Kumaran Book House.

Spiller. Achim., & Voss. Julian., 2006 Vocational training in the field of agriculture: empirical results, Germany: University of Goettingen. Available at: http://ageconsearch. umn.edu/bitstream/7876/1/cp070024.pdf [accessed 15 June 2012].

Vodopivec, M. and Arunatilake, N., 2008. The Impact of Population Ageing on the Labour Market: The Case of Sri Lanka, Discussion Paper No. 3456, Germany: IZA. Available at: ftp.iza.org/dp3456.pd [accessed 2 March 2012].

World Bank, 2003. Reaching the Rural Poor: A renewed Strategy for Rural Development, Washington, D.C.: World Bank. Available at: http://www.worldbank.org [accessed 17 June 2012].

Xia, Q., N.d. How the Chinese Rural Workers Choose Occupation: A Case Study of Nine Villages in the Northeast China. Available at: www.cepr.org/meets/wkcn/7/746/papers/Xi a.pdf [accessed 3 March 2012].

Zhoul, Y., 2010. Smallholder Agriculture, Sustainability and Syngenta Foundation, New Delhi: Syngenta Foundation. Available at: http://www.synegentafoundation.org_temp/Smallholder_Agriculture__Sustainability_and_the_Syngenta_Foundation.pdf [accessed 17 May 2012].

24244

த.பெ.இல.1522
கொழும்பு
இலங்கை

தொலைபேசி: 94112696981
94112696437

ஃபக்ஸ்: 94112692423

ஈமெயில்:library@harti.lk

இணையதளம் : www.harti.gov.lk

ISBN 978-955-612-153-7

ரூபா 420/-

National Digitization Project

*National Science Foundation*

Institute : National Science Foundation

1. Place of Scanning : Sanje (Private) Ltd, Hokandara
2. Date Scanned : 02/06/2017
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : Angelo Melvin Luwis

Signature : A.M. Luwis

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Information Officer

Name : Renuka Sugathadasa

Signature : K.P. Sugathadasa

Date : 02/06/2017

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*